
கலைஞர் மு. கருணாநிதி

சிந்தனையும் செயலும்



திருமுக அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வகம் நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

சிந்தனையும் செயலும்

திருமுக அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் அறிவாலயம்
ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18

சிந்தனையும் செயலும்

கலைஞர் மு. கருணாநிதி

விற்பனை உரிமை :

பூம்புகார் பதிப்பகம்

127 (ப. எண். 63), பிரகாசம் சாலை (பிராட்வே)

சென்னை - 600 108

தொலைபேசி : 25267543

பதிப்பாளர் : **தமிழ்க்கனி பதிப்பகம்**
முதற்பதிப்பு : ஜூன், 2006
இரண்டாம் பதிப்பு : மார்ச், 2007
மூன்றாம் பதிப்பு : ஜனவரி, 2010
உரிமை : ஆசிரியர்க்கே

விலை. ரூ. 120/-

அச்சிட்டவர்கள் : ஈகிள் பிரஸ், சென்னை - 600 013.

திருக்கு அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அறிவாலயம்

பதிப்புரை

கலைஞர் அவர்களின் எழுத்தோவியங்களை நூலாக்கிப் பதிப்பிக்கும் வாய்ப்பு தமிழ்க்கனி பதிப்பகத்திற்கு வழங்கப் பட்டிருப்பது இது முதல் முறையல்ல. ஏற்கனவே பல வாய்ப்புகளைப் பெற்று நன்றி தெரிவித்து மகிழ்ந்திருக்கிறோம். எனினும் "**சிந்தனையும் செயலும்**" எனும் சிறப்பு மிகுந்த இந்த நூலைப் பதிப்பித்திடக் கிட்டியுள்ள வாய்ப்பு அருமையான வாய்ப்பென எண்ணி அகம் மிகக் களிப்புற்றுப் பெருமிதம் கொள்ளுகின்றோம். இந்த நூல் எல்லார்க்கும் இனிய பயன் அளிக்க வல்லது; குறிப்பாக இளைஞர்களுக்கு ஏற்றமளித்திடும் கருவூலம் போன்றது.

சிந்தனையாளன் செயல்வீரனாகவும் இருப்பது – அரிது, அரிது, மானிடராதல் அரிது – என்ற மிக உயரிய உன்னதமான நிலையை நல்கிடக் கூடியது. சிந்தனையை விடச் செயல் பெரிது; அதிலும் சிந்திப்பதை அப்படியே செயல்வடிவப் படுத்துவது வியப்புக்குரியது. வியப்புக்குரிய – ஆனால் வாழும் வாழ்க்கையை அர்த்தப்படுத்திடக் கூடிய ஆழமான சிந்தனைகளையும் அற்புதமான செயல்களையும் – எளிய நடையில் இனிய தமிழில் கலைஞர் அவர்கள் இந்த நூலில் விளக்கியிருக்கிறார்கள்.

பாசியும் – தூசியும் எனத் தொடங்கி, பாசமும் நேசமும் கமழும் அறிஞர் அண்ணா அவர்களின் கடிதம் வரை அடங்கியுள்ள குறிப்புரைகள் அத்தனையும் இளைஞர்களுக்குத் தேவையானவை; தெம்பூட்டுபவை. வெற்றி – தோல்வி முதல் விஞ்ஞானம் – மனிதாபிமானம் வரை; அழுக்காறு முதல் ஹார்ட் அட்டாக் வரை; மகளிர் இட ஒதுக்கீடு முதல் மண்டேலா வரை; இங்கர்சால் முதல் இட்லரின் மறு பக்கம் வரை; வசிய மருந்து முதல் தியானப் பயிற்சி வரை – அனைத்தையும் பற்றிய எண்ண

வரைவுகள் வண்ண வண்ணமாக நிறைந்து ஒவ்வொரு பக்கமும் கண்ணையும், கருத்தையும் கவர்ந்திழுக்கின்றன.

"மக்களாட்சித் தத்துவம் மதபேத பித்துக் கொண்ட மதோன்மத்தர்களிடம், சர்வாதிகார வெறி பிடித்தோரிடம் தப்பித் தவறி சிக்கிக் கொண்டால்; அதை அந்தக் கொடியவர்களிட மிருந்து விடுவிக்கும் வரையில் ஜனநாயகத்துக்குச் சுதந்திரம் கிடையாது என்ற உண்மையை ஒவ்வொரு குடிமகனும் உணர்ந்தால்தான் ஜனநாயகம் உயிர் பெற்றே இருக்க முடியும்!";

"இளைஞனே! நீ காற்றைப் போல் வீசிக் கொண்டிரு; தென்றலாகவும் மக்களுக்குச் சுகம் தருவாய்! புயலாகவும் மாறிப் பொல்லாங்குகளை இடரி எறிவாய்!" என்பன போன்ற கருத்துரைகள் ஒவ்வொரு கட்டுரையிலும் சுவாச கோசங்களாக இடம் பெற்று – படிப்போர்க்குச் சிந்தனைச் சுகத்தையும் செயல் துடிப்பையும் ஊட்டுகின்றன.

பொதுவாகச் சமுதாயத்தின் எல்லாத் தரப்பினரையும் கவனத்தில் கொண்டு கலைஞர் அவர்களால் படைத்தளிக்கப் பட்டுள்ள கவின் மிகுந்த இக்கட்டுரைகளை அனைவரும் படித்து உரிய பயனைப் பெற்று இன்புற்றிட வேண்டுமெனப் பெரிதும் விரும்புகின்றோம்.

– தமிழ்க்கனி பதிப்பகத்தார்

அணிந்துரை

டாக்டர் வா. செ. குழந்தைசாமி

‘சிந்தனையும் செயலும்’ என்னும் இவ்வரிய நூல் கலைஞர் அவர்களின் மலர்கள் அடர்ந்த இலக்கியப் பூங்காவில் ஒரு புதுமலர் – இது இன்னொரு மலர் என்ற தரத்தது அன்று. வண்ணத்திலும் புதிது; வகையிலும் புதிது; மணத்திலும் புதிது.

இலக்கியம் என்பது பல பரிமாணங்களைக் கொண்டது: கவிதை, சிறுகதை, புதினம், நாடகம், தன் வரலாறு என்பன இலக்கியத்தின் உறுப்புகள். இவற்றுடன் கட்டுரை என்பதும் இன்னொரு உறுப்பு. பதினாறாவது நூற்றாண்டில் முதலில் ஃபிரெஞ்ச் மொழியில், பின்னர் ஆங்கிலத்தில் உருப்பெற்றது. ஆங்கிலத்தில் பேகன் ஒரு கட்டுரைத் தொகுப்பின் [Bacon’s Essays] மூலமே எழுத்துலகில் அமரத்துவம் பெற்றார். டாக்டர் கலைஞர் அவர்கள் கவிதை, சிறுகதை, புதினம், நாடகம், தன் வரலாறு என அனைத்தையும் படைத்துத் தமிழன்னையின் பாதங்களில் குவித்தவர். கட்டுரை என்று வரும் பொழுது, அரசியல் கட்டுரைகள், சமுதாயக் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள் எண்ணிறைந்தவை எழுதிய பெருமை அவருக்குண்டு எனினும், **‘வாழ்வியல் கட்டுரைகள்’** அவற்றுள் அவ்வளவாக இடம் பெறவில்லை. எண்பதைத் தாண்டிய பின் அவருடைய எழுதுகோல் இப்பொழுது வாழ்வியல் உலகில் அடியெடுத்து வைத்து, அங்கும் கொடியேற்றி இருக்கிறது. வாழ்வியல் சிந்தனைகள் என்பன மூதறிஞர் உலகைச் சார்ந்தவை; ஏனெனில் அங்கு இடம் பெறுவது ஆய்வுரை அன்று; அனுபவ உரை. அனுபவம் என்பது கல்விதரும் பொருள் அன்று; அது காலம் தரும் பொருள்.

இந்நூலின் தலைப்பான **‘சிந்தனையும் செயலும்’**, இரு எளிய சொற்களாலான அசாதாரணமான பெயர்.

சிந்தனையும் தோளும் சேர்ந்தது மனிதம்: வானையும் மண்ணையும் இணைத்து நிற்கும் மானிடச் சாதியின் சாதனைகள் அனைத்தும் சிந்தனை, செயல் என்ற இரண்டிற்குள் அடங்கியவை. சிந்தனையற்ற செயலாலும் சமுதாயம் பயன் பெறுவதில்லை; செயல் தவிர்த்த சிந்தனையாலும் பயன் விளைவதில்லை. பண்டை இலக்கியங்கள் என்பவையும் அனுபவங்களின் தொகுப்பு. ஆனால் அவை நமது முன்னோர்களின் அனுபவங்கள். அவற்றுக்குப் பொருள் காண்பதிலும் கலைஞர் அவர்களின் புதியன, பொருந்துவன தேடும் புலன் ஒளிவிடுகிறது. பல சான்றுகளைப் பட்டியலிடலாம் என்றாலும் ஒன்று போதும்.

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தல் பொருட்டு.

என்பது வள்ளுவம். 'மிகுதிக்கண்' என்பதற்குப் பொருள் கூறவந்த மணக் குடவர் 'தீக்கருமம்' என்கிறார். பரிமேலழகர் 'பழியும் பாவமும் தரும் செய்கை' எனப் பொருள் கொள்கிறார். மற்ற உரையாசிரியர்களின் அணுகுமுறையும் இதை ஒத்தே உள்ளது. ஆனால் கலைஞர் இன்னும் சற்றுப் பொதுவான, அன்றாட வாழ்வில் தேவைப்படுகிற ஒரு நடத்தை விதியை முன்வைக்கும் குறளாக இதைப் பார்க்கிறார். நாகரிகத்திற்கு அடிப்படையான பண்பு என்பது எதிலும் '**அளவுடைமை**' ஆகும். ஆங்கிலத்தில் அதை **Moderation** என்கிறோம். வாழ்வின் எல்லாத் துறைகளிலும், எல்லா இடத்திலும், எல்லாச் சூழ்நிலைகளிலும் தேவைப்படுவது '**அளவுடைமை**'. அது அவையில் பேசும் பொழுதும் வேண்டும்; நண்பர்களுடன் அளாவளாவும் பொழுதும் வேண்டும். உண்ணும் உணவிலும் வேண்டும்; உணர்வு வெளிப்பாட்டிலும் வேண்டும். '**எல்லை மீறாது**' நடந்து கொள்ள வேண்டும்; எல்லை மீறுவது தெரிந்தால், அதாவது **மிகுதிக்கண்** உண்மையான நண்பன் திருத்த வேண்டும் என்பது கலைஞர் காணும் பொருள். குறளின் பயன்பாட்டை அன்றாட வாழ்வுக்குப் பொதுமைப்படுத்தும் புதிய பார்வை; பரவலாக்கும் பார்வை. 'பொய்மையும் வாய்மை இடத்த' என்று தொடங்கும் குறளுக்கும், 'உதவி வரைத்தன்று உதவி' எனத் தொடங்கும் குறளுக்கும் அவர் கொடுத்திருக்கும்

விளக்கங்கள் பொன்னெழுத்துக்களில் பொறிக்கத் தக்கவை; எனினும் அணிந்துரையின் நீளத்திலும் 'அளவுடைமை' கடைப் பிடிக்கப்பட வேண்டும் என்பதால் விரிவஞ்சி மேலே போகாது விடுக்கிறோம்.

தென்னை மரம் நாம் தமிழகத்தில் திரும்பின இடத்தில் எல்லாம் காணும் காட்சி. அதன் மட்டைகள் முதிர்ந்த போது விழுகின்றன. மட்டைகள் உதிர்ந்த இடங்களில் காணும் வடுக்கள் கால்பதித்து ஏறும்படிகளாகப் பயன்படுகின்றன. இதுவும் நாம் காணும் சாதாரணக் காட்சி, திறந்த புத்தகமாக இருக்கும் தென்னையின் வடு கலைஞரின் பார்வையில் ஒரு பாடமாக விரிகிறது.

> கறக்கின்ற பாலனையத் ததும்பி நிற்கும்
> கவிதை உளம் காண்ப தெலாம் கலையாய் மாறும்.

எனவே டாக்டர் கலைஞர் அவர்கள் ஒவ்வொரு வடுவையும் மண்டேலா போன்ற தலைவர்கள், மாபெரும் தியாகிகள், மகத்தான சாதனையாளர்கள் ஆகியோர் இளைய தலை முறையினர் தம்மைப் பின்பற்றி, முன்னேற்றப்பாதையை அமைத்துக் கொள்வதற்கு விட்டுச் சென்ற படிகளாகப் பார்க்கிறார். அந்த வடுக்கள் கலைஞர் அவர்களின் உள்ளத்திலும் தம்மைப் பற்றிய ஓர் ஆழ்ந்த தேடலையே உருவாக்குகிறது. அவர் தமக்குத்தாமே கீழ்க்காணுமாறு உறுதிப்படுத்திக் கொள்கிறார்:

> "இதை எழுதும் நான், தலைவனாக விளங்குகின்றேனோ இல்லையோ, இளமை தொட்டுத் தென்னையின் விழாத மட்டைகள் தரும் பயனையும், மறைந்த மட்டைகள் விட்டுச் சென்ற வடுக்களையும் கண்டுணர்ந்து தொண்டுள் ளத்தைத் தொலைக்காமல் இருப்பவன்." (பக். 145)

என்கிறார். இது ஒரு கற்பனை வளம் மிக்க கலைப் படைப்பு.

இந்த நூலில் அவர் முன்வைக்கும் கருத்துக்கள் பல, வாழ்வியலுக்கு வழிவகுப்பவை என்பது மட்டுமல்ல; வருகின்ற தலைமுறையை உருவாக்கும் குறிக்கோள் கொண்டவை. மனிதனுக்கு மட்டும் இயற்கை அளித்தவரம் பகுத்தறிவு. அது:

ஆழ்கடல்களின் ஆழ்ந்த சிந்தையின்
ஆற்றல் விந்தையடா – மானிடர்
ஆயும் தெய்வமடா

என்ற நிலைமைக்கு மனிதனை உயர்த்திய கூறுபாடு. இந்த ஆய்வின் துணை கொண்டுதான் "கான் திரிந்த மனிதன் இன்று பல் துறைக் கலையின் மன்னனாக" உயர்ந்திருக்கிறான். அந்தப் பகுத்தறிவு மனிதச் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகளில் ஒரு முக்கியமான பணியைக் கலைஞர் வலியுறுத்துகிறார்.

> "தவறு காணுமிடத்துத் தட்டிக் கேட்பதற்கும்
> தடுத்து நிறுத்துவதற்கும் பகுத்தறிவு
> பயன்படுத்தப்படவேண்டும்" (பக். 170–171)

தலைசிறந்த கல்வியாளரும், தத்துவ ஞானியுமான ஜான் டூயி [John Dewey] "நல்ல மனிதர்கள் என்பவர்கள் தீமையை எதிர்க்க வேண்டும்" என்கிறார். இந்தப் பண்பு நமது சமுதாயத்தில் அவ்வளவாக வலிமையடைய வில்லை. நாம் தீமையைக் கண்டு ஒதுங்குபவர்கள்: எதிர்ப்பவர்களல்லர். எனவே நல்லவை நலிந்து அல்லவை ஆட்சி செய்யும் பொழுது:

கொதித்தெழுந்தவர்கள் செய்யும் கொடுமையைக்
காலில் போட்டு
மிதித்தொரு நடனம் செய்ய மீண்டுமோர் சிவனார் இங்கு
வருவர் என்றெண்ணுதற்கு வழியிலை: தீமை என்று
கருதுவதெதிர்த்து நிற்கும் கடமையும் நமதே: சீறி
அறிஞர்கள் எழுதல் வேண்டும்

* * * * * *

தீயவை எதிர்த்து நிற்கும் செம்மையும் பரவ வேண்டும் என்ற பாதையைக் காட்டுகிறார் கலைஞர். அது அவர் காட்டும் பாதை மட்டுமன்று; அது அவர் நடந்து வந்த பாதை; இன்றும் அவர் நடக்கும் பாதை. அதுவே கால காலத்திற்கும் ஒரு சமுதாயம் நடை போட வேண்டிய பாதையாக, ஒரு நல்ல சமுதாயம் ஏற்க வேண்டிய வாழ்வியலாக மலர வேண்டும் என்ற 'பிரகடனத்தை' அவர் முன் வைக்கிறார்.

கலைஞர் அவர்களின் **'சிந்தனையும், செயலும்'** என்ற இந்தப் படைப்பு நாம் முன்பே கூறியது போல வாழ்வியல் கட்டுரைகளின் தொகுப்பு. கல்லும் முள்ளும் நிறைந்த நீண்ட பாதையில் நடந்து, மேடு பள்ளங்களைக் கடந்து, எதிர்பார்ப்புகளையும், ஏமாற்றங்களையும் பார்த்து, வெற்றிகளையும், தோல்விகளையும் ஏற்று, தொண்டர்களின் நம்பகத்தன்மையின் தண்மையையும், நண்பர்கள் சிலர்தம் துரோகத்தின் வெம்மையையும் சந்தித்துப் பெற்ற நீண்ட கால அனுபவமெனும் நீரையும், எருவையும் கொண்ட கழனியில் மலர்ந்த புதுமலர், பொன் மலர். சொல்லுக்குப் பொருள்காண அகராதியின் பக்கங்களைப் புரட்டுவதுபோல, வாழ்க்கையின் சில பிரச்சினைகட்குப் பதில் காண, வாழும் தலைமுறையும், வருகின்ற தலைமுறையும், பக்கங்களைப் புரட்டத்தக்க பனுவல் இத்தொகுப்பு. தமிழன்னையின் அடிகளில் கலைஞர் அவர்கள் படைத்திருக்கும் ஒரு புதிய காணிக்கை. அரசியல், சமுதாய, பொருளாதார சித்தாந்தங்களின் வேறுபாடுகள் அனைத்தும் கடந்து தமிழினம் பொதுவாகப் பயன்படுத்தத் தக்க ஓர் அனுபவத் தொகுப்பு; அனுபவக் களஞ்சியம் எனினும் பொருந்தும். பாரதியின் சொற்களில் கூறுவதானால், "இது உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை".

(வா. செ. குழந்தைசாமி)

✦✦✦

பொருளடக்கம்

பதிப்புரை

அணிந்துரை

பக்கம்

1. பாசியும் - தூசியும்! 17
2. அதிக உயரம் தாண்டுவதற்கு 23
3. என் பெயர் புரட்சி 27
4. குருகுலம்! 32
5. ஜனநாயக நெறி 35
6. வாக்குச் சீட்டின் வலிமை 38
7. சுயமரியாதைத் திருமணம் 41
8. மனிதனின் மறுபக்கம் 45
9. விண்ணைத் தொட்டு மண்ணில் புதைவதோ? ... 48
10. மனிதனும் மறுபிறவியும் 51
11. வெற்றி - தோல்வி! 55
12. அழுக்காறு 58
13. மிகுதிக்கண். 61
14. வலிவும், பொலிவும்! 65
15. இன்பமும் துன்பமும் 68
16. ஒழுக்கம் 74
17. வசிய மருந்து 77
18. சோதிட சோகம்! 81
19. ஆன்மிக ஆழ்கடல்! 84
20. தேனில் குழைத்துக் கொடுத்தாலும்...!... ... 89
21. வியாதிக்கு விருந்தா? 93
22. விளையாட்டு 97
23. தன்னை வெல்வான் 100

24. இட்லர் 103

25. இங்கர்சால் 108

26. மகளிர் இட ஒதுக்கீடு! 111

27. தியானம்??? 116

28. விபத்து 122

29. சின்னத்திரை "செல்வி" 125

30. மருந்தென ஒன்று! 129

31. சிறிய நூல்தான் 133

32. மண்டேலா 138

33. தொண்டுள்ளம் 144

34. மகளிர் பேரணி! 147

35. திரிகடுகம் 151

36. தீக்குச்சி தேடாதீர்! 154

37. சிலம்பும் மணியும்! 158

38. செய்ந்நன்றி 162

39. பகுத்தறிவுப் பாதை! 166

40. பெண்ணியப் புரட்சி! 172

41. வலி அறிவிக்கும் வாயில்லா மொழி ! 177

42. வருமுன் காப்பதா? வந்தபின் காப்பதா? ... 181

43. எங்கே சொர்க்கம்? எங்கே சொர்க்கம்? ... 187

44. குரு பீடமும்; குறள் பீடமும்! 191

45. இறையனார் குறளும்; இனியவை நாற்பதும்! ... 194

46. படகுக்கு ஒரு கணக்கு; நாட்டுக்கு ஒரு கணக்கா? ... 198

47. கலசங்கள், கலங்கரை விளக்கங்களாகலாம்! ... 203

48. நல்வழிக்கு நாட்டாரய்யாவின் உரை!... ... 209

49. அந்தாதி பாடிய அருதகுட்டி நாடார் 213

50. சிந்தனை செய் மனமே 220

சிந்தனையும் செயலும்

- கலைஞர் மு. கருணாநிதி

பாசியும் - தூசியும்!

உடன்பிறப்பே,

அரசியல் என்றாலே நச்சுத்தன்மை வாய்ந்தது என்பதைப் போலவும் – அரசியல்வாதி என்றாலே அத்தன்மையினன்தான் என்று அனுமானித்துக் கொண்டும் – எழுதுவது, பேசுவது என்பது இன்றைய நிலையாகிவிட்டிருக்கிறது. அப்படியொரு நிலை யெடுப்பது அடிப்படையிலேயே பெருந்தவறுடையதாகும் என்பது என் கருத்து. ஒரு சில அல்லது பல என்றே தோராயமாகக் கணக்கிடப்படும் அரசியல்வாதிகளின் அறிவு, ஆற்றல், தொண்டு, சிந்தனை, செயல், எழுத்து, பேச்சு, உறுதி, ஒழுக்கம், தியாகம் ஆகியவற்றைக் கொண்டே ஒரு முடிவுக்கு வர வேண்டுமேயல்லாமல், பொதுவாகவே அரசியல் என்பதே பொல்லாங்கான ஒன்று என அவசரத் தீர்ப்பு வழங்கிவிடக் கூடாது.

திருக்குறளில் பொருட்பால் முழுமையும் அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல், குடியியல் என வகுக்கப்பெற்று – இந்த ஏழு இயல்களிலும் இறைமாட்சி, கல்வி, கல்லாமை போன்ற 70 அதிகாரங்களும் இடம்பெற்று, அரசியல் எனும் பகுதி மட்டுமே 25 அதிகாரங்களைக் கொண்டதாக அமைந்து, அதனைத் தொடர்ந்து அடுத்து வருபவைகளும் 'அமைச்சியல்' எனத் தொடங்கி, 'குடியியல்' ஈறாக அரசியல் தொடர்புடைய அதிகாரங்களாகவே இருப்பதையும் நோக்குமிடத்து, 'அரசியல்' என்பது நமது பண்புக்கு உகந்த ஒன்றல்ல என்றோ,

பண்பாட்டுக்குரியதல்ல என்றோ அவசர முடிவுக்கு; எவராயினும் தம்மை ஆட்படுத்திக் கொள்வது அறிவுடைமையாகாது.

'காதல்' கைகூடாத காரணத்தினாலோ – அல்லது காதலில் ஏற்பட்ட ஏமாற்றத்தினாலோ – 'காதல்' என்பதே தீதான ஒன்று என வள்ளுவரும் வசைபாடவில்லை.

மாறாக; 'காலையரும்பிப் பகலெலாம் போதாகி மாலை மலரும் நோய்' என்றே செல்லமாகக் கடிந்து கொண்டு;

'கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல' எனக் காதலுக்கு அங்கீகாரமே வழங்குகிறார்.

"காதல்! காதல்! காதல் போயிற் சாதல்! சாதல்!" எனப் பாரதி முழங்குகிறார்.

"காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக் கதவொன்று கண்டறிவோம்" என்கிறார் பாரதிதாசன்.

காதலில் ஈடுபடுவோர் உறுதியற்றவராகவோ – ஊசலாடும் மனம் படைத்தவராகவோ – அதனை கிளைக்குக் கிளை தாவும் வேடிக்கை விளையாட்டாக கருதுகிறவராகவோ இருக்கலாம். அவர்களைக் கண்டுவிட்டு; காதல் என்பதே வெறுப்பதற்குரிய ஒன்று என எண்ணிவிடக் கூடாது அல்லவா?

அப்படித்தான் காதலைப் போலவே அரசியலையும், அதனைக் கையாள்வோர் செயலைக் கருதிக் குறைத்து மதிப்பிட்டு வெறுத்து விடக் கூடாது.

காதலித்து ஏமாற்றும் பேர்வழியைப்போல – அரசியல்வாதிகளில் சில பேர் அல்லது பல பேர் கூட இருக்கலாம். காதலித்து ஏமாற்றுபவர்கள் – ஏமாற்றுவதற்காகவே காதலிப்பவர்கள்; இதெல்லாம் காதலின் குற்றமா? காதலித்து கைவிட்டுத் துரோகம் செய்த காதலனை அல்லது காதலியைத் தான் வெறுக்கலாம்; அதற்காக 'காதல்' என்பதையே வெறுப்புக்குரியதாகக் கருதிட முடியாதல்லவா; அது போலவே அரசியலும்; சில அயோக்கியர்களின் புகலிடமாகி விடுகிறது

என்பதற்காக – அத்தகைய ஆட்களை வெளியேற்ற வேண்டுமே தவிர; அரசியல் மீது வெறுப்புக் கொள்வதில் என்ன பயன் இருக்க முடியும்?

காதலுக்கு நேர்மாறான 'துறவு'ம் அப்படித்தான் – தூய்மையானது துறவு! நான் சொல்வது புறந்தூய்மையை அல்ல! அது வேடமாகக் கூடப் பயன்படலாம்! அகந்தூய்மைதான் துறவுக்கு இலக்கணம் – இதையும் அரசியலுக்கு இலக்கணம் எழுதிய அய்யன் வள்ளுவர்தான் கூறுகிறார்.

* "புறந்தூய்மை நீரான் அமையும்; அகம்தூய்மை
  வாய்மையால் காணப் படும்"
* "நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
  வாழ்வாரின் வன்கணார் இல்"
* "மழித்தலும் நீட்டலும் வேண்டா; உலகம்
  பழித்தது ஒழித்து விடின்"

துறவி போல வேடமிட்டு வஞ்சனை செய்வோரைவிட இரக்கமற்றவர் எவருமில்லையென்கிறார்!

துறவு என்று கூறிக் கொண்டு, துன்மார்க்கத்தில் ஈடுபடுவது போலவே அரசியல் அரங்கினையும் அநாகரிகக் கூடமாக – அராஜகக் களமாக ஆக்கிக் கொள்வோர் இருந்தனர் – இருக்கின்றனர் – எதிர்காலத்திலும் இருக்கக் கூடும்.

அதற்காக 'அரசியல்' என்பது சாக்கடை என்றும் – வியாபாரம் என்றும் – பொதுவில் கூறிவிட முடியாது! கூறவும் கூடாது!

சந்தனமாயினும் – புனுகு, சவ்வாது ஆயினும் – பூசிக் கொள்கிற அளவைப் பொறுத்து; பூசிக் கொள்கிறவர்களைப் பொறுத்துத்தானே இருக்கிறது!

இதுபோலச் சிந்தனை செய்யாமல்; அரசியல் என்றாலே நிந்தனை செய்ய வேண்டிய ஒன்று எனும் முடிவுக்கு வந்து விடுபவர்களைப் பற்றி என்னதான் கூற முடியும்?

இன்றைக்கு இந்தியத் திருநாட்டில் சில மாநிலங்களை ஆழ்ந்து நோக்குபவர்களுக்கு 'அரசியல்' மீது அருவெறுப்பு தோன்றுவதில் வியப்பில்லைதான்.

நாட்டின் பாராளுமன்றமே ஒவ்வொரு நாளும் ஒத்தி வைப்பதற்காகவே கூடுகிறது.

நமது மாநிலத்தின் சட்டமன்றமோ ஒவ்வொரு நாளும் எதிர்க்கட்சியினரை வெளியேற்றுவதற்காகவே கூடுகிறது.

இங்கே சட்டமன்றத்தில் ஆளுங்கட்சி மட்டுமே பேச முடிகிறது; எதிர்க்கட்சிகள் தம்மீது சாட்டப்படும் குற்றச்சாட்டுக் களுக்குப் பதில் சொல்லக் கூட வாய் திறக்க முடியவில்லை.

அங்கே பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் ஆவேசத் தாண்டவம் – ஆளுங்கட்சி ஊமையாக்கப்படுகிறது, ஒத்திவைப்பில் முடிகிறது.

மக்கள் பிரச்சினைகளையோ; முக்கிய மசோதாக்களையோ – ஏறெடுத்துப் பார்த்திட எதிர்க்கட்சியினர் எவருமில்லை.

இப்படி அரசியல்; அழுக்குப்பட்டுக் கிடக்கிறது என்பதற்காக; அழுக்கான ஆடைதானே என்று கிழித்துவிட முடியுமா? 'ஜனநாயக'த்தில் தூய்மையாக்கிப் பயன்படுத்திட சலவை செய்யத்தானே வேண்டியிருக்கிறது!

'ஜனநாயகம்' என்பது நாட்டின் சகல மக்களும் ஏற்றுக் கொண்டிருக்கிற சாசனம் அல்லவா?

ஜனநாயகத்தின் வளர்ச்சிக்கும், வாழ்வுக்கும் சர்வரோக நிவாரணியாக இருப்பது அரசியல் என்பதை மறுக்க இயலுமா? அதற்காக மருந்தை விஷமென்று வெறுத்து விட்டோ; விஷத்தை மருந்தென்று வேறுபாடு தெரியாமல் பயன்படுத்தி விட்டால் விளை யும் ஆபத்து; எவ்வளவு வேதனை தரும் என்பதையும் விவேகிகள் சிந்திக்காமல் இருக்க முடியுமா?

மக்களாட்சி என்பது மாடி வீட்டுக்கு – மாளிகைக்கு – மந்தகாச வாழ்வினருக்கு மட்டுமே – எழுதி வைக்கப்பட்ட உயில் அல்ல! உரிமை ஆவணமுமல்ல! அது மாடு மேய்க்கும்

மாயாண்டியும் – மண் குடிசை வாழ் மன்னாரும் – உரிமை கொண்டாடக் கூடிய சமத்துவப் பிரகடனம்!

உரிமையுடையது என்பதற்காக நமக்காகப் பயன்படும் தண்ணீர்ப் பானையைத் தள்ளிவிட்டு உடைத்துவிட முடியுமா?

அல்லது அந்தப் பானை ஒருவர்க்கு மட்டுமே உரியது என்று அதன் அருகே நின்று அரிவாளைத் தூக்கிக் கொண்டு ஆட்டம் போடத்தான் முடியுமா?

எனவே, 'காதல்' – 'துறவு' – 'அரசியல்' – எல்லாமே பரிசுத்தமானவைதான்!

அந்தப் பரிசுத்தம்; அவற்றை அணிபவர்களைப் பொறுத்துத்தான் நீடிக்கும்! அழுக்கின் ஆதிக்கத்திற்கேற்ப ஆடையின் தூய்மை அமையும்!

ஜனநாயகம் எனும் மக்களாட்சி மாண்பு வேர் இறங்கித் தழைத்து விளைந்திட;

நிலம் செழிக்க ஏர் உழுதல், எரு இடுதல், நீர் பாய்ச்சுதல் போல களை நீக்குதல், காவல் காத்தல் தேவை என்கிறதே குறள்; அவற்றில் எல்லாவற்றையும் விட களை நீக்கும் ஏற்பாடு மிக முக்கியமாகும்.

ஜனநாயகத்தை சீர்குலைக்கும் களைகளாக இருக்கும் இயக்கங்களையோ, நடக்கும் ஆட்சிகளையோ பயிரோடு இணைந்து வளர்வதற்கு இடம் தந்தால் ஏர் உழுதென்ன – எரு இட்டு என்ன – நீர் பாய்ச்சி என்ன பயன் ஏற்பட்டு விடும் – களைதான் வளரும்; நல்ல கதிர் வளராது!

அரசியல்; நிலம் போன்றது! அது ஜனநாயகப் பயிர் வளர்க்கப் பயன்பட வேண்டும் – அந்தப் பயிர் மட்டுமே வளர்ந்தால் மனித வளம் – மதச்சார்பற்ற – மத நல்லிணக்க வளம் செழித்துக் குலுங்கும்!

அரசியல் நிலத்தில் தன்னலம் வளர்க்க
களைகளாய்த் தோன்றுவோர்;

களையப்பட வேண்டியோரேயாவர்!

அப்படிக் களைந்து விட்டால்; அரசியல் தூய்மையாகும்!

'அறநெறி தானிய விளைச்சல்' அமோகமாகப் பெருகும்!

குளத்தில் படர்ந்துள்ள பாசியை அகற்றாமல்; குளத்தைப் பழிப்பது; பழிப்போரின் குற்றம்தானே?

பாசியைக் கண்டுகொள்ள; முதலில் நம் கண்ணில் விழுந்துள்ள தூசியை அகற்றிக் கொள்வோம்.

27-4-2005

✦✦✦



அதிக உயரம் தாண்டுவதற்கு

உடன்பிறப்பே,

ஜெயக்குமார் என்ற இளைஞன், அண்ணா அறிவாலயத்திற்கு வந்து என்னைப் பார்த்தான். எழுதியிருப்பதைப் படித்துப் பார் என்று ஒரு தாளைக் கொடுத்தான்.

இடையிடையே பிழைகள் சில தலை நீட்டிடும் வண்ணம் வாக்கியங்கள் அமைந்திருந்தாலும்; ஏதோ ஒரு கருத்தை வெளியிட வேண்டும் என்ற ஆர்வம் அந்த இளைஞனுக்கு இருப்பது புரிந்தது.

“தலைவரே ஓயாமல் உழைக்கிறீர் –
உழைத்துக் கொண்டே இருக்கிறீர் –
உறங்காமல் உழைக்கிறீர் –
நானும் உழைக்கிறேன் –
ஆனால் உறங்காமல் இல்லை.
உறங்குகிறேன்.
உறங்கினால்தானே,
நமது குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின்
அறிவுரையின்படி
இளைஞர்கள் கனவு காண முடியும்”

பக்கத்தில் இருந்த பேராசிரியர் அவர்கள் அதைப் படித்துவிட்டுப் பாராட்டிப் புன்னகை புரிந்தவாறு அந்தத் தாளை என்னிடம் திருப்பிக் கொடுத்து விட்டார்.

அண்ணா அறிவாலயத்திலிருந்து வீடு வந்து சேரும் வரையில், காரில் என் கவனம் அந்தத் தாளின் மீதே இருந்தது. திரைப்படக் காட்சிகளில் தெரிவது போல அந்த இளைஞனின் முகமும் தாளில் நிழலாடியது.

வியப்பு! வியப்பு! அதுவும் விரிவடைந்த வண்ணம்! அடடே; குடியரசுத் தலைவர் அறிவுரைப்படி நடப்பதற்காக அவன் உறங்குவது மட்டுமல்ல; என்னையுமல்லவா உறங்கச் சொல்லி மறைமுகமாக உபதேசம் செய்கிறான்.

உறங்காமல் நான் உழைக்கிறேன் என்பது பெரும்பாலும் எழுதுகிற பணி – மக்களைச் சந்திக்கப் பயணம் செய்கிற பணி – இவைபோன்ற பணிகளையாற்றும்போதுதானே!

ஊரும் உலகமும் உறங்கிக் கொண்டிருக்கிற நேரத்தில் அண்ணா உட்கார்ந்து எழுதிக் கொண்டிருப்பதை பார்த்திருக்கிறேன். அப்படியே பழகிக் கொண்டுமிருக்கிறேன். வைகறை தலைகாட்டி; "வை பேனாவை கீழே" என்று வாங்கி வைக்கிற வரையில் எழுதுவதிலே இருக்கிற நிம்மதி – உற்சாகம் – வேறு எப்போதும் இருப்பதில்லை. இளங்காற்று தவழ்ந்து வரும் அந்த மெல்லிய ஒலியைத் தவிர; வேறு எந்த ஓசையுமற்ற இயற்கையான அமைதி; எழுதுவதற்கு எவ்வளவு பெரிய ஊக்குவிப்பு தெரியுமா?

அண்ணா வாயிலாக அதையும் பழகியிருக்கிறேன் – அமளி துமளி, சாலையில் வாகனங்கள் போகும் பேரொலி – அச்சகத்தில் அங்குமிங்கும் ஆள் நடமாட்டம் – பார்வையாளர்கள் கூட்டம் – அவற்றுக்கிடையே அய்யா பெரியார் அமர்ந்து அசைவின்றி எழுதிக் குவிப்பாரே; அப்படியும் பழகியிருக்கிறேன் – அதையும் அருகிலிருந்து பகலிலும், இரவிலும் ஈரோடு 'குடியரசு' அலுவலகத்தில் பார்த்துப் பார்த்து!

வேறுபாடான இந்த இரண்டும் தெளிவாக்குவது என்ன? பூங்கா வழிப் பயணத்துக்கு மட்டுமல்ல; புதர் மண்டி புயல் வீசும் காட்டுப் பயணத்துக்கும் தயாராக இருக்க வேண்டும் என்பதுதான்!

மாண்புமிகு அப்துல் கலாம்; "இளைஞர்கள் கனவு காண வேண்டும்" என்று சொன்னதை இந்தச் சின்னத் தம்பி அப்படியே நேரடியாகப் பொருள் கொண்டு விட்டான்!

"திட்டினாயே, அதைத் திரும்பப் பெற்றுக் கொள்" என்றால்; அந்தச் சொற்களைக் கையால் எடுத்து, திட்டு வாங்கியவர் கையிலே கொடுத்து; திட்டியவர் அவர் கையால் அவற்றைப் பெற்றுக் கொள்வது என்று பொருள் அல்ல – திரும்பப் பெற்றுக் கொள்வதாக வாய்மொழியாகத் தெரிவித்தாலே இவ்வளவு காரியங்களும் நடைபெற்றதாகத்தான் கருதிட வேண்டும்.

'விழி! எழு! உணர்வு கொள்!' என்றால் தூங்கிக் கொண்டு இருப்பவரைத் தட்டி எழுப்பிச் சொல்லும் வார்த்தைகள் என்று யாரும் கருதுவதில்லை; சமுதாயத்தில் விழிப்புணர்வையும் வீரத்தையும் ஊட்டி, அடிமை விலங்கொடிக்க ஆர்த்தெழச் செய்திடும் ஆணையாகவே கருதப்படுகிறது.

அதேபோலத்தான், அப்துல் கலாம் அவர்கள்; "இளைஞர்களே! தாலாட்டுப் பாடுகிறேன்; உறங்குக! பின்னர் என் தாலாட்டு கேட்டு உறங்கும்போது எதிர் காலம் பற்றிக் கனவு காண்க!"

என்று சொல்லவில்லை.

"கனவு காண்க என்பதற்கு சிந்தனை செய்க – சிந்தித்துச் செயல்படுக!" என்பன போன்ற பொருள்களே பொருந்துவனவாகும்.

இளைஞர்கள் காணும் கனவுகள் வித்தியாசமாக இருக்கும் – அப்படித்தான் இருக்க வேண்டும் – அப்போதுதான் பலவிதத் தேவைகள் உள்ள இந்தத் தேசத்துக்கு அந்தக் கனவுகளின் பலன்கள் பரிபூரணமாகும்.

இளைஞர்கள் அறிவுலக மேதைகளாகக் கனவு காணலாம் –

அற்புதமான பொறியாளராக –

ஆரோக்கியமிக்க சமுதாயத்தை உருவாக்கும் மருத்துவராக –

வரலாறு படைப்பவராக –

வரம்பிலா வானத்தை, வற்றாத கடலை ஆராய்பவராக –

சாதி மத பேதங்களற்ற சமத்துவ சீலராக –

கவிஞராக –

ஓவியராக –

கல்லில் சிலை வடிப்பவராக –

ஆக்கப்பூர்வப் பணிகளில் அக்கறை கொண்ட அரசியல்வாதியாக –

புலவராக –

புரவலராக –

ஒளிர வேண்டுமெனக் கனவு காணலாம்.

முதல் கனவு; இளமையில் நான் காண விரும்பாத கனவு – கல்லூரி வரையில் படிக்க வேண்டும் – அது கலைந்த கனவாகவே ஆகிவிட்டது – என் மொழி, இனம், நாடு, மக்கள் இவற்றின் ஏற்றமே எப்போதும் என் கலையாத கனவாகி விட்டது – இப்படிக் கனவு காண்போர் சமுதாயத்தில் விதி விலக்குகளாகத்தான் "ஏற்பு முத்திரை" குத்திக் கொள்ள முடியும்.

நன்கு கற்றுத் தெளிந்து தேர்ந்து நாம் ஈடுபாடு கொண்ட துறையில் நடு நின்ற நாயகமாய் நாடு போற்றத் திகழ்வோம்; என்பதே ஒவ்வொரு இளைஞனும் காண வேண்டிய கனவு – அந்தக் கனவு காண்பதற்காக உறங்க வேண்டிய அவசியமில்லை – மாறாக; அந்தக் கனவு கண்டிட விழித்தெழுக! விழித்தெழுந்தால் மட்டுமே; கனவுகள் நிறைவேறும் – எதைப் பற்றியும் கனவு காண்பது எளிது; அந்தக் கனவு, கடின உழைப்பின்றி நிறைவேறும் என்பது அரிது!

எனக்கு மிகவும் பிடித்த

பொன்மொழிகளில் ஒன்று;

"நீண்ட தூரம் ஓடினால்தான்


அதிக உயரம் தாண்ட முடியும்" என்பதாகும்.

அன்புள்ள,

மு.க.

29-4-2005

✦✦✦



என் பெயர் புரட்சி!

'புரட்சி' – மேலுதடு, கீழ் உதடு இரண்டு உதடுகளாலும் அழுத்தப்பட்டு; அதை மீறிக் கொண்டு வெளிக் கிளம்பி; நாவினால் பல் வரிசையை முரசு அடிப்பது போல் தட்டிக் கொண்டு என் பெயர் உச்சரிக்கப்படும் பொழுதே அதிலே ஓர் உத்வேகம்!

சிகப்பு உடையை அணிந்துகொண்டு நான் வெளிக் கிளம்பினாலே; என்னைச் சுற்றிக் கிழிசல் உடைகளும், கந்தல் உடைகளும், கைகளையே கட்டாரிகளாக உயர்த்திக் கொண்டு வர; அவற்றையெல்லாம் காராக்கிரகத்தில் தள்ளுவாயா? கடும் தண்டனையாக ஆயுள் தண்டனை வழங்குவாயா? கணத்தில் முடிந்துபோகும் மரண தண்டனையை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்று வரலாற்றில் இடம் பெறுவேன் என்பதற்காக அந்தத் தண்டனையைத் தந்திடுவாயா? எப்படியோ; என் பெயர் புரட்சி என்பதற்குப் பொருத்தமான தண்டனையை எனக்கு அளித்திடு!

பிரான்சு நாட்டில் லூயி மன்னனுக்கு எதிராக நான் பொங்கியெழுந்தபோது முதலில் இரக்கம் எனும் ஒரு பொருளை; கல்லறையில் புதைத்துவிட்டு; அதன் பிறகே அன்றிருந்த ஆதிக்க வர்க்கத்தை "கில்லட்டின்" கருவியின் முன்னே நிறுத்தினேன்.

இல்லையேல்; அந்த அதிகார வெறியர்களை மடக்கிப் பிடித்து, மரணப் படுகுழியில் தள்ளுவதற்கு முன்பே; "அய்யோ பாவம்; பன்னீரில் குளித்தவனாயிற்றே; இன்று செந்நீரில் குளித்திட வேண்டியிருக்குமே! பாவையரைப் பதுமைகளாக்கிப் படுக்கையறையில் விளையாடுபவனாயிற்றே; இன்று அவனை சாவு மென்று தின்னும்போது, பழைய நினைவுகளால் பாவம்

துவண்டு போவானே! மதுவை அவன் குடிக்கிறானா; அல்லது மதுதான் அவனைக் குடிக்கிறதா என மலைத்திடும் அளவுக்கு, மங்கையர் மடியில், தோளில், தொடையில், தொட்டுக் கொண்டும், ஒட்டிக் கொண்டும் கிடப்பவனாயிற்றே; வெட்டுப் பாறையில் "கில்லட்டின்" அவனைத் துண்டாக்கப் போவதை நினைத்தாலே; துடித்துப் போவானே!" இப்படியெல்லாம் உருகிடும் நிலைமை எனக்கு ஏற்பட்டால்; எனக்குப் புரட்சியெனும் பெயரே பொருந்தாது!

பிரஞ்சுப் புரட்சியிலிருந்து ருஷ்யப் புரட்சி தொடங்கியதாகவும் – அந்த ரஷ்ய மக்கள், தங்களுக்கு வெற்றி கிட்டுமென்ற நிலையிலும் அந்தத் தருணத்திலும் கூட தியாகம் செய்யக் கூடியவர்கள் என்பதை அவர்கள் நடத்திய புரட்சிகள் சுட்டிக் காட்டுகின்றன என்கிறபோது, இன்றைய காலகட்டத்தில் பொருந்தாத இடங்களில் எல்லாம் என்னைப் போட்டுப் புதைப்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

எனவே என்னுடைய இயல்பை நானே மாற்றிக் கொள்ள முன்வந்து விட்டேன்; அதற்கு முதல் காரியமாக நானிருந்த இடத்தை மாற்றிக் கொண்டு விட்டேன்.

சுட்டுக் கொல்லுமிடத்தில்,

வெட்டி வீழ்த்துமிடத்தில்,

மண்டியிடினும்; அவன் மன்னனாயின்,

தண்டிக்கப்படுவான் என்ற இடத்தில்

இரத்த வாடை வீசிட கர்ச்சனை புரிந்து கொண்டிருந்த நான்; இப்போது இட மாற்றத்துக்குப் பிறகு; ஆயுதமேந்தி அடக்குமுறைகளை எதிர்கொண்ட நிலையைத் தவிர்த்து விட்டு; வேறொரு வகையான ஆயுதத்தைப் பயன்படுத்த முடிவு செய்து விட்டேன். இதன் பெயர் அறிவாயுதம்! அன்பாயுதம்! அமைதி ஆயுதம்!

என் பழைய பெயரான புரட்சிக்கு உரிய பணியே, உயிர்களைக் குடித்து, உடல்களைக் காலிப் புட்டிகளாக அடுக்கி, அதன் மீது வெற்றிக் கொடி நாட்டுவதுதான் –

இப்போது நான் அறிஞர்
பெருமக்கள் வளர்க்கும் அறிவுப் புரட்சியாக –
ஆதிக்கத்தை அகற்றும் அரசியல் புரட்சியாக –
விவேகிகள் வளர்க்கும் விஞ்ஞானப் புரட்சியாக –
விவசாயிகளின் வேளாண்மைப் புரட்சியாக –
சாதி மத பேதத்தைச் சாய்த்திடும் சமூகப் புரட்சியாக –
காலமெலாம் கொடி நட்டு ஆண்ட;
எம் இனத்தை இன்றைக்கு சீரழிக்க
முனையும் சிலந்திப் பூச்சிகளை விரட்டும் இனமானப் புரட்சியாக –
ஆணவம் – அநீதியின் கூச்சல்
அவைக்களம் வரையில் அடாவடித்தனம்
என்பதை அடக்கி ஒடுக்கும் அறிவுப் புரட்சியாக –
நட்டக்கல்லை தெய்வமென்று நாலு புட்பம்
சாத்தியே சுற்றி வந்து மொண மொண
என்று சொல்லும் மந்திரம் ஏதடா
எனக் கேட்ட சிவ வாக்கிய
சித்தரின் சீர்திருத்தப் புரட்சியாக –
கண்மூடி வழக்கமெலாம் மண் மூடிப்
போக என்றும்; சாத்திரக் குப்பையிலே
சாயாதீர் என்றும் பாடிய
இராமலிங்கரின் ஆன்மீகப் புரட்சியாக –
ஆயிரம் தெய்வங்கள்
உண்டென்று தேடியலையும்
அறிவிலிகாள் என்று
பாரதி பாடிய; பகுத்தறிவுப் புரட்சியாக –

“காதலுக்கு வழி வைத்து
கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம்”
எனக் கவிதை யாத்த
பாவேந்தரின் சுயமரியாதை புரட்சியாக –
இந்தப் புரட்சிகளின் மூலம்
புதிய சமுதாயம் பூத்துக்
குலுங்கிட நடக்கும் அறப்
போரில் இன்னுயிர் தரநேரினும்
அந்தத் தியாகத்துக்கும்
தயாராகத் தன்னைத்தானே
அர்ப்பணிக்கும் தியாகப் புரட்சியாக –

இப்படிப் பல புரட்சிகளாக உருவெடுத்திருக்கிறேன் – என்னை ஒரு பெயருடன் இணைப்பதால் மட்டுமே; அந்தப் பெயருக்கு, என் குணம்; மணம் தருமெனக் கருதாதீர்! பிணம் கூட நாள் கடந்தால்; ஒரு வகை மணம் உமிழும் – அதைப் புரட்சியின் இயல்பு என எண்ணினால்; உம்மைத்தான் புத்தி பேதலித்தவன் என்பார்கள்!

எதிர்க்கருத்துக் கொண்டவர்களை –

அக்கருத்து வென்றிடக் களம் காண்பவர்களை;

கொன்று குவித்து வாகை சூடுவதல்ல புரட்சி –

ஒரு காலத்தில் அதைத்தான் புரட்சி என்றீர்கள்!

இன்று மாற்றுக் கருத்துடையவர்களையும் மாற்றி நம் அணிக்குத் துணையாக ஆக்குவதே மாபெரும் வெற்றிப் புரட்சி!

இல்லையேல் மாசுதான் நமை வந்து அடையும் –

என்ன பார்க்கிறீர்கள்;

புரட்சி இப்படி திடீரென 'சைவ பட்சணி' ஆகி விட்டதே என்றுதானே!

போதும்; நான் 'மாமிச பட்சணி'யாக இருந்து மகாத்மா காந்தியடிகளையே வாயில் போட்டு விழுங்கி; "வந்தே மாதரம்!" என்று பாடினேனே அது போதும்!

நாட்டுக்குத் தேவை தொழிற் புரட்சி!

தொழிலுக்குத் தேவை அறிவுப் புரட்சி!

அறிவுக்குத் தேவை உரிமைப் புரட்சி!

உரிமைக்குத் தேவை

உறுதி! உறுதி! உறுதிப் புரட்சி!

உறுதியுடையோர் பக்கமே நானிருப்பேன்!

இறுதி வரை இலட்சியம் காப்போர் இதயத்தில் மட்டுமே நான் இருப்பேன்!

அப்படி இல்லாதார் மடியை விட்டு "அட; நீ பொல்லாத ஆள்" என்று சொல்லி இறங்கி விடுவேன் –

'புரட்சி' என்னும் நான் சிரஞ்சீவியாகவே இருப்பேன் –

பூவில் வாசமாக....

புயலில் கூட பொறுமையாக

உன்னைப் போற்றி வளர்ப்பேன்!

வணக்கம், வருகிறேன்.


எங்கே போகிறாய் என்று கேட்கிறீரா?

எங்குமில்லை; தங்குமிடம் எது எனக்குத் தகுதியோ; அங்கேதான் போகிறேன்.

அங்கேயே இருப்பேன்.

1 - 5 - 2005

✦✦✦



குருகுலப் பயிற்சி என்பது பழைய காலத்து சங்கதியென்று பரிகசிப்போர் உண்டு. "ஒரு குரு – ஒரு மாணவன்" என்ற அளவிலே இருந்தது; இன்றைக்கு என்னதான் வகுப்புக்களில் பாடம் நடத்தினாலும் – தனியாக "டியூஷன்" எனும் ஆங்கிலப் பெயருடன் பத்து அல்லது பதினைந்து சீடர்களுக்குக் குறையாமல் பயிற்சியளிக்கும் குருநாதர்களை நாடித்தான் மாணவர்கள் போகிறார்கள். அதற்குப் பெயர் வேண்டுமானால் வேறு மாதிரி இருக்கலாம். குருகுலப் பயிற்சி என்பதுதான் அதற்கு அடிப்படை. சீடனை உட்கார வைத்து காலையிலும் மாலையிலும் ஏன் அர்த்த ஜாமத்திலும் கூட குருவானவர் "அகார சாதகம்" செய்திட நாள்தோறும் கற்றுக் கொடுப்பதில்லை.

எப்படி வழிகாட்டுகிறவன்; பயணியுடன் சேர்ந்து பயணம் செய்வது இல்லையோ; அது போலவே, குரல் வளமாகவும், தொண்டை வயப்படவும் அகார சாதகத்தைச் செய்திட ஓரிரு நாட்கள் கற்றுக் கொடுத்து விட்டு; பயணிக்கும் பாதை காட்டி விட்ட திருப்தியில் குருநாதர், இனி சீடன் பாடு என எண்ணியவாறு, தன்பாடு கவனிக்கத் தொடங்கிவிடுவார்.

குருவுக்கு உடம்பு பிடிப்பது – அவரது உடைகளை வெளுப்பது – குரு பத்தினி கூப்பிட்ட குரலுக்கு ஓடிச் சென்று இட்ட பணிகளை இனிதே முடிப்பது, இவையெல்லாம் இந்நாளில் விலக்கப்பட்டு விட்ட வழக்கமாகி; குருநாதருடன் ஒன்றியிருந்து பயிற்சிபெறும் பழக்கம் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருப்பதைக் காண முடிகிறது.

அதனை அறவே வெறுத்திடவும் இயலவில்லை. இளமைக் காலத்தில் ஈரோட்டுப் பெரியார், காஞ்சி அண்ணா, பட்டுக்கோட்டை அழகிரி ஆகியோர் பேசும் கூட்டங்களே எனக்குப் பகுத்தறிவு வகுப்பு – ஓரளவு சுயமரியாதைப் பாடம் கற்றிருந்தேன் எனினும், என்னை அந்தப் பயிற்சியில் மேலும் தெளிவு பெற்றவனாக ஆக்கிக்கொள்ள பெரியாரின் ஈரோடு குடியரசு அலுவலகக் குருகுல வாசம் மிகவும் பயன்பட்டது என்பதில் இரு வேறு கருத்துக்கே இடம் கிடையாது. எனக்கு முன்னர் அந்தக் குருகுல வாசம் அண்ணா போன்றோர்க்குப் பெரிதும் உதவியது. நண்பர்கள் தவமணிராசன், கருணானந்தம், சனார்த்தனம் ஆகியோர் என்னுடன் ஈரோடு குருகுலவாசிகள்தான். அன்பு இளவல் வீரமணி அவர்களும் குருகுலப் பயிற்சி பெற்று குருவின் பீடத்திற்கே உரிய தகுதியும், வாய்ப்பும் பெற்றவர்தான்.

அறிவியல் துறையில், சங்கீதப் பேரரசில், ஓவியம், காவியம், சிற்பம் எனும் பல்வேறு துறைகளில் புகழ் பெற்றோர் யாராயினும்; அவர்கள் இப்போது எவ்வளவு முதுமை சுமப்போராயினும் – அவர்களைப் பேட்டி கண்டால் அவர்கள் தனியாகப் பயிற்சி பெற்ற குருகுலம் பற்றிய புதுமைகளைச் சொல்லாமலிருக்க மாட்டார்கள்.

இசைப்பயிற்சி; வாய்ப்பாட்டு – நரம்புக் கருவி, தோல் கருவி, இவற்றில் நிறைவு பெற; குரு பீடத்துடன் நீங்காமல் இருந்து நித்த நித்தம் கற்றுக் கொள்வது போலவே; கற்பித்தல் நேரம் என்று குறிப்பாக எதுவும் குறிக்கப்படாமல்; இரவு உணவுக்குப் பிறகு வெளி மாடியின் நிலா முற்றத்தில் – பகல் நேரத்தில் அலுவலக அறையில் – காலை அரும்பிடாத வைகறைப் பொழுதில்கூட இல்லத்துத் தாழ்வாரத்தில் – இப்படி அவ்வப்போது வாய்ப்பான வேளையில், வாய்ப்பான நேரத்தில் ஈரோட்டுக் குருகுலத்தில் படித்த பயனை இன்றும் பெற்றிருப்பது எத்துணை பெருமை – எத்துணை சிறப்பு – எத்துணை உறுதியை எனக்களித்து உதவுகிறது!

நன்கு கற்றுத் தேறினும் – நற்சான்றுகள் எண்ணற்றவை பெற்றிருப்பினும் – நண்பனையே சில நேரங்களில் குருவாக

பாவித்து ஐயப்பாடுகளை அகற்றிக் கொள்ளும்போதுகூட குருகுல அனுபவத்தைத்தான் அங்கே நாம் காண முடிகிறது.

பெரியார், அண்ணா என கொள்கை போதிக்கும் குருமார்களின் மாற்றத்தை என்னால் ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது. இருவரும் ஒரே விதமான பகுத்தறிவு மற்றும் இனமான உணர்வு, பாடத்தைத்தான் போதித்தார்கள். ஆனால் அவற்றை நான் ஆசிரியனாக இருந்து கற்பிக்கும் வாய்ப்பு ஏற்படின் அப்போது கடைப்பிடிக்க வேண்டிய வழியை இருவரும் இருவிதமாகச் சொல்லிக் கொடுத்தார்கள். நோய் போக்கிட ஒரே மருந்து – தேனில் குழைத்துத் தந்திடும் முறையை அண்ணாவும் – எதிலும் குழைக்க வேண்டாம்; அப்படியே சூரணத்தை விழுங்கிடுக என்று பெரியாரும் சொல்லிக் கொடுத்தார்கள்.

இரண்டு முறைகளுமே குருகுலத்துடன் நெருங்கியிருந்து கற்றுக் கொண்டது; மருந்து செய்வது ஒரே முறைதான்!

அதை அருந்தும் முறைகள்தான் இருவகை! எனவே, 'குருகுலம்' என்பது பழைய பாணி எனத் தோன்றினாலும்; நம்மை 'அறிவாயுத பாணி' களாக ஆக்கவல்ல சிறப்புப் பயிற்சி தரக் கூடியதாகும்; என் அனுபவத்தில் கண்ட உண்மை இது!

3 - 5 - 2005

✦✦✦



ஜனநாயக நெறி

வாக்காளர்கள், மின் இயந்திரங்களின் பொத்தானை அமுக்கி, தாங்கள் விரும்புகிற ஒரு கட்சியின் அல்லது தனிப்பட்ட ஒரு வேட்பாளரின் பெயருக்கு முன்னால் பொறிக்கப்பட்டுள்ள சின்னத்திற்கு வாக்களிப்பது இன்றைக்கு இந்திய நாடு முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிற பொதுத் தேர்தல் அல்லது இடைத் தேர்தலுக்கான முறையாகி விட்டிருக்கிறது. குறிப்பிட்ட வயதுடையோர் அனைவருக்கும் வாக்குரிமை என்ற பொதுவான நிலையில் இந்நாளில் நடைபெறுகிற தேர்தல்கள்; சில பல ஆண்டுகளுக்கு முன்பு படித்தவர்கள் மட்டுமே கலந்து வாக்களிக்கிற நிலையிலும், பட்டதாரிகள் மட்டுமே வாக்களிக்கிற நிலையிலும், ஒரு வரையறைக்குட்பட்டதாக அமைந்திருந்தது என்பதை மறந்துவிட முடியாது. உத்திரமேரூர் பட்டயம் என இன்றைக்கும் பேசப்படுகிற அந்தக் காலகட்டத்தில் ஊர்த் தலைவர்களையும், ஊராளும் குழுக்களுக்கான உறுப்பினர் களையும் தேர்ந்தெடுக்க அப்பதவிக்குரிய ஒழுக்கமும் தகுதியும் எத்தகையதாயிருத்தல் வேண்டுமென நிர்ணயித்து, பொது மண்டபத்தில் ஊர்மக்கள்; ஓலைகளில் பெயர்களை எழுதி, அவற்றைக் குடத்திற்குள்ளிட்டு; அதனை எடுத்து எண்ணிக் கணக்கிட்டு தேர்வு பெறுவோர் பெயரை அறிவித்திடும் "குடவோலை" முறை இருந்திருக்கிறது.

எந்த முறையாயினும் அதில் பெரும்பான்மையோர் கருத்து ஏற்கப்பட்ட தேர்தல் முறையானது; எந்த வகையானது என்பதில் மட்டுமே வேறுபாடுகள் கொண்டதாக விளங்கியதே தவிர; பெரும்பான்மையோர் கருத்து அறியும் அடிப்படை மாறிடவில்லை.

வாக்காளர்கள் பட்டியல்களில் வாக்களிப்போர்க்கு வழங்கப்பட்ட பிரதிநிதித்துவம், அதேபோல அந்த வாக்குகளைப் பெறத் தகுதியுடையோர் என்ற பிரதிநிதித்துவம் வாய்ந்த பட்டியல் – அதில் நிலமுடையோர், நிலமில்லாதார், படித்தோர், பாமரர், பட்டதாரிகள், பட்டம் பெறாதோர் என்றெல்லாம் பாகுபாடு செய்து வாக்குரிமை வழங்கப்பட்டோர் பெயர்கள் மட்டுமே இடம் பெற்றிருந்தன.

அதாவது பெரும்பான்மையான குடி மக்களுக்குக் குறிப்பிட்ட சிலர் மட்டுமே பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படும் முறை 1952 வரையில் இந்தியத் திருநாட்டில் நீடித்தது எனலாம்.

1950 ஆம் ஆண்டு இந்திய நாடு குடியரசாக அறிவிக்கப்பட்ட பிறகுதான் எல்லா மக்களுமே, சம நிலையில் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்வு செய்து கொள்ளவும் – அதிலும் குறிப்பாக அண்ணல் அம்பேத்கர் கொடுத்த குரலின் விளைவாக தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனித் தொகுதி முறைத் தேர்வும் என விதிமுறையும் வகுக்கப் பெற்றது.

தொல் பழங்காலத்திலிருந்து இதுவரையில் தங்களை வழிநடத்த, தங்களுக்காகக் குரல் கொடுக்க, தங்களைப் பாதுகாக்க, ஒரு தலைவன் வேண்டும் என்ற நிலையும் – அவன் மன்னனாக இருப்பின் அவன் தலைமையில் முடியாட்சி முறையும்; அந்த வரலாறு முடிந்து வந்த நிலையில் மக்களே அரசைத் தேர்வு செய்கின்ற குடியாட்சி முறையும்; என நிலையானதொரு மாற்றம்; இறுதியாக இந்தியாவில் ஏற்பட்டது.

வள்ளுவர் காலத்தில் அல்லது சங்க காலத்தில் முடியாட்சி முறைக்குக் கூறப்பட்ட இலக்கணங்கள்; இன்றைக்குக் குடியாட்சி முறைக்கும் பெரும்பாலும் பொருந்துவனவாக இருப்பதை நோக்குமிடத்து; ஆளுவோர் – ஆளப்படுவோர் எனும் இரு சாராருக்குமிடையே அமைந்திட வேண்டிய அணுகு முறைகளும், அறநெறிகளும் பற்றிப் பெரிதும் பேசப்பட்டிருப்பதை அறிய முடிகிறது.

எனவே எந்தக் கோணத்தில் பார்த்தாலும் ஆள விரும்புவோர் – அதற்கு அவர்களை அனுமதிப்போர் என இரு வகையினராக; அதாவது இன்றைய நிலையில்

<u>வேட்பாளர் –</u> அவரது வேட்கையை ஆதரிப்பது அல்லது ஆதரிக்காதது என முடிவெடுக்கும் அதிகாரம் படைத்த <u>வாக்காளர்</u> என்ற இரு பிரிவினரின் கையில்தான் "ஜனநாயகம்" எனப்படும் மக்களாட்சித் தத்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை உணர முடியும்.

உணர்ந்து அதற்கேற்ப நமது வாக்காளப் பெருமக்கள் செயல்படுகிறார்களா அல்லது செயல்பட விடப்படுகிறார்களா என்பதை சிந்தித்துப் பார்த்தால்; மெல்ல மெல்ல ஜனநாயகத்தின் நாடி நரம்புகளில் ஏதோ ஒரு நச்சு மருந்து அதிகார பலம், ஐஸ்வரிய வலிமை, வன்முறை வெறியாட்டம், ஊழல் சக்தி இவைகளின் மூலம் – ஊசி கொண்டு ஏற்றப்படுவதைப்போல ஏற்றப்பட்டு மக்களாட்சி தத்துவமும், அதை நம்பியிருக்கும் மக்களும் ஏமாற்றப்படுவதை அறிய முடிகிறது! அறிந்து அகம் நோக முடிகிறதேயல்லாமல் வேறெதுவும் செய்ய முடியவில்லை!

மக்களாட்சி யாருக்காக? மக்களுக்காக!

ஆனால் அதனை அமைக்கும் உரிமை, அந்த மக்களிடமிருந்து தந்திரமாக அல்லது தடித்தனமாக பறிக்கப்படுகிறதென்றால்; அப்படிப் பறிக்கப்படாமல் பாதுகாத்திட; அதைப் பறிப்போரை எதிர்த்து மாபெரும் புரட்சி நடத்த மக்கள் தயாராக வேண்டாமா?

மக்களாட்சி தத்துவம்; மதபேத பித்துக் கொண்ட மதோன்மத்தர்களிடம்,

சர்வாதிகார வெறி பிடித்தோரிடம் தப்பித் தவறி சிக்கிக் கொண்டால்; அதை அந்தக் கொடியவர்களிடமிருந்து விடுவிக்கும் வரையில் "ஜனநாயகத்துக்கு சுதந்திரம் கிடையாது" என்ற உண்மையை ஒவ்வொரு குடிமகனும் உணர்ந்தால்தான்; ஜனநாயகம் உயிர் பெற்றே இருக்க முடியும்! இல்லையேல் அதன் உடலைத்தான் நாறிப்போக விடுத்து நாம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

7 - 5 - 2005

✦✦✦

6

வாக்குச்சீட்டின் வலிமை

மக்களால் அந்த மக்களுக்காகவே அமைக்கப்படுகிற மக்களாட்சியை அமைத்திடுகிற பொறுப்பை ஏற்றிருக்கிற மக்கள்; அந்த ஆட்சியை உருவாக்கும் சக்தி, தங்களிடம்தான் இருக்கிறது என்ற உண்மையை; மேடைகளில் யாரோ பேசிடக் கேட்கிறார்கள். ஏடுகளில் அவ்வாறு எழுதியிருப்பதைப் படிக்கிறார்கள். அப்படிக் கேட்கும்போதோ அல்லது படிக்கும்போதோ ஒரு பெருமிதம் அவர்களுக்கு ஏற்படுவதாகத் தெரியவில்லை.

அதைவிட இன்னும் பெரிய வேதனை என்னவென்றால், அவர்களிடமுள்ள அந்த மகத்தான சக்தியை அவர்கள் வெளிப்படுத்தவோ, அல்லது பயன்படுத்தவோகூட அவர்களாக விரும்பி முன்வருவதில்லை என்பதை மிகுந்த வெட்கத்துடன் அந்த மக்கள் கூட்டத்தில் நானும் ஒரு துளி என்ற நிலையில் எண்ணிப் பார்க்கிறேன்.

மக்கள் சக்தியின் மாண்பு இவ்வாறு மங்கிப் போனதற்குக் காரணம் என்ன? மக்களாட்சி எனும் மண்டபம் கட்டுவதற்காக அவர்கள் தேர்வு செய்து நட்ட தூண்கள் சில ஆட்டம் கண்டு விடுவதும்; சில தரையில் பிடிப்பின்றித் தடுமாறுவதும்; சில தூண்கள் தம்மைத் தேர்வு செய்து பொருத்தியவர்களின் தலையிலேயே பலமாக இடித்து விடுவதும்தான் முக்கியமான காரணங்களாக இருக்கின்றன.

மன்னராட்சி,

எதேச்சாதிகார ஆட்சி,

பிரபுக்கள் சபையின் ஆட்சி,

மக்களாட்சி

எனப் பலவகை ஆட்சிகள் கூறப்படினும்; குறைந்த அளவு தவறுடையதும் – எல்லா மக்களும் ஆட்சியில் பங்கு கொள்வதால் அந்த ஆட்சியில் நியமிக்கப்படும் அதிகாரிகள் தவறிழைத்தால் அவர்களைத் தண்டிக்கவோ, நீக்கவோ வழியுண்டு என்பதுமான – மக்களாட்சி எனும் ஜனநாயக ஆட்சி முறையே சிறந்தது என்ற முடிவை ஏற்றுக்கொள்கிறார் அரிஸ்டாட்டில்.

எனவே இருக்கின்ற ஆட்சிமுறைகளில் சிறந்த முறையெனக் கருதப்பட்டு; கடைப்பிடிக்கப்பட்டு வருகிற ஜனநாயக முறை நமது இந்தியத் திருநாட்டில் செயலாக்கம் பெற்றுள்ள முறையாகும். இந்த முறையிலும் களையென முளைத்துள்ள சீர்கேடுகளை அகற்றிட வேண்டுமேயானால் அதற்கும் அடிப்படையாக அந்த மக்களின் வலிமை அல்லது சக்திதான் தேவைப்படுகிறது. ஏனெனில் அவர்களால் அமைக்கப்பட்ட ஆட்சியில் தோன்றும் அவலங்களை, அறவே போக்கிட அவர்களால்தான் முடியும்.

பெரும்பான்மையோர் எனப்படும் மக்களின் எண்ணிக்கை பலம், எந்தக் கருத்துக்கு அல்லது எவரைத் தேர்வு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறதோ; அந்தப் பெரும்பான்மை எண்ணிக்கையை ஏற்படுத்தக் கூடியவர்கள் மக்களாகத்தானே இருக்கிறார்கள்.

அவர்களின் எண்ணிக்கையை எடுத்துக்காட்டத்தான் வாக்குச் சாவடிகளில் வாக்குகளைப் பதிவு செய்து அவற்றைக் கணக்கிட வேண்டிய தேர்தல் முறை செயல்படுத்தப்படுகிறது.

அந்த வாக்குச்சாவடிகளில் நுழைவதற்கே; இந்தக் காலத்தில் வாக்காளர்களான மக்களுக்கு வரவேற்புத் தோரணங்கள் அமைத்திட வேண்டியிருக்கிறது.

இதில் கொடுமை என்னவென்றால்; இந்த ஜனநாயகப் பணி ஆற்றுவதை வாக்காளப் பெருமக்களுக்கு வாய்த்திடும் ஒரு நாள் ஊதிய வேலையாகச் சிலர் கருதுவதும், அதற்கும் சிலர் இணங்கி; அதனைப் பெற்றுக்கொண்டு அந்தப் பணியினை

நிறைவேற்றுவதும்தான்! இதில் மறந்து போவதும் – மறைந்துவிடுவதும் மக்களாட்சித் தத்துவம் அல்லவா?

> "நீ இந்த நாட்டுக்காரன் – இந்த நாட்டில் மத்தியிலோ – மாநிலங்களிலோ – மாநகர் மற்றும் நகரங்கள், பேரூர் சிற்றூர்களிலோ அமைகின்ற ஆட்சி மன்றங்கள் உன்னால்தான் அமைகின்றன – நாட்டின் வளர்ச்சிக்கோ அல்லது தளர்ச்சிக்கோ நீ அளித்திடும் வாக்குத்தான் காரணம் – "

என்று கூறி எந்த மக்களைக் கொண்டு தேர்தல் நடத்தப்படுகிறதோ; அந்தத் தேர்தலில் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கும் பொறுப்பைத் தட்டிக்கழிப்பவர்கள் அதே மக்கள்தான் என்கிறபோது; ஜனநாயகம் என்பது கேலிக்கூத்தாகி விடுகிறதல்லவா?

ஓர் அமைப்பை உருவாக்கிட –அந்த அமைப்புக்கு ஒரு தலைமை – ஓர் உறுப்பினர் – தேர்ந்தெடுக்கப்பட நம் கையில் தரப்படும் வாக்குச் சீட்டுக்குள்ள வலிமையையும், மாண்பினையும், நாமே உணரவில்லையெனில் நம்மையும் உள்ளடக்கிய இந்த மக்கள் கூட்டத்திற்கு எள் முனையளவு மதிப்பாவது உண்டென்று கூற முடியுமா?

எனவே மக்கள், தங்களை வெறும் வாக்காளர்களாக மட்டும் கருதிக் கொள்ளாமல்; இந்த நாட்டின் சிற்பிகள், சமுதாயத்தின் காவலர்கள், எதிர்காலத்தை நிர்ணயிக்கும் ஏந்தல்கள் – சுருக்கமாகச் சொன்னால் பாரதி மொழிப்படி "எல்லாரும் இந்நாட்டு மன்னர்கள்" என்பதை நிலைநாட்ட வேண்டும், நிலைநாட்டியே தீர வேண்டும்.

அப்போதுதான் பழுதுபட்டுக் கொண்டிருக்கும் ஜனநாயகம்;
ஆழ உழுது விளைந்த கதிர் குலுங்கும் கழனியாக மாறும்!

9 - 5 - 2005

✦✦✦

சுயமரியாதைத் திருமணம்



"அகில இந்திய அளவில் சுயமரியாதைத் திருமணங்களை சட்டப்படி செல்லுபடியாக்கிட; பிரதமருக்குத் தாங்கள் கடிதம் எழுதியதோடு; 1967ல் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நிறைவேற்றப்பட்ட அந்த சட்டத்தின் நகல் பிரதியையும் பிரதமருக்கும் பாராளுமன்ற சபாநாயகருக்கும் அனுப்பி வைத்துள்ளதைப் பற்றி "தினமலர்" ஏட்டில் ஒரு கண்டனக் கட்டுரை வெளிவந்துள்ளதே?"

"மிக்க மகிழ்ச்சி! எங்கே இந்த நண்பர்கள், இந்தப் பெரிய செய்தியை இருட்டடிப்பு செய்துவிடுவார்களோ என்று சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தேன் – மறுப்பு அல்லது கண்டனம் என்ற பெயரிலாவது செய்தியை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்களே; அதற்காக இரட்டிப்பு மகிழ்ச்சி எனக்கு! தந்தை பெரியார் அவர்களால் சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்னால் அறிமுகப்படுத்தப்பட்ட சுயமரியாதைத் திருமணத்தை ஆயிரக்கணக்கானவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நானே எனது 60 ஆண்டுக்கால பொதுவாழ்வில் ஆயிரத்துக்குக் குறையாத திருமணங்களை நடத்தி வைத்திருக்கிறேன். பெரியாரும் அண்ணாவும் மற்றும் நமதியக்கத் தலைவர்களும் நடத்தி வைத்துள்ள திருமணங்களின் எண்ணிக்கை எவ்வளவு இருக்குமென்று கணக்கிடவே இயலாது. பல்லாயிரக்கணக்கில் இருக்கும்.

ஆனாலும்; 1967 வரையில் அத்தனை சுயமரியாதைத் திருமணங்களும் சட்ட சம்மதம் பெற்றதாக அங்கீகரிக்கப் படவில்லை. சுமார் 40 ஆண்டுக்காலம் தமிழ்நாட்டில் நடந்த

சுயமரியாதைத் திருமணங்கள் சட்ட சம்மதம் பெறாமல் இருந்து; அதற்காக தி.மு. கழகம் சட்டமன்றத்தில் வாதாடியும் போராடியும்கூட நிறைவேற்றப்படாமல்போன அந்தக் கோரிக்கை; 1967ல் அண்ணா ஆட்சியிலேதான் நிறைவேறியது. அண்ணா அவர்கள், தந்தை பெரியார் அவர்களிடத்திலே கலந்து பேசித்தான் அந்தப் புரட்சிகரமான சட்டத்தைக் கொண்டுவந்து பேரவையிலே நிறைவேற்றினார்.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது குறித்து 'நெஞ்சுக்கு நீதி' முதல் பாகம் வரலாற்றுப் புத்தகத்தில் நான் எழுதியுள்ள ஒரு பகுதியை நினைவூட்டுகிறேன்.

அது வருமாறு:–

"தந்தை பெரியார் அவர்களே இந்தச் சுயமரியாதைத் திருமண முறையைத் தமிழகத்தில் முதன்முதல் தவழவிட்ட தாய் ஆவார். புரியாத மொழியில் பகுத்தறிவுக்குப் பொருந்தாத சாத்திரச் சடங்குகளுடன் நடைபெற்றுக் கொண்டிருந்த பழைய திருமண முறை ஒன்றை புறக்கணித்துவிட்டுப் புரிந்த தாய்மொழியில் வாழ்க்கை ஒப்பந்த உறுதிமொழியைக் கூறிக் கொண்டு மந்திரம் ஏதும் ஓதுதல் இன்றி மணமக்கள் மாலை மாற்றிக் கொண்டாலே போதும் என்கிற புதிய சீர்திருத்தத் திருமண முறை ஒன்றைத் தோற்றுவித்தார் பெரியார்.

தொடக்கத்தில் இந்தப் புதிய மணமுறைக்கு எழுப்பப்பட்ட தடைச் சுவர்கள், சொல்லடிகள், கல்லடிகள் ஏராளம். அவற்றையெல்லாம் மீறிப் பல்லாயிரக்கணக்கான ஆடவரும் பெண்டிரும் சுயமரியாதைத் திருமண முறைப்படியே தங்கள் இல்லறத்தை ஏற்படுத்திக் கொண்டனர்.

ஆனால், சீர்திருத்தத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குச் சட்டப்படி சொத்துரிமை முதலான பாதுகாப்பு இல்லாமல் இருந்தது. ஒன்றிரண்டு வழக்குகள் தொடுக்கப்பட்டபோது அத்தகைய திருமணமே செல்லாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றதுமே சுயமரியாதைத் திருமண முறைக்குச் சட்ட வடிவம் தருவதைத் தனது முக்கியமான செயல் திட்டங்களில் ஒன்றாக மேற்கொண்டது. அதற்குரிய மசோதாவைச் சட்ட அமைச்சர் நண்பர் மாதவன் 1967 ஜூலைத் திங்களில் சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார். அவருடைய தலைமையிலேயே அமைந்த ஆய்வுக் குழுவுக்கு அது அனுப்பப்பட்டுப் பின்னர் சட்டமாக நிறைவேறியது."

பிற மாநில அறிஞர் பெருமக்களும், பெரும் பதவிகளில் இருப்போரும், கல்வியாளர்களும், இதுபோன்ற சுயமரியாதைத் திருமணங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்புப் பெறும்போதெல்லாம்; இதனை வியந்து, பாராட்டியிருக்கிறார்கள். சட்ட சம்மதம் வேண்டுமென்று கேட்டது சுயமரியாதைத் திருமணம்தான் செய்துகொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்த அல்ல – என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இதற்குத் தெளிவான விளக்கம் என்னவென்றால்; யாரும் விருப்பப்பட்டு தங்கள் திருமணத்தை சீர்திருத்த முறையில் – சுயமரியாதை முறையில் – நடத்திக் கொண்டால்; அது சட்டப்படி செல்லத்தக்கதே என்பதுதான்! சுயமரியாதை முறையை மேற்கொள்வதும் அல்லது புரோகித முறையை மேற்கொள்வதும் அவரவர் விருப்பத்தைப் பொருத்தது – அல்லது அவர்களின் பகுத்தறிவு ஆர்வத்தைப் பொருத்தது – இதில் ஒன்றும் கட்டாயமில்லை.

'தினமலர்' கட்டுரையில் சுயமரியாதைத் திருமணம் என்பது; அனைத்திந்திய அளவுக்கு பேசப்படுகிற சிறப்பு பெறவில்லையென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

என்ன செய்வது; இந்தியாவில் தோன்றிய புத்தர் கொள்கை; இப்போது இந்தியா தவிர்த்த பிறநாடுகளில்தான் பரவிச் செழித்திருக்கிறது! புத்தர் கொள்கைக்கு செய்யப்பட்ட இருட்டடிப்புத்தான்; பெரியார் கொள்கைக்கும் செய்யப்பட்டது; அதுவும் தமிழ்நாட்டில்! ஆனால் இப்போது "முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பிய முழுமதியாக" பெரியாரின் தன்மான இயக்கக்

கொள்கை தமிழகத்தில் மட்டுமல்ல; மதச்சார்பற்ற நிலையை இந்திய அரசே ஏற்றுத் தீர வேண்டும் என்ற அளவுக்கு வளர்ந்து, வலுப்பெற்றிருக்கிறது.

அதேபோலத்தான்; வாழ்வின் தொடக்கமான திருமண விழாவே; சுயமரியாதை உணர்வோடு அமையுமேயானால், மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக; இன்று உடனடியாக இல்லாவிடினும் காலங்கடந்தாவது; எப்படி தமிழ்நாட்டுக்கு இந்தத் திருமண முறையை சட்டப்படி ஏற்றுக்கொள்ள சுமார் 40 ஆண்டு களாயிற்றோ அதுபோல இந்தியா முழுதும் இம்முறை படிப்படியாக கடைப்பிடிக்கப்படும் காலம் வந்தே தீரும்.

அதற்காக அகில இந்திய அளவில் எடுக்கப்பட்டுள்ள இந்த முயற்சியை, "தினமலர்" கட்டுரையாளர்; ஆதரித்து எழுதி ஆக்கபூர்வமாகத் துணைநிற்க முன்வராவிடினும்; அறவே இருட்டடிப்பு செய்து மறைத்துவிடாமல் மறுப்புரைத்ததின் மூலம்; மறைமுகமாகவேனும் ஆதரவளித்திடும் நிலையை வரவேற்று மகிழ்கிறேன்.

எப்போதும் எதிர்நீச்சல் போடுவதுதான் –
எங்களுக்குப் பெரியார் அளித்த
பயிற்சி – அதில் இப்போதும் வெல்வோம்."

13 - 5 - 2005

✦✦✦

மனிதனின் மறுபக்கம்



மறுபக்கம் என்பது; ஒரு பக்கம் என்று வந்தாலே; தன்னாலே காணக்கூடியது. கண்டாலும் காணாவிட்டாலும் இருக்கக் கூடியது. எந்தவொரு அசையாப் பொருளுக்கும், அசையும் பொருளுக்கும், அணுவினும் சிறியது முதல் பெரிய உருவமான யானை வரையுள்ள உயிரினங்களுக்கும் மறுபக்கம் உண்டு. யானையை விடப் பெரிய உயிரினங்களும் உலகில் இருந்தன; அவற்றுக்கும் மறுபக்கம் உண்டு. பூமிக்கும், வானுக்கும், வானில் நாம் காணக்கூடியதும் காண இயலாததுமான கிரகங்கள் எனப்படும் எல்லாக் கோள்களுக்கும் மறுபக்கம் இருந்தே தீரும். கடல்களுக்கும் கணக்கிலா நதிகளுக்கும், வாய்க்கால்களுக்கும் மறுபக்கம் இருப்பதை அறிய முடிவதுடன்; காற்றுக்குக்கூட அது வீசும் கனபரிமாணத்தைக் கொண்டு கண்டுபிடித்துவிட முடிகிறது அதன் மறுபக்கத்தை!

அந்த மறுபக்கங்களையெல்லாம் விடுத்து; நான் இப்போது சொல்ல வருவது மனிதனுடைய மறுபக்கத்தைப் பற்றியதாகும்.

மனிதனைப் பார்த்து நேராக நின்றால் அவன் முகமிருக்கும் பக்கத்திற்கு நேரான முதுகுப்பக்கம் மறுபக்கம். அந்த மனிதனின் வலதுபுறமாகப் பக்கவாட்டில் பார்த்தால்; அப்போது அவனது இடதுபுறத்துப் பக்கவாட்டு; மறுபக்கமாகி விடுகிறது. உருவங்களைத் திருப்பி வைத்துப் பார்ப்பதால் கண்ணுக்குத் தோன்றும் மறுபக்க ஆய்வு அல்ல இது. மருத்துவமனையில் உடல்நிலை ஆய்வுக்காக எல்லாப் பக்கங்களையும் பார்க்கும் போது ஒவ்வொன்றுக்கும் மறுபக்கம் உண்டு.

இப்படியே வளர்த்திக் கொண்டு போகாமல் நேரடியாக நான் பேச விரும்பும் மறுபக்கத்தைப் பற்றிப் பேசுவோமே!

அறிவுஜீவி என்றும் அறிவாளியென்றும், ஒப்பற்ற சிற்பியென்றும், உயர்வான ஓவிய நிபுணன் என்றும், எழுத்தில் இணையற்றவனென்றும், நடிப்பில் நிகரற்றவனென்றும், இசையில் ஈடற்ற மேதையென்றும், கவிஞர்களில் சிகரமென்றும், கலைஞர்களில் மிக உயரமென்றும், ஆன்மீகத்துறை அருள்மிகு ஞானியென்றும், ஆசாபாசங்களை விடுத்த அன்புருவத் துறவியென்றும், அஞ்சாநெஞ்சங்கொண்ட புரட்சிக்காரன் என்றும், வள்ளல் என்றும், வாய்மையின் வடிவமென்றும், விவேகியென்றும், வித்தகனென்றும், விஞ்ஞானப் பேரறிவாள னென்றும், இறைவழி நிற்போன் என்றும், ஏழைக்கு அருள்செய் அன்பனென்றும், சமூகசேவகன் என்றும், தலைவனென்றும், தன்னலமற்ற தொண்டனென்றும், புனிதனென்றும், புத்தாவதாரமென்றும், பக்தசிரோன்மணியென்றும், பகுத்தறிவுச் சுடரென்றும் ஆடவர் பெண்டிர் என இருசாராரில் எவர் போற்றப்படினும் புகழப்படினும் அவரின் மறுபக்கத்தை மாற்றாரோ; மற்றவரோ கண்டறிந்திட இயலாவிடினும்; அவர்தம் மனச் சான்றுக்கு அவராலேயே திரையிட முடியாது; திரையிட்டாலும் அந்தத் திரையைக் கிழித்துக் கொண்டு அல்லது விலக்கிக் கொண்டு, அந்த மறுபக்கம் திசையெட்டும் தெரிவதும் உண்டு.

மனிதனுடன் தொடர்புடையது அவனுடலில் இயங்கும் உயிரின் அடிப்படையில் பல உணர்வுகள் எனினும் அந்த உணர்வுகளுக்கும், உணர்வுகளால் ஏற்படும் விளைவுகளுக்கும் பிறப்பிடமாக இருக்கக் கூடியவை அறிவும் குணமும்தான். அந்த அறிவு நல்லறிவாகவோ; புல்லறிவாகவோ இருக்கலாம். அதேபோன்று, குணமும் நற்குணமாகவோ, தீர்க்குணமாகவோ இருக்கலாம்.

குணமும் அறிவும் கூட்டு சேரக் கூடியவை. நல்லறிவும் நற்குணமும் கூட்டு சேர்ந்திடின் அந்த மனிதனின் மறுபக்கத்தில் "மாசு" மிகக் குறைவாகவே காணப்படும். அதுவும் எளிதில் அகன்று விடக்கூடும்.

இதற்கு முற்றிலும் மாறாக; தீர்க்குணமும் நல்லறிவும் இணைந்த மனிதர்களும் இருக்கிறார்கள். இதைவிட மோசமாகப்

புல்லறிவும், துர்க்குணமும் கூட்டு சேர்ந்துள்ள குரூரமான மனிதர்களும் இருக்கவே செய்கிறார்கள்.

நல்லறிவு – நற்குணம் – புல்லறிவு – துர்க்குணம் – இவற்றில் எது எதனுடன் கூட்டு சேருகிறது என்பதைப் பொருத்து; மனிதனின் மறுபக்கம் அமைகிறது என்று கணக்கிடலாம். அதுவும் அவனது செயலைக் கொண்டுதான் கணக்கிட இயலும். அதுகூட அச்செயல் அம்பலத்துக்கு வந்த அளவுக்கு மட்டுமே!

எனக்குள்ள குறைபாடு பற்றியும் பலவீனம் பற்றியும் எனக்குத்தானே தெரியும் என்றாலும்; என் செயல்களை வைத்து; பிறரும் எளிதில் அறிந்து கொள்ள முடியும். அப்போதுகூட ஒன்றிரண்டு ஒளிந்து கொண்டுதான் அந்தப் பிறரையும் ஏமாற்றும்.

நல்லறிவு என்பதற்கு நிறைந்த அறிவு எனப் பொருள் கொண்டால்; அந்த அறிவாற்றல், துர்க்குணத்தைத் துணை சேர்த்துக் கொண்டு, இயங்குவதால் பெருங்கேடுதான் விளையும்.

பாலில் விஷத்தைக் கலந்தாலும், விஷத்தில் பாலைக் கலந்தாலும் – பால்தான் கெடும் என்பது போலவே, நல்லறிவுடன் துர்க்குணத்தைக் கலந்தாலும் – துர்க்குணத்துடன் நல்லறிவைக் கலந்தாலும் அறிவுதான் கெடும் என்பதை உணர்ந்து நடப்பதே உத்தமம்.

என்னதான் வளைந்து வளைந்து, சுற்றிச் சுழன்று நமது முழு உடலையும் பார்த்திட முனைந்தாலும் மறுபக்கத்தைக் கண்ணாடியில்லாமல் பார்க்க முடியாதது போலவே; நம்மைப் பற்றிய மறுபக்கத்தையும் முழுமையாகப் பார்க்க முடியாது.

"உன்னையே நீ அறிவாய்" என்று கிரேக்கத்துக் கிழவன் சாக்ரடீஸ் வழங்கிய அறிவாயுதம் எனும் ரசம் பூசிய கண்ணாடியின் உதவியால் மட்டுமே நமது மறுபக்கத்தைப் பார்த்து தேவைப்படும் திருத்தம் செய்து கொள்ள முடியும்.

15 - 5 - 2005

✦✦✦



விண்ணைத் தொட்டு மண்ணில் புதைவதா?

உலகம் எவ்வளவோ திருந்திவிட்டது என்கிறோம் – நாடு நாகரிகத்தை நாடி நகர்ந்து கொண்டுதானிருக்கிறது எனப் பெருமிதம் கொள்கிறோம் – இன்னமும் இன்னமும் முன்னேற வேண்டுமென விரும்புகிறோம் – நாமும் வாழ்ந்திருந்து, பார்த்து இன்புறக் கூடிய வாய்ப்பு இருக்கிற அளவுக்கு நிகழ்காலம் நீண்டு கொண்டே போகப் போவதில்லை என்பது தெரிந்திருந்தும் – எதிர்காலம் என்பதுகூட நம்மைப் பொருத்தவரையில் அவசரமாக முடிகிற காலமா? அல்லது ஆர அமர அமைதியாக அதிக நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிற காலமா? என்பதைப் பற்றி அறியாமலோ அல்லது அதுபற்றிக் கவலைப்படாமலோ மேலும் மேலும் மனித சமுதாயத்தில் அறிவு வளர்ச்சி ஏற்பட்டு அதன் உச்சியில் ஏறி நின்று உலகத்தைக் காணவேண்டும், கண்டு மகிழ வேண்டுமென விழைகிறோம்.

விஞ்ஞானப் புதுமைகளால் விளைந்திடும் வளர்ச்சிகளும் மகிழ்ச்சியளிக்கின்றன – விஞ்ஞான வித்தகத்தினாலும் கட்டுப் படுத்த முடியாத இயற்கைச் சீற்றத்தினால் ஏற்படும் வீழ்ச்சிகளும் எஞ்சியிருப்போர் இதயங்களை நெகிழ்ச்சியுறச் செய்கின்றன – வராமலே தடுக்க முடியாவிடினும், வந்துவிடுவதற்கு முன்பு தற்காப்பு தேடிக் கொள்ளவும் – வந்தபின் விளைந்திடும் பாதிப்புகளுக்குப் பரிகாரம் காணவும் – அறிவுலகம் முழுமையும் ஆய்வுக் கூடங்களில் அமர்ந்து அயராது சிந்தனை செய்து கொண்டிருக்கிறது – செயல்படவும் துடித்துக் கொண்டிருக்கிறது.

இப்படியெல்லாம் மனித சமுதாயம் உயர் எண்ணங்கள் மலரும் சோலையாக விரிந்து பரந்து செழித்துக் குலுங்கும்போதுதான்; அந்தச் சோலையில் குறுக்கும் நெடுக்குமாகக் குழி பறித்துக் கொண்டு தேங்கி நிற்கும் கழிவுநீர்க் குட்டைகளாகவும்; அந்தக் குட்டைகளும் குருதிப் புனலை அள்ளித் தெளித்த நிலையிலும் காணப்படுகின்றன.

உலகின் எல்லா நாடுகளிலும், எல்லாப் பகுதிகளிலும் இந்தக் குட்டைகளையும் குருதி ஊற்றுக்களையும் நமது மானிட சமுதாயத்தினிடையே காணும் வேதனை இருக்கத்தான் செய்கிறது.

அந்த வேதனைகளும் வெட்கக்கேடான நிகழ்வுகளும் வெளிநாட்டுச் செய்திகளாக மட்டுமல்ல; நமது இந்தியத் திருநாட்டுச் செய்தியாகவும் வரத் தவறுவதில்லை. எத்தனையோ நிகழ்ச்சிகள் – செய்திகள் – நான் தொடங்கியுள்ள பீடிகைக்கும், இந்தச் செய்திக்கும் என்ன தொடர்பு எனக் கேட்கத் தோன்றும். தொடர்பு இல்லைதான் – ஆம்; பீடிகைக்கும் அதையொட்டிச் சொல்வதாக நான் கருதும் நிகழ்ச்சிக்கும் தொடர்புபடுத்த முடியாதுதான்! ஆனால் ஒன்று; உலகில் இயற்கையுடன் போராடி அற்புதங்களை ஆற்றிட முனைகிற மனிதர்கள்; அதற்கேற்ற அறிவியல் முன்னேற்றம் – ஆய்வுகள் – ஆராய்ச்சிகள் – கலாச்சார மேம்பாடுகள் – சமுதாய சீர்திருத்த சிந்தனைகள் – அதற்குரிய செயல்கள் என இப்படிப் பல்வேறு துறைகளிலும் பரிணமிக்க வேண்டுமென முனைகிற கால கட்டத்தில்; அதற்கு முற்றிலும் மாறுபட்டதாக; நடந்துள்ளதும் இதோ, இந்திய நாட்டு விடுதலைக்காக இன்னுயிரை ஈந்த இணையற்ற வீரன் பகத்சிங் உலவிய பஞ்சாப் மண்ணில், இரக்கமற்றதும் – பண்பாட்டைப் புதைத்துவிட்டதும் – இருதயத்தை தூக்கி எங்கேயோ வீசிவிட்டது போன்றதுமான ஒரு நிகழ்ச்சி நடைபெற்று, அது ஏடுகளில் செய்தியாக வெளிவந்துள்ளதையும் கண்டு துடித்துப் போனேன்.

"பஞ்சாப் மாநிலத்தின் பெரோஸ்பூர் பகுதியில் உள்ள ஒரு சிற்றூர் – அந்த ஊரில் திருமணத்திற்கு தயாராக இருந்த ஒரு பெண்மணி. அவளை, அவளது தாயார் பாலி

என்ற வாலிபனுக்கு மணம் முடித்து தருவதற்கு ஒப்புதல் அளித்திருந்தாள். அந்தத் தாய் அதன்பிறகு உடல் நலிவுற்று அதன் காரணமாக இறந்துவிட்டாள்.

தாயார் இறந்தபின் அந்தப் பெண்ணின் தந்தை சின்னா சிங் என்பவர் அவளை; பெரும் பணத்திற்கு ஆசைப்பட்டு வேறொரு மணமகனுக்குத் திருமணம் செய்திடப் பேசி முடித்தார்.

ஆனால் அந்தப் பெண்; தனது அன்னையின் ஆசைப்படி அவள் முடிவு செய்திருந்த பாலி என்ற மணமகனைத்தான் மணப்பேன் என்று உறுதிபட கூறிவிட்டாள்.

அதனால் அந்தப் பெண்ணின் குடும்பத்தார் ஆத்திரமடைந்து; அவளுக்கு மொட்டையடித்து சித்ரவதை செய்தது மாத்திரமல்லாமல்; அவள் ஆடைகளை அகற்றி நிர்வாணமாகவும் ஆக்கி அந்த கிராமத்துத் தெருக்களில் ஊர்வலம் நடத்தியிருக்கின்றனர்.”

இந்தக் கொடுமையைக் கண்டித்து வழக்கு – கைது – எல்லாம் நடைபெற்றிருக்கிறது என்றாலும்கூட; நடந்த கொடுமை நடந்ததுதானே!

காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து எத்தனை காத தொலைவுதான் நடந்து, கடந்து முன்னேறியிருந்தாலும்; அந்தக் காட்டுமிராண்டிக் காலத்திலும் நாம் வாழ்ந்தவர்கள்தான் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் இத்தகைய கொடுமை குறிப்பாகப் பெண்களுக்கு இழைக்கப்படுமேயானால்; இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் போடப்பட்டுள்ள பீடிகை; ஒரு புறத்தில் விண்ணைத் தொடத் துடிக்கிற அறிவு வளர்ச்சி – இன்னொரு புறமோ – மண்ணில் புதைந்து விட்டதால் ஏற்பட்ட மனிதாபிமான வீழ்ச்சி என்பதை சுட்டிக்காட்டுவதன் மூலம்; பொருந்திவரத்தானே செய்கிறது?

16 - 5 - 2005

✦✦✦

மனிதனும் நுபிறவியும்

“மனிதன் தானாகப் பிறக்கவில்லை; அதனால் அவன் தனக்காக வாழக் கூடாதவன், என்ற தந்தை பெரியாரின் கருத்து, சிந்தனையைச் சிலிர்க்க வைக்கக் கூடியதாகும். தந்தை பெரியாரின் இந்தக் கருத்துக்கு ஒரு வடிவமாக நம்மிடையே திகழக் கூடியவர் கலைஞர் அவர்கள்”

என்று இந்த ஆண்டு என் பிறந்த நாளுக்கான ‘முரசொலி’ மலரில் ஆருயிர் இளவல் வீரமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார் – அதனையொட்டி தீட்டப்படுவதே; இன்றைய எழுத்தோவியம்:–

அடுத்த பிறவியில் நான் இப்படிப் பிறக்க வேண்டுமென்றும் – எப்படிப் பிறந்துவிடக் கூடாதென்றும் – மனத்தை அழுத்தும் சுமைக்கு ஏற்றவாறும் அல்லது வாழ்வில் நுகரும் சுவைக்குத் தக்கவாறும் கூறுவோர் உண்டு – கற்பனைக் கதைகளில்; கடும் புராணிகக் கருத்து மலிந்த நூல்களில்; காணமுடியும் இவற்றை!

“காய்ந்த வயிற்றுக்குக் கஞ்சி வார்த்திடவே
கற்கண்டே! தேன்பாகே! திருக்குறளே!
நீ காஞ்சியிலே பிறந்திடுக!”

என்று அன்னைத் தமிழாள் வேண்டியதற்கிணங்க,

“பிறந்திட்டான் நம் அண்ணனாக;
அறிவு மன்னனாக,

பொதிகை மலைத் தென்றலாய்
போதாகி மலர்கின்ற
தமிழ் உணர்வின் புதுமணமாய்ப்
பதிகத்துப் பொருளாய்ப்
பழந்தமிழர் புறப்பாட்டாய்
வந்துதித்தான் அண்ணன் – கீழ்
வானுதித்த கதிர் போல – ”

என்று நான் பாடிய இரங்கற் கவிதாஞ்சலியில் தமிழன்னை வேண்டுகோளையேற்று, வள்ளுவர், அண்ணாவாகப் பிறந்தார் காஞ்சியில் என்பதுகூட கருத்தை வலியுறுத்துவதற்காகக் கையாளப்பட்ட கவிதை அலங்காரக் கற்பனையே தவிர; விஞ்ஞானப் பகுத்தறிவு விரும்பியேற்றுக் கொள்ளக்கூடிய உண்மையல்ல என்பதை அகழ்ந்து சிந்தித்தால் அறிய முடியும்.

கவிதையெழிலுக்காகவும் கருத்தை நினைவில் நிற்குமாறு வலுப்படுத்துவதற்காகவும் எழுதியது என்று; என்னைப்போல வெளிப்படையாக ஒப்புக்கொள்ளாத படைப்பாளிகள் பலர் மறுபிறவியெனும் மூடநம்பிக்கைக்குத் தங்களை அறியாமலே முத்திரை குத்தியிருக்கிறார்கள்.

* “அடுத்த பிறவியில் நீ நரியாகப் பிறப்பாய்”

  எனச் சாபமிடுவது –

* “அந்தச் சாபம், யாரால் எந்தக் காலத்தில்
  விமோசனம் பெறும்?” என்று ஆருடம்
  சொல்வது –

* “பார்வதி தேவியே! நீ அடுத்த ஜென்மத்தில்
  மீனவப் பெண்ணாகப் பிறந்து, மீனவனாகப்
  பிறக்கும் சிவபெருமானைத் திருமணம்
  செய்து கொள்க!” என்பதும் அதற்கு,

பார்வதியும் தலையாட்டி சம்மதிப்பதும் –

அவ்வாறே கதை நடந்தது என்பதும் –

நமது பழைய புராணங்கள்!

* "மரணமடைந்தோர்க்கு ஆண்டுதோறும்
திதி, திவசம் என்ற பெயரால் புரோகிதர்
மூலம், அரிசி, காய்கறிகள், காசு பண
தட்சணையெல்லாம் அனுப்புகிறோமே;
இறந்தோர்தான்; மறு ஜென்மம் எடுத்–
திருப்பாரே; அங்ஙனமாயின் அவருக்கு
புரோகித மந்திரப்படி அனுப்பிய அரிசி, பருப்பு,
காய்கறி, பணமெல்லாம் எங்கே போய்ச்
சேரும்? யார் வாங்கிடுவர்?"

இந்தக் கேள்விகளை நம் உள்ளங்களில் எழுப்பிக் கேட்க வைத்த பெரியார்தான்; மனிதனின் பிறப்பு அவனது வாழ்வு இவற்றைப் பற்றி குறள் வடிவில் ஒரு சிந்தனைச் சிற்பத்தை நம் இதயத்தில் செதுக்கி இருக்கின்றார்.

"மனிதன், தானாகப் பிறக்கவில்லை. அதனால்
அவன் தனக்காக வாழக் கூடாதவன்"

எத்துணை உயரம் – உயரம் – உயரமான – உயர்ந்த தத்துவம் – ஒப்பற்ற தத்துவம்!

"நான் இன்னாருடைய கர்ப்பத்தில் உதித்து
இவ்வாறு பிறக்கப் போகிறேன்"

என்பதெல்லாம் – புராணீகம் மட்டுமே ஏற்றுக்கொள்ளக்கூடிய கட்டுக்கதை – கற்பனையூற்று – கவிதைக்குப் பூசும் தங்க முலாம்.

மனிதன், தானாகக் திட்டமிட்டுப் பிறப்பதாக
இருந்தால்; மாடாகப் பிறப்பதா? மந்தியாகப்
பிறப்பதா? மயிலாகப் பிறப்பதா? குயிலாகப்
பிறப்பதா? அல்லது மறுபடியும் மனிதனாகவே
பிறப்பதா என்பதற்கு விடை கண்டு, அவ்வாறு
பிறக்கக்கூடும்.

மனிதன், தானாகப் பிறக்கவில்லையென்று பெரியார் ஒரேயடியாக அடித்து, அது இயற்கையின் தொடர் விளைவு ஆகிவிடுகிறது என்பதை அறிவுறுத்துகிறார் என்றால்; எந்த உயிரின் உற்பத்திக்காகவும் உருவாகும் கருவை வளர்க்கவும் அழிக்கவும் உருமாற்றவும்தான் மனிதன் கற்றிருக்கிறானே யல்லாமல், விதையின்றி எப்படி மரம் வந்து விடாதோ; அதுபோலவே சினையின்றி மனிதன், தானாக வெட்ட வெளியில் அந்தரத்தில் தோன்றும் அவதாரமாக வெளிப்பட்டுவிடவில்லை; ஆம் அப்படி ஒரு மனிதன்கூட தானாகப் பிறக்கவில்லை.

பிறந்த மனிதன் எவனுக்கும்; "இப்படிப் பிறக்கப் போகிறோம்" என்று முன்கூட்டியே தெரிந்ததில்லை – அதனால் தான் தானாகப் பிறக்காதவனுக்கு – எப்படிப் பிறக்கப் போகிறோம் என்று தெரிந்து பிறக்காதவனுக்கு – பிறந்த பிறகு தனக்காக வாழ வேண்டுமென்று தன்னலம் வரக்கூடாது என்பதுதான் தந்தை பெரியாரின் கண்டிப்பு எனலாம்.

பிறந்ததே உன் செயல் அல்ல; அது இயற்கைச் சக்கரத்தின் சுழற்சியில் நடைபெற்ற ஒன்று என்கிறபோது, நீ மற்றவர் செயல்களுக்கும் சேர்த்து உரிமை கொண்டாடி, தன்னலம் நாடுவது வேடிக்கையாக இல்லையா? பிறப்பு எனும் இயற்கையளித்த விளைவுக்குத் தன்னலப்பற்று என்பது கூடவேகூடாது என்பதே இதன் கருத்து!

6 - 6 - 2005

✦✦✦

வெற்றித் தோல்வி!

சங்க இலக்கியப் பூக்காடுகளில், சரித்திர ஏடுகளில் வாள் சுழற்றி போர்முனைகளில் வெற்றிகளைக் குவித்த வீரத்தமிழனையும், வெற்றி வாய்ப்பினை இழந்த மானமிகு தமிழனையும் பார்த்திருக்கிறேன், படித்திருக்கிறேன். அந்த இருவரில் என்னை மிகவும் கவர்ந்தவன் தோல்வியில் துவளாது மானங்காத்த தமிழனேதான்.

மண்ணையிழந்தான், மாளிகையிழந்தான், மாட்டிக் கொண்டான் சிறைச்சாலையில் என்ற நிலையிலும் தவித்த வாய்க்குத் தாகம் தீர்த்திடத் தண்ணீர், தக்க நேரத்தில் சிறையில் தந்திடவில்லையென்பதற்காகத் தனது மானமே போயிற்றென்று செத்துப் போனானே 'சேரமான் கணைக்கால் இரும்பொறை' யென்ற தமிழன்; எளிதில் உச்சரிக்க முடியாத அந்தப் பெயரை இன்னமும் நினைவில் வைத்துக்கொண்டு அவனைப் போற்றுவதற்குக் காரணம்; தோல்வியினால் அவன் துவண்டுவிடவில்லை என்பதும், மானத்தை உயிரினும் மேலாக மதித்தான் என்பதும்தானே!

வெள்ளாட்டு மந்தைபோல் கட்டுப்பாட்டு உணர்வுடன் வீரர்களின் பட்டாளம் களம் நோக்கிச் சென்றபொழுது அந்தப் படைவரிசையில் எல்லா வீரர்களையும்போல ஒருவனாக இருந்தபோதிலும்; தன் மகனுக்கு மட்டும் சற்று அதிகமாகவே தேறல் எனும் பானத்தை மன்னன் வழங்கினானே; அந்தப் போரில் உயிர்விட்டோர் வரிசையில் ஒருவனாகி, பாடையில் படுத்து மன்னனின் பாராட்டைப் பெறாமல் அந்த மகன் இன்னமும்

உயிரோடு இருக்கிறானேயென்று ஒரு தாய் புலம்புவதாக; கவித்தாய் ஔவை கண்கலங்குகிறாள்; அந்த வீரத்தாயை நினைத்தால் இப்போதும் என் விழிகளை நீர்த் திரை மறைக்கிறது.

வெற்றிபெற்று வெங்கொடுமைச் சாக்காட்டுக் களத்தில் வாகை சூடி வரும் மகனைக் காண்பதைக் காட்டிலும்; அவன் விழுப்புண் பெற்று போரில் மாண்டோரில் ஒருவனாகச் சவ ஊர்வலத்தில் வருவதையே பெரிதும் விரும்பும் அந்தத் தமிழ்ப் பெருமாட்டியை அல்லவா வணங்கத் தோன்றுகிறது நமக்கு!

“வெள்ளை வெள்ளாட்டுச் செச்சை போலத்
தன்னோர் அன்ன இளையர் இருப்பப்
பலர்மீது நீட்டிய மண்டையென் சிறுவனைக்
கால்கழி கட்டிலிற் கிடப்பித்
தூவெள் அறுவை போர்ப்பித் திலதே”

“புறநானூறு” – (ஔவையார்)

(செச்சை = கிடாய்

மண்டை = தேறல் எனும் மது

கால் கழி கட்டில் = காலில்லாத கட்டில் (பாடை)

மனித உறுப்புக்களான கால், கை, கண், மூக்கு, செவி என்பவை இல்லாத வெறும் சதைப்பிண்டமாக பிறந்தாலும்கூட; அந்த உடலில் போரில் பட்ட புண் இருப்பதுதான் வீர மரபின் இலக்கணம் என விதி வகுத்து, அவ்வாறே வாள் கொண்டு கீறி புண் செய்து, அதன் பிறகே மண்புகச் செய்திடும் தமிழ் மரபின் தன்மான வீர உணர்வு காட்டும் செயல் நம் மெய்சிலிர்க்க வைக்கிறது!

இகழ்ந்துரைத்தனர் தமிழ் மன்னர்களை என்பதற்காக; இமயம் வரையில் படை கொண்டு சென்று குயிலாலுவம் எனும் இடத்தில் கனக விசயர் எனும் ஆரிய மன்னர்களை வென்று; அவர் தலையில் கண்ணகி சிலைக்கான கல் தூக்கி வைத்து வெற்றி முரசு கொட்டி வந்த சேரன் செங்குட்டுவனைவிட;

தோல்வியால் துவண்டுவிடாமல் மானங்காத்த மன்னன் சேரமான் கணைக்கால் இரும்பொறை நம் மனத்தில் உயர்ந்த இடத்தைப் பிடித்துக்கொள்கிறான்.

அவனைவிட மேலான இடத்தைப்பெற வேண்டியவன் தன் மகன் என ஒரு தாய் கருதுகிற காரணத்தினால்தான்; படை வரிசையில் பல வீரர்கள் இருந்தபோதிலும், அவளுடைய மகனுக்கு அந்த மன்னனே முன்வந்து தேறல் பானம் அவன் கையால் அளித்ததை நினைவிற்கொண்டு; அந்த மகன், போர்க்களத்தில் இன்னமும் விழுப்புண் பெற்று மண்ணின் பெருமைகாத்து மடிந்திட முன்வரவில்லையே என்று கலங்குவதாக ஔவைக் கிழவி புலம்புவது; புறநானூறு பாடலாகிறது!

பாராள்வோன் கையால் பானம் பெற்றதற்கே தன் மகன் போரில் வீரமரணம் அடைய வேண்டுமென விரும்புகிற தாய்; ஒருவேளை மகன் மன்னனிடம் பலன்களும், பதவிகளும் பெற்றிருந்தால் அவனிடம் இன்னும் என்ன எதிர்பார்ப்பாளோ?

எனவே, அந்நாள் இலக்கியங்கள், வரலாறுகள் மட்டுமின்றி இந்நாளிலும் அரசியல், சமுதாய, பொது வாழ்வில் ஈடுபடுவோர் எவராயினும்; அவர்கள் எப்படியாவது தமது குறிக்கோளில் வெற்றிபெற வேண்டும் எனக் குறுக்கு வழி தேடாமல் – மான உணர்வு மங்காமல் பெறுகின்ற தோல்வியும்; விழுப்புண் பெற்று அடைகின்ற வீழ்ச்சியும்கூட வெற்றிப் பட்டியலில்தான் வைக்கப்படும் என மன நிறைவுகொள்ள வேண்டும். அதுதான் மறுக்க முடியாத உண்மையுங்கூட! அந்த உண்மைக்கு ஒரு நாள் உயர்வு உண்டு; உறுதியாக உண்டு!

8 - 6 - 2005

✦✦✦

அழுக்காறு

"அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார்
வழுக்கியுங் கேடீன் பது"

பொறாமைக் குணம் கொண்டவர்களை வீழ்த்துவதற்கு வேறு பகையே வேண்டா; அந்தக் குணமே அவர்களை வீழ்த்தி விடும்!

அழுக்காறு ஊரின் நடுவே ஓடுவதற்கோ, அல்லது ஊருக்குள்ளே ஒரு பகுதியில் தேங்கிப் பெருகுவதற்கோ; அறிவுடையோர் அனுமதிக்கமாட்டார்கள்.

அழுக்காற்றின் நீரைக் குடிப்பதும் –
அந்த நீரில் குளிப்பதும் –
அழுக்காற்றிலிருந்து கிளம்பும் நாற்றம்,
காற்றில் கலந்து ஊருக்குள் நுழைவதும்,
மக்களின் நலத்திற்குப் பெருங்கேடு
விளைவிக்கும் என்பதால்

அது உடலுக்கும் உயிருக்கும் தீமையென்று ஒதுக்கி வைக்கிறோம். ஒதுங்கிச் சென்று விடுகிறோம்.

பொறாமைக் குணமும், அழுக்காறு எனப்படுகிறது. அந்தக் குணம் இல்லாத பண்பு ஒருவர்க்கு வாய்க்குமானால் அதற்குமேலான பேறு எதுவும் இருக்க முடியாது என்கிறார் அய்யன் வள்ளுவர்.

ஆறு என்பதற்கு வழியென்றும் பொருள் உண்டு – நதி என்றும் பொருள் உண்டு – ஆற்றுப்படுத்தல் என்பது; வழிப்படுத்தலையும், போக்குதலையும் குறிக்கக்கூடியது.

இவற்றில் எதுவும் அழுக்குடன் சேர்தல்கூடாது. அழுக்கும் இவற்றுடன் சேர்ந்து, அழுக்காறு என்றோ; அழுக்கு வழியென்றோ; அழுக்கு நதியென்றோ ஆகிவிடும்போதுதான் அது நாம் இறங்கிப் பார்க்கவே முயற்சி செய்யக்கூடாத "தீயநெறி" என்று தெளிவாகிறது.

ஊருக்குள் அழுக்காறு எனில்; அது அந்த ஊரின் ஆரோக்கியத்திற்குப் பெருந்தீமை என்பது போல்; அழுக்காறு எனும் பொறாமைக் குணம் மனித உள்ளத்தையே மாசுபடுத்தக் கூடியது.

பொறாமை, எப்போது ஏற்படுகிறது ?

நமக்குக் கிடைக்காத ஒன்று பிறருக்குக் கிடைக்கும்போது ஏற்படுகிறது! நமக்குக் கிடைத்திருப்பதைவிட சற்று உயர்வானதாக ஒன்று பிறருக்கு கிடைக்கும்போது பொறாமைக் குணம் வளைத்துப்போட்டு வாட்டுகிறது! அந்தப் பிறர்; நண்பராகவே இருப்பினும் அவருக்கு விதிவிலக்கு அளிக்காமல்; பொறாமை தனது செயல்பாட்டில் கண்ணுங் கருத்துமாக இருந்து கடமையாற்றுகிறது.

ஒரே துறையில் இருப்போரிடம் இந்தப் பொறாமை நோய் எளிதாகப் பற்றிக்கொள்ளும் இயல்பு கொண்டதாய் இருக்கிறது – இசைத்துறை, கலைத் துறை, எழுத்துத்துறை, பேச்சுத்துறை, அரசு அலுவலகத்துறை, அறிவு ஆராய்ச்சித்துறை, நிர்வாகத் துறை, நீதித்துறை, அரசியல்துறை, பொருளாதாரத்துறை, சமுதாயத்துறை இன்னோரன்ன துறைகளில் ஒரே துறையில் இருப்போரிடையேதான் இந்நோய் நீக்கமற நிறைந்திருப்பதை அறிய முடிகிறது. அவ்வளவு ஏன்; ஒரே கொள்கை – ஒரே குறிக்கோள் எனவுரைத்து ஒரே கொடியின் நிழலில் அணிவகுப்போரிடையே அந்த அணியின் எதிர் அணியினரால்கூட ஏற்படுத்த முடியாத பிளவை; அனுமதியின்றி

நுழையும் அழுக்காறு எனும் பாவியால் ஏற்படுத்திவிட முடியும் என்கிறது குறள்! கணவன் மனைவி உறவிலேகூட இதனால் கலாம் விளைந்த நிகழ்ச்சிகளும் உண்டு.

சந்திர மண்டலத்திற்குச் சென்று தடம் பதித்து வரும் அமெரிக்க நாட்டு விஞ்ஞானியைப் போற்றிப் புகழ்கிறோம்; அதைப் போன்றதொரு சாதனையை நமது ஊரில் அடுத்த தெருவில் வசிக்கும் சந்திரன் என்பவர் சாதித்துக் காட்டினால் அவரைப் புகழ்வதற்கு முன்பு பொறாமை முந்திக்கொண்டு விடுகிறது. அவரைப் போற்றிப் பாராட்டுவதுகூட வேண்டாம்; அவர் மீது பொறாமை கொள்ளாமலாவது இருக்க முடிகிறதா?

இதிலிருந்து தெரிவது என்ன? பக்கத்தில் இருந்து நமக்குப் பழக்கமானவர், பல்கலை அறிவாளியாக இருப்பினும், பக்கத்தில் இருக்கிறார் என்பதே பலவீனமாகிவிடுகிறது.

வானில் சிறகடிக்கும் வண்ணத்துப்பூச்சியைக் காண்பதில் காட்டும் ஆர்வம்; வண்ணச் சிறகுகளுடன் நம் வீட்டுக் கொல்லையில் நடைபோட்டுக் கொண்டிருக்கும் சேவலின் மீது செல்வதில்லையல்லவா?

இப்படியும் நம்மவர் திறனுக்கும் சிறப்புக்கும் நன்மதிப்புக் குறைக்கப்படுகின்ற நிலைகண்டு நெஞ்சு பதைத்திடும் வேளையில்; அனுமதியின்றி நுழையும் 'அழுக்காறு' எனும் பாவிக்கும் இடம் அளிப்பது என்பது; 'கொள்ளை நோய்'க்கும் விருந்து வைப்பது போலத்தான் ஆகிவிடும்.

பிறர்க்கு வரும் நலமும், வளமும், புகழும், பாராட்டும், அனைத்தும் நமக்கு வந்ததாகக் கருதி மகிழ்வதே; அக்கொள்ளை நோய் நம் எல்லைப் பக்கமே எட்டிப்பார்க்க முடியாத தடுப்பு முறையாக அமையும்.

10 - 6 - 2005

✦✦✦

மதிக்கனா

அளவளாவுதல் –

அந்தரங்கங்களைப் பேசிக் கொள்ளுதல் –

அன்பினைப் பரிமாறிக் கொள்ளுதல் –

அதைப் பகிர்ந்து கொள்ளுதல் –

மகிழ்ச்சியிலும், துன்ப துயரங்களிலும் பங்கு கொண்டு ஆறுதல் வழங்குதல்

ஆறுதல் பெறுதல் –

படிப்பில் விளையாட்டில் ஈடுபடுதல் –

இவைகளும், இவற்றைப் போன்றவைகளும் "நட்பு கொள்ளுதல்" – "நண்பர்களாயிருத்தல்" என்ற செயல் அடிப்படையில் நடப்பவை.

நட்பைப் போன்ற அரிய ஒன்று இல்லையென்றும், அதைப் போல் பாதுகாப்புக்கு ஏற்ற ஒன்றைக் காண்பது எளிதல்ல என்றும் பழகப் பழக இன்பம் தரக்கூடியதென்றும் ஒத்த மனஉணர்வில் உற்பத்தியாகக் கூடியதென்றும் நட்பினைப் பற்றி நயம்பட உரைக்கும் அய்யன் வள்ளுவரே;

நட்பு என்பது நண்பர்கள் சிரித்து மகிழ்வதற்காக அல்ல என்றுரைத்து; அவர்களில் யாரேனும் நல்வழி தவறி அல்வழி செல்வாராயின் இடித்துரைத்துத் திருத்திடப் பயன்படக் கூடியதென்றும் – நட்பின் தலையாய இலக்கணத்தைக் கூறுகிறார் என்றே பழைய உரைகள் பலவும் விளக்குகின்றன.

**“நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு”**

எனும் இக்குறளில் கூறப்படும் “மிகுதிக்கண்” என்பது “நல்வழி தவறுதல்” என்ற பொருளில் எடுத்துக்கொள்ளப்படும் நேரத்தில்; ‘நகுதல்’ எனப்படும் சிரித்து மகிழ்ந்து பழகுவதே எல்லை தாண்டிவிடக் கூடாது என்ற பொருளிலும் எடுத்துக் கொள்ளப்படலாம் அல்லவா?

என் நண்பர் ஒருவர் நல்லவர் – அன்பிற் சிறந்தவரும்கூட – நட்புக்கினியவர். அதேபோல என்னுடன் இளமை முதல் பழகிய மருத்துவ (டாக்டர்) நண்பர் ஒருவர் வெளியூரில் இருந்தார். அந்த ஊருக்கு நானும் நான் முதலில் குறிப்பிட்ட நண்பரும் சென்றிருந்தோம். மருத்துவ நண்பர் அவர் வீட்டுக்கு அழைத்திருந்தார். சென்றோம். நீண்ட நேரம் சிரித்து மகிழ்ந்து பல கதைகள் பேசினோம். மருத்துவ நண்பரிடம் சிகிச்சைக்கு வந்த சில பிரமுகர்கள் கூடத்தில் அமர்ந்து தங்கள் பிரச்சினைகளைக் கூறி உடற்பரிசோதனை செய்துகொண்டு மருந்து எழுதி வாங்கிக் கொண்டு போயினர். வந்தவர்களின் நோய் தீர்க்கும் பணியையும் எங்களுடன் உரையாடுவதையும் அந்த மருத்துவர் ஒருசேர நிகழ்த்திக் கொண்டிருந்தபோது நான் குறிப்பிட்ட நட்புக்கினியவர்; மெல்ல எழுந்து மருத்துவ நண்பரின் மேசையருகே சென்றார். மேசை மீதிருந்த மருத்துவ நண்பருக்குரிய “இதயத் துடிப்பு அறியும் கருவி” (ஸ்டெதஸ் கோப்)யைக் கையில் எடுத்தார். எடுத்ததுடன் நிற்கவில்லை என் நண்பர்.

சிகிச்சைபெற வந்து அமர்ந்திருந்த அத்தனை பேருக்கு மத்தியில் அந்தத் துடிப்பறியும் கருவியை, மருத்துவ நண்பரின் மார்பில் வைத்து, கருவியின் முனையைக் காதில் வைத்துக் கொண்டு, கை நாடியும் பிடித்து ஆராய்ச்சி செய்யத் தொடங்கிவிட்டார்.

மருத்துவ நண்பருக்கு எப்படித்தான் அவ்வளவு கோபம் வந்ததோ தெரியவில்லை; “ஓய்! நாகரீகமாக நடந்து கொள்ளும்!” என்று சொன்னபடி அந்தக் கருவியைப் பிடுங்கி மேசையில் வேகமாகப் போட்டுவிட்டார்.

சிகிச்சைக்கு வந்த பிரமுகர்கள் சிரித்துவிட்டார்கள் என்றாலும்; அந்த நிகழ்ச்சியினால் வாயடைத்துப் போனார்கள்.

பிறகு என் நட்புக்கினிய நண்பரிடம் நான் சற்றுக் கோபமாக; "ஏனய்யா; எதிலும் அளவு வேண்டாமா? என்னதான் நண்பர் என்றாலும் இவ்வாறு செய்யலாமா? ஒருவர் தொழிலில் இப்படிக் குறுக்கிடுவது அழகா?" என்று கேட்டவுடன் இவர், அவர் கையைப்பிடித்துக் கொண்டு வருத்தம் தெரிவித்து மன்னிப்பும் கேட்டுக்கொண்டு என்னோடு புறப்பட்டார்.

அதனால் நகுதற் பொருட்டுத்தான் நட்பு என்றில்லாமல் – அதுவும் எல்லை கடந்து விடுவதாயின் அதனை இடித்துரைத்து திருத்த வேண்டுமென்ற பொருளிலும் அய்யன் வள்ளுவர் "மிகுதிக்கண்" என்று குறிப்பாகக் கூறியிருப்பார் என்று நான் கருத நேரிட்டது.

நண்பர்கள் சிரித்து மகிழ்ந்து வேடிக்கை பேசி விளையாடுவதும் அளவோடு இருக்கவேண்டும்; அதில் ஒருவர் அளவு கடந்தால் மற்றொருவர் திருத்தித் தடுத்திட வேண்டும். அதுதான் உண்மையான நட்புக்கு அடையாளமாகும்.

சில நண்பர்கள், உரிமையுடன் பழகுவதாகக் கருதிக்கொண்டு அப்பாவித்தனமாக எதையாவது செய்து வீண் வெறுப்புக்கு ஆளாகிவிடுவார்கள். அதற்கும் உதாரணமாக என் நட்புக்கினியவராக இருந்தவரையே மீண்டும் நான் குறிப்பிட வேண்டியுள்ளது.

தமிழகத்து மக்களின் உள்ளத்தில் தனியிடம் பெற்ற திரைப்படத் தயாரிப்புக்கூடம் ஒன்று சென்னையில் இப்போதும் உள்ளது. நான் கதை வசனம் எழுதிய படங்கள், பாடல் எழுதிய படங்கள் அங்கே தயாரிக்கப்பட்டன. அந்தச் சமயங்களில் நான் அங்கு போவதும் திரைப்படக் கலைஞர்களுடன் உரையாடி மகிழ்வதும் உண்டு. அந்த கலைக்கூடத்தில் இசையரங்கம் ஒன்றும் உண்டு. இசைமைப்பாளராகப் புகழ் பெற்ற ஒருவர் அந்த அரங்கத்தை நிர்வகித்தார். ஒருநாள் என் நட்புக்கினிய நண்பருடன் அந்த இசையரங்கிற்கு சென்றிருந்தேன்.

இசையமைப்பாளரும் நானும், திரைக் கலைஞர்களும் பல செய்திகள் குறித்து உரையாடி மகிழ்ந்தவேளையில்; இசையமைப்பாளர் ஒரு பாட்டுக்கு "மெட்டு" அமைக்க ஆர்மோனியக் கட்டைகளில் தனது விரல்களைப் பதித்தார். சில நிமிடங்களில் எனது இனிய நண்பர், அவர் அருகே அமர்ந்து 'ஆர்மோனியப் பெட்டி'யைத் தன்னருகே இழுத்து வைத்துக் கொண்டு "எனக்கு என்ன கட்டை?" என்று ஆர்வம் மிகுந்திடக் கேட்கலானார். அது பொதுவாக இசைவாணர்களுக்கு ஆத்திர மூட்டக்கூடிய ஒரு செயல். அவர்களில் மிகப் பலர் இசையை "தெய்வமாகக்" கருதி அதற்கு மரியாதை செய்பவர்கள். இந்த நிலையில் பல கலைஞர்களும் வீற்றிருந்த அந்தக் கூடத்தில்; இசைக் கருவியான ஆர்மோனியத்தைத் தன்பக்கம் இழுத்து வைத்துக் கொண்டு, "தனக்கு என்ன கட்டை?" என்று வேடிக்கை விளையாட்டாகக் கேட்டது எல்லோரையும் வேதனைப்படுத்திவிட்டது என்பதை அவர்கள் முகக் குறிப்பால் உணர்ந்து கொண்ட நான் "உமக்கு; என்ன கட்டை? புத்திதான் கட்டை" என்று விளையாட்டு போலவே சொல்ல, அனைவரும் என் பதிலைக் கேட்டு சிரித்து மகிழ்ந்து; என் நண்பரின் செயலைப் பெரிதுபடுத்தாமல் விட்டுவிட்டார்கள்.

"தனக்கு என்ன கட்டை?" என்பதோடு விட்டிருந்தால் ஒன்றுமில்லை. இசையமைப்பாளரிடமிருந்து ஆர்மோனியப் பெட்டியை இழுத்து வைத்துக் கொண்டு அவ்வாறு கேட்டது "மிகுதிக்கண்" என்ற வேண்டாத செயலுக்கு எடுத்துக்காட்டாக அமைந்துவிட்டதல்லவா? எனவே "அளவு கடப்பது; வேண்டாத செயல்" எனப்படுகிறது.

1 - 7 - 2005

✦✦✦

விலகும், விலகும்!

மூக்கு நுனிக்கு நேராக எதிரேயுள்ள சுவரில் அல்லது பலகையில் அல்லது திரைத் துணியில் ஓர் ஒளி வட்டம் அமைந்திருக்கவேண்டும். அது இருள் நடுவே முழுமதியாகவோ; அல்லது உதய காலத்து சூரியனாகவோ இருக்கலாம். அதற்கு முன்னால் கால்களை மடக்கிக் கொண்டு தரையிலோ, தொங்க விட்டுக் கொண்டு நாற்காலியிலோ அமர்ந்து கொள்ளலாம். இதில் முக்கியமாக கவனித்து பயிற்சி பெற வேண்டியது, கண் பார்வை ஒரே திக்கில் ஆடாமல், அசையாமல் செலுத்தப்பட்டு; அந்த ஒளி வட்டத்தை வைத்தகண் பெயர்க்காமல் பார்த்துக் கொண்டேயிருப்பதுதான். இதனை வாயை மூடிக்கொண்டு மௌனமாகவும் செய்யலாம்.

மனத்தை நிலைப்படுத்த இந்தப் பயிற்சி உதவுகிறது என்றும் இதனை தியானத்தில் ஒருவகையென்றும் கூறுகிற பயிற்சி ஆசிரியர் திரு. டி.கே.வி. தேசிகாச்சார் அவர்கள் இந்தத் தியானம் இன்னும் நேர்த்தியாக அமைந்திட; "நாராயண நமஹா!" என்று வாய் திறந்து உச்சரித்தல் நலம் என்று குறிப்பிட்ட போது; நெடில் எழுத்தில் தொடங்கும் "நாராயண" என்பது "நமஹா" என்று சொல்லி "சூரியனை" வணங்கும் நிலையை; "ஞா" என்ற நெடில் எழுத்தில் தொடங்கும் "ஞாயிறு போற்றுதும்" என மாற்றி அமைத்துக் கொண்டாலும் ஒரே விளைவுதானே என்று நான் கேட்டு; பயிற்சியாளரும் அதை ஏற்றுக் கொண்டுவிட்டதால்; தியானப் பயிற்சியை மௌனமாகவும் அதைத் தொடர்ந்து "ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!" என்ற சிலப்பதிகார வரியை ஓங்கி உச்சரித்தும்தான் நாள்தோறும், பயிற்சியாளர் முன்னிலையில் இருவிதமாகக் கடைப்பிடித்து வருகிறேன்.

சில பல ஆண்டுகளுக்கு முன்பு தமிழறிஞர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் பேராசிரியர் அன்பழகனார் வாயிலாக என்னிடம் தொடர்பு கொண்டு; மிக முக்கியமாக இந்தத் தியானப் பயிற்சி பற்றிப் பேசினார். நாள்தோறும் ஒரு ஐந்து நிமிடமாவது கண்களை மூடிக் கொண்டு; சிந்தனையைச் சிதறவிடாமல் – கடவுளைப் பற்றிய ஒரே நினைவுடன் – இல்லையெனில் பெரியார், அண்ணா – என்றாவது ஒரே நினைவை மட்டும் நெஞ்சில் நிறுத்தி தியானத்தில் ஈடுபட்டால் மன அமைதிக்குப் பெரிதும் பயன்படும் என்று வலியுறுத்தினார்.

இந்த அறிவுரையை அப்போது நான் பின்பற்றி அந்தப் பயிற்சியை மேற்கொள்ளவில்லை. நேரமில்லாதது போல ஒரு சாக்கு – ஆனால் இப்போது நாள் தவறாமல் நடைப் பயிற்சி, யோகாப் பயிற்சியுடன், தியானப் பயிற்சியும் "ஞாயிறு போற்றுதும்" என்ற போற்றிப் பாடலுடன் மேற்கொள்கிறேன்.

சில சமயங்களில் பரபரப்புடன் பேசும்போது நாக்கு, திக்கிவிடுகிறதல்லவா – அதனைப் போக்கிக் கொள்ளக்கூட வல்லின "ற" என்ற எழுத்தும் அந்த எழுத்தொலியும் பயன்படுகிறது. ஆம்; "ற" என்ற எழுத்தொலியை நுனி நாக்கை உள்நாக்கு வரையில் மடித்து, ஒலித்தால் "ற்ற" என்று அழுத்தம் திருத்தமான ஓசை எழும். இப்படிப் பலமுறை; ஒவ்வொரு முறையும் ஒரு தடவை எனத் தொடங்கி படிப்படியாக ஐந்து தடவை பயிற்சி செய்தால் நாக்குத் திக்குதல் மெல்ல மெல்ல நீங்கும் என்பது பலருடைய அனுபவம்.

எல்லாப் பயிற்சிகளையும் விட முக்கியமான பயிற்சி; "வைகறையில் துயிலெழுதல்" எனும் பயிற்சிதான். 'அவர் காலையில் ஒன்பது மணி வரையில் தூங்குவார்' – 'பத்து மணிக்குத்தான் இவருக்குப் பொழுதே விடியும்' – என்பதெல்லாம் இன்றைய நாகரீக வாக்கியங்களாக அமைந்தொலிப்பதை அறிய முடிகிறது. என்றாவது ஒருநாள் – முதல் நாளிரவு தூக்கமின்மையால் மறுநாள் அயர்ந்து தூங்கிவிடுவது என்பது தவறல்ல; ஏற்றுக் கொள்ளக்கூடியதுதான். ஆனால் அதுவே


நாள்தோறும் வழக்கமாகி; அவர்கள் "உதயசூரியனை" வாக்குச் சாவடியில் வைக்கப்படும் வேட்பாளர் சின்னங்களில் ஒன்றாகத்தான் பார்க்க முடிகிறது என்றால் அது நிச்சயமாக உடல் நலத்துக்கு ஏற்றதல்ல.

எனவே நடைப்பயிற்சி மூலம் முக்கியமாக உடலின் எடையைக் குறைப்பது – மூச்சுப் பயிற்சி மூலம் சுவாசப் பைகளை முறையாக இயங்கச் செய்வது – குருதியோட்டத்தைச் சீராக்கிக் கொள்வது – அதன் அடிப்படையில் இருதயத்துக்குப் பாதுகாப்பு உருவாக்குவது – யோகப் பயிற்சி மூலம் எலும்புகள், நரம்புகளுக்கு வலுவூட்டுவது – தியானப் பயிற்சி மூலம் மன அமைதி காண்பது; இவை போன்றவை வாழ்வுக்கு இன்றியமையாதவை என்பதை உணர்ந்து; எத்தனையோ துறைகள் பற்றிய நூல்களைப் படிக்கின்ற நாம்; உடல் நலத்துறை குறித்து விளக்கமளிக்கின்ற நூல்களையும் படிக்கின்ற ஆர்வத்தைப் பெறுதல் வேண்டும் என்பதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

நோயற்ற மக்கள் – வலிவுடைய மக்கள் கொண்ட ஒரு சமுதாயமே நாட்டின் பாதுகாப்பு அரணாகவும் அமைய முடியும். அதற்கு அடியெடுத்துக் கொடுக்கும் முயற்சியாகவாவது இக்கட்டுரை இருக்குமானால் இதனை எழுதியதின் பயனை அடைந்தவனாவேன். இக்கட்டுரையில் குறிப்பிடப்படாத எத்தனையோ நல்ல வழிமுறைகள் வாழ்வுக்கு வலிவும் பொலிவும் சேர்ப்பவை உள்ளன. அவற்றையும் தேடிப் பிடித்து பயன்படுத்திக் கொள்ள இஃதோர் தூண்டுதலாகட்டும்.

8 - 7 - 2005

✦✦✦



இன்பமும் துன்பமும்!

"**ஊ**ர் சிரித்தது" என்றால்; யாரோ ஒருவர் – அல்லது யாரோ சிலர்; ஏதோ ஓர் இழிவுக்கு ஆளாகி அதனால் அந்த ஊரிலே உள்ளவர்கள், கேவலமாகப் பேசினார்கள் என்று பொருள்!

தொலைக்காட்சியில் நான் ஒரு நாடே சிரித்த காட்சியைக் கண்டேன். அந்த நாடு சிரித்தபோது இன்னொரு நாடு அழுது புலம்பிய காட்சியையும் கண்டேன். உங்களையும் உங்கள் நண்பர்களையும் குழப்புகிற பாணியில் சொல்லுவதாயின்,

ஒரு நாடு சிரித்தது,

ஒரு நாடு அழுதது,

உலகமே துயரத்தில் மூழ்கியது!

என்று மூன்று வாக்கியங்களில் அதனைக் குறிப்பிடலாம். குழப்பம் தீரவில்லையா? அதிகமாகிறதா? இதோ, முற்றுப்புள்ளி வைத்து விடுகிறேன்.

உலகப் புகழ்பெற்ற "ஒலிம்பிக் போட்டிகள்" நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுவதாகும். போட்டி முடிவுகளையும், பதக்கம் வென்ற நாடுகளின் பட்டியலையும் அறிந்து கொள்வதற்கு அனைத்து நாடுகளில் உள்ள விளையாட்டு ஆர்வலர்கள் பரபரப்படைவதையும் "ஒலிம்பிக்" நடைபெறும் காலத்தில் நாம் உணர்ந்தேயிருக்கிறோம்.

2000ஆம் ஆண்டு சிட்னியிலும், 2004ஆம் ஆண்டு ஏதென்சிலும் ஒலிம்பிக் போட்டி நடைபெற்று, 2008இல் சீனாவில் பீஜிங் நகரில் நடைபெற்ற பிறகு 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் எங்கே நடத்துவது என்பதற்கான தேர்வு சிங்கப்பூரில் நடந்து, இலண்டனில் 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் என்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

2012இல் இலண்டனில் என்று அறிவிக்கப்பட்டவுடன்; செய்தி அறிய ஒரு பூங்காவில் அமர்ந்திருந்த ஆங்கிலேய ஆடவர், பெண்டிர், சிறார் அனைவரும் துள்ளிக் குதித்தும், ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டு கூத்தாடியும், தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது; பார்த்தோரைப் புல்லரிக்க வைத்தது.

இது இங்கிலாந்து நாட்டில்; இலண்டன் மாநகரில்!

அதேசமயம்; ஆவலை அகத்திலும் முகத்திலும் தேக்கிக் கொண்டு, செய்தி வரும் திசையில் செவிகளையும் விழிகளையும் செலுத்தியவண்ணம், பிரான்ஸ் நாட்டுப் பூங்காக்களில் அமர்ந்திருந்த மக்கள், ஒலிம்பிக் வாய்ப்பு, தங்கள் நாட்டுக்குக் கிடைக்காததைத் தங்கள் வீட்டுக்கே வந்த துக்கமாகக் கருதி, துவண்டுபோனதையும் காண நேர்ந்தது.

விளையாட்டுப் போட்டியிலேகூட தமது நாட்டுக்குச் சிறப்பு ஏற்பட வேண்டும், அதற்கான வாய்ப்பு கிடைத்திட வேண்டும் என்பதிலே எத்துணை ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ளனர் அந்த மக்கள் என்பதைக் குறிப்பிடத்தான் "ஒரு நாடு சிரித்தது! ஒரு நாடு அழுதது" என்று முறையே இங்கிலாந்தையும் – பிரான்ஸ் நாட்டையும் வரிசைப்படுத்திக் காட்டினேன்.

கி.மு. 776ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்ட இந்த ஒலிம்பிக் விளையாட்டின் தாயகம்; கிரேக்கம்தான்! அந்த கிரேக்க நாட்டின் சுதந்திரம் ரோமானியரால் பறிக்கப்பட்ட பிறகு, கி.பி. 393ஆம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டுகள் தடை செய்யப்பட்டுவிட்டன.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு, பியரி டி. கோபர்டின் எனும் பிரெஞ்சுக்காரரின் முயற்சியால் 1896ஆம் ஆண்டுதான்

ஏதென்ஸ் நகரில் நவீன ஒலிம்பிக் விளையாட்டுகள் மறுமலர்ச்சி பெற்று நடைபெறத் தொடங்கின! இதனை; (1) An ancient Greek festival held at Olympia every four years, with athletic, literary, and musical competitions. (2) A modern international revival of this as a sports festival held every four years since 1896 in different venues என்று "ஆக்ஸ்போர்டு அகராதி" குறிப்பிடுகிறது.

ஒலிம்பிக் விழா முதலில் கிரீசில் உள்ள இயற்கை வளம் மிகுந்த ஒலிம்பியாவில் நடைபெற்றது. இது மதப் பண்டிகையாக நான்காண்டுகளுக்கு ஒருமுறை ஒலிம்பியாவில் நடந்து வந்தது. இந்த விழாக் காலத்தில் கிரேக்க நகரங்களுக்கு இடையில் போர் நிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கும். அப்போது எந்த அரசர்களும் மற்ற அரசர்கள் மீது படையெடுப்பு நடத்தக் கூடாது.

இந்தப் போட்டியில் முதலில் பெரும்பாலும் ஓட்டப் பந்தயங்களே நடத்தப்பட்டன. ஏனெனில் எதிர் நாட்டு படையெடுப்பு பற்றிய தகவல்களை வீரர்கள் ஓடிச் சென்று தெரிவிக்க வேண்டிய சூழ்நிலை அப்போது நிலவியதால் இதற்கு முன்னோட்டமாக ஓட்டப்பந்தயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இந்தப் போட்டியில் வெல்பவர்களுக்கு வெற்றி வீரன் என்ற பட்டம் கிடைத்தது. அதோடு வெற்றி பெற்றவர்களுக்கு தங்கத்தால் செய்யப்பட்ட கத்தியால் வெட்டிய ஆலிவ் மரக்கிளை கிரீடமாக சூட்டப்பட்டது.

ஆரம்ப காலத்தில் நடந்த ஒலிம்பிக் போட்டிகள் ஆச்சரியப்பட வைக்கும் விதமாக இருந்தன. போட்டியில் கலந்து கொள்ளும் வீரர் ஆடை அணியாமல் நிர்வாணமாக மட்டுமே பங்கேற்க முடியும். காலில் காலணிகள் அணியக் கூடாது. கிரேக்கர்கள் மட்டுமே இந்தப் போட்டியில் பங்கேற்க முடியும் என்பது போன்ற கட்டுப்பாடுகள் இருந்தன. பிற்காலத்தில் ரோமானியர்கள் போட்டிகளில் பங்கேற்க அனுமதி அளிக்கப் பட்டது. போட்டிகளில் பங்கேற்க மட்டுமல்ல, அதனைப் பார்க்கக்கூட பெண்களுக்கு தடை போடப்பட்டு இருந்தது. அதனை மீறி எந்தப் பெண்ணாவது பார்த்தால் அவருக்கு மரண தண்டனைதான்.

நவீன கால ஒலிம்பிக் போட்டியில்; அது தொடங்கிய ஆண்டு, 14 நாடுகள் பங்கேற்றன. போட்டியில் பங்கேற்றவர்கள் 241 பேர். அனைவரும் ஆண்களாகவே இருந்தனர்.

ஒலிம்பிக்கில் இந்தியா என்றாலே சட்டென நினைவுக்கு வருவது ஹாக்கி விளையாட்டுத்தான். 1908இல் ஹாக்கி அறிமுகமானது. 1928இல் இருந்து 1956 வரை இந்தியா ஆறு தங்கங்களை வென்று சாதித்தது. பின்னர் 1964, 1980ல் தங்கம் வென்று மொத்தம் 8 தங்கப் பதக்கங்களை வென்றது. வெள்ளி1, வெண்கலம் 2.

ஒலிம்பிக் வரலாற்றில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட இந்தியா இதுவரை தனி நபர் போட்டிகளில் 4 பதக்கங்களையே வென்றுள்ளது. அவையும் வெள்ளி, வெண்கலப் பதக்கங்களே! தனி நபர் பிரிவில் 1952இல் மல்யுத்தத்தில் கே.டி. ஜாதவ், 1996இல் டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் லியாண்டர் பயஸ், 2000இல் சிட்னி ஒலிம்பிக்கில் பளு தூக்கும் பிரிவில் கர்ணம் மல்லேஸ்வரி ஆகியோர் வெண்கலப் பதக்கங்கள் வென்றனர்.

2000ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக்ஸ் பளு தூக்கும் பிரிவு போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இந்தியத் தரப்பில் பங்கேற்ற கர்ணம் மல்லேஸ்வரி 240 கிலோ எடையை தூக்கி வெண்கலம் வென்றபோது, போட்டி நடைபெறும் இடத்தில் மல்லேஸ்வரியுடன் இருந்தது, அவருடைய பயிற்சியாளர் மட்டும்தான். மற்ற இந்திய வீரர்களோ, உடன் சென்ற அதிகாரிகளோ அங்கில்லை. காரணம், இப்பிரிவில் நமக்கு எங்கே பதக்கம் கிடைக்கப் போகிறது என்ற எண்ணம்தான்.

2004ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்கா 35 தங்கம், 39 வெள்ளி, 29 வெண்கலம் உட்பட மொத்தம் 103 பதக்கங்களைப் பெற்று முதல் இடம் பெற்றது. சீனா 32 தங்கம், 17 வெள்ளி, 14 வெண்கலம் உட்பட 63 பதக்கங்களையும், ரஷ்யா 27 தங்கம், 27 வெள்ளி, 38 வெண்கலம் உட்பட 92 பதக்கங்களையும் பெற்றன. இந்தியா ஒரே ஒரு வெள்ளிப்

பதக்கத்தை மட்டுமே பெற்றதால் பதக்கப்பட்டியலில் 65வது இடத்தை அடைந்தது.

2004ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் 17–8–2004 அன்று நடைபெற்ற துப்பாக்கி சுடும் பிரிவில் ராஜ்யவர்தன் சிங் ரத்தோர் இந்தியாவிற்காக வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.

ஒலிம்பிக் போட்டியில் நமது இந்திய நாடு பெற்றுள்ள பதக்கப்பட்டியலைப் பார்க்கும்போது 'பின்னணியில் நாம் முன்னணி'யில் இருக்கிறோம் என்று வருந்தத்தான் வேண்டியிருக்கிறது. இந்நிலை மாறிடவும், ஒலிம்பிக்கில் மட்டுமல்ல; உலகில் நடைபெறும் எந்த விளையாட்டுப் போட்டிகளிலும் நாம் ஒப்பற்றவர்களாக விளங்கிடவும் மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் மத்திய அரசே தீவிர முயற்சிகளை மேற்கொண்டாக வேண்டும்.

யாரையாவது கோபமாகத் திட்டும்போதுகூட "ஏய்; விளையாடாதே" என்கிறோமே; விளையாட்டு என்பது அப்படியொரு வேண்டாத வார்த்தையாகவன்றோ ஆகிவிட்டது நமக்கு! எனவே விளையாட்டாகக்கூட விளையாட்டை வெறுக்கக் கூடாது என்பதை நாம் உணர்ந்து தெளிந்து பல போட்டிகளில் "இழந்த வெற்றிகள்" தரும் படிப்பினையாகக் கொள்வோம். அதுதான் இந்தியாவின் கௌரவம் காத்திட வழியாகும்.

ஒரு நாடு சிரித்தது, ஒரு நாடு அழுதது, உலகமே துயரத்தில் மூழ்கியது – என்று தொடங்கியிருந்தேன் – ஆம்; ஒலிம்பிக் போட்டியை 2012ஆம் ஆண்டில் நடத்தும் உரிமை இங்கிலாந்துக்குக் கிடைத்தது என்ற தகவல் கேட்டு தாங்கொணாத உற்சாகத்தில் அந்த நாட்டு மக்கள் இருந்திடும்போதுதான்; இந்தியாவில் அயோத்தியில் தீவிரவாதிகள் புகுந்ததும், அவர்கள் அனைவரும் சுட்டுக் கொல்லப்பட்டதுமான நிகழ்ச்சி – தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள் எனினும் தீவிரவாதம் தூண்டிவிடும் தீ பரவாதிருக்க வேண்டுமே என்ற தீராத கவலை நமக்கு!

இங்கிலாந்தில் ஒலிம்பிக்கை நடத்தப் போகிறோம் என்ற உவகையில் அவர்கள் இருக்கும்போதே, இலண்டன் மாநகரில் நான்கு முதல் ஏழு இடங்களில் குண்டுகள் வெடித்து ஏராளமானோர் பலியாயினர் – ஆயிரம் பேர் காயமுற்றனர் என்ற செய்தி! இதோ தமிழகத்தில் நாகர்கோவிலில் வடசேரி சந்தையில் நூற்றுக்கணக்கான கடைகள் தீயில் சாம்பலாகி ஆறு பேர் இறந்திருக்கிறார்கள்.

ஒலிம்பிக் ஒருபுறம் –

ஊரும் உலகமும்


தீராத வேதனையில்

ஆழ்ந்து கிடப்பது ஒருபுறம் –

இன்பமும் துன்பமும் இணைந்து வருவதே வாழ்க்கை என்பது மட்டுமல்ல; உலகின் பல நாடுகளின் வரலாறும் அப்படியேதான் அமைந்துவிடுகிறது. இனிய செய்திகளைக் கேட்டு இன்புறுவதற்கு ஒப்பாக திட நெஞ்சத்துடன் துன்பங்களைச் சந்திக்கவும் தோள் உயர்த்துவோம்.

9 - 7 - 2005

✦✦✦



உளார் அறிந்தால் நம்மை எவ்வளவு உதாசீனப் படுத்துவார்கள், பக்கத்து வீட்டார் பழித்துரைக்கும்படி ஆகிவிடுமே, அவர்கள் நம்மைப் பார்ப்பதே ஒருமாதிரி இருக்குமே, என்றெல்லாம் நினைத்து; அத்தகைய நிலை, தம்மை நெருங்காமல் பார்த்துக் கொள்வதற்காக ஒரு ஆணோ அல்லது ஒரு பெண்ணோ ஒழுக்கமாக இருப்பதென்பதை 'கற்பு' என்று கூறிவிட முடியாது.

கொலை செய்தால், கொள்ளையடித்தால், தண்டனை கிடைக்கும் என்பதற்காக அச்செய்கையைத் தவிர்ப்பதற்கும் பிறர் பழிப்பரே என்பதற்காக ஒழுக்கத்திலிருந்து வழுவாதிருப்பதற்கும் அவரவர் மனச்சாட்சியை வைத்துச் சீர்தூக்கிப் பார்த்தால் அதற்கு மதிப்பு என்று எதுவுமே கிடையாது. தென்றலுக்கு எப்படிக் குளிர்தன்மை இருக்கிறதோ; கோடை வெயிலுக்கு எப்படி வெப்பம் இருக்கிறதோ; அதுபோல இயற்கையாகவே ஒழுக்கம் எனும் பண்பு; ஆடவர் பெண்டிர் இருபாலார்க்கும் இருப்பதுதான் போற்றுதற்குரியதாகும்.

இல்லையேல்; குளிர்காலத்தில் சுற்றுப்புறத்தைச் சூடாக வைத்துக் கொள்ளவும்– கோடை காலத்தில் சிலுசிலுப்பாக வைத்துக் கொள்ளவும் ஏற்ற கருவிகளை அமைத்துக் கொள்வதுபோலவே; தம்மை ஒழுக்கமுடையவர்களாக ஆக்கிக்கொள்வதும் ஆகிவிடும்.

திருட்டு என்பதை எண்ணிப்பார்த்து; "ஏயப்பா; அது தீச்செயல்! சிக்கிக்கொண்டால், சிறைத் தண்டனை" எனும் அச்சத்திற்கு ஆட்பட்டு, அதன் காரணமாக அந்த எண்ணத்தையே விட்டொழிப்பதைக் காட்டிலும்; அந்த எண்ணமே மனத்தில் தோன்றாமலிருப்பதுதானே "மாண்பு" எனப் புகழப்படக்கூடியது; மதிக்கப்படக்கூடியது!

களவு மாத்திரமல்ல; எந்தவொரு தீய செயலையும், கொலை, கற்பழிப்பு போன்ற கொடுஞ்செயலையும், அவற்றால் ஏற்படக் கூடிய விளைவுகளை நினைத்துப் பார்ப்பதால் தவிர்ப்பது என்று அல்லாமல்; அந்தக் கெடு நினைப்பு இயற்கையாகவே தோன்றாம லிருப்பதுதான் 'நேர்மை' எனப்படும்! அந்த நேர்மையாளர்கள் தான் மனித நேயமுடையார் வரிசையில் வைத்துச் சிறப்பிக்கப்படுபவர்.

இயற்கையாக அமையாமல் – விளைவுகளுக்கு அஞ்சி; அமையாமல் – ஒழுக்கமுடைமைக்கு எதிராக, மனித நேயத்திற்கு விரோதமாக, இன்னாச் செயல்கள்; விளைவுகளைப் பற்றியும் எண்ணிப் பார்த்திடத் தவறியோ; அல்லது எண்ணிப் பார்த்த பிறகும்கூட நடைபெறுமேயானால் அதற்குக் காரணமான வர்களைச் சட்டத்தின் முன்னால் நிறுத்தி சமுதாய ஒழுக்கம் பாதுகாத்திடக் காலம் காலமாக வழிமுறைகள் வகுக்கப்பட்டிருக் கின்றன. அந்த முறைகள் உலகின் பல பகுதிகளில் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவைகளாகவும் இருக்கின்றன.

அவை எத்தனை வகையாக இருப்பினும்; அவற்றின் மூல நோக்கம், குற்றங்களுக்குத் தண்டனை வழங்குவதின் மூலம் மேலும் அக்குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பதுதான்.

ஆனால், தண்டனைகளோ; சமுதாயம் பழிக்குமே என்ற அச்சமோ, சட்டம் பார்த்துக் கொண்டிருக்கிறது என்ற எச்சரிக்கையோ – குற்றங்களைத் தடுப்பதற்குப் பயன்படுவதைவிட; தனி நபர் ஒழுக்கத்தைப் பேணுவதற்குத் துணைநிற்பதைவிட; இயற்கையாகவே ஒழுக்கமாக இருப்பதுதான் இருபாலாரையும் கற்புள்ளவர்களாகவும், மனித

நேயமுள்ளவர்களாகவும், மாண்புள்ளவர்களாகவும், நேர்மை யாளர்களாகவும் பெருமைப்படுத்தக் கூடியதாகத் திகழ முடியும்.

பண்பாடு போற்றும் பாங்கு; பழைமைச் சமுதாயத்திற்கு மட்டுமல்ல; பகுத்தறிவுப் பாதையில் பயணிக்கும் முற்போக்குப் புதுமைச் சமுதாயத்திற்கும் உரியதாகும் என்ற பொதுவான சிந்தனையின் அடிப்படையில் இந்தக் கருத்துகள் செயல் வடிவம் பெறுவது "உன்னையே நீ அறிவாய்" என்ற சாக்ரடீசின் போதனையைப் புரிந்துகொண்டு, தன்னையே உணர்ந்து "தன்னை வென்றால் தரணியை வெல்ல முடியும்" எனும் நம்பிக்கை கொண்ட மக்கள் சமுதாயத்திற்குப் புது வழியை, புரட்சிகரமான வழியைக் காட்டக் கூடியதாகும்.

14 - 7 - 2005

✦✦✦

வசிய மருந்து

ஆடவரை வசியம் செய்து தன் பக்கமிழுத்து, தன் பக்கமே வைத்துக்கொள்ள சில மருந்துகள் உண்டு என்று சிலர் பொய்யுரைத்து; அதையும் சில பெண்கள் நம்பி, அந்த மருந்துகளை வாங்கி, ஆண்களுக்குக் கொடுத்து, அதன் காரணமாகவே அந்த ஆண்கள் நோய்வாய்ப்படுவது உண்டு. அப்படி மருந்து வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி; அதனால்தான் ஒரு ஆடவர் நோயுற்றிருக்கிறார் என்றும் கூறி அந்த மருந்தை அவர் வயிற்றிலிருந்து எடுப்பதாகவும், எடுத்துவிட்டால் பிறகு நலம் பெற்று விடுவார் என்றும் சில சாமியார்கள் அல்லது போலி வைத்தியர்கள் நிரம்பப் பணம் வாங்கிக் கொண்டு அந்த சிகிச்சையைத் தொடங்குவார்கள்.

மருந்து வைத்து மயக்கிவிட்டாள், அவன் மயங்கிக் கிடக்கிறான் என்று மருமகளை மாமியார்கள், நாத்தனார்கள் சபிப்பதும் உண்டு.

மருந்து வைத்து வசியம் என்பது எத்தகைய ஏமாற்று வேலை என்று விளக்கி தமிழ் மருத்துவம் பற்றி பல அரிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ள டாக்டர் திருமலை நடராசன், ஆர்.ஐ.எம்.பி., (சித்தா) என்பவர்; அவர் எழுதிய "சித்த மருத்துவக் களஞ்சியம்" என்ற நூலில் "மருந்து வைத்தல் வசிய நோய்" என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில்; தனக்கேற்பட்ட அனுபவத்தையே குறிப்பிட்டிருக்கிறார். அது வருமாறு :–

"மருந்தால் ஒருவரை தன் பக்கமிழுத்து விட
இயலுமா என்பது முக்கிய கேள்வியாகும்.

இன்றுங்கூட இந்நோய் தனக்குள்ளதென்று நம்பி என்னிடம் வருவோர் உண்டு.

இவர்களுக்கு என்ன சொன்னாலும் அவர்கள் சொன்னதையே சொல்லுவார்கள்.

ஒருவரை தன் வசப்படுத்தக் கூடிய மருந்துகள் பத்து வகைப்படும் என்றும், சில மருத்துவ நூற்களில் குறிக்கப்பட்டு மருந்துகள் செய்முறையும் சொல்லப்பட்டுள்ளது. குறிக்கப்பட்டுள்ள மருந்துகளில் ஒன்றைக் கூட ஒருவரும் இன்று முறையாக செய்யவே முடியாது என்று உறுதியாகக் கூறலாம். இம்மருந்திற்காக குறிக்கப்பட்டுள்ள மருந்துப் பொருட்கள் சிலவற்றை அறிவதும், புரிவதுமே சற்றும் இயலாத செயல்.

ஒரு சிலர் தொழிலாகக் கொண்டு செய்யும் கொடிய சதி இதுவாகும்.

பெரும்பாலும் பெண்கள் ஆண்களுக்கு மருந்து வைத்து மயக்கிவிட்டார்கள் என்றே கேட்க முடிகிறது. இந்நோயாளிகளையும் காண முடிகிறது. ஆண்கள் பெண்களுக்கு மருந்து வைத்து மயக்கி விட்டான் என்று கேள்விப்படுவது அரிதாக இருக்கிறது. இந்த வசிய மருந்துகள் ஆண்களுக்கு மட்டுந்தான் வேலை செய்யுமா? பெண்ணிற்குக் கொடுத்தால் பலனிருக்காதா? சிந்திக்க வேண்டும். மருந்து என்பது ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொதுவானதாகும்.

வைப்பு மருந்து நோயால் பீடிக்கப்பட்டோர் கூறும் குறிகள் வயிற்றுவலி, மயக்கம், உணவின் மீது விருப்பமில்லாமை, மருந்து வைத்தவர் வீட்டிற்குச் சென்றால் வலி இல்லை, பசி ஏற்படுகிறது, உடம்பு பலவீனமாக இருக்கிறது, அந்த வீட்டை விட்டு வரவே முடியவில்லை, தன் வீட்டு நினைவே இல்லை என்பதாகச் சொல்கிறார்கள்.

இதோடு இன்னொரு வேடிக்கை என்னவென்றால் அந்த மருந்து; வைத்த கட்டியாகவே வயிற்றிலிருக்குமாம். எடுத்தால் வெளியில் கட்டியாக வருகிறதாம்.

எனக்குத் தெரிந்த ஒருவருக்கு மருந்து எடுப்பதைக் காணச் சென்றேன். கடுமையான பேதி மருந்தைக் கொடுத்தார், அந்த மருந்தெடுக்கும் மகா மருத்துவர். மருந்துள்ளவருக்கு வயிற்றுவலி ஏற்பட்டு துடித்துப்போனார். பேதி ஏற்பட்டது. மலக் கழிவு, திடலில் நடைபெற்றது. ஒவ்வொரு பேதியாகும்போதும் அந்த மகா மருத்துவர் ஒரு குச்சியால் மலத்தைக் கிண்டிப் பார்த்தார். நானும் உடனிருந்தேன். எட்டு முறைகள் பேதியானது. கடைசியில் மகா மருத்துவர் குச்சியால் மலத்தைக் கிண்டிப் பார்த்தார். குச்சியோடு உருண்டை ஒன்றைப் போட்டு அதை தன் கையால் எடுப்பதை நான் தெரிந்தும் தெரியாததுபோல் பார்த்து விட்டேன். அந்த உருண்டையை கழுவி என்னிடம் முதலில் காட்டினார். கையில் வாங்கிப் பார்த்து ஒரு நொடியில் அந்த உருண்டை இன்னதென்று தெரிந்து கொண்டேன்.

சில நாட்களில் அதே நபருக்கு மீண்டும் வயிற்று வலி. அதே மகா மருத்துவரிடம் சென்றார்கள். இன்னும் கொஞ்சம் மருந்திருக்கிறது என்று மீண்டும் மருந்து எடுக்கப்பட்டது. நானும் சென்றேன். மகா மருத்துவர் மீண்டும் ஒரு மருந்து துண்டை எடுத்தார். முன் எடுத்த மருந்தின் அளவிலும் மிகச் சிறியதாக. இம்முறையும் நான் ஏதும் சொல்லாது திரும்பிவிட்டேன்.

ஒரு நாள் அந்த மகா மருத்துவரைக் காணச் சென்றேன். கண்டேன். நீங்கள் மருந்தெடுக்கும் விதம் பிரமாதம் என்றேன். ரொம்ப சந்தோஷம் என்றவர், இது ரொம்ப கஷ்டங்க என்றார். என்னால் சும்மா இருக்க முடியவில்லை. "என்ன கஷ்டம். மெழுகை கரித் தூளில் உருட்டி மலத்தில் போட்டு எடுப்பதற்கு ?" என்றேன், அசந்து போய் விட்டார். வயிற்றுப் பிழைப்பு சார் என்று பரிதாபமாகச்

சொன்னார். சார் இன்னொன்று உங்களுக்குத் தெரியுமா? சில பேருக்கு உண்மையிலேயே குணமாயிடுது சார்; ஆமாம் என்றேன். இனி மேலும் அவருக்கு வயிற்று வலி ஏற்பட்டால் என்ன செய்வீர்கள் என்றேன். "செய்வினை பண்ணிட்டாள், மருந்து வெச்சவள்" என்று சொல்லி மந்திரம் பண்ண வேண்டியதுதான் என்றார். மந்திரம் பண்ணியும் நோய் தீரவில்லை என்றால்? பெரிய மந்திரக்காரனிடம் தள்ளிவிட வேண்டியதுதான் என்றார். என்ன செய்வது? இப்படிப்பட்டவர்களை சமுதாயம் புரிந்துகொள்ளாமல் வளர்க்கிறதே என்று திரும்பிவிட்டேன்.

எதற்கு இவ்வளவும் எழுத நேரிடுகிறது என்றால் நோயை அறியாது பேயை நம்புகிறார்களே; என்றைக்கு இவர்கள் திருந்துவார்களோ?"

மருந்துகளின் பெயராலும் மடமையிருளில் மக்கள் தள்ளப்பட்டார்கள்; ஏன் இப்போதும்கூட அந்த நம்பிக்கையில் மக்கள், கிராமப்புறங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் – அவர்களையெல்லாம் – திருத்தி, அறிவோடு வாழச் செய்வதற்கு படித்த இளைஞர்கள் முன்வர வேண்டும். பகுத்தறிவு பரப்புவதைத் தங்கள் பணியாகக் கொள்ள வேண்டும்.

18 - 7 - 2005

✦✦✦

சோதிடம்!



இராமனுக்கு முடிசூட்டு விழா நடத்த நல்ல நாள், நல்ல நேரம் எதுவென்று பார்த்துக் கணித்துக் கொடுத்தவர் சாதாரணமானவர் அல்ல. சாத்திரங்களைக் கரைத்துக் குடித்த சகலகலாவல்லவர் – வசிஷ்டர் – அவர் குறித்த நாளில் நாடாளச் செங்கோல் ஏந்த வேண்டிய இராமன்; மரவுரி தரித்து மனையாள் சீதையுடனும், இளையோன் இலக்குவனுடனும் காடேக நேரிட்டதே என்பதை இராமாயண இதிகாசத்தில் படித்த பிறகும், ஆரூடம், சோதிடம், நாள் நட்சத்திரம், சித்தயோகம், அமிர்தயோகம், மரணயோகம் என்று பஞ்சாங்க நம்பிக்கையில் அறிவைப் பறிகொடுத்துவிட்டு அலைகின்ற மானுடர் இருக்கத்தான் செய்கின்றனர்.

இந்த நிலையை அறிவியக்கத்துக்குக் கிடைத்துள்ள தோல்வி என்றும் – மூட நம்பிக்கையாளர்க்கு கிடைத்திடும் வெற்றி என்றும் எண்ணிக் கொண்டிருப்போர் இன்றும் வாழ்ந்து கொண்டுதானிருக்கின்றனர்.

அத்தகைய நம்பிக்கையின் காரணமாக எத்தகைய கொடுமைகள் பல குடும்பங்களைக் குலைத்திருக்கின்றன; பலரது வாழ்வைக் கெடுத்திருக்கின்றன – எத்துணை ஏமாற்றத்துக்கு மக்களை ஆட்படுத்தியிருக்கின்றன – எத்தர்கள் எத்தனைபேர் சட்டத்தின் பிடியில் சிக்கியிருக்கின்றனர் என்பதைச் செய்திகளாகச் செவிமடுத்தும்கூட; இன்னும் அந்த நம்பிக்கைகளுக்கு இடமளித்து நாசமாகின்றவர்கள் தொகை வளர்ந்து கொண்டேதானே போகிறது.

இதோ ஒரு செய்தி! கோவை உடையாம்பாளையத்தில் என்.ஜி.ஆர். வீதியென ஒன்று! ஆம்; அந்த வீதியின் பெயர் எனக்குப் பழைய நினைவைக் கிளறுகிற பெயர்!

என்.ஜி. இராமசாமி என்ற தொழிற்சங்கத் தலைவர் – பொதுவுடைமைப் பகுத்தறிவுவாதி – எதிரிகளால் அரசியல் பகை காரணமாக கொலையுண்டவர் – அவரது மைத்துனருக்குரிய வீட்டில்தான் 1946–47களில் சிங்காநல்லூரில் (அண்ணாசாமி வீடு) நான் குடியிருந்தேன்.

அந்த என்.ஜி.ஆர். பெயரில் உள்ள வீதியில் இரகுபதி என்பவர் ஓட்டல் நடத்தி வருபவர் – அவரது மனைவி சந்திரகலா – இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் திருமணம் நடந்து; குழந்தையும் பிறந்து அதற்கு 'விக்னேசுவரன்' என்ற பெயரும் சூட்டினார்கள். நன்றாகப் போய்க் கொண்டிருந்த அவர்களின் வாழ்க்கையில் ஒரு சோதிடன் குறுக்கிட்டான்.

குழந்தையின் ஜாதகத்தை அவனிடம் கொடுத்துப் பார்க்கச் சொன்னார் இரகுபதி.

> "குழந்தை விக்னேசுவரனால் தந்தையின் உயிருக்கு ஆபத்து; அதனால் தந்தையை விட்டு அந்தக் குழந்தையைப் பிரித்து வைக்க வேண்டும் – இப்படி ஜாதகம் சொல்லுகிறது"

என்றான் சோதிடன்.

அதன் பிறகு நடந்தது என்ன? இதோ 2005 ஜூலை 21ந்தேதி வெளிவந்த பத்திரிகை கூறுகிறது:–

> "ஜோதிடர் சொன்னதைக் கேட்டு மன வருத்தம் அடைந்த ரகுபதி, அன்று முதல் அந்த ஒன்பது மாதமே நிறைந்த கைக் குழந்தை விக்னேசுவரனை வெறுப்புடன் பார்க்கத் தொடங்கினார். அடிக்கடி குடித்துவிட்டு வந்த ரகுபதி, மனைவியிடம் குழந்தையைத் திட்டி தகராறு செய்து வந்தார். இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குழந்தையைக் கொலை செய்யும் நோக்கத்தில் வீட்டுக்கு

வந்தார். குழந்தையை மோட்டார் சைக்கிளில் வைத்து வெளியே அழைத்துச் செல்வதாக ரகுபதி மனைவியிடம் கேட்டார். ஆனால் மனைவி சந்திரகலா மறுத்து விட்டார். பின்னர் மனைவியிடம் இருந்து குழந்தையைப் பிடுங்கி, தான்பெற்ற குழந்தை என்றும் பார்க்காமல் கை, கால், இடுப்பில், ஓங்கி, ஓங்கி அடித்துள்ளார். பின்னர் கட்டிலில் தூக்கிப் போட்டு கட்டிலிலும் குழந்தையைத் தாக்கியதாகத் தெரிகிறது. இதனால் பச்சிளம் குழந்தை தலைசரிந்து மயக்கம் அடைந்தது. பீளமேட்டில் உள்ள தனியார் மருத்துவமனையில் முதலில் குழந்தையைச் சேர்த்தனர். பின்னர் கோவை அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அந்தக் குழந்தை பரிதாபமாக இறந்தது. இதுகுறித்து பீளமேடு போலீஸ் இன்ஸ்பெக்டர் வழக்குப் பதிவு செய்து, தந்தை ரகுபதியை கைது செய்து சிறையில் அடைத்தார். குழந்தையை இழந்து தவித்த தாய் சந்திரகலா அழுது புலம்பினார்”

இப்படி ஒன்றா? இரண்டா? எத்தனையோ கொடுமையான நிகழ்ச்சிகள்! அறிவை இழந்து; அதன் காரணமாக விளையும் அவலங்கள்!

ஜாதகம் – சோதிடம் என்பவை உண்மையானால் “குழந்தை பிறந்த ஜாதகப்படி; அந்தக் குழந்தை ஒன்பது மாதங்கள் மட்டுமே உயிரோடு இருக்கும்; அந்த ஒன்பது மாதத்திற்குள் குழந்தையின் தகப்பனே அதைக் கொலை செய்து விடுவான்” என்றல்லவா அந்தச் சோதிடன் சொல்லியிருக்க வேண்டும். எனவே இதுபோன்ற சோதிடப் புரட்டர்களால் விளையும் விபரீதங்களைத் தடுக்க பகுத்தறிவுப் பிரச்சாரம் இன்னும் எவ்வளவு வேகமாக – விரிவாகப் பரவ வேண்டியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்ப்போமாக; அதற்கேற்பச் செயல்படுவோமாக!

1 - 8 - 2005

✦✦✦

ஆன்மிக ஆழ்கடல்

குன்றக்குடி அடிகளார் என்று உலக முழுவதும் பரவியுள்ள தமிழர்களால் அழைக்கப்பட்டவர்; சிவகங்கை மாவட்டத்தில் குன்றக்குடி ஆதீனகர்த்தர் அருட்பெருந்திரு அடிகளார் தெய்வ சிகாமணி அருணாசல தேசிகர் என்ற பட்டப் பெயர்களுடன் திகழ்ந்தவர் ஆவார். அவர் ஆன்மீகத் துறையில் ஆழ்கடல். அக் கடலில் அறிவுத் தோணி செலுத்தி முற்போக்கு முத்துக்களையும் எடுத்து, மனித நேயம் சிறந்திடப் பூட்டி மகிழ்ந்தவர்.

பொதுமேடைகளில் அவரை விளிக்கும் போதெல்லாம் தந்தை பெரியார் அவர்கள் "குன்றக்குடி மகா சன்னிதானம் அவர்களே!" என்றுதான் குறிப்பிடுவார். அதுபற்றிச் சில தீவிர பகுத்தறிவாளர்கள் பெரியாரிடம் கேட்டபோது பெரியார் என்ன பதில் அளித்தார் தெரியுமா?

> "அடிகளார் – ஆன்மிகத் துறையிலே மட்டும் ஆழ்ந்து கிடந்து, அறிவுப் பெருக்கத்திற்கோ, தமிழர்கள் முன்னேற்றத்துக்கோ கவலைப்பட்டுப் பாடுபடாதவரா யிருந்தால், சமூகப் பிரக்ஞையற்றவராக இருந்தால்; அவரை மகா சன்னிதானம் என்று மட்டும்தான் மக்களில் பலரும் கொண்டாடியிருப்பார்கள். ஆனால் அடிகளார், வெறும் ஆன்மிக ஞானியாக மாத்திரம் இல்லாமல், பகுத்தறிவுச் சிந்தனையாளர் – சமுதாய சீர்திருத்தப் பணியாளர் – தமிழ் உணர்வாளர் – என வளர்ந்திருப்பவர். அவரை "மகா சன்னிதானம்" என்றும் ஏற்றுக் கொண்டு நாம் அழைத்தால்தான்; அது நமக்கும் பெருமை –

அவருக்கும் பெருமை – அப்படித்தான் அழைக்க வேண்டுமென்று மற்றவர்களுக்கும் வழிகாட்டியதாகும்.”

இந்தக் கருத்தைத்தான் தந்தை பெரியார் விளக்கமான விடையாகத் தந்தார்.

அவரை நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது; தமிழகச் சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமனம் செய்யும் பேறுபெற்றேன். அந்தப் பொறுப்பினை ஏற்றிட முதலில் தயக்கம் காட்டினார். அன்றைய சட்ட அமைச்சர் திரு. மாதவனை அனுப்பிவைத்து அதன் பிறகு அவர் ஒப்புதல் தந்து 1969ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் அந்த நியமனம் நடைபெற்றது.

அதையொட்டி நன்றி தெரிவித்து குன்றக்குடி அடிகளார் எனக்கு ஒரு கவிதை எழுதி அனுப்பி வைத்தார். அது அப்போது பல ஏடுகளில் வெளிவந்தது. “நெஞ்சுக்கு நீதி”யிலும் இடம் பெற்றுள்ளது. அந்தக் கவிதை வருமாறு :–

“ தமிழில் தோய்ந்து தண்ணளி பெற்ற
இனிய கலைஞ! நின்றன் கொற்றம்
வழங்கிய சிறப்பில் மலர்ந்தன இவையே!
வாழும் நெறியினை வகுக்கும் வள்ளுவம்
கோல உலகில் குடி நின் றுயர
பருவம் மடிமா னம்பா ராமல்
குடிசெய்தற் கென்றே குரல் கொடுத்தது!
அக்குரல் தனக்கே அரும் இலக் கியமாய்
வாழ்ந்து வேறுபா டின்றி இனநலம்
கருதிக் கங்கு கரையிலா அன்பு
பொழிந்த பேரறிஞர் அண்ணா கண்டோம்.
வாழுதல் கலையென மொழிந்தான் வள்ளுவன்
வள்ளுவன் நெறியும் அண்ணா நெறியும்

வாழும் வகைக்கிரு கால்களாம் என்றே
கொண்ட கொண்டல் கொழிதமிழ்க் கலைஞர்
புதிய புறநா னூற்றைப் படைக்கும்
புரவலர்! புரவலர் புரவல ராக
இருப்பதோ டன்றி இணையில்கா லத்தையும்
வென்று நிற்கும் வியன்மிகு கவிஞராய்
நிரந்தினி துரைக்கும் நீர்மைநா வலராய்
ஏற்றம் மிகுந்த எழுத்தாள ருமாய்
நாடொறும் நாடி நலம்புரி அமைச்சாய்
நெஞ்சில் பழக்கச் செஞ்சால் உழுது
அன்பெனும் வித்திட் டாரத் துய்த்திடும்
அருமைக் கலைஞர் நமைமே லவையில்
இருக்கச் செய்தது என்ன கருதியோ?
நெடிய நேரம் நினைந்த பின்னும்
புலப்பட வில்லை; புலப்பட வில்லை!
நமதுஆ தீனம் அஃதண் ணாமலை
ஆதீ னம்ஆம் அண்ணா என்ற
முதன்மைச் சொல்லில் மூண்ட காதலோ?
பேசும் மொழியால் பெட்புறு நெறியால்
தமிழ இனத்தைச் சார்ந்தது கருதியோ?
குன்றக் குடியைக் குன்ற விடாமல்
நின்று விளக்கிட நினைத்தோ? இவரை
ஏற்றிப் பார்க்கலாம் என்ற எண்ணமோ?
ஒதுங்கி மடத்தில் உட்கார்ந் தவரை

மன்றில் நிறுத்தி வேடிக்கை பார்க்கவோ?
பிறந்த மொழியைப் பயின்றநாள் தொட்டுத்
தொண்டு நெறியின் சுவைதே றியநீ
நம்மையும் தொண்டு நெறியில் நடாத்தித்
தூண்ட கருதியோ? தொன்மைச் சிறப்பின்
தாரணி புகழும் தஞ்சை மண்ணிடை
ஒருங்கே பிறந்தோம் எனும்பா சத்திலோ?
சென்ற நாட்களில் சிலதுறை யேற்றுத்
தொண்டு செய்ததில் தொடர்ந்த துன்பத்தை
கண்டு களைந்திடுங் கருத்தது தானோ?
தமிழ்மொழித் துறையில் தக்கபே ரறிவு
இல்லை யெனினும் எழிற்றமிழ்ப் பற்று
மிக்கோர் என்னும் விரிந்த கருத்திலோ?
இழிசா தியெனக் கிடந்தநம் இனத்தை
ஏற்றமுறச் செய் பெரியார் எம்மிடைக்
கொண்ட பாசம் குறித்து நினைத்ததோ?
எதுவென அறியோம்! யாதுசெய் வதென
விளங்கவு மில்லை! வேண்டுவ தொன்று
இன்றே போல்க, உமது கேண்மை!
தாங்கு புகழார் தரணிக்கு நீ செய்யும்
பணிக்குடன் நிற்கும் வாய்ப்பளித் தமைக்கு
உளமார் நன்றி! உவந்துரை செய்தோம்.

என வினாக் குறிகளை வியப்புக்குறிகளாக்கி;

"எழுபிறப் பும்யாம் எம்முளம் கொள்வோம்
உழுவலன்புத் திறத்தினை வாழ்த்துவோம்"

என்று நிறைவு செய்கிறார் அடிகளார் அந்தக் கவிதையை; நன்றிப் பெருக்குடன்!

அறிவியக்கத்தைச் சேர்ந்த நாம்; ஆன்மீகவாதிகளுக்கு ஒட்டுமொத்தமாக எதிரானவர்கள் அல்லர் என்பதற்கும் – ஆன்மீகவாதிகளும் அறிவியக்கத்தின் அப்பழுக்கற்றதும் ஏற்றத் தாழ்வற்றதுமான சமுதாயப் பணிபுரிபவர்களாக அமைந்திடல் வேண்டுமென்பதற்கும் – பெரியாரும், அண்ணாவும், அவர்கள் வழியில் தொண்டாற்றும் நாமும் எடுத்துக்காட்டாக விளங்குவதற்கு குன்றக்குடி அடிகளார் பற்றிய இந்தத் தகவல் ஒன்றே தக்க சான்றாகும்.

4 - 8 - 2005

✦✦✦

20

தேனில் குழைத்துக் கொடுத்தாலும்...!



உலக நாடுகளில் ஒரு நாட்டின் பெருமையை அந்த நாட்டின் பழைமையும் பண்பாடும் பறைசாற்றிக் கொண்டிருப்பதுண்டு. ஓவியர்கள், சிற்பிகள், கவிஞர்கள் ஒரு நாட்டின் புகழுக்குக் காரணமாயிருப்பதுண்டு. இலக்கியங்களால் கீர்த்தி பெற்ற நாடுகள் உண்டு. வரலாறுகள் ஒரு நாட்டின் சிறப்புக்குக் கட்டியம் கூறிக் கொண்டிருக்கின்றன.

நட்பு நாடுகளாகப் பலவற்றைப் பெற்றுள்ள பெரிய நாடுகளும் உண்டு.

படை பலத்தால் பல நாடுகளைத் தன் பக்கமாக்கிக் கொண்டுள்ள வலிமை வாய்ந்த நாடுகள் –

வாணிபத்தால் பல நாடுகளை வளைத்துப் போட்டுக் கொண்டு முதல் வரிசை நாடுகளில் ஒன்றாகத் திகழ்கின்ற முதலையனைய நாடுகள் –

பொருளாதாரத் துறையில் வலிமை பெற்ற நாடுகள்–

விஞ்ஞான முன்னேற்றத்தில் விண்வெளி ஆராய்ச்சியில் வெற்றி பெற்ற நாடுகள் –

அந்த வெற்றி நோக்கி விரைந்து போய்க் கொண்டிருக்கிற நாடுகள் –

என இப்படிப் பல்வேறு நிலைகளில் செல்வாக்குடன் விளங்கும் எந்தவொரு நாட்டைப் பற்றியும் நூல் நிலையங்களில் அடுக்கப்பட்டுள்ள புத்தகங்களை எடுத்துப் படித்துத் தெரிந்து கொள்ளலாம். இன்றைய கணினி யுகத்தில் "இண்டர்நெட்" வாயிலாக எளிதாக அறிந்து கொள்ளவும் முடிகிறது.

இப்படி நல்லவைகளாலும் அல்லது அல்லவைகளாலும் முறையே; சரியாகவோ தவறாகவோ பாதிக்கப்படும் நாடுகளின் எண்ணிக்கை, தற்சமயம் கூடி வருவதை ஆழ்ந்த கவலையுடன் உலகம் நோக்கிய வண்ணமிருக்கிறது.

நான் நாடு என்று குறிப்பிடுவதையோ, உலகம் என்று குறிப்பிடுவதையோ; யாரும் பூகோள ரீதியாக நிலப்பரப்பு என்று மட்டும் எடுத்துக் கொள்ளாமல் மக்கள் வாழும் பகுதிகளாக – இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமேயானால்; மக்கள் திரளைக் குறிப்பிடுவதாகவே கருதிக் கொள்ள வேண்டும்.

இட்லருடைய செயல்களும், முசோலினியின் சேட்டைகளும், ஜார் மன்னன், ரஸ்புடீன் போன்றோரின் அடாவடிகளும், லூயி மன்னர்கள் நடத்திய கொடுமைகளும் இன்னமும் அந்த நாடுகளில் ஏற்பட்ட சீழ்பிடித்த புண்களின் வடுக்களாகவே இருக்கின்றன. அந்த வடுக்களைச் சுற்றித்தான் வரலாறுகள்; வருங்கால சந்ததியினருக்குப் புத்தி புகட்டிடும்வண்ணம் உருவாகியிருக்கின்றன.

நான் குறித்துள்ள இந்தக் கொடுங்கோலர்களைப் போலப் படைகளைத் திரட்டிக் கொள்ளாமல், விண்ணிலும் மண்ணிலும் சேனைகளை அணிவகுத்துக் காட்டாமல்; திடீர் திடீர் எனத் திகைப்பூட்டும் அளவுக்கு; முதலில் ஓரிரு நாடுகள் என ஆரம்பித்து, இப்போது வேகவேகமாக வெகு நாடுகளில் அந்த வெங்கொடுமை, கால் பதிக்கத் தொடங்கியுள்ளது.

அதற்குப் பெயர்தான் "பயங்கரவாதம்;" அதனை "தீவிரவாதம்" என்று நளினமாகச் சொல்வோரும் உண்டு. இரண்டுமே ஏற்படுத்துவது ஒரே விளைவுதான்.

பாம்பைப் பிடித்துக் கொல்ல, அது பதுங்கியிருக்கும் நந்தவனத்துப் புற்றுகள் நாலைந்தில்; குறிப்பாக எதுவெனத் தெரியாமல் எல்லாப் புற்றுக்களையும் அழித்திட நந்தவனத்தையே மொத்தமாக நாசமாக்குதல் போல; நடத்தப்படும் தீய திருவிளையாடல்தான் தீவிரவாதத் தாக்குதல் – எதிர்காலத்தில் எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு தீவிரவாதமானாலும், பயங்கரவாதமானாலும் அறவே ஒழிக்கப்பட்டுவிடக்கூடும்.

அப்போது இதை எழுதியோனும், திக்கெட்டும் தீவிரவாதச் செயல்பற்றிய செய்திகள் கேட்டு இன்று திகைத்துக் கிடப்போரும் அந்த அமைதியான நல்ல நாட்களில் வாழ்வோமோ இல்லையோ; நலனும் அமைதியும் வாய்த்திடவும் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடவுமான அந்த நாட்களுக்கு அடித்தளம் அமைக்கும் பணிக்கு இந்தக் கற்களும் பயன்படட்டும் என்பதே என் பேரவா!

மூல காரணம் என்ன; தீவிரவாதத்திற்கு ?

முக்கியமாக மதப் பூசல்களேதான்!

எல்லைப் பிரச்சினைகளேதான் !

அந்தப் பூசலே ரயிலைக் கொளுத்துகிறது; ஏன்; ஊரையே கொளுத்தி மகிழ்கிறது! உயர்ந்த மணிமாடங்கள் தீவிரவாதிகளின் தீப்பந்தங்களில் சாம்பலாகிச் சுருள்கின்றன; சுக்கு நூறாகின்றன!

குடும்பம், குடும்பமாகத் தீவிரவாதிகளின் தாக்குதலால் மரணக் குழிக்குப் போகிறார்களே! குழந்தைகள் என்ன; இஸ்லாமியர் வீட்டுப் பிள்ளை ஓர் இந்துவை இழித்துரைத்ததா? ஓர் இந்து வீட்டுக் குழந்தைதான் இஸ்லாமியர் வீட்டு மழலையைக் கேவலப்படுத்தியதா? பின் எதற்காக? தீவிரவாதிகள் நடத்தும் தாக்குதலில் பாவம்; அந்தக் குழந்தைகளை ; பச்சைக் கிளிகளின் கழுத்தை முறித்துப் போடுவது போல் போட்டுவிடுகிறார்கள்?

பாவமோரிடம் பழியோரிடம் என்பதற்கு இந்தப் பயங்கரவாதிகள் நடத்தும் வெடிகுண்டுச் சம்பவங்கள், பிரதான எடுத்துக்காட்டுகள் அல்லவா?

நாடி தளர்ந்து நரம்புகள் தேய்ந்து தசையும் தோலும் வற்றியும் சுருங்கியும் முனகிக் கொண்டு கிடக்கும் முதியோர் என்ன ; முரட்டு ஆயுதங்கள் தூக்கி வந்தனரா; பயங்கரவாதிகள் பயந்து நடுங்க?

பிறகேன்; தீவிரவாதம் என்ற பெயரால் சகட்டு மேனிக்கு சகலமானவர்களும்; தீவிரவாதிகளின் பயங்கர சதிச் செயல்களுக்குப் பலியாக வேண்டும்?

இதனால் மதப்பூசலைத் தீர்த்து விட முடியுமா? குண்டுகளுக்குப் பதிலாக இரு சாராரும் பூச்செண்டுகளை கைமாற்றி வழங்கிக் கொண்டு; வாய்மையுடன் வாதிட்டு; இந்து என்ன; இஸ்லாமியர் என்ன; கிறித்துவமென்ன; பௌத்தமென்ன; சமணமென்ன? எம்மதமும் சம்மதமே என்ற நிலை பிறக்கவும் – எல்லைத் தகராறுகள்; உன் நாடு, என் நாடு என்ற உரிமைப் போரில் உடன்பாடு கண்டிடவும் – ஓர் அரிய நிலை உருவாகும் வரையில் அதற்கான ஆயத்தங்களைத் தீவிரவாதத்தினால்தான் செய்திட வேண்டும் என நம்புவதும் அதற்கேற்ப நடைமுறை வகுப்பதும்; நுனிக் கிளையில் அமர்ந்து அடிக் கிளையை வெட்டுவதற்குத்தானே சமமாக முடியும்.

எந்தக் குறிக்கோளை அடையவும் – அது குவிந்து கிடக்கும் பொருள் வளமாயினும், நிலவளமாயினும், அதிகாரமாயினும், மதச்சார்பின்மையாயினும் ஒவ்வொன்றையும் அல்லது அனைத்தையுமே அதிரடித் தீவிரச் செயல்களால்தான் வென்றெடுக்க முடியும் என்ற வேண்டாத நினைப்பை விட்டொழிப்பதுதான் மனித சமுதாயத்திற்கு; சற்றுத் தாமதமாயினும் – நன்மை பயக்கக் கூடிய சாத்வீக மார்க்க நன்னெறியாகும்.

“இல்லை; இல்லை! மூட்டைப் பூச்சியை விரட்ட, வீட்டைத்தான் கொளுத்துவேன்” என்பது விதண்டாவாதமாகும். அதன்படிச் செயல்படுவதும்; விபரீதச் செயல் மட்டுமல்ல; விபரம் புரியாதோர் நடத்தும் வேதனைச் செயலுமாகும்! எனவே தீவிரவாதத் தீப்பந்தத்தைக் கீழே போட்டுவிட்டு; மூட்டைப் பூச்சியை விரட்டி வீட்டைக் காத்திட; தக்க மருந்து அடிப்போம்; தவறாமல் அகந்தூய்மை, புறந்தூய்மையைக் கடைப்பிடிப்போம்! தேனில் குழைத்துக் கொடுத்தாலும் ‘தீவிரவாதம்’ என்பது மருந்தாகி விடாது. தீராத விஷமேயாகும்.

5 - 8 - 2005

✦✦✦



வியாதிக்கு வித்தா?



சிலரால் சில பழக்கங்களை நிறுத்த முடியாது. புத்தகம் படிக்கும்போது, அதன் பக்கத்தைப் புரட்டி அடுத்த பக்கம் படிப்பதற்கு புத்தகத்தின் தாளை வெறுமனே புரட்டாமல் விரலை நாவிலோ அல்லது உதட்டிலோ தோய்த்து அந்த உமிழ்நீர் ஈரத்தின் உதவி கொண்டேதான் தாளில் விரலைத் தோய்த்து பக்கத்தைப் புரட்டுவார்கள்.

வாசிப்பதற்காக அந்தப் புத்தகத்தை எடுப்பதற்கு முன்பு அது நூல் நிலையத்திலோ அல்லது வீட்டு அலமாரியிலோ தூசிப் படலத்தின் நடுவே இருந்திருக்கக் கூடும்.

எனவே தூசி படிந்திருப்பது; கண்ணுக்குப் புலப் படாமலேயிருக்கிற அந்தப் பக்கத்தில் படுகிற ஈரமான விரலில் அந்தத் தூசி பற்றிக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது.

அப்படிப் பற்றிக் கொண்ட தூசு; மீண்டும் அந்த விரல், அடுத்த பக்கத்தைப் புரட்டும்போது, அந்தத் தாளில் ஒட்டிக் கொள்ளக் கூடும். அப்படி ஒட்டும் பகுதி, தொற்று நோய்க் கிருமி சுலபமாக ஏறிச் சவாரி செய்கின்ற அளவுக்கு வாகன வசதிகளை வழங்கக் கூடியதாக ஆகிவிடவும் கூடும். கண்ணுக்குத் தெரியாமல் கருத்துக்குப் புலப்படாமல் ஏதோ ஒன்று அரிப்பாகத் தினவெடுத்து; மெல்ல மெல்லத் தொல்லை கொடுத்து, மருத்துவர்கள் பின்னர் அந்த நோய்க்குப் பெயரும் சூட்டுவார்கள்.

தாளைப் புரட்ட விரலில் தண்ணீரைத் தொட்டுக் கொள்ள அலுப்பு – விரைந்து விரலால் நாக்கில் உமிழ்நீரைத் தொட்டுக்

கொள்ள சுலபமாக முடிகிறது. ஆனால் அது தீமையில் முடிந்தால் திண்டாட வேண்டியிருக்கிறது.

வேறு சிலரோ விரலையோ அல்லது விரல்களையோ அக்குளில் வைத்து அழுக்கைத் திரட்டுவார்கள். அப்படிச் செய்வது; ஆழ்ந்த தூக்கத்தில் செய்வது போல மெய்மறந்த நிலையில் இருக்கும். அக்குளில் திரட்டப்பட்ட அழுக்கை இரு விரல்களால் உருட்டுவார்கள். அப்போதும் மெய்மறந்த இன்பத் தோடுதான்! உருட்டப்பட்ட அந்த அழுக்கை மூக்கின் முனை வரை கொண்டு போய் அதன் வாசனையை நுகர்வார்கள். பிறகு அந்த அழுக்கு உருண்டையை எப்போது கீழே போடுவதென்பது அவர்களது விருப்பத்தைப் பொறுத்தது.

நினைவிருக்கட்டும், அதே அழுக்குத் தோய்ந்த விரல்களைக் கொண்டுதான் நாவையும் தடவி அந்த எச்சிலைப் பயன்படுத்தி, புத்தகத்தில் லேசாக ஒட்டிக் கொண்டிருக்கிற பக்கங்களைப் பிரித்துப் படிப்பார்கள் என்கிறபோது; வியாதிக் கிருமிகளை விருந்துக்கு அழைத்தது போன்ற விபரீதம் ஏற்படுவது இயற்கைதானே!

புத்தகத் தாள்களை, உமிழ் நீரில் விரல்களை நனைத்துப் புரட்டுவதை விடத் தீமை பயப்பது என்னவெனில் – சில நேரங்களில் விழா ஒன்றுக்கான அழைப்புகளோ அல்லது மணவிழா மடல்களோ – அல்லது வார நாளிதழ்களோ அஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்கப்படுவதற்கு அத்தனை தபால் தலைகளையும் – அதன் பின்புறத்தில் உள்ள பசையை நேரடியாகவே நாவினால் நக்கி நனைத்து ஈரமாக்கி அவற்றை அவற்றுக்கான உறைகளில் அப்படியே பதிய வைப்பதுதான். அதைவிட நச்சுத் தன்மை வாய்ந்த 'தொற்று' வேறு என்ன இருக்க முடியும்!

நூற்றுக்கணக்கான அஞ்சல் தலைகளின் பசை தோய்ந்த மறு பக்கத்தை நாக்கினால் தடவி ஈரமாக்கிக் கொள்வதால் எத்தகைய நச்சு நோயும் தொற்றிக் கொள்ளும் நிலை தாராளமாக ஏற்படும். தபால் தலைகளின் பின்புறப் பசையை மட்டும் அல்லாமல்; தபால் உறைகளின் ஒட்டுகிற பகுதியைச் சிலர்

மிகுந்த ஆர்வத்துடன் நாவினால் ஈரமாக்குவதைக் கவனித்தால் 'மோர்சிங்' வாத்தியம் வாசிப்பது போலக் கூட இருக்கும்.

இவ்வளவுக்கும் காரணம் என்ன? தூய்மையாக இருக்க வேண்டும் என்ற அக்கறை இருந்தாலும்கூட; அஞ்சல் தலையில் ஈரம் சேர்க்கத் தண்ணீர் கொண்டு வர வேண்டுமே – அதற்கு ஒரு குவளை வேண்டுமே – அதற்காகத் தண்ணீர் இருக்குமிடம் செல்ல வேண்டுமே – இந்த நினைவினால் ஏற்படும் சோம்பல்தான் முக்கியமான காரணம் –

நம்முடைய உடம்புதான் – அதற்காக அக்குளில் விரல்களை வைத்துத் தேய்த்துத் தேய்த்து உருட்டியெடுக்கும் அழுக்கைத் திரட்டியெடுத்து அன்னை பார்வதி தேவியார், விநாயகர் உருவம் ஒன்றைச் செய்து அதைக் காவல் தெய்வமாகத் தனது அறை வாசலில் அமர்த்தியதுபோல் நாமும் அமர்த்த முடியுமா? 'தெய்வீக' அழுக்கிற்கும் மனித அழுக்கிற்கும் உள்ள வித்தியாசத்தை உணர வேண்டாமா? மனித அழுக்கு, துர்நாற்றம் மூக்கைத் துளைக்கிறது! இந்த அழுக்கு, உமிழ் நீரோடு – உதட்டோடு – நாக்கோடு கலந்தால்; உயிருக்கே ஊனம் விளைகிற அளவுக்கு (**Infection**) தொற்றுக் கிருமிகள் தொற்றிக் கொள்ளாதா எனக் கேட்டுத் தெளிவு பெற வேண்டும். 'தெய்வீக' அழுக்கைப் பற்றி தெளிவான கணிப்பு எதுவும் கிடையாது. நாம் இப்பொழுது மனித நலம் பற்றியே கவலைப்படுவதால்; அவர்களுக்குத் தேவையானதை – தக்கதை மட்டும் சொல்ல வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

அக்குளில் விரல் கொண்டு தேய்ப்பது மட்டுமல்ல; ஏதாவது ஓர் அங்க சேட்டை மனிதர்க்கு இருக்கும் – சிலர் உதட்டை அடிக்கடி கடிப்பார்கள் – சிலரது கண்கள் இமைத்துக் கொண்டேயிருக்கும்; அளவுக்கு அதிகமாக! அடிக்கடி! அவரெல்லாம் அவசியம் மருத்துவர் ஆலோசனைகளைப் பெறவேண்டும்.

சிலர், தொண்டையில் காறிய சளியை ஒரு ஓரமாக உடனே துப்பி விடாமல், வாயில் வைத்துக் குதப்பிக் கொண்டே பிறருடன் பேசிக் கொண்டிருப்பார்கள். அதைக் கேட்போர் முகத்தில்

விளக்கெண்ணெய் வடியும் – விரைவில் அவர் விடைபெற்றுக் கொள்ளமாட்டாரா என்று ஏங்கித் தவிப்பார்கள் சிக்கிக் கொண்டவர்கள். சிலரது அங்கசேட்டைகள்; ரசிக்கும்படியாகக்கூட இருக்கும் – ஆனால்; அக்குளில் தொடங்குவது அழுக்குச் சேமிப்பு ஆலையாக உருவெடுக்கிறபோதுதான் ஆபத்து தொடங்குகிறது என நாம் அறிவுறுத்த வேண்டியிருக்கிறது.

7 - 8 - 2005

✦✦✦



விளையாட்டு

விளையாட்டாகக் கருதிக் கொண்டு இராமன், தனது இளமைப்பிராயத்தில் அயோத்தி அரண்மனைப் பூங்காவில் கூனியின் முதுகில் களிமண் உருண்டைகளைக் கொண்டு அடித்தான். அது கூனிக்கு வலித்ததோ இல்லையோ அவளுக்கு இராமன் மீது ஏற்பட்ட ஆத்திரம்தான் அவனது பட்டாபிஷேகத்தையே கைகேயி மூலமாகத் தடுப்பதற்குக் காரணமாயிற்று என்று கதை சொல்பவர்கள், கதை முடிவில், "விளையாட்டு வினையாகும்" என்பது இராமன் விஷயத்தில் எவ்வளவு உண்மையாகிவிட்டது பாருங்கள் என்று மாணவர்களுக்கு அறிவுரை வழங்குவார்கள்.

அதாவது இராமாயணத்தில் விளையாட்டுத்தனமான செயலுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட அந்தப் பழமொழி; இந்திய நாட்டின் எல்லாக் கிராமங்களிலுமுள்ள இளைஞர்களைப் பயமுறுத்தும் மொழியாகி; நமது விளையாட்டுக் குழு எதுவாயினும் அது, வெளிநாடு ஒன்றில் வெற்றி பெற்றது – விருது பெற்றது – என்றோ; அல்லது வெளிநாட்டு விளையாட்டு அணியொன்று இங்கே தோல்வியுற்றுத் திரும்பியது என்றோ; செய்தி வருவதென்பது குதிரைக் கொம்பாகவே ஆகிவிட்டது.

அமெரிக்கா, ரஷ்யா, சைனா போன்ற நாடுகள் ஒலிம்பிக் பந்தய விளையாட்டுப் போட்டிகளில், இருபது பதக்கங்களை, முப்பது பதக்கங்களை அள்ளிச் செல்வதைக் கண்டு அந்த மகிழ்ச்சிகரமான நிலை, இந்திய நாட்டில் எப்போது வாய்க்கும் என்று ஏக்கப்பெருமூச்சல்லவா விட்டுக் கொண்டிருக்கிறோம்.

கால்பந்து, கைப்பந்து, டென்னிஸ், ஆக்கி என எந்தவொரு ஆட்டமாயினும் அல்லது தொலைவுக் கணக்கு ஓட்டமாயினும

'ஒலிம்பிக்'கில் சேர்க்கப்படாத 'கிரிக்கெட்' ஆட்டம் தவிர்த்த உலகத் தரம் வாய்ந்த விளையாட்டுப் போட்டிகளில்கூட, நாம் பெறும் வெற்றிகளின் அளவு, நம்மை உற்சாகப் படுத்துவதாயில்லை. ஒவ்வொரு போட்டிகளையும் போட்டி முடிவுகளையும் வேடிக்கை பார்ப்பதற்கு அரங்குகளில் இந்திய தேசியக் கொடிகளுடன் குவிந்திருக்கும் நாட்டுப் பற்று மிகுந்த இளைஞர்கள்; நமது தேசத்து விளையாட்டு அணிகள் தோல்வி யுற்றுத் திரும்பும்போது தங்களின் முகங்களையும் கொடிகளையும் தொங்கப் போட்டுக் கொண்டு, பார்வையாளர் பகுதிகளிலிருந்து வெளியேறும்போது, அதைத் தொலைக்காட்சிகளில் பார்த்துக் கொண்டிருக்கும் நம்மை வெட்கம் பிடுங்கித் தின்பதையும், வேதனை, நம் இதயத்தைப் பிறாண்டி இரத்தம் கசிவதையும் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாமல் அல்லவா துடித்துப்போக வேண்டியுள்ளது.

ஏதன்ஸ் நகரில் – "நவீன ஒலிம்பிக்" ஆரம்பமான 1896 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் நாம் நமது கை விரல்கள் அனைத்தையும் விட்டு எண்ணக் கூடிய அளவுக்கு தங்கமோ, வெள்ளியோ, அல்லது தரத்தில் அவற்றுக்கும் குறைந்ததான எந்தப் பதக்கங்களையோ ; பெற்றிருக்கிறோம் எனப் பெருமிதம் கொள்ள முடிந்திருக்கிறதா ?

பத்து கோடிக்கும் குறைவான – இரண்டு கோடிக்கும் குறைவான – அவ்வளவு ஏன்; சில இலட்சங்கள்தான் எனப்படும் – மக்கள் தொகை கொண்ட நாடுகள் எல்லாம்கூட வெளிநாட்டில் ஆடினாலும் – உள்நாட்டிலேயே வெளிநாட்டு விளையாட்டுக் குழுவினரை எதிர்கொண்டாலும் நிச்சய வெற்றிக்கு உத்திரவாதம் என்று உறுதி கூறி விட்டு அதனைச் செயலிலும் காட்டும்போது; நம் நாட்டு விளையாட்டுக் குழுவினர் மட்டும் வெளி நாட்டாருக்கு அறைகூவல் விடுப்பதிலும் குறைவில்லை; முடிவில் அறைக்குள் உட்கார்ந்தபடி அழுது தீர்ப்பதிலும் குறைவில்லை என்கிற பரிதாப நிலைக்கு ஆளாகிறார்கள் என்றால்; நூறு கோடி மக்கள் தொகை கொண்ட இந்தப் பெரிய நாட்டில் வலிவும் திறனும் கொண்ட விதவிதமான விளையாட்டுக் குழுக்களை கடலிலிருந்து முத்தும் பவளமும் எடுப்பது போலத் தேர்வு செய்து எடுத்திட முடியாதா ?

இன்றைக்கு முடியுமா? நாளைக்கு முடியுமா? இந்த ஆண்டுக்குள் முடியுமா? என்றெல்லாம் மலைத்து நிற்காமல்; என்றைக்கோ ஒருநாள் முடிந்தே தீர வேண்டும் – என்ற முனைப்புடன் செயல்பட்டால் எதுவுமே முடியக்கூடியதுதான்! தேவையான 'நல்லது' என்றால் முடிய வேண்டியதுதான்!

நம் வீட்டுப் பிள்ளையை வளர்த்து, பள்ளிக்கு, அனுப்பி வைப்பதுடன் கடமை முடிந்துவிட்டதாகப் பெற்றோர் கருதாமல்; நல்ல கல்வியாளர்களை மட்டுமல்லாது; வல்லவர்களான விளையாட்டு வீரர்களையும் தயாரித்து நாட்டுக்கு வழங்கிட முன்வர வேண்டும். அந்த வீரர்களைத் தேர்வு செய்து குழுக்களை அமைக்கும்போது; நாட்டின் ஒரு பகுதிக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்காமல்; எல்லாப் பகுதிகளுக்கும் அந்த வாய்ப்பு பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும். இதில் பொறுப்பேற்றிருப்பவர்களுக்கோ, பொறுப்புக் குழுக்களுக்கோ நாட்டுப்பற்று ஒன்றுதான்; நெஞ்சில் நிறுத்தப்பட்டு நாலாதிசையும் ஒளி பரப்புகிற கலங்கரை விளக்கமாக அமைய வேண்டுமே தவிர; தன்னை மட்டும் உயர்த்திக் கொண்டால் போதுமென்ற குறுகிய பார்வை கொண்ட குடத்து விளக்குகளால் பயனேதும் விளையாது!

அரசு அலுவலர்களாக ஆசிரியப் பெருமக்களாக இருக்கும் பெற்றோர்கள்; முதலில் இதில் கவனம் செலுத்தி தங்கள் பிள்ளைகளுக்கு அவர்கள் கிராமங்களின் தெருவில் மற்றும் திடலில் விளையாடுவதென்றாலும், நகரங்களில் மைதானங்களில் விளையாடுவதென்றாலும்; அவற்றில் தூய்மைக்கும் உரிய இடம் அளித்திடவும் – ஏனைய பெற்றோர்களும் இவர்களைப் பின்பற்றித் தொடர ஊக்கம் வழங்கிடவும் – ஊரில் பெரியவர்களும், நகரப் பிரமுகர்களும், அதற்கான சகல வசதிகளும் செய்து கொடுக்கவும் முணுமுணுப்பின்றி முன்வந்தால்; விளையாட்டுத் துறையில் நம்நாடும் வெற்றிகளை ஈட்டியவாறு முன்னுக்கு வரும் என்பதில் ஐயமில்லை!

9 - 8 - 2005

✦✦✦

தன்னை வெல்வோம்

"**சோ**திடம் பொய்யல்ல; சோதிடர்கள்தான் பொய் சொல்லி விடுகிறார்கள்" என்று ஒரு வாதம் வைக்கப்படுகிறது. அந்த வாதத்தை வலுப்படுத்தப் பல எடுத்துக்காட்டுகளும் கூறப்படுகின்றன.

"சோதிடம், ஆரூடம் என்பவைகள் எல்லாம் ஒரு கணக்கே தவிர வேறு ஒன்றுமில்லை. கிரகங்களின் நிலையை வைத்துக் கணிக்கப்படுபவை. அந்தக் கணக்கில் ஓர் இம்மி தவறினாலும் சொல்வது பலிக்காமல் போய்விடும். பாருங்கள் பக்கத்துக் கிராமம் மிட்டாதார் இருந்தாரே; பல நூறு ஏக்கரா நிலமும் – பாங்குகளில் ஏராளப் பணமும் – பாட்டன் பூட்டன் காலத்திலேயிருந்து பரம்பரை பரம்பரையாக இருந்த சொத்து; பட்டினத்துக்குக் குடிபோனார் – எப்படித்தான் எல்லா சொத்தும் அழிந்ததோ – இப்போது ஒரு தனியார் கம்பெனியில் குமாஸ்தா வேலை பார்த்து குடும்பம் நடத்துகிறார். இப்படி நடக்குமென்றும் – அவர் சீட்டாட்டம், குதிரைப் பந்தயம் என்று ஆடி எல்லாவற்றையும் இழப்பார் என்றும் அவர் ஜாதகத்திலேயே முன்கூட்டியே கணிக்கப்பட்டு எழுதியும் வைக்கப் பட்டிருப்பதைத் தன்னிடமே காட்டினார்கள் என்றும், தானே அதைப் படித்துப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனேன் என்றும் நாமும் நம்புகிற அளவுக்கு நம்மிடமே சொல்கிறவர் களும் உண்டு. அந்த மிட்டாதார் வாழ்க்கை ஏட்டில் எதிர்காலப் பயன் என்ற குறுந்தலைப்பில் அத்தகைய நிகழ்வுகளை முன்கூட்டியே சங்கேத வார்த்தைகளில் குறிப்பிட்டிருக்கவும் கூடும்"

திருமுகை அறிவுக்கூடல்
பேராசிரியர் அன்பழகன் நூல் நிலையம்
சென்னை 18

இவ்வளவையும் நான் கண்ணை மூடிக் கொண்டு இல்லையென்று மறுக்கவில்லை, மறுத்தே தீர வேண்டும் என்ற பிடிவாதமில்லாமல், நான் எடுத்துவைக்கும் நியாயமான வாதமெல்லாம்; இப்படி முன்கூட்டி நம் ஜாதகப் பலனைத் தெரிந்து கொள்வதால் என்ன நன்மை என்பதுதான்! "அந்த மிட்டாதார், சூதாட்டங்களில் ஈடுபடாமல் எச்சரிக்கையாக இருந்து விடலாமல்லவா?" என்று கேட்கத் தோன்றும். ஆனால் அது எப்படி முடியும்? அவரது ஜாதகப்படி அவருக்கு சூதாட்ட மோகம் ஏற்படும் என்று இருக்கும்போது; அதனால் பெரும் பொருள் இழப்பு ஏற்படும் என்று அந்த மிட்டாதார் பிறந்த நேரத்து ராசி பலன்கள், கிரக நிலைகள் எல்லாம் அழுத்தமாக வரையப்பட்டு இருக்கும்போது அந்தக் கோடு தாண்டி; அவர் செயல்பட அவரது ஜாதகம் அவரை விட்டு விடுமா?

அவருக்கு ஒரு குறிப்பிட்ட வயதில் சூதாட்ட மோகம் ஏற்படும் – அதனால் பொருள் இழப்பு நேரிடும்; என்பதை முன்கூட்டியே அந்த ஜாதகம் சொல்லியிருக்குமானால் – அந்த ஜாதகப்படி இப்படிப்பட்ட ஓர் எச்சரிக்கை செய்யப்பட்டு; அவர் நல்வழியை மேற்கொண்டு தப்பித்து விடுவார் என்றும் கூறப்பட வேண்டுமல்லவா?

அவ்வாறு தப்பித்து விடுவார் என்று ஜாதகத்திலே இருக்குமானால்; அது தானாகவே நடக்க வேண்டிய ஒன்றுதானே! அது ஆரூடக்காரரால் முன்கூட்டி அறிவிக்கப்படவேண்டிய அவசியம் எதுவும் இல்லையல்லவா? அப்படியானால் ஆரூடக்காரர் முன்கூட்டியே அறிவித்து; அதன்படி அந்த மிட்டாதார் தன்னைக் காப்பாற்றிக் கொள்வார் என்றும் அந்த ஜாதகத்தில் இருக்க வேண்டுமல்லவா? என்ற கேள்விக்கு விளக்கம் கிடைக்காமலே போய்விடுகிறதே!

தன்னை ஜாக்கிரதைப்படுத்திக் கொண்டு, மிட்டாதார், தவறான வழிக்குச் செல்லாமலே இருந்து விடுவாரேயானால் அதுவும் அந்த ஜாதகத்தில் அப்படியே இடம் பெற்றிருக்க வேண்டும். இடம்பெறாதபட்சத்தில் ஜாதகம் பற்றிய நம்பகத் தன்மைக்கு ஆதாரமில்லாமலேதானே ஆகிவிடுகிறது.

நடப்பதும்; நடப்பது நடக்கட்டும் என்று விட்டு விடுவதும் – நடப்பதைத் தடுப்பதும் – தடுத்ததால் நடக்காமல் இருப்பதும்;

ஜாதகப்படியேதான் என்றால்; பிராயச்சித்த வேண்டுதல்களும், 'தோஷம்' கழித்தல்களும் விழலுக்கிறைத்த நீராக வீணாகி விடத்தானே செய்யும்! அதற்காக யாரும் அலட்டிக்கொள்ளத் தேவையில்லையே!


அலட்டிக் கொள்வோமா; மாட்டோமா என்பதையும், ஜாதகம் தானே சொல்லும். அது சொல்வதற்கு மாறாக நிகழ்ச்சிகள் நடந்தால் பிறகேன் ஜாதக நம்பிக்கை?

அதே மிட்டாதார் இன்னும் ஓராண்டு மட்டுமே உயிரோடு இருப்பார், அதற்குள் ஒரு நாள் திடீரென மாரடைப்பால் அவருக்கு மரணம் சம்பவிக்கும் என்று ஜாதகம் கூறிவிடுமானால்; நாள்தோறும், நிமிடந்தோறும் அவர் அதையே நினைத்து நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டுதானே இருப்பார் – நான் முதலில் குறிப்பிட்டிருப்பதுபோல ஜாதகம் நம்பிக்கைக்குரியது என்று ஒருவேளை ஏற்றுக் கொண்டாலும்; அதைக் கேட்டு முன்கூட்டியே தெரிந்துகொள்வதும், அதே கவலையால் உண்மையில் உடல் நலிவு ஏற்படுவதும் தேவையா? என்ற கேள்வி இப்போது விசுவரூபம் எடுக்கிறதா இல்லையா?

எனவே நாள், நட்சத்திரம், ராகு காலம், குளிகை காலம் என்றும்; அமிர்தயோகம் – மரண யோகம் என்றும்; எந்த வீட்டில் குரு இருக்கிறான் – எந்த வீட்டில் சந்திரன் இருக்கிறான் – எந்த வீட்டில் சூரியன், சுக்கிரன் இருக்கிறான் என்றெல்லாம் – மூளையைக் குழப்பிக் கொண்டு ஆயுட் காலத்தில் இடையிடையே ஒரு பகுதியை வீணாக்காமல்; சோதிடம், ஜாதகம் என்ற நம்பிக்கைகளில் ஆழ்ந்து தேவையற்ற உணர்வு அலைகளால் இரத்த அழுத்தம் மாறுபட்டு பிரச்சினையாகாமல்; மூளையிருப்பது உலகில் புதுமைகளைப் படைப்பதற்காக எனவும், அதற்கேற்ப உடல் நலமும், சூழ்நிலை வளமும் அமைந்திடவேண்டுமெனவும், அந்த முறையில் தன்னை வெல்வானுக்கு, தரணியையே வெல்லும் அறிவும் ஆற்றலும் கூடிவருமெனவும் நிறைந்த நம்பிக்கையோடு வாழ்பவர்கள், ஆரூடம் ஜோதிடம் போன்றவற்றைக் கட்டிக் கொண்டு அழமாட்டார்கள்!

11 - 8 - 2005

✦✦✦



பொதுவாக எதேச்சாதிகாரிகளைப் பற்றியும், சர்வாதிகாரிகளைப் பற்றியும் வர்ணிக்கப்படும் பொழுது அவர்களைப் பற்றிய குரூர சித்திரங்கள் மட்டுமே தீட்டப்படுவது வழக்கம். 1889ல் பிறந்தவனும், 1920ஆம் ஆண்டு 'நாஜி' கட்சியிலே இணைந்து 1935ல் சர்வாதிகாரியாகி, 1945ஆம் ஆண்டு வரை உலகத்தையே நடுங்க வைத்த யுத்த வெறியன் என்று பட்டம் சூட்டப்பட்டவனுமான இட்லரின் வரலாற்றுப் பக்கங்களும் நடுங்கத்தக்க வகையிலேதான் இருக்கக் கூடுமென்று கருதுவது இயல்பேயாகும். அதற்கு மாறாக கொடியோன் என்று இந்தக் குவலயமே தூற்றும் இட்லருடைய வாழ்வின் மறுபக்கம் அமைந்திருப்பதை "ஹிட்லர் – முதல் உலகப் போர்" எனும் புத்தகத்தைப் படிக்கிறபோது தெரிந்து கொள்ள முடிகிறது.

"ஜர்மனி எங்கே? ஹிட்லருக்குப் பின்னாலே சென்று கொண்டிருக்கிறது. ஹிட்லர் எங்கே? ஜர்மனிக்கு முன்னாலே மிடுக்காகப் போய்க் கொண்டிருக்கிறான்"

என்ற புகழ்வரிகளுக்கு, கம்பீரமான சொந்தக்காரனாக ஒருகாலத்தில் விளங்கிய அடால்ப் இட்லரைப் பற்றி நான் அந்தப் புத்தகத்தில் படித்தறிந்ததை எல்லோரும் அறிய வேண்டும் என்பதற்காக அந்தப் புத்தகத்தின் ஆசிரியர் திரு. வெ. சாமிநாத சர்மா அவர்களின் வார்த்தைகளின் வடிவத்திலேயே குறிப்பிடுகிறேன்.

"அடால்ப் இட்லர் குழந்தைகளிடத்தில் அவை யாருடைய குழந்தையாயிருந்தாலும் மிக அன்பாகப் பேசுவான்; அவைகளோடு வேடிக்கை செய்வான்; ஓடி விளையாடுவான். குழந்தைகளிடத்தில் இவன் வைத்திருக்கும் அபாரமான பிரீதியைக் கண்டே, தேச மக்கள், இவனுடைய 47வது பிறந்த தினக் கொண்டாட்டத்தின்போது, (20–4–1936) சுமார் ஆயிரம் தொட்டில்கள் வாங்கிக் கொடுத்தனர். இவை யனைத்தையும் இவன் ஏழைக்குழந்தைகளின் உபயோகத்திற்குக் கொடுத்துவிடுமாறு உத்தரவு செய்தான்.

ஹிட்லர் ஒழுக்கத்தில் சிறந்தவன். அதனாலேயே இவனிடத்தில் தன்னம்பிக்கையும், கண்டிப்பும் நிரம்பியிருக் கின்றன. இவன் சிகரெட் முதலியன உபயோகிப்பதில்லை; மதுபானம் அருந்துவதில்லை; மாமிசத்தைக் கையினால் தொடுவதுமில்லை. இவன் உண்ணும் மரக்கறி ஆகாரமும் சாதாரண குடியானவர்களின் ஆகாரவகை போலவே இருக்கும். பல தினுசுகள் இரா. ரொட்டி, பழம், பால், பருப்பு தினுசில் ஒன்று ஆகிய இவற்றோடு இவன் திருப்தி யடைந்துவிடுவான். இந்த எளிய உணவையும் இவன் தனியாக உட்கார்ந்து சாப்பிட மாட்டான். யாராவது இரண்டொரு நண்பர்களை விருந்தினர்களாக வைத்துக் கொண்டுதான் சாப்பிடுவான்.

பெண்களிடத்தில் மிக அன்பாகவும் மரியாதையாகவும் நடந்து கொள்வான். தாய்மைக்குச் சட்டபூர்வமான ஒரு கௌரவ ஸ்தானம் கொடுத்திருப்பதைக் கொண்டே இவன் பெண் உலகத்தின்மீது காட்டும் பக்தி புலனாகும்.

சங்கீதம், ஓவியம் முதலிய உயர் தரக் கலைகளில், தன் மனத்தை அப்படியே ஒப்புக் கொடுத்துவிடுவான். நாடகங்கள் பார்ப்பதிலே இவனுக்கு அதிக ஆசையுண்டு. வாக்னர், பீத்ஹோவன் முதலியோரின் பாடல்களிலே

இவனுக்கு அதிக பிரேமை உண்டு. அவற்றை யார் பாடினாலும் மெய்மறந்து கேட்பான். அச்சமயத்தில் தன் பதவி கௌரவத்தையும் கவனிக்கமாட்டான். பாட்டு முடிந்தவுடன், பாடியவரைக் கட்டித் தழுவிக் கொள்வான்.

ஹிட்லர், பிறருடைய தயவுக்காகவோ, தாட்சண்யத்திற்காகவோ எதையும் செய்யமாட்டான். சிறப்பாக, பொதுப் பணத்தைக் கையாளும் விஷயத்தில் மிகவும் சிக்கனமாகவும் கண்டிப்பாகவும் இருப்பான். 1923 ஆம் வருஷத்து நவம்பர் புரட்சியின்போது, இவனோடு மாறுபட்ட வான்கார் என்பவனே, "நான் ஹிட்லரோடு எல்லா விஷயங்களிலும் ஒற்றுமையான அபிப்பிராயங் கொள்ளவில்லை. ஆனாலும் அவன் மிகவும் நாணயஸ்தன் என்பதை நான் மறுக்க முடியாது" என்று கூறுகிறான்.

அரசாங்க தோரணையிலோ, தனி முறையிலோ, ஹிட்லருடன் யாராவது பேச வருவார்களானால் அவர்களை எழுந்து நின்றே வரவேற்பான். அவர்கள் விடைபெற்றுச் செல்லும்போது, கூடவே தொடர்ந்து சிறிது தூரம் வந்து வழிவிடுவான்; தலை வணங்கி வந்தனங் கூறுவான். இவனுடைய உடை, பாவனை ஆகிய இரண்டையும் பார்த்தால், சாதாரண ஒரு கடைநிலை உத்தியோகஸ் தனுக்கும் இவனுக்கும் எவ்வித வேற்றுமையும் காணப்பட மாட்டாது. மற்றெல்லா வகையிலும் போலவே, உடையிலும் இவன் ஆடம்பரமில்லாதவனே.

இவனைத் தரிசிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் பல தூரப் பிரதேசங்களிலிருந்து, ஆண், பெண், சிறுவர், வயோதிகர் பலரும் நூற்றுக்கணக்காக வந்து கூடுவார்கள். ஹிட்லர் எந்தச் சமயம் வெளியே வந்து காட்சி கொடுப்பான் என்று மணிக்கணக்காகக் காத்துக் கொண்டிருப்பார்கள். பனி, வெயிலையும் பார்க்கமாட்டார்கள். ஹிட்லர், அடிக்கடி வெளியே வந்து, இவர்களுக்கு முன்னர்த் தோன்றுவான்; சிலபேரோடு கலந்து பேசுவான்; சிலரைக் கைகுலுக்கிப் பெருமைப்படுத்துவான்.

ஹிட்லர் எதையும் கூர்ந்து கவனிப்பான்; ஆழ்ந்து படிப்பான்; படித்தவற்றுள் முக்கியமானவற்றை அவ்வப்பொழுது குறித்துக் கொள்வான். முஸோலினி யைப்போல் இவன் பெரிய படிப்பாளி என்று சொல்ல முடியாது. ஆனால் அனுபவஞானம் இவனுக்கு நிரம்ப உண்டு. இவன் ஜனங்களின் மனிதன். பாமர ஜனங்களை வசியப்படுத்தும் ஆற்றல் இவனுக்கு இருப்பதைப்போல் வேறெவருக்கும் இல்லையென்று சொல்லப்படுகிறது.

ஜார் பிரதேசம், ஜர்மனியிடம் ஒப்புக் கொடுக்கப்பட்ட தினத்தன்று (1–3–1935) இவன் ஜார்ப்ரூகெனுக்குத் திடீரென்று வந்தானல்லவா? அன்று நல்ல மழை. ஆனால் ஹிட்லரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலினால், லட்சக்கணக்கான ஜனங்கள், வீதிகளில் மழையில் நனைந்தவண்ணம் நின்றுகொண்டிருந்தார்கள். ஹிட்லர், ஒரு மோட்டார் வண்டியின் மீது நின்றுகொண்டு ஜனங்களுக்குக் காட்சி தந்தான். இவன் எதிரே, துருப்புக்கள் அணிவகுத்துச் சென்றன. அப்பொழுது ஹிட்லர் 'மழைக்கோட்' ஒன்று மேலே போட்டுக் கொண்டிருந்தான். இத்தனை ஜனங்களும் மழையிலே நனையும்போது, நமக்கு மட்டும் இந்தப் பாதுகாப்பு எதற்கு என்று சொல்லி, 'மழைக் கோட்டை' கழற்றி எறிந்துவிட்டான். தானும் மழையிலே நனைந்தான். சுமார் ஒருமணி நேரத்திற்குமேல் நின்ற இடத்திலேயே, ஜனங்களுக்கும் துருப்புகளுக்கும் பதில் மரியாதை செய்தான். இதனால் இவனுக்கு ஜலதோஷம் பிடித்தது. ஆனால் இது ஜனங்களை எவ்வளவு தூரம் வசீகரப்படுத்திவிட்டது?

எல்லாச் சரித்திர புருஷர்களையும் போல் ஹிட்லர் சாதாரண ஒரு குடியானவனாகவே இருந்துவிட விரும்புகிறான். எளிய வாழ்க்கை நடத்துவதிலே திருப்தி யடைகிறான். இதனாலேயே இவன் ஏழை மக்களிடத்திலும், விவசாயிகளிடத்திலும் அதிக விசுவாசமாயிருக்கிறான்.

அவர்களுடைய பிரீதியைச் சம்பாதிக்க வேண்டுமென்பதில் ஆவலுள்ளவனாகவும் இருக்கிறான்.

குழந்தைகளிடத்திலே இவனுக்கு எவ்வளவு பிரீதியுண்டோ அதைவிட அதிகமாக இவன் இளைஞர்களை நேசிக்கிறான். ஏனென்றால் அவர்கள், ஜர்மனியின் 'வருங்காலத்துச் சேனா பல'மல்லவா? இவன் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது இளைஞர்களைச் சந்தித்து அவர்கள் என்னென்ன படிக்கிறார்கள் என்பவற்றைப் பற்றிக் கேட்பான். அவர்கள் முதுகைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்துவான்."

*

கொடுமைக்காரனாகச் சித்திரிக்கப்பட்டவனிடமே இத்தனை குணநலன்கள் குடிகொண்டிருந்தன என்கிறபோது; உத்தமர்கள் என்று உலகில் புகழப்படுவோரிடம் எவ்வளவு குணநலன்கள் குவிந்திருக்கக் கூடும் எனக் கணக்கிட்டுவிடக் கூடாது. அவ்வாறு புகழப்பட்டவர்கள் போலிகளாகவும், நல்லவர்களாக நடித்தவர்களாகவும் இருந்திருக்கவோ; அல்லது இருக்கவோ கூடுமல்லவா?

இந்த ஐயப்பாட்டுக்கான அடிப்படையை அமைக்கின்றன; "இட்லரின் இன்னொரு பக்கம்" பற்றிய இந்தத் தகவல்கள்!

13 - 8 - 2005

✦✦✦

இங்கர்சால்

அறிவுச் சுடராக – ஆற்றலின் ஊற்றாக விளங்கிய – பழுத்த நாத்திகர் – இங்கர்சால் அமெரிக்காவில் நியூயார்க் மாநிலத்தில் திரிஸ்டன் எனும் கிராமத்தில் 1833 ஆம் ஆண்டு ஆகஸ்டு 11ஆம் நாள் பிறந்தவர்.

இங்கர்சாலின் தந்தை; மகனைச் சிறந்த கல்வியாளராகவும், மத சிரேஷ்டராகவும் உயர்த்திடப் பெரிதும் பாடுபட்டவர். இரவுநேரத்தில் ஒரு நீளமான மெழுகுவர்த்தியைக் கொளுத்தி வைத்து விட்டு; அது முழுவதும் எரிந்து அணைந்து போகும் வரையில் அந்த வெளிச்சத்தில் மகனைப் படிக்கச் சொல்லி வற்புறுத்துவாராம். தந்தையின் கட்டளைப்படி இளைஞன் இங்கர்சால், அந்த மெழுகுவர்த்தி எரிந்து அணைந்த பிறகுகூட வெளிச்சத்தைப் பற்றிக் கவலைப்படாமல் தந்தை வழங்கிய அந்த மத நூல்களைப் படித்துக் கொண்டேயிருப்பது வழக்கமாம்.

அப்படிப் படித்துக் கொண்டிருந்த அந்த இளைஞன் உள்ளத்தில், மத சம்பந்தமான கருத்துக்கள் பதிவாகவில்லை; மாறாகப் புரட்சிகரமான பகுத்தறிவுக் கருத்துக்களே ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின.

ஆரம்பத்தில் மகன் இங்கர்சால் குறித்து மனவேதனை அடைந்திருந்த தந்தை; அவரது இறுதி நாட்களில் மகன் வழியே தன் மனத்திற்கும் உகந்த வழியென்று மறுமலர்ச்சி பெற்றார் என்பது வரலாறு!

படித்துக் கொண்டே அந்தப் பருவத்திலேயே பகுத்தறிவு வாதங்களின் மூலம் பலரைத் தன் பக்கம் ஈர்த்த இங்கர்சால் முதலில் ஆசிரியராகப் பணியேற்றார். அவரது முற்போக்குச் சிந்தனைகளும், அறிவுப் பிரச்சாரமும், அவருக்குச் சிலரைப் பகைவராக்கிய காரணத்தால் ஆசிரியர் பணியிலிருந்து அவர் வெளியேற்றப்படவே; அதனால் அவர் மனம்தளராமல் சட்டம் பயிலத் தொடங்கினார். திறமைமிக்க வழக்கறிஞராக விளங்கி; குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஓரிரு பெரிய வழக்கறிஞர்களில் ஒருவர் எனப் புகழ் பெற்றார்.

ஒரு நீக்ரோ மீது; பசுவைத் திருடினான் என்று ஒரு வழக்கு – அந்த நீக்ரோவுக்காக வாதாடுவதற்கு யாருமில்லை எனக் கேள்வியுற்று; இங்கர்சால் அவனுக்காகத் தானே வாதாடினார். வாதங்கள், எதிர்வாதங்கள் எல்லாம் முடிந்தன. தீர்ப்பு கூறப்பட்டது. நீக்ரோ விடுதலையானான். இங்கர்சால் அவனை அழைத்து ரகசியமாகக் கேட்டார்.

"இப்போதுதான் நீ விடுதலையாகி விட்டாயே; இப்போதாவது உண்மையைச் சொல் என்னிடம்! நீ பசுவைத் திருடியது உண்மைதானே?"

"ஆமாம் – நான் திருடியது உண்மைதான்! ஆனால் ஒன்று; இந்த வழக்கின் துவக்கத்தில் நான் குற்றவாளிதான். பிறகு; நீங்கள் ஆதாரங்களை அள்ளி வீசி வாதம் நடத்த – வாதம் நடத்த – நான் திருடினேனா என்று எனக்கே சந்தேகமாகிவிட்டது"

நீக்ரோ பசு திருடிய வழக்கு ஒன்றே, இங்கர்சாலின் திறமைக்குச் சான்றாகத் திகழ்கிறது அல்லவா!

நீதிமன்றத்தில் மட்டுமல்லாது – நெஞ்சு வலி நோயையும் பொருட்படுத்தாமல் சுற்றிச் சுழன்று தனது 66வது வயதில் கண்மூடும் வரையில் பகுத்தறிவுப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். கட்டணம் அளித்து அவரது உரை கேட்க மக்கள் அலைமோதி வருவார்கள். பேசுவதற்கும் அவர் தொகை பெறுவதில் கண்டிப்பானவர். ஆனால் கருத்துக்கள் மக்களிடம் பரவினால் போதும்; தொகை பெரிதல்ல என்று அவர் நினைத்து அவ்வாறே

நடந்து கொண்டதற்கும் அவர் பொதுவாழ்வில் தக்க சான்றுகளாக சில நிகழ்ச்சிகள் உண்டு.


உதாரணமாக கிளரிமண்ட் என்ற ஓர் ஊரைச் சேர்ந்த அறிவியக்கப் பற்று கொண்ட சில இளைஞர்கள் அவரை ஒரு கூட்டத்துக்கு அழைத்தனர். முன்னூறு டாலர்கள் கொடுப்பதாயின் வருகிறேன் என்றார். ஒப்புக்கொண்டு அவரை இளைஞர்கள் அழைத்துப் போனார்கள். ஊர் மக்கள் பலரும் அந்தக் கூட்டத்திற்கு வரப் பயந்த காரணத்தால், கட்டணமாக 28 டாலர்கள் மட்டுமே வசூலாயிற்று. இளைஞர்கள் அதை இங்கர்சாலிடம் சொல்லாமல், அவரிடம் பேசியபடியே அவருக்கு 300 டாலர்களைக் கொடுத்துவிட்டனர். இங்கர்சால் துருவித் துருவி அந்த இளைஞர்களைக் கேள்வி கேட்டு, உண்மையான வசூலைத் தெரிந்து கொண்டார். உடனே அந்த இளைஞர்களை அருகே கூப்பிட்டு; "உங்கள் அன்புக்கு நன்றி – ஆர்வத்துக்குப் பாராட்டு – நாணயமான செயலுக்கு வாழ்த்து – இதோ நீங்கள் எனக்குத் தந்த 300 டாலர்களில் 272 டாலர்களை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் – என் பேச்சு கேட்க வந்தவர்கள் அளித்த கட்டணத் தொகை 28 டாலர்கள் மட்டும் எனக்குப் போதும்" என்று கூறிவிட்டு விடைபெற்றுப் போனார்.

"அடேயப்பா; இவர் எவ்வளவு பெரிய மனித நேயம்
கொண்டவர் – பொருளீட்டுவதற்காகப் பேசும்
சொற்பொழிவாளராக இல்லாமல்; கொள்கை
பரவுவதற்காகப் பாடுபடுபவர் என்பதால்தான்; அவருக்கு
நாம் இந்தக் கூட்டம் நடத்த பட்ட பாடு புரிகிறது"

என்று அந்த இளைஞர்கள் இங்கர்சாலுக்குப் புகழாரம் சூட்டியிருப்பார்கள் அல்லவா?

24 - 8 - 2005

✦✦✦



மகளிர் இடஒதுக்கீடு!

அரசியல் இயக்கங்களில் இருப்பவர்களில் ஓர் இயக்கத்திலிருப்போருக்கும் இன்னொரு இயக்கத்திலிருப் போருக்குமிடையே கருத்து வேறுபாடுகள் – கருத்து மோதுதல்கள் இருப்பினும்; சமுதாய சமத்துவம், சமுதாய முற்போக்கு, சமதர்மக் கொள்கை என்பனவற்றில் ஒருமித்த உடன்பாடான நிலை உருவாக வேண்டும் என்பதை அவரவர் பின்பற்றும் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டே அணுகித் தீர்வு காண வேண்டும். இதனை விருப்பு வெறுப்புக்கு இடம் தராத திறந்த மனத்தினர் ஏற்றுக் கொள்வர்.

சமுதாயப் பிரச்சினைகளை முன்னிறுத்திச் செயல்படும் அரசியல் இயக்கமான நமதியக்கம்; எழுபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே 1929ஆம் ஆண்டில் செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் தந்தை பெரியார் முன்னிலையில் பெண்களுக்குச் சொத்தில் சம உரிமையை உறுதிப்படுத்துகிற சட்டம் கொண்டுவர வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தை 60 ஆண்டு கழித்து தமிழகச் சட்டப்பேரவையில் 1989ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக இருந்தபோது சட்டமாக நிறைவேற்றி, நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளோம்.

மக்களாட்சி முறையில் ஓர் ஆட்சியில் எல்லா மக்களும் எல்லா உரிமைகளும் பெற்றவர்களாக விளங்க வேண்டும் என்பதிலும் – பல்லாண்டு காலமாக ஏற்படுத்தப்பட்ட பின்னடைவு

காரணமாகப் பள்ளத்தில் கிடப்போரையும் கை தூக்கிவிட்டு, தேவையான உரிய சலுகைகளை வழங்கி, கரைசேர்க்க வேண்டுமென்பதிலும் – மக்கள் என்றாலே ஆண் – பெண் இருபாலாரையும் குறிப்பிடும் சொல்தான் என்ற அடிப்படையில் ஆணுக்குள்ள உரிமைகளைப் பெண்ணுக்கு மறுக்கக்கூடாது என்பதிலும் சமுதாய அக்கறை கொண்டோர் ஆர்வங்காட்டியே செயல்படுவார்கள் – செயல்படவும் செய்கிறார்கள்.

மத்திய ஆட்சி அளவில் மகளிர்க்கான உரிமைகள் பற்றி விதிமுறைகள், சட்டங்கள் வருகிறபடி வரட்டும்; மாநில அளவில் உள்ள அதிகார எல்லைக்குள் மகளிர்க்கு உள்ளாட்சி மன்றங்களில், மற்றும் அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு தருவோம் என அறிவித்து, அதனை அமல்படுத்தியுள்ளதும் நமது ஆட்சிப் பொறுப்பில் தமிழ்நாடு இருந்தபோதுதான் என்பது எவரும் மறுக்க இயலாத உண்மையாகும்.

மகளிர் உரிமையுடன் அவர்தம் நல்வாழ்வு போற்றும் தொடர் சாதனைகளில் ஒன்றுதான் 1989ல் நமது ஆட்சியில் தர்மபுரி மாவட்டத்தில் என்னால் தொடங்கி வைக்கப்பட்ட "மகளிர் சுய உதவிக் குழு" என்பதுமாகும்.

இன்றைக்கு இந்தியத் திருநாட்டின் மூலை முடுக்கெல்லாம் முழங்கப்படுகிற கொள்கை முரசமாக – நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் மகளிர்க்கு 33 சதவீத இட ஒதுக்கீடு தரப்பட வேண்டும் என்ற ஒலியையே கேட்க முடிகிறது.

ஏன்; தனியாக மகளிர்க்கு இடஒதுக்கீடு சட்டம் கொண்டு வர வேண்டும்? இப்போது மகளிர் அந்தப் பொறுப்புகளுக்கு போட்டியிட முடியாதா? சட்டம் ஏதாவது தடுக்கிறதா?

சட்டம் தடுக்கவில்லை! சட்டமன்ற வேட்பாளராகவோ, நாடாளுமன்ற வேட்பாளராகவோ; தேர்தலில் ஒரு ஆண் போட்டியிடுவதைப்போல; இப்போது ஒரு பெண்ணும் போட்டியிடலாம்; அரசியல் சட்டம் அதைத் தடுக்கவில்லை. ஆனால் ஆணாதிக்கம் அவர்களைப் போட்டியிட அனுமதிக்கவில்லை. ஆணாதிக்கத்தின் இந்தச் சனாதனச்

சம்பிரதாயத்துடன் எவ்வளவு காலத்துக்குச் சண்டை போட்டுக் கொண்டிருக்க முடியும்; அதனால்தான் மகளிர்க்கு இத்தனை இடம் என்று ஒதுக்கீடு செய்து, அந்தச் சட்டப்படி அந்த இடங்களில் மகளிர் மட்டும்தான் போட்டியிட முடியும் என்று செய்துவிட்டால்; அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைக்கான அடிக்கல் நாட்டும் திருப்பணி நிறைவேறத் தொடங்கிவிடும்.

ஏற்கெனவே தலித் எனப்படும் தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களை; இந்த உரிமைகளைப் பெறக் கூடியவர்களாகக் கைதூக்கி விட இருக்கின்ற தனித் தொகுதி முறை எல்லா மட்டத்திலும் அரசியல் சட்ட ரீதியாக அமைக்கப்பட்டிருப்பதை "மாதிரி"யாகக் கொண்டு; அந்தப் பழைய நிலைக்குப் பங்கமேதும் நேராமல்; இப்போது கோரிக்கையாக வைக்கப்படுகிற மகளிர் இடஒதுக்கீட்டை ஏற்றுக் கொண்டு அதற்கான துவக்கத்தை நடத்த சமூகப் பிரக்ஞையுள்ள, உரிமைகள் வழங்கப்படுவதில் உள்ள நியாயங்களை நிலைநாட்டுவதற்கு நினைத்திடும் இயக்கங்கள் முன்வரவேண்டும்.

பொதுக்கருத்து உருவாக வேண்டும் என்று பொறுமையுடன் காத்திருப்பது பொறுப்புடையோர் செயல் எனினும்; கோரிக்கையைத் தள்ளிப் போடுவதற்காகக் 'காத்திருப்பு' என்பது ஏற்க இயலாத ஒன்றாகி விடும்.

சட்டம் நிறைவேற்றிட தேவையான வாக்குகள் கிடைக்கா விட்டால்கூட இந்த மசோதாவுக்கு ஆதரவு தராதவர்களை மகளிர் சமுதாயத்துக்கு அடையாளம் காட்டலாம் அல்லவா?

பொதுக்கருத்து பற்றி பிரெஞ்சு நாட்டுப் பேரறிஞரும் – பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்து; பிரெஞ்சுப் புரட்சிக்கான எழுச்சிப் பாதையை தனது எழுத்து மூலம் வகுத்துக் கொடுத்தவர்களில் ஒருவரும், "வால்டேர்" காலத்தவருமான "ரூசோ" என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?

"புதிதாக ஒன்றைச் செயல்படுத்த எடுத்துக் கொள்ளும்போது அதற்கான பொதுக் கருத்து

அறிவதற்குத் தேவையான ஒப்பந்தம் ஏற்படத்தான் எல்லோருடைய கருத்தும் ஒரே வகையாக இருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பிறகு எல்லா நிலைகளிலும் அந்தப் பொதுக் கருத்து, எல்லோருடைய விருப்பம்போல அமைந்திட முடியாது. அவ்வாறு கருத்து வேறுபாடுகள் ஏற்படும்போது, பெரும்பான்மையோர் கருத்து எதுவோ, அதைத்தான் பொதுக் கருத்து எனக் கொள்ள வேண்டும்"

ரூசோவின் இந்தக் கருத்தையும்; மகளிர்க்கான இடஒதுக்கீடு சட்டம் கொணர ஆர்வமுடையோர் சிந்தித்துச் செயல்பட முன்வரவேண்டும்.

இப்போதுள்ள 500க்கு மேற்பட்ட நாடாளுமன்ற இடங்களில் குறிப்பிட்ட தொகுதிகளை இரட்டை உறுப்பினர் தொகுதிகளாக்கி; உறுப்பினர்களின் எண்ணிக்கையை கூடுதலாக்கி, ஆணுக்கும் பெண்ணுக்கும் இடம் ஒதுக்கலாம் என்றால்; ஆண்கள் இப்போது இருக்கும் இடங்களைப் பெண்களுடன் பகிர்ந்து கொண்டு 33 சதவீத இடங்களை இழக்கத் தயாராக இல்லை என்றுதான் ஆகிறது; எனவே மகளிர்க்கென தனி இடம் தர இடங்களை மேலும் அதிகமாக்குங்கள் என்பது மறைமுகமாக தம்மையறியாமல் அந்த மசோதாவுக்கு வைக்கப்படும் தடைக்கல்லாகி விடுகிறதல்லவா?

அங்ஙனமாயின் பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடு வேண்டாமா?

இதற்கு ஒரே பதில்; முதலில் இந்திய சுதந்திரம் – அடுத்து மொழிவழி மாநிலம் என்றுதானே வாதாடிப் போராடி வாகை சூடினோம்; என்பதுதான்!

இப்போது நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களுக்கான தொகுதிகளில் (தனித்தொகுதிகள் இருப்பவை தவிர) ஆண்களுக்கு மட்டும் என்று எந்தத் தொகுதியும் இல்லை; ஆண்களில் பிற்படுத்தப்பட்டோர் – மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்று தொகுதிகள் வகுக்கப்படவுமில்லை – இந்த நிலையில்

மகளிர்க்குக் கேட்கப்படும் இடஒதுக்கீடு என்பது; இப்போது இருப்பதில் 33 சதவிகிதம்தான்.

எனவேதான் முதலில் மகளிர்க்கு 33 சதவிகிதம் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதையும்; பின்னர் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் என்று படிப்படியாக "உள் ஒதுக்கீடு" செய்து கொள்வதையும்; நெஞ்சார வரவேற்போம்!

முதலில் விருந்துக்கான அழைப்பையேற்று வீட்டுக்குள் செல்வோம்.


பின்னர் விருந்தில் படைக்கப்படும் பண்டங்களில் நம் உடலுக்கு ஒத்துக்கொள்ளக்கூடியது எது; ஒவ்வாதது எது என்பதைச் சொல்லி அதற்கேற்பப் பரிமாறச் செய்வோம்.

26 - 8 - 2005

✦✦✦

குறிப்பு :– "மகளிர் இடஒதுக்கீடு" கோரிக்கை; ஒரு சமுதாயப் புரட்சியென்பதால் "சிந்தனையும் செயலும்" பகுதியில் இடம் பெறுவது முற்றிலும் பொருத்தமான ஒன்றாகும்.

மு.க.



சுயமரியாதை இயக்கத்தின் துவக்க காலத்திலேயே சமுதாயத்தைச் சீரழிக்கும் மூட நம்பிக்கைகளைச் சுட்டிக்காட்டி அவற்றை வேரறுக்கும் விளக்கக் கட்டுரைகள் பலவற்றைத் தாங்கி வெளிவந்த ஏடுகளில் ஒன்றாக "பகுத்தறிவு" ஏடு திகழ்ந்தது. சுவாமி கைவல்யம், சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் போன்ற முற்போக்குச் சிந்தனையாளர்களின் எரிமலை எழுத்துகள், கனல் தெறிக்கும் கட்டுரைகளாக அந்த ஏட்டில் இடம்பெறும். தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவுச் சிந்தனைகளைத் தாங்கிய அந்தப் "பகுத்தறிவு" இதழ் போலவே, இப்பொழுது ஆருயிர் இளவல் திரு. வீரமணி அவர்களை ஆசிரியராகக் கொண்ட "உண்மை" என்ற அறிவுக் களஞ்சியம் நம்மிடையே உலவிக் கொண்டிருக்கிறது.

பணிகள் பல இடையறாது எனக்கிருப்பினும் "உண்மை" இதழைப் படிப்பதில் எனக்குத் தனி ஆர்வம் உண்டு.

தெளிவுற்ற நீரோடை எனத் தக்க கருத்துக்களை வழங்கிக் கொண்டிருக்கும் "உண்மை" இதழில் செப்டம்பர் 1 அன்றைய தேதியிட்டு வெளிவந்த ஒரு கட்டுரையில் இடையிடையே காணப்படும் சில கருத்துக்கள் நம்மைக் குழப்பத்தில் ஆழ்த்துவனவாக அமைந்து விட்டதை எடுத்துக்காட்டுவது என் கடமையெனக்கொண்டு அவற்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"சாமியார்கள் சொல்லித் தருவது தியானமா?" என்ற தலைப்பில் "உண்மை" இதழில் இடம் பெற்றுள்ள அந்தக் கட்டுரையின் தலைப்பே "தியானத்தை" ஒப்புக் கொண்டது போலவும் – அதனைச் சாமியார்கள் சொல்லித் தருவதால் "மக்கள் தியானம் என்ற பெயரில் செய்து கொண்டிருக்கிற முறைகள் தவறு" என்று கூறிவிட்டு; "உண்மையிலேயே தியானத்தைச் சரியான முறையில் செய்திருந்தால் நமது நாடு கொஞ்சமாவது எல்லா வகையிலும் முன்னேறியிருக்க வேண்டும். உற்பத்தி பெருகி வருமானம் அதிகரித்திருக்க வேண்டும். பஞ்சம், பசி போயிருக்க வேண்டும்" என்று அந்தக் கட்டுரையாளர் திரு. எம். மனோகரன் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

தியானமோ – உடற்பயிற்சியோ – எதுவாயினும் ஒருவரின் உடல் ஆரோக்கியத்தைப் பொருத்ததே தவிர; கட்டுரையாளர் கூறுவதுபோல்; அதற்கும் நாட்டின் வருமானம் – பஞ்சம், பசி போன்ற பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் எந்தச் சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படித் தொடர்புபடுத்தவும் இயலாது.

தியானத்தைச் சரியான முறையில் செய்ய வேண்டும் என்று கூறுகிற கட்டுரையாளர், "தியானம் என்று சொல்லி சாமியார்கள் மக்களை ஏமாற்றுகிறார்கள்" என்கிறார்.

சாமியார்கள் ஓரிருவரைத் தவிர மிகப் பலர் மக்களை ஏமாற்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள். மக்களில் சிலரும் ஏமாந்து கொண்டுதானிருக்கிறார்கள். தியானத்தின் பெயரைச் சொல்லி மட்டுமல்ல; தெய்வத்தின் பெயரைச் சொல்லியும் ஏமாற்றியும் ஏமாந்துகொண்டுந்தானிருக்கிறார்கள். எனவே; கட்டுரையாளர் "தியானம்" என்பதையே மறுக்கவில்லை என்பதற்கு அடையாளமாக அவரே தனது கட்டுரையில் ஓரிடத்தில் "சிலம்புப் பயிற்சியில் தியானம் உள்ளது" என்று குறிப்பிடுகிறார்.

"தியானம் என்றால் மனத்தை ஒருநிலைப்படுத்துவது என்பதுதான்" என்கிறார்கள். "அதற்காக ஒரு கடவுளை

நினையுங்கள் அல்லது ஒரு புள்ளியை உற்று நோக்கினால் மனம் ஒருநிலைப்படும்" என்று சாமியார்கள் சொல்கிறார்கள்."

இதுவும் அந்தக் கட்டுரையாளர் எடுத்துரைத்துள்ள கருத்துதான் – மனத்தை ஒருநிலைப்படுத்துவது என்பதைக் கட்டுரையாளர் ஏற்றுக் கொள்கிறாரா இல்லையா என்பதற்கான விடையை; இதோ அவரே அளிக்கிறார்.

"வீரக் கலைப்பயிற்சியில் – சிலம்பாட்டக் கம்புகளின் அசைவுகளின் மீது கவனம் செலுத்தினால், மனம் அதில் ஒருநிலைப்படும்"

மனத்தை எப்படி நிலைப்படுத்த முடியும் என்ற முறைகளில்தான் கட்டுரையாளர் வேறுபாடு காண்கிறாரே தவிர, மனத்தை நிலைப்படுத்துவது என்பதை அவர் மறுக்கவில்லை.

"ஒரு புள்ளியை உற்று நோக்கினால் மனம் ஒருநிலைப்படும் என்கிறார்கள். அப்படி செய்தால் சலிப்புதான் ஏற்படும், மனம் ஒருநிலைப்படாது. ஒரு புள்ளியை ஒரு நாள் அல்லது இரண்டு நாள் அல்லது சில நாட்கள் பார்த்துக் கொண்டிருக்கலாம். ஆண்டு முழுக்க முழுக்க அதையே பார்த்துக் கொண்டிருந்தால் பைத்தியம்தான் பிடிக்கும்"

என்று கட்டுரையாளர் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார். தியானம் பற்றிக் கூறுகிற பயிற்சியாளர்கள் யாரும் ஆண்டு முழுவதுமோ அல்லது ஆயுள் முழுவதுமோ ஒரே புள்ளியைப் பார்த்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்திருக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அதனால் யாருக்கும் பைத்தியம் பிடிக்கும் என்ற பிரச்சினையே எழாது.

"மனம் நிலைப்பட உடலுக்கு அறிவுபூர்வமான வேலை கொடுக்க வேண்டும்."

"உடலுக்கு வேலை தராமல் சம்மணம் போட்டு உட்காருங்கள் என்று கூறினால், பல எண்ணங்கள் மனதில் அலைபாயுமே தவிர, கண்டிப்பாக மனம் ஒருநிலைப் படாது"

இந்தக் கருத்துகளும் கட்டுரையாளருடையதே ஆகும் – இதிலிருந்து மனத்தை ஒருநிலைப்படுத்தும் வழிமுறையில்தான் அவர் வேறுபடுகிறாரே தவிர, மனத்தை நிலைப்படுத்துதல் என்ற பயிற்சியை அவர் மறுக்கவில்லை என்பது தெளிவாகிறது.

இதுபற்றிய விளக்கத்தை "தியானப் பயிற்சி"யாளரும் "யோகா" ஆசிரியருமான ஒரு நிபுணரிடம் நான் கேட்டபோது அந்த நிபுணர் (நிச்சயம் சாமியாரல்ல) விளக்கியது வருமாறு :–

> "மனம் ஒருநிலைப்படச் செய்யும் தியானப் பயிற்சிகள் பல வகைப்படும். இது ஒவ்வொருவரின் வயது, உடல் நிலை, மனநிலை, குறிக்கோள், நம்பிக்கையைப் பொறுத்து மாற்றி அமைக்கப்படுவதுண்டு. எந்த வகை பயிற்சியை செய்தாலும் இறுதியில் மனம் அமைதி அடைந்து ஒருநிலையில் நிற்கும்"

தமிழறிஞர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் எனக்கு சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னால் வலியுறுத்தி வழங்கிய யோசனையை ஏற்று அது முதல் யோகா பயிற்சியும், மனத்தை ஒருநிலைப்படுத்தும் தியானப் பயிற்சியும் செய்து வருகிறேன். இடையிடையே சில ஆண்டுகள் அப்பயிற்சியில் தொய்வு ஏற்பட்டிருக்கலாம்; எனினும் அனுபவரீதியாக பயன் தெரியத்தான் செய்கிறது இப்போதும்!

நடைப் பயிற்சியும் நீண்ட காலமாக உண்டு எனக்கு. ஆனால் "உண்மை" இதழின் கட்டுரையாளர், நடைப்பயிற்சியைப் பற்றி என்ன கூறுகிறார்?

> "நடைப்பயிற்சி என்பது உடற்பயிற்சியே அல்ல. அது அன்றாடம் ஒவ்வொருநாளும் செய்ய வேண்டிய வேலை. இதனை உடற்பயிற்சி என்பது அறியாமை"

கட்டுரையாளரின் இந்தக் கூற்றுக்கு செவிசாய்த்து நடைப் பயிற்சியை ஒதுக்கி விடக் கூடாது. உடலில் எடை கூடினால் இதயக் கோளாறு – இரத்த அழுத்தம் வரக் கூடும். அதற்கு நடைப் பயிற்சியை மேற்கொண்டு உடல் கனத்தைக் குறைக்கச் சொல்லி பிரபல டாக்டர்கள் எல்லாம் அறிவுரை கூறிக்

கொண்டிருக்கிறார்கள். அதனால் நடைப்பயிற்சியை ஒவ் வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தில் காற்றோட்டமான பெருவெளியில் மேற்கொள்ள வேண்டும்.

"கராத்தே, குங்பூ, குத்துவரிசை, சிலம்பம் ஆகிய எல்லா விளையாட்டுகளுமே வீரக்கலைதான்" என்று கூறிடும் கட்டுரையாளர், "யோகா" என்பது அ.ஆ. படிப்பு மாதிரிதான். அது மனிதனுக்குப் போதாது என்றுரைக்கிறார். கட்டுரையாளரின் இந்தக் கருத்துக்கு நான் மாறுபட்டவனல்லன். அவர் கருத்து ஏற்கக் கூடியதே என்பது போலவே நானும் யோகா, தியானம் போன்றவை அனைவருக்கும் பயன்படக் கூடியவை என்று கருதலாமல்லவா?

வயது, சூழ்நிலை, உடல்நிலை ஆகியவற்றையும் கணக்கிட்டுக் கொண்டுதான் வீரக்கலை பயில வேண்டும் – "யோகா என்பது வீரக் கலையின் அடித்தளம்" என்று திட்டவட்டமாகக் குறிப்பிடுகிற கட்டுரை ஆசிரியர், "அதை கற்றுக் கொள்வதால் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய அவசியமே இல்லை" என்று வீரக் கலைப் பயிற்சியை சிலாகித்துப் பேசுவதை தடையின்றி ஏற்றுக் கொள்ளலாம். அதைப் போலவே தியானம், யோகா போன்றவைகளும் உடல்நலத்துக்கு சிறந்த பயிற்சிகள் என்பதை ஒப்புக்கொள்கிறோம். தியானம், யோகாக்களில் இருப்பது போலவே வீரக்கலையிலும் மூச்சுப் பயிற்சி இருக்கிறது என்பதை கட்டுரையாளர் ஒத்துக் கொண் டுள்ளார். மூச்சுப் பயிற்சி சுவாசப்பைகளை விரிவடையச் செய்து தூய்மையாக்கவும் பயன்படுகிறது.

"வீரக்கலை பயிற்சியை தொடர்ந்து செய்து வந்தால் 100 வயது வரை ஆரோக்யமாக வாழலாம்" என்று கட்டுரையாளர் கூறுகிறார்.

தியானப் பயிற்சி செய்தாலும் அவர்கள் தீர்க்காயுசாக வாழ்வார்கள் என்றும் சொல்லப்படுகிறது.


வீரக்கலையில் வல்லவரான "காமா" என்ற பிரபல பயில்வான் – பார்ப்பதற்கு மலை போல இருப்பார் – அவருக்கு

எலும்புருக்கி நோய் பாதித்து உடல் துரும்பாக இளைத்து மடிந்தார் என்பதும்; தியானக் கலை பயிற்சி பெற்ற இரமண முனிவர் கொடிய 'பிளவை' நோயால் மரணமடைந்தார் என்பதும் விதிவிலக்குகளாக இருந்தாலும்; மூச்சுப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்ட தியானப் பயிற்சியும்; யோகாவை அடிப்படையாகக் கொண்ட வீரக்கலைப் பயிற்சியும் – இரண்டுமே ஒருவரின் வயது, உடல்நிலை, மனநிலை, குறிக்கோள், நம்பிக்கையைப் பொறுத்து – அவருக்குப் பயன்தரக் கூடியதே ஆகும்.

வயது, உடல்நிலை, மனநிலை, குறிக்கோள், நம்பிக்கை இவற்றின் அடிப்படையில் அவரவர் சக்திக்கேற்ப இரண்டில் ஒரு பயிற்சியைத் தேர்வு செய்து கொள்ளலாம். எது உயர்ந்தது என்ற மோதுதல் தேவையில்லை. வயது மற்ற நிலைமைகளைப் பொறுத்து அந்தப் பயிற்சியைத் தேர்வு செய்து கொள்ளலாம். பயிற்சி அளிப்பவர் சாமியாராகக்கூட இருக்கலாம். ஆனால் போலிச்சாமியாராக இருக்கக் கூடாது. இவற்றைத் தவிர கட்டுரையாளரின் மற்ற கருத்துக்கள் ஏற்கக் கூடியவைகளேயாகும்.

3 - 9 - 2005

✦✦✦



விபத்துகள் நாள்தோறும் நடைபெறுகின்றன. இதனை அரசியலாக்க விரும்பவில்லை. விரும்பவும் கூடாது. எனினும் அறவே தவிர்க்க முடியாவிட்டாலும், ஓரளவு விபத்துக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காவது அரசுத் துறைகளும், அதிகாரிகளும் அக்கறை எடுத்துக் கொள்ளலாம்.

பெரும்பாலான விபத்துகள்; பயணங்களில்தான் ஏற்படுகின்றன. அவற்றுக்குக் காரணங்களாக அமைபவை; பயணம் செய்யும் வாகனங்களை இயக்கிடும் நபர்களின் முன் எச்சரிக்கை இல்லாமையும், தேவையற்ற அவசரமும் என்பதைத் தெளிவாகவே அறிய முடிகிறது.

கட்சிகளின் மாநாடுகள், விழாக்கள் கூட்டங்களுக்குச் செல்வோரும் – கடவுளரை வணங்கிடவும், பிரார்த்தனைகளை நிறைவேற்றவும் கோயில் குளங்கள் திருவிழாக்களுக்குப் போவோரும் அல்லது மணவிழாவுக்கெனப் பயணம் செய்யும் மணமக்கள் – அவர்களுடன் குதித்து விளையாடிக்கொண்டு குதூகலமாகச் சென்றிடும் குழந்தைகளும்; ஒரேநொடியில்; ஆமாம், ஒரேஒரு நொடியில் விபத்துக்கு ஆளாகிப் பிணங்களாக அடுக்கி வைக்கப்படுகிற காட்சிகளைப் படமெடுத்துக் காட்டுகிற பத்திரிகைகளை – தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை காணும்போது நம்மையறியாமல் கண்களை மூடிக் கொள்கிறோம். கலங்குகிறோம்.

“என்னதான் எச்சரிக்கையுடன் சென்று என்ன பயன்? விதி அப்படியிருக்கும்போது அதை மாற்ற முடியுமா?” இதுபோன்ற பழகிப்போன பழைய காலத்து சமாதானங்கள்

சனாதன முலாம் பூசிக் கொண்டு ஒவ்வொரு விபத்தின் பின்னணியிலும் ஒலித்திடத் தவறுவதில்லைதான்!

விழிப்புடன் இருந்து, விழிப்புடன் செயல்பட்டு, விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு வழிகள் இருக்கும்போது அவற்றை அலட்சியப்படுத்தியோ, புறக்கணித்தோ, நம்மை நாமே பாதிப்புக்கு உள்ளாக்கிக் கொள்வது எந்த வகையில் அறிவுடைமையாக இருக்க முடியும்?

பெரும் பகுதி விபத்துகள் இரவு நேரங்களில் – லாரிகளில் நெருக்கியடித்து உட்கார்ந்து கொண்டு செல்லும் ஏழை எளிய விவசாயிகள், பாட்டாளி மக்கள் பாதிக்கப்படுகிற அளவுக்கு நடைபெறுகின்றன.

பேருந்துகளில் பயணிக்கும் நடுத்தர மக்கள், அந்த வாகனங்களை ஓட்டிச் செல்லும் ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்திற்கு பலியாகிறார்கள்.

நாலைந்து பேர் அமர்ந்து செல்லும் கார்கள்கூட கவிழ்ந்தோ அல்லது மோதி நொறுங்கியோ அவர்களின் ஆவியைப் போக்கிவிடுகின்றன. இதை நான் எழுதிக் கொண்டிருக்கும் நேரத்தில்கூட நாளேட்டிலும், தொலைக்காட்சியிலும் சொல்லப்படுகிற செய்தி; கோவை தொழிலதிபர் அருள்ராஜ் குடும்பத்தினர் இளம் வயதினர் இரண்டு குழந்தைகளுடன் முறையே 4 வயது, 8 மாதம், அந்தக் குடும்பமே வேளாங்கண்ணி கோவிலுக்குச் சென்று திரும்பும்போது திருச்சிக்கு அருகில் நின்று கொண்டிருந்த லாரி மீது இரவு சுமார் ஒரு மணியளவில் பயங்கரமாக மோதி 4 வயது பையனைத் தவிர காரில் இருந்தோர்க்கு அதுவே கடைசிப் பயணமாகிவிட்டது என்பதாகும்.

விபத்து; இரவு ஒரு மணிக்கு நடைபெற்றிருக்கிறது – வெளியூருக்கு காரில் பயணப்படுகிற யாராயிருந்தாலும் என்னிடம் விடைபெற்றுக்கொள்ள வருகிறவர்களிடம் "தயவுசெய்து" விடிந்த பிறகு புறப்படுங்கள் என்றுதான் கனிவுடனும் சொல்லுவேன், கண்டிப்பாகவும் சொல்லுவேன்.

உணவருந்திவிட்டு ஓட்டுநர் பணியில் ஈடுபடுவதும்; உற்சாகபானம் அருந்திவிட்டு உல்லாசமாகக் கார் ஓட்ட முனைவதும் காரை ஓட்டுகிறவர்கள் என்னதான் எச்சரிக்கையாகச் சென்றாலும், எதிரே வருகிற பேருந்துகளும், லாரிகளும் தங்களை யானைகளாகவும், எதிர்வரும் கார்களைப் பூனைகளாகவும் கருதிக் கொண்டு எந்தப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு நெறிகளையும் பற்றிக் கவலைப்படாமல் வரக்கூடும் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

தொலைவுப் பயணங்கள் பகலில் என்றாலும்கூட மாற்று ஓட்டுநர் ஒருவர் உள்ளிட்ட இரண்டு ஓட்டுநர்கள் இருக்க வேண்டும்.

வெளிநாடுகளில் போக்குவரத்துப் போலீசார் சாலையோரங்களில் மிகுந்த கண்காணிப்புடன் இருப்பர். போதுமான அளவுக்கு இருப்பர். எங்கோ சாலையில் ஒரு விபத்து என்றால் அடுத்து சில விநாடிகளில் விபத்து நடந்த இடத்துக்கு "ஆம்புலன்ஸ்" வந்து நிற்கும்.

அங்கு வாகனங்களை வேகமாக ஓட்டி விபத்துக்களைத் தவிர்க்கும் முறை – இங்கு வாகனங்கள் மெல்லச் சென்றால்தான் விபத்துக்களைத் தவிர்க்கக் கூடிய நிலை.

இப்போதுதான் மெல்ல மெல்ல நாலு வழிச் சாலைகள், ஆறு வழிச்சாலைகள் அமையத் தொடங்குகின்றன.

அவற்றை அரசுத் துறை கவனிக்கும் – அதற்கிடையே விபத்துக்களில் இருந்து நம்மை மீட்டுக்கொள்ள நாம்தான் விழிப்போடிருக்க வேண்டும்.

விவேகத்துடன் செயல்படுவது விபத்தைத் தவிர்க்க இருக்கின்ற வழிகளில் மிக முக்கியமான வழி.

6 - 9 - 2005

✦✦✦



சின்னத்திரை

"செல்வி"

(1) "தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

(2) "சிறைகாக்கும் காப்புளவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை"

(3) "தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை"

(4) "பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு"

"வாழ்க்கைத் துணை நலம்" எனும் அதிகாரத்தில் அய்யன் வள்ளுவர் வழங்கிடும் மேற்கண்ட நான்கு குறட்பாக்களுக்கும் முறையே பின்வருமாறு உரை எழுதியவன் என்ற நிலையில் இன்றைய "சிந்தனையும் செயலும்" சித்திரத்தைத் தீட்டுகிறேன்.

முதலில் நான்கு குறட்பாக்களுக்கான உரையைக் காண்போம்.

(1) கற்பு நெறியில் தன்னையும் தன் கணவனையும் காத்துக் கொண்டு, தமக்குப் பெருமை சேர்க்கும் புகழையும் காப்பாற்றிக் கொள்வதில் உறுதி குலையாமல் இருப்பவள் பெண்.

(2) தம்மைத் தாமே காத்துக் கொண்டு சிறந்த பண்புடன் வாழும் மகளிரை அடிமைகளாக நடத்த எண்ணுவது அறியாமையாகும்.

(3) கணவன் வாக்கினை கடவுள் வாக்கு எனக் கருதி, அவனையே தொழுதிடும் மனைவி; பெய் என்று ஆணையிட்டவுடன் பெய்யும் மழையைப்போல தன்னை அடிமையாக எண்ணிக் கொள்பவளாவாள்.

(4) நற்பண்பு பெற்றவனைக் கணவனாகப் பெற்றால், பெண்டிர்க்கு இல்வாழ்க்கையெனும் புதிய உலகம் பெருஞ் சிறப்பாக அமையும்.

பெருமான் வள்ளுவர்; பெண்களை அடிமைகளாகக் குறள் வாயிலாக வடித்துள்ளார் என்ற ஒரு குற்றச்சாட்டுக்கு; விளக்கம் தரும் விடையாகத்தான் இந்த உரை எழுதப்பட்டு, "திருக்குறள் கலைஞர் உரை" நூல் தமிழ்ப் பேரறிஞர் அ.சா. ஞானசம்பந்தனார் முன்னிலையில் விழா எடுத்து அவரது பாராட்டுரையுடன் வெளியிடப்பட்டது.

எனவே ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே காதல் கசிந்துருகலாம் – நட்பு மலரலாம் – இல்லற மணம் கமழலாம் – ஆனால் அங்கே "ஆணுக்குப் பெண் அடிமை" என்ற ஆணாதிக்க முனைப்புக்கு இடமில்லை – இடமிருக்கக் கூடாது என எண்ணு கிறவன் என்ற் காரணத்தால் – அவ்வாறு எண்ணிடும் இயக்கத்தில் இளமைப் பருவம் முதல் என்னை ஒப்படைத்துக் கொண்டவன் என்ற நிலையில் இதனை எழுதும் தகுதி படைத்தவனாகிறேன்.

எனக்கிருக்கும் கவலையும் ஐயப்பாடும் மகளிர் சிந்தித்துப் பார்ப்பதற்காக வெளியிட்டுத் தீர வேண்டியவையாகும். ஆணாதிக்கத்தை அறவே வெறுத்துப் பேசும், எழுதும் பெண்கள்; அவர்தம் கணவர்க்கு அடங்கிப் போகும் ஆமைகளாக ஆகிவிடுகிறார்களே – ஏன்? எப்படி? எதற்காக?

சின்னத்திரைக் காட்சியொன்று; கலையரசி ராதிகாவின் "செல்வி" என்ற குடும்பச் சித்திரம் – அதில், தன்னையே அழிக்க முனைந்த ஒருத்தியை மன்னித்து, தண்டனையிலிருந்து விடுவிக்க முனையும் "செல்வி"யை அவளது கணவன் கண்டித்துத் தடுக்கிறான். கணவன் மனைவிக்கிடையே

கடுமையின் சூடு உயர்ந்து; கணவன் மனைவியைப் பார்த்து தங்கள் குடும்ப உறவே முறிந்து விடும் என்பதைப்போல அச்சுறுத்தும்போது; அதிர்ச்சியுற்ற செல்வி; நின்று, நிதானித்து, வார்த்தைகளை அளந்தெடுத்து, "என் மனச்சாட்சிப்படி நான் இரக்கம் காட்டி நடந்து கொள்வதை யாரும் தடுக்க முடியாது" எனும் கருத்தமைந்த பதிலைத் தரும்போது, ஆணாதிக்கம் அவசரப்பட்டு அள்ளித் தெளித்துவிட்ட அனல் சொற்களை; அறவழி நாடும் ஒரு பெண்மணி எப்படி அறைகூவல் விடுத்து நனைத்து விடுகிறாள் என்பதை நினைத்து வியந்து போனேன்.

நாடகத்தில், காவியத்தில், திரை ஓவியத்தில் மட்டுமின்றி நாட்டிலும், வீட்டிலும் ஒவ்வொரு குடும்பத்திலும் ஆண் பெண் தூயஉறவில் இருபாலாரின் உரிமை நிலைநாட்டப்படல் வேண்டும்.

விசித்திரம் என்னவென்றால், மகளிர் உரிமைகள் தேவைக்கேற்ப வாய்ப்பதற்கு இயலாமல் மகளிரே தடையாக இருப்பதுதான் – மகளிரே தயக்கம் காட்டுவதுதான்!

உடலமைப்பு ஒன்றைத் தவிர, ஆணும் பெண்ணும் சமம்தான் என்ற உண்மையை மறுத்திடத்தக்க வலுவான வாதம்தான் என்ன இருக்கிறது?

மிருக சாதியில் ஆண் சிங்கம் சோம்பேறி – இரை தேடக் கூட எழாது – பிடரி மயிர்ப் பெருமையோடு சரி!

பெண் சிங்கம்தான், வேட்டையாடி விலங்குகளை உணவாக்கிடக் கூடிய வலிவுமிக்கது! பிடரிமயிர் இல்லாதது!

பறவை இனத்தில் ஆண் மயிலுக்குத்தான் அழகான தோகையுண்டு.

பெண் மயில் தோகையில்லாதது; தோற்றத்தில் அழகும் இல்லாதது!

ஒரு வேடிக்கை; நாம் ஒரு பெண்ணை பெண் மயில் என்று வர்ணிக்கின்றோம் – அதேபோல் ஒருவனை "ஆண் சிங்கமே!"

என வாழ்த்தி வரவேற்கின்றோம்! இரண்டு ஒப்புமையிலும் எத்துணை முரண்பாடு!

அங்க அமைப்பு வேற்றுமை எனினும்
உரிமை சமமே மிருக சாதியில்! பறவை சாதியில்!
ஆனால்
மனித சாதியில், உறுப்பு வேறுபாடும் உண்டு
சம உரிமை இல்லாத சங்கடமும் உண்டு!
அதனால்தான்
மகளிர்; தமது உரிமைக்காக உரத்த குரல்
எழுப்புகிறார்கள் –

அவர்கள் மட்டுமல்ல; அவர்களுக்காக அண்ணா வழிவந்தவர்களான நாமும் அவையத்தில் குரல் எழுப்புகிறோம்!

*

விலங்குகள் பறவைகள் நம்மைவிட மேல் என்று ஆகலாமா?

வீணாக மகளிர் மனம் வெந்து நோகலாமா?

7 - 9 - 2005

✦✦✦

மருந்தென ஒன்று!



அண்மையில் சென்னையை அடுத்துள்ள தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தை 3–9–2005 அன்று இந்தியப் பிரதமர் மாண்புமிகு மன்மோகன்சிங் அவர்கள் திறந்து வைத்தார்கள். அந்த நிறுவனம் அங்கே அமைவதற்காக என் ஆட்சிக் காலத்தில் 15 ஏக்கர் நிலம் வழங்கி, அந்த விழாவில் அடிக்கல் நாட்டியவன் என்ற காரணத்தினால் சித்த மருத்துவம் பற்றி இந்தியப் பிரதமர் எத்தகைய கருத்துக் கொண்டுள்ளார் என்பதை அறிந்திட இப்போது நடைபெற்ற தொடக்க விழாவில் அவர் ஆற்றிய உரையை ஊன்றிப் படித்தேன்.

சித்த மருத்துவம் போன்று நாட்டு வைத்தியம் என்று சொல்லப்படுகிற முறைகளில் மக்களுக்கு ஆர்வம் குறைந்து; நம்பிக்கை ஏற்பட முடியாத சூழல் உருவாகிவரும் இந்தக் காலகட்டத்தில் பிரதமருடைய உரை எனக்கு மெத்தவும் ஆறுதல் அளிக்கக் கூடியதாக அமைந்துள்ளது என்றே கூறலாம்.

தலைவலி என்றால் உடனே ஒரு மாத்திரை – காய்ச்சல் வரும் போலத் தெரிந்தால் உடனடியாக டாக்டரைக் கூப்பிட்டு ஓர் ஊசி – இப்படியாக நாட்டு வைத்தியத்தை நடு வீதியில் நிறுத்தி விட்டு; 'அலோபதி' மருத்துவத்தில் மட்டுமே ஆர்வம் காட்டுகிற நிலை நாளும் வளர்ந்து வருகிறது நம் மக்களின் மத்தியில்!

உலகில் இந்தியா போன்ற பல நாடுகளில் சுமார் 30 ஆண்டுகளில் மூன்று மடங்கு மக்கள் தொகை அதிகமாகிவிட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும் போது – மாசு

கட்டுப்பாடு பிரச்சினைகளும் – நோய் தடுப்பு முறைகள் போதாமையும் இயற்கையாகவே ஏற்பட்டு விட்டன என்பதை உணர முடிகிறது.

ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில் மட்டுமே மக்கள் தொகை மிகுதியாயிற்று என்ற நிலை மாறி, கோடிகள்கணக்கில் மக்கள் எண்ணிக்கை பெருகிடும்போது; நோய் நொடிகளும் பெருகிடத்தான் செய்கின்றன. அந்த நோய்களைத் தடுக்கவும், குணப்படுத்தவும் – பல வகை சிகிச்சை முறைகளும் – மருந்துகளும் இருக்கின்றன.

வளர்ந்து வரும் விஞ்ஞான உலகத்தில், நோய்களைக் குணப்படுத்திட அறுவை சிகிச்சையும் அலோபதி மருத்துவ முறையும் பெரும்பாலும் வரவேற்கப்படக் கூடியனவாக இருப்பினும் – இடையிடையே சித்த மருத்துவம் போன்ற பச்சிலை மற்றும் மூலிகைகளாலும் நோய்களை எதிர்த்து ஏற்ற பரிகாரம் காண முடியும் என உறுதிகூறும் மருத்துவர்களை நூற்றுக்கு நூறு மடங்கு அப்படியே நோயாளிகள் நம்பி விடுவது இல்லை.

நோயாளிக்கு முதலில் நம்பிக்கை கொள்வது; ஒரு முக்கியமான மருந்தாகக் கருதப்படுகிறது. நாட்டு மருந்து எனப்படுவது எதுவாயினும் அது தரப்படும் முறையின் தரம், காலத்துக்கேற்ப நவீன மயமாக்கப்பட வேண்டும் என்பது மிக முக்கியம். பறித்தெடுத்த பச்சிலை மூலிகைத் தழைகளாகவே கொடுப்பதைக் கண்டு முகஞ்சுளிக்கும் நோயாளி; அதே பச்சிலை அல்லது மூலிகைத் தழைகளை பக்குவம் செய்து மாத்திரையாகவோ அல்லது நுண்ணிய குழாயிலிட்டோ தரப்படும்போது முகம்கோணாமல் பெற்றுப் பயன்படுத்திக் கொள்வதைக் காணமுடிகிறதல்லவா!

அலோபதி முறை – நாட்டு மருத்துவ முறை என்ற இரண்டு முறைகளையும் அறவே தள்ளிவிட முடியாத ஏதாவது ஒரு முறை தேவைப்படுகிற அவசியம், சில சூழல்களில் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

அலோபதி முறையை ஒரு மருத்துவமனையில் ஐந்தாவது மாடிக்குச் செல்லும் "லிப்ட்" இயந்திரம் என்று வைத்துக் கொள்வோம். நடக்க முடியாமல் காலில் வலியுள்ளவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அதில் குறிப்பிட்ட மாடிப்படிகளைக் கடந்து மருத்துவ மனையின் ஐந்தாவது மாடி நீண்ட தாழ்வாரத்தை அடைந்த பிறகு; அப்போதும் காலில் வலியிருக்குமானால்; அந்த நீண்ட தாழ்வாரத்தைக் கடந்திட 'சக்கர நாற்காலி'யைப் பயன் படுத்துவதில்லையா; அந்த சக்கர நாற்காலி போன்றதுதான் அலோபதியல்லாத ஏனைய சித்தா முதலிய மருத்துவ முறைகள் ஆகும்!

தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத் திறப்பு விழாவில் இந்தியப் பிரதமர் ஆற்றிய உரையில் அலோபதி மருத்துவ முறையையும் – சித்த மருத்துவ முறையையும் – ஒப்பிட்டு இரண்டையும் சிலாகித்திருப்பது இருமுறைகளைக் கடைப்பிடிப்போரும் ஏற்கக் கூடியதாகும்.

பிரதமர் அவர்களின் உரையில் முக்கியமான பகுதி;

> "அலோபதி மருந்துகள் பொதுவாக நோய்களை குணமாக்குகின்றன. நமது பாரம்பரிய சித்தா போன்ற மருந்துகள் நோய்களைக் குணமாக்குவதுடன்; நோய்கள் வராமலே தடுக்கவும் பயன்படுகின்றன. இவற்றைத் தயார்படுத்த நவீன முறைகளை மேலும் மேம்படுத்திட வேண்டும்"

என்பதாகும்.

"அலோபதி" முறையில் மட்டுமே தற்காலத்தில் அறுவை சிகிச்சையும் நோய்களை நுணுக்கமாகக் கண்டறியும் ஆய்வு கருவிகளும் கையாளப்படுகின்றன – அலோபதி அல்லாத நாட்டு மருத்துவ முறைகளில் பக்கவிளைவுகள் எதுவும் ஏற்படாமல் அன்றாடம் தலைகாட்டுகிற நோய்களை எளிமையாகவும் குணப்படுத்திட முடிகிறது. அத்தகைய நோய்கள் வராமலே

தற்காப்பு செய்து கொள்ளவும் பழங்கள், காய்கறி, கீரை போன்றவைகளே மருந்துகள் போலவும் பயன்படுவதை அவரவர் அனுபவத்தில் உணருகிறோம்.

நெல், கோதுமை, பச்சைப்பயறு, துவரை, கொண்டக் கடலை, மொச்சை, உளுந்து, எள், கொள்ளு ஆகிய நவதானியங்களை நன்றாக சுத்தப்படுத்தி, மாவாக அரைத்து பொடி செய்துகொண்டு, ஒவ்வொரு நாளும் அதிலே இரண்டு தேக்கரண்டி அளவிற்கு எடுத்து, அத்துடன் சம அளவில் சர்க்கரையைச் சேர்த்து பாலில் கலந்து காய்ச்சி அன்றாடம் காலை மாலை வேளைகளில் அருந்தினால் நமது உடல் நலத்துக்குத் தேவையான அனைத்துச் சத்துக்களும் கிடைக்கும் என்றும், நன்றாகப் பசியெடுக்கும் என்றும், ஜீரண சக்தி பெருகுமென்றும், நோய்களை எதிர்க்கக் கூடிய சக்தி உண்டாகுமென்றும், உடலுக்கு நல்ல வலிமை ஏற்படும் என்றும் சிறு வயதில் என்னுடைய திருக்குவளை கிராமத்திற்கு பக்கத்தில் உள்ள காருகுடி என்ற கிராமத்தைச் சேர்ந்த நாட்டு வைத்தியர் ஒருவர் கூறியது எனக்கு இன்றைக்கும் நன்றாக நினைவில் உள்ளது.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்"

என, அன்றைக்கே மருத்துவர்க்கெல்லாம் மேலான மனித நேயமிக்க மருத்துவர் அய்யன் வள்ளுவர்; திருக்குறளில் "அருந்திய உணவு செரிப்பதற்குக் கால அளவு தந்து; பின்னர் உணவு அருந்தினால் அவர்க்கு மருந்தென ஒன்று வேண்டாம்" என்று கூறியிருப்பது கூர்ந்து கவனித்துப் பின்பற்றத்தக்கது.

8 - 9 - 2005

✦✦✦



பல்லாயிரம் நூல்கள் கொண்டதும் அவற்றை முறையாகப் படிப்பதற்குரிய வசதி வாய்ப்புகள் நிறைந்ததுமான நூலகம் ஒன்று சென்னையில் அண்ணா அறிவாலயத்தில் நீண்ட காலமாக இயங்கி வருகிறது. "பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்" என்ற பெயரால் விளங்கும் அதனை, அறிவு தாகமெடுத்தோர், இலக்கிய ஆர்வம் படைத்தோர், பயன்படுத்திக் கொள்ளும் பாங்கு, நாளும் வளர்வதுகண்டு நமக்குப் பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது.

அனைத்துத் துறைகள் பற்றிய அரிய நூல்கள் பல அந்த ஆய்வக நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. விலை கொடுத்து வாங்கி வைக்கப்பட்டுள்ள புத்தகங்கள் மட்டுமின்றி; ஈகைக் குணமுடையோர் பலரும் ஏராளமான நூல்களை அன்பளிப்பாக வழங்கியும் வருகின்றனர். அந்த நூலகத்தில் நூலகராகப் பணியாற்றும் திரு. சுந்தரராஜன் அங்குள்ள ஆயிரக்கணக்கான புத்தகங்களை பொருள்வாரியாக பிரித்து வைத்திருப்பதோடு, ஆய்வுக்காக வருபவர்களின் தேவைக்கேற்ப அவராகவே முன்வந்து புத்தகங்களைத் தேடிக் கொடுத்து உதவி புரிந்து வருவதைப் பாராட்டாதார் இல்லை.

என்னைக் காண வருவோர், புத்தகங்கள் வழங்கிடும் பழக்கமுடையோர் எனக்களிக்கும் புத்தகங்களின் குவியலை சில நாட்கள் வீட்டில் வைத்திருந்து பின்னர் அந்த ஆய்வக நூல் நிலையத்துக்கே அனுப்பிக் கொண்டிருக்கிறேன்.

அவற்றில் ஒரு குவியல், மருத்துவத் துறை பற்றிய நூல்களாகவே இருக்கக் கண்டு, சிலவற்றை – "சிந்தனையும் செயலும்" எனும் தலைப்பில் எழுதுவதற்குப் பயன்படுத்திக் கொண்டுமிருக்கிறேன்.

"பேராசிரியர் ஆய்வக நூலக"த்திற்கு அனுப்பி வைத்திட எண்ணி சில நூல்களை எடுத்து அடுக்கிக் கொண்டிருந்தபோது "ஹார்ட் அட்டாக்" என்று தமிழ் எழுத்துக்களில் ஆங்கில மொழியில் எழுதப்பட்டதும் அழுக்கேறிக் கிழிந்துபோன அட்டை போடப்பட்டதுமான புத்தகம் ஒன்று காணப்பட்டது. என் இல்லத்து நூல் நிலையத்திலேயே "4906" என்ற எண்ணுள்ள அந்த நூலினை அதன் பரிதாபத் தோற்றங்கண்டு பரிவுடன் மேலும் கிழிந்து விடாமல் எச்சரிக்கையாகப் புரட்டினேன்.

"ஹார்ட் அட்டாக் (மாரடைப்பு)

நடைமுறை ஐயங்கள் – விளக்கங்கள்"

என்ற தலைப்பிடப்பட்ட அந்த நூலை எழுதியவர், "ஹிமானா சையத்" என அழைக்கப்படும் பல்கலை ஆர்வலர் டாக்டர் அ. சையத் இப்ராஹிம் என்பவராவார். 1–7–1990 எனத் தேதியிட்டும் அவர் கையெழுத்திட்டும் அந்த நூலை எனக்கு 15 ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கியிருக்கிறார். புத்தகத்தைப் படிக்கும்போதும், முகவரியெனக் குறிக்கப்பட்டுள்ள (புத்தகம் கிடைக்குமிடம்) "மல்லாரி கிளினிக், சித்தார்கோட்டை பனைக்குளம், அழகங்குளம்" என்பனவற்றை அப்புத்தகத்தின் முகப்பில் காணும்போதும் – அந்த நூலாசிரியர் இராமநாதபுரம் மாவட்டத்துக்காரர் என்பது எளிதில் புரிந்தது.

ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது ஒரு முறை உதகை மலர்க் காட்சி திறப்பு விழாவில் "சோலை வனங்களால் சொக்க வைக்கும், நீலகிரியும் காண்கிறேன் – பாலைவனம் போல் காட்சி தருகிற முகவை மாவட்டம் போன்ற பகுதிகளையும் எண்ணிக் கலங்குகிறேன்" என்று உரை நிகழ்த்தியது; 'இராமநாதபுரம்' என்று யார் சொன்னாலும் உடனே என் நினைவுக்கு வந்துவிடும். பாலைவனத்தை சோலைவனமாக்கிடப் பணிகளும் தொடர்ந்தன அன்றைய ஆட்சியில்!

என் கையில் கிடைத்த நூலின் தலைப்பான "ஹார்ட் அட்டாக்" என்பதையும், இராமநாதபுரத்தையும் இணைத்துப் பார்த்திடும்வேளையில் ஒரே குடும்பத்தில் தந்தை, தனயர்கள் மூவர்; இந்த நான்கு பேருமே 45 வயதுக்கு மேல் வாழாமல்; 45 வயதுக்குள்ளாகவே மாரடைப்பு மரணத்துக்கு ஆளாகிவிட்ட கொடுமையைக் கண்டு கேட்டுக் கண்ணீர் வடித்தவர்களில் ஒருவனாயிற்றே நான்!

அரசியலில் அண்ணாவின் தம்பிகளாக – என் அன்பு உடன்பிறப்புகளாக அல்லும் பகலும் பாடுபட்டவர்கள் – ஆம்; சத்தியேந்திரன், மகேந்திரன், ராஜேந்திரன் – இந்த மூன்று சகோதரர்களும் ஒருவர் பின் ஒருவராக 45 வயதுக்குள்ளாகவே மாரடைப்பு நோயினால் தாக்குண்டு, மறைந்து போனார்கள். அவர்கள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாக, நகர் மன்றத் தலைவர்களாக இருந்தவர்கள். திடீர் மாரடைப்புத் தாக்குதலால் தீர்ந்தது அவர்கள் வாழ்வு!

> "இது ஒரு பரம்பரை வியாதி எனலாம். அதாவது குடும்பத்தில் தந்தை அல்லது தாய் வழியில் வேறு யாருக்காவது வந்திருந்தால் இவ்வியாதி வரலாம்"

என்று நூலாசிரியர் அவர்களே குறிப்பிட்டுள்ளதற்கிணங்க – இந்த மூன்று சகோதரர்களின் தந்தை குப்புசாமி சேர்வை அவர்களும் கூட அதே மாரடைப்பு காரணமாகத்தான் குறை வயதில் மறைவுற்றிருக்கிறார்.

அந்தக் குடும்பத்தின் தொடர் சோக வரலாற்றை நண்பர் தென்னரசு அவர்களும், தம்பி தங்கவேலனும் என்னிடம் கூறியிருந்த காரணத்தால்; நான் அந்தச் சகோதரர்களைப் பல முறை எச்சரித்தும், முன்கூட்டியே அறுவை சிகிச்சை செய்து கொள்ளும்படி ஆலோசனை கூறியும், அதனை ஏற்று நடந்திடத் தயங்கி விட்டார்கள் அறுவை சிகிச்சைக்கு அஞ்சி!

தென்னரசு, அவர் காலந்தாழ்த்தி விட்ட காரணத்தால், அவரையும் காலம் வென்று விட்டது. கம்பம் ராஜாங்கம் எம்.பி., தொடங்கி, அடுத்து கம்பம் நடராசன், எம்.பி., – அண்மையில்

க.சோ. கணேசன் வரையில் எச்சரிக்கையில்லாததாலும் – ஏற்ற சிகிச்சை பெறாததாலும் – மருத்துவர்கள் அறிவுரையை மனத்திற் கொள்ளாததாலும் – எத்தனை பேரிழப்புகளை நாம் சந்திக்க நேர்ந்திருக்கிறது. இளம் வயதினர் எல்லா இயக்கங்களிலுமே இப்படியொரு முடிவுக்கு ஆளாவதை பெருமளவு தடுப்பதற்கு நான் கண்டெடுத்துள்ளதும், கையில் கிடைத்ததுமான இந்த 'ஹார்ட் அட்டாக்' என்ற எட்டு ரூபாய் விலையுள்ள சிறிய புத்தகம் பெரிதும் பயன்படும்.

அந்த நூல் விற்பனைக்கான விளம்பர நோக்குடன் இதை நான் எழுதவில்லை. இருதய நோய் குறித்த நூல்கள்; எல்லா நோய்களையும் குறித்தும் சிகிச்சை குறித்தும் நூல்கள் பெரிய அளவில் வெளிவந்துள்ளன. அவற்றைப் படித்து முடிப்பதே பெரும் வேலை! ஆனால் இந்த நூல் சிறிய அளவிலும் – விரைவில் படித்துவிடக் கூடியதாகவும் – இருதய நோய் தாக்கினால் எப்படி குணமாக்குவது – வராமலே எப்படித் தடுப்பது – என்பன போன்ற பல விவரங்களை சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதாகவும் அமைந்திருப்பதால் இதனை எல்லோருமே எளிதாகப் படித்துப் பயன் பெறலாம் என்ற எண்ணத்துடன்தான் இதனை எழுதியுள்ளேன்.

நான் குறிப்பிடும் இந்த நூலில்
மாரடைப்பு பற்றிய பல முக்கிய
விபரங்கள் இருப்பினும் –
மாரடைப்பு ஒரு முறை வந்தவர்கள்
எப்படி எச்சரிக்கையுடன் இருக்க
வேண்டும் என்பதற்காகக் கூறப்பட்டுள்ள
அறிவுரைகள்; முதல் முறையே கூட மாரடைப்பு
வராமல் தடுப்பதற்கும் பயன்படக் கூடியவை
என்பதை இந்த நூலைப் படிப்போர்
உணர்ந்து கொண்டால் மட்டும் போதாது;

உணர்ந்தவாறு நடந்து கொள்ளவும் வேண்டும்.

மருத்துவர்களின் சிகிச்சை – அவர்களின் அறிவுரை – அவற்றுக்குத் தோழமை உணர்வுடன் துணை நிற்கக் கூடியது "ஹார்ட் அட்டாக்" எனும் இந்த சிறிய நூல் என்பதால்; இதனை இன்னும் பல பதிப்புகளாக வெளியிட்டுப் பரப்பலாம். இது, ஏதோ எழுத வேண்டும் என்பதற்காக எழுதப்பட்ட எழுத்தல்ல; என்றைக்குமே என் எழுத்து;

– அத்தகைய பட்டியலில் இடம் பெறுவதல்ல;

எல்லோரும் வாழ வேண்டும் என்பதற்காக

எழுதப்படுவதேயாகும்!

10 - 9 - 2005

✦✦✦



1990ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11ஆம் நாள் காலை திருச்சியில் திராவிட முன்னேற்றக் கழக மாநாடு நடைபெற்றுக்கொண்டிருந்தபோது; மகிழ்ச்சி பொங்கிட துள்ளிக் குதித்துக் கொண்டு மேடையிலிருந்த ஒலிபெருக்கியின் முன்னால் நான் வந்து நின்றேன். அலைகடலெனக் குழுமியிருந்த தமிழ் மக்களைப் பார்த்துச் சொன்னேன்.

“தமிழ்ப் பெருங்குடி மக்களே!

கழக உடன்பிறப்புக்களே!

எல்லையற்ற மகிழ்ச்சியை ஏந்தி வந்துள்ள செய்தி;

27 ஆண்டுக் காலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த

தென்னாப்பிரிக்கா நாட்டின் கறுப்பர் இனத்தலைவன்

நெல்சன் மண்டேலா விடுதலை செய்யப்பட்டு

விட்டார் – இந்த மகிழ்ச்சியைக் கொண்டாட

மாநாட்டுப் பந்தலில் குழுமியிருப்போர் அனைவரும்

எழுந்து நின்று தொடர்ந்து கையொலி செய்யுங்கள்”

இந்தக் கருத்தமைந்த என் வேண்டுகோள்கேட்டு; மண்டேலா விடுதலையால் மகிழ்ச்சியில் ஆழ்ந்தோர் மாநாட்டில் “நான்

போதும் போதும்” என்று கையமர்த்தும் வரையில்; கடலில்லா திருச்சியில் கடலலைகளின் முழக்கத்தைச் செய்தனர்.

உலகமே அந்த ஒரு மனிதனின் சிறைவாசத்தைப் பற்றித்தான் அப்போது பேசிக் கொண்டும்; கண்கலங்கிக் கொண்டுமிருந்தது. தென்னாப்பிரிக்கா நமது அண்ணல் காந்தியடிகள் இந்திய மக்கள் உரிமைக்காக குரல் எழுப்பி அறப்போர் முறையை அறிமுகப்படுத்திய மண்! அண்ணல் நடத்திய அந்தப் போராட்டத்தில் இந்திய நாட்டின் தமிழ் நிலத்துக்குச் சொந்தக்காரர்களான நாகப்பன், நாராயணசாமி என்ற வாலிபர்களும், தில்லையாடி வள்ளியம்மாள் என்ற பெண்மணியும்; சிறை புகுந்து, உடல் நலிந்து, உயிர் விட்டார்கள் என்பது வரலாறு – அந்த வரலாறு என்றும் நினைக்கப்படும் வண்ணம் கழக ஆட்சியின் கைவண்ணத்தால் உருவான அரிய சின்னங்கள் இன்றும் அழியாச் சின்னங்களாக விளங்குகின்றன. தென்னாப்பிரிக்காவிலும்கூட நமது இந்தியப் பிரதமராக நமது அணியின் நாயகராக விளங்கிய திரு. குஜ்ரால் அவர்கள் 1997ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் நாள் அந்தத் தியாகிகளின் நினைவிடம் சென்று மலர் தூவி மரியாதை செலுத்தினார் என்பது உணர்ச்சிமிக்க ஓர் நிகழ்ச்சியாகும்.

அந்தத் தென்னாப்பிரிக்காவில் கறுப்பர் இன விடுதலைக்காக வெள்ளையர் ஆதிபத்தியத்தை எதிர்த்து 27 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நெல்சன் மண்டேலா; பின்னர் விடுதலைக்குப் பிறகு அந்த நாட்டின் அதிபராகப் பொறுப்பேற்றது பற்றியும் – அவரது துணைவியர்கள் அவரது தியாகப் போருக்குத் துணைநின்றது பற்றியும் – அவரின் வாழ்க்கை வரலாறு கூறும் ஏற்றத் தாழ்வுகள் பற்றியும் – எதுவும் விளக்க வேண்டிய அவசியமின்றி; அந்த மாவீரனின் வைர நெஞ்சம் – அவன் வளர்ந்த சூழ்நிலை – ஏற்றுக் கொண்ட அடக்குமுறை – கட்டிக்காத்த தன்மான உணர்வு – வழுக்கல் இல்லாத பொது வாழ்வு – இவையனைத்தும் அவனது இளமைக் காலத்திலேயே வாய்க்கப் பெற்றவைகளாக இருந்ததை எண்ணி, வியப்பு அடைகிறோம் – அவ்வழி வளரும் இளைஞர்கள் எவராயினும் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம்.

1918 ஜூலை 18 மண்டேலா பிறந்த நாளாகும் – கறுப்பின மக்களிடையே நெல்சன் மண்டேலா குடும்பத்தினர் ஃகோஸா இன வகையைச் சேர்ந்தவர்கள். அக்குலத்தின் தலைவராக மண்டேலாவின் தந்தை இருந்தார். அவர் பெயர் ஹென்றி கான்யிஸ் வா காட்லா என்பதாகும். அவருக்கு நான்கு மனைவிகள் – பனிரெண்டு குழந்தைகள் – மூன்றாம் மனைவியின் மகன்தான் நெல்சன் மண்டேலா.

குடிசையில் பிறந்து, குடிசையில் வளர்ந்தவர் – குடும்பத்துக்கு மொத்தம் மூன்று சின்னஞ்சிறு குடில்கள் – ஒன்று சமைத்திட; ஒன்று பொருள்களை சேமித்திட – ஒன்று உறங்கிட! பாய்களில்தான் படுக்கை அவர்கள் அனைவருக்கும்!

ஆரம்ப வயதில் ஆடு, மாடுகள் மேய்க்கிற வேலை மண்டேலாவுக்கு – அவர் அன்னை எழுதப் படிக்க அறியாதவர் – ஆயினும் மகனைப் பள்ளிக்கூடத்துக்கும் அனுப்பி வைத்தார்.

1928ஆம் ஆண்டுக்குள் மண்டேலாவின் தந்தை இறந்து விடவே, அந்தத் தந்தையின் மைத்துனரான "ஜோன்கின்டாபா" என்பவர், மண்டேலாவின் படிப்பைக் கவனித்துக் கொண்டார்.

க்யூனு எனப்படும் மண்டேலா பிறந்த ஊரில் ஓய்வு நேரங்களில் பெரியோர்கள் கூறும் தமது இனத்தவர் பற்றிய பழைய கதைகளையும், வெள்ளையர்களால் தம்மின வரலாறுகள் மறைக்கப்பட்டதையும், வெள்ளையர் நுழைவுக்கு முன்பு அங்கிருந்த கலை, கலாச்சாரம், வாழ்க்கை முறைகளையும் பெரியோர்கள் கூறிடக் கேட்டு புத்துணர்ச்சி பெறும் மண்டேலா, படிப்பையும் விடவில்லை; ஆடு மாடு மேய்க்கும் வேலையையும் தொடர்ந்தார்.

அதே சமயம் தமது இனத்தாரின் துயர்துடைத்து, உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டுமென்று அந்த இளம் வயதிலேயே அழுத்தமான உறுதி பூண்டார் மண்டேலா.

1938ஆம் ஆண்டு அவரது உறவினர் ஜோன் கின்டாபா முயற்சியினால் மண்டேலா; முதலில் "கெல்ட் டவுன்" கல்லூரியிலும் – பிறகு "போர்ட்ஹேர்" கல்லூரியிலும் சேர்க்கப்பட்டார்.

அப்போதுதான் அவரது முதல் போராட்டத்துக்கான துளிர் விடத் தொடங்கியது. அங்கே வெளியிடப்பட்ட இன வேற்றுமைக் கொடுமையை எதிர்த்து இளைஞர் மண்டேலா தலைமையில் வேலை நிறுத்தம் அறிவிக்கப்படவே; கல்லூரி நிர்வாகம் மண்டேலாவை வெளியேற்றியது. ஆம் – மண்டேலாவுக்கு அவர் நடத்திய உரிமைப்போரில் கிடைத்த முதல் தண்டனை அது!

மன்னிப்பு கேட்டுக் கொண்டால் மீண்டும் கல்லூரியில் சேரலாம் என்று கூறப்பட்டது. அதை மானப் பிரச்சினை என்று கூறி மறுத்து விட்டார் மண்டேலா.

பின்னர் தனது மாமன் மகன் ஜஸ்டிஸ் என்பவருடன் சேர்ந்து ஜோகன்ஸ்பெர்க் நகருக்குச் சென்று தங்கச் சுரங்கத்தில் வேலை பார்த்தார். அங்கிருந்தும் அவரது உறவினர் தூண்டுதலால் வெளியேற்றப்பட்டதால்; மண்டேலா சட்டம் படித்திட முனைந்தார். 'லாசா சிடிங்ஸ்கி' என்ற வெள்ளைக்கார வழக்கறிஞரிடம் சட்டக் கல்வியில் பயிற்சி பெற்று திறமையாளரானார்.

மண்டேலா வாழ்க்கை கட்டுப்பாடுமிக்கது என்றும், அதிகாலையில் எழும் வழக்கமுடையவர் என்றும் – நாளும் தவறாமல் நடைப் பயிற்சி மேற்கொண்டவர் என்றும் – எளிமையான உணவே அருந்தி, எப்போதும் சுறுசுறுப்புடன் பணியாற்றுபவர் என்றும் – பெண்களுக்குத் துணையாக அடுக்களை வேலைகளில்கூட ஈடுபடுவார் என்றும் – அவரது சரித்திரக் குறிப்புகள் கூறுகின்றன.

கறுப்பர் இன மக்களுக்கும் வெள்ளையருக்குமிடையே கடுமையான புகைச்சலும் – மோதுதல்களும் இருந்தபோதிலும்; மண்டேலா, இருதரப்பு மாணவர்களிடமும் பரந்த மனத்துடனும் பண்பாட்டுடனும் நேசமாகப் பழகி, அமைதியாகக் காந்திய வழியிலே அறப்போர் நடத்தி இன வேற்றுமைக் கொடுமையை அகற்ற நினைத்தார்!

1948ஆம் ஆண்டு மண்டேலா இளைஞர் அணியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கால கட்டத்தில்; கறுப்பின மக்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள் அவர்

கண்களை உறுத்தின. "காஃபிர்" என்ற இழிந்த வார்த்தையினால் கறுப்பின மக்கள் அழைக்கப்பட்டதையும் – தெருக்களில் நடமாட முடியாமல் தடுக்கப்பட்டதையும் – மண்டேலாவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அது மட்டுமா? கறுப்பின மக்களின் நிலங்களை வெள்ளையர் பறித்துக் கொண்டனர் – வெள்ளையர் கறுப்பரிடையே காதல் மற்றும் கலப்பு மணங்கள் – சட்ட விரோதமாயின – இனப்பகை; பெரும் பகை – கறுப்பினத்தாருக்கு வேலைகள் மறுக்கப்பட்டன – கேளிக்கை இடங்களில் அவர்களுக்கு அனுமதியில்லை -- மீறினால் கடும் தண்டனை.

இந்தக் கொடுமைகளை எதிர்த்து; 1948ல் இளைஞர் அணியின் செயலாளரான மண்டேலா; 1949ல் கூட்டிய மாநில மாநாடு ஒன்றில் வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கத்தை நடத்த தீர்மானம் நிறைவேற்றினார்.

அதைத் தொடர்ந்து அவர் 1951ல் இளைஞர் அணியின் தலைவராகவே தேர்வு செய்யப்பட்டார்.

வெள்ளையர் வெறித்தனத்தை எதிர்த்து அமைதியாக அரும்பிய மண்டேலாவின் அறப்போர்; புரட்சி மலராகவும் பூத்திடத் தவறவில்லை.

கறுப்பு இன மக்களின் மாணவர் போராட்டமும் தொடங்கியது.

புரட்சிகள் – கிளர்ச்சிகளின் விளைவாக – சிறைப்பட்ட மண்டேலாவை நாட்டை விட்டு வெளியேறுவதாக இருந்தால்; விடுதலை செய்வதாக தென்னாப்பிரிக்க வெள்ளையர் அரசு கூறியது.

அதற்கு மண்டேலா மறுப்புரைத்து, "எங்களுக்கு சுதந்திர உரிமை இல்லையென்றால், நான் அடைபட்டுள்ள சிறைச்சாலையே திருப்தி அளிக்கக்கூடியது" என்று கூறிவிட்டார். அவர் நடத்திய போராட்டங்களின் தொடர்ச்சியாக நீண்ட கால சிறை வாழ்க்கையைத்தான் அவர் ஏற்றுக் கொள்ள

நேர்ந்தது. சிறையில் ஆரம்ப நிலையில் கேவலமான உணவு, அதுவும் பசியை அடக்கக் கூடியதல்ல – கல் தரையின் மீது உறங்குவதற்கு ஒரு பாய் – நாளேடுகள் வைத்திருந்தால் சிறை சட்டப்படி தண்டனை – நாள் முழுவதும் வேலை – ஒவ்வொரு நாளும் வேலை முடிந்ததும் உடைகள் அவிழ்க்கப்பட்டு சோதனை – இவ்வளவு கொடுமைகளையும் அனுபவித்த மண்டேலா இளமை முதல் அவர் கொண்ட வைராக்கியத்தின் எதிரொலியாக சிறைக் கொடுமைகளைப் பற்றி அவர் சொன்ன வாசகம் பின் வருமாறு :–

"சிறைக் கொடுமை என்னை இன்னலுக்கு
ஆளாக்கவில்லை.
சிறைக்கு வெளியே என் மக்கள்
அனுபவிக்கும் துன்ப துயரங்களை எண்ணித்தான்
நான் வேதனையைத் தாங்கிக் கொள்ள
முடியாமல் இருக்கிறேன்"

என்பதாகும்.

மண்டேலாவின் இந்தத் தியாக வாழ்க்கை தென்னாப்பிரிக்க நாட்டு இளைஞர்களுக்கு மட்டுமல்ல; இந்தப் பூமிப் பந்தில் வாழ்ந்து கொண்டு புத்துலகம் காணத் துடிக்கின்ற ஏறுநடை இளைஞர்களுக்கெல்லாம் இதய கீதமாகும்.

12 - 9 - 2005

✦✦✦



தொண்டன் எப்படித் தலைவனாகிறான்? இந்தக் கேள்விக்குப் பதில்: ஒரு தொண்டனின் தொண்டுள்ளம் தொடர்வதால் அவன் தலைவனாக முடிகிறது.

32வது எண் அமைந்த "சிந்தனையும் செயலும்" தலைப்பில் நான் நெல்சன் மண்டேலாவின் இளமைக் காலத் தொண்டுள்ளத் தையும், பொதுநல வேட்கையையும், இன உணர்வின் எழுச்சியையும், தியாக மனப்பான்மையையும் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேனே; அவையெல்லாம் தலைவனாக வேண்டுமென்ற குறிக்கோளுடன் அல்ல; தனக்குற்ற இயல்பான தொண்டு மனப்பான்மை, தியாகச் செயல் இவைகளே மண்டேலாவை மாபெரும் தலைவனாக ஆக்கிற்று என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகவே!

இப்படித் தொண்டுள்ளம் கொண்டோர் நமக்குத் தொலை தூரத்து வெளிநாடுகளில் இருந்தும் –

நமது நாட்டிலேயே நமக்கு அருகாமையில் உள்ள மாநிலங்களில் இருந்தும் – அருகில் உள்ள மாநிலங்களில் இருந்தும்

தலைவர்களாக உயர்ந்திருக்கிறார்கள். உயர்ந்த பிறகும் அந்தத் தொண்டுள்ளத்தைத் துறவாது ஒளியுமிழ்ந்து வழிநடத்தியிருக்கிறார்கள்.

அவர்தம் இளமைக்கால வரலாற்று நிகழ்வுகளை இளைஞர்கள் படித்துணர்ந்து அந்தப் பாதையில் நடந்திடப் பழகிக் கொள்ள வேண்டும். அந்த வரலாற்று நாயகர்கள் இன்றைக்கு

இல்லாமல் படங்களாக, சிலைகளாக, நினைவுச் சின்னங்களாக மாறியிருக்கலாம். ஆனால் அவர்கள் விட்டுச்சென்றுள்ள வீர வரலாறு – தியாக வரலாறு – அறிவுப் புரட்சி வரலாறு – தென்னை மரத்தில் காணப்படும் வடுக்களைப் போல; கவனமாக நம்மால் – நமது இளைஞர்களால் பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டி யவைகளாகும்.

தென்னம் பிள்ளை நடப்படும்போது இரண்டொரு மட்டைகள் தோன்றும்; பின்னர் அவை ஒவ்வொன்றாக விழும் – மட்டைகள் விழுந்து விழுந்து; மரம் உயரமாகத் தோன்றும் – மட்டைகள் முதிர்ந்து ஒவ்வொன்றாக விழ விழ; மரத்தின் உயரமும் அதிகமாகும் – இடையிடையே பழுத்து விழுகின்ற மட்டைகள் ஓலைக் கீற்றுகளாகப் பயன்படும் – ஏழையர் வீட்டுக்கு நிழலாகும் – மரபு கருதி பச்சை மட்டைகளும் மற்ற நிகழ்வுகளுக்காக வெட்டப்படுவதுண்டு – எல்லாமே பொது நலப் பயன்தானே!

மறைந்த மட்டையானாலும்; மரம் அறவே மறையாதிருக்கும் வரையில் அந்த வடுக்களும் மறையாதிருக்கும்; என்பது மட்டுமல்ல; தென்னையின் உச்சி வரை சென்று இளநீரோ தேங்காயோ பறிப்பதற்கு; கால்கள் பதித்து ஏறுவதற்கேற்ற படிகளாக அமையும் – வடுக்கள், படிகள் ஆவது போலவே வாழ்வை முடித்த பெரியவர்கள் – தியாகிகள் – வீரர்கள் – ஆக்கப்பணி புரியும் இளைஞர்கட்கு வரலாற்று ஆதாரமா கிறார்கள். வடுக்களைப் படிகளாக்கிக் கொள்வதுபோல அவர்தம் வரலாற்றை வாலிபர்கள் வழிகாட்டிகளாக்கிக் கொள்ள வேண்டும்.

இதை எழுதும் நான்; தலைவனாக விளங்குகின்றேனோ இல்லையோ; இளமைதொட்டு தென்னையின் விழாத மட்டைகள் தரும் பயன்களையும், விழுந்த மட்டைகள் தரும் பயன்களையும், மறைந்த மட்டைகள் விட்டுச் சென்ற வடுக்களையும் கண்டுணர்ந்து தொண்டுள்ளத்தைத் தொலைக்காமல் இருப்பவன். 'மானமிகு' இல்லையேல் 'மாண்புமிகு'க்கு மதிப்பில்லையென்று அறிந்தவன்.

தொண்டு செய்து பழுத்த பழம் என்று பெரியாரைத்தான் பாராட்ட முடிகிறது; பிஞ்சிலேயே பழுக்க முனைவது பேராசையாகி நிராசையாகவும் ஆகிவிடுமல்லவா? பூவாகிப் பிஞ்சாகிக், காயாகிக் கனியாகும் வரையில் காத்திருந்திடாமல் ஒவ்வொரு பருவத்திலும் தொண்டு செய்து பழுத்த பழம் என்பதால்தானே அந்தப் பகுத்தறிவுப் பழம், மனிதர்க்குப் பல்சுவை தரும் விருந்தாகவும் – பயனளிக்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. வழித்தோன்றல்களையும் உருவாக்கியுள்ளது.


அவர் பிறந்த நாளையும், அவருடன் இணைந்து பணிபுரிந்த நாளெல்லாம் தனக்குச் சிறந்த நாள் என்று கூறியவரும், இளைஞர்களை ஈட்டி முனைகளாக ஆக்கியவருமான அறிஞர் அண்ணா பிறந்தநாளையும் கொண்டாடுவது அரசியல் ஆர்ப்பாட்டமல்ல; இதயத்தின் அடித்தளத்திலிருந்து ஊற்றுப் பெருக்காய்ப் பீறிட்டெழும் இலட்சிய முழக்கமாகும்!

இளமையிற் பெறும் தொண்டுள்ளம் – இலட்சியவாதிகளை இப்படித்தான் உருவாக்குகிறது; தலைவர்களாக – ஒரு நாட்டின் அதிபர்களாக – வழிகாட்டிகளாக!

எனவே இளைஞனே! நீ காற்றைப் போல் வீசிக் கொண்டிரு; தென்றலாகவும் மக்களுக்கு சுகம் தருவாய்! புயலாகவும் மாறி பொல்லாங்குகளை இடரி எறிவாய்!

15 - 9 - 2005

✦✦✦



பெண்கள் பேரணி!

1928ஆம் ஆண்டு 'குடியரசு' பத்திரிகையில் பெரியார் அவர்கள் எழுதிய தலையங்கமே பெண்கள் உரிமைக்காகவும் பெண்கள் விடுதலைக்காகவும் ஆண்கள் குரலெழுப்புவது வெறும் பாசாங்குதான்; உண்மையான உணர்வுடன் ஆண்கள் எவரும் அதற்காகப் பாடுபடுகிறவர்கள் அல்லர் – என்று குறிப்பிட்டு ஆண் ஆதிக்கத்தின் போலிக் குரலில் பெண்கள் ஏமாறக் கூடாது என்று எச்சரித்ததுடன்; அதே தலையங்கத்தில் பெண்களுக்காக பெண்கள் உரிமைக்குரல் முழக்குவதும் அப்படித்தான் பயனற்றுப் போய்விடும் என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆண்களைப் பற்றியும், பெண்களைப் பற்றியும் அய்யா பெரியார் அவர்கள் இப்படித்தான் ஓர் அழுத்தம்திருத்தமான பொதுவான கருத்தைக் கொண்டிருந்தார் என்று நாம் ஓர் அவசர முடிவுக்கு வந்துவிடக்கூடாது.

பாவையர் உரிமைக்கு பாடுபடுவதாக யாரும் வேடம் போடக் கூடாது என்பதே தந்தை பெரியாரின் அடி மனத்தில் பதிந்திருந்த ஆணித்தரமான அபிப்பிராயமாகும்.

கடவுள் பக்தர்கள் என்று கூறிக்கொண்டு அந்தக் கடவுளின் பெயராலேயே கயமைச் செயல்களில் ஈடுபடு கிறவர்களை அடையாளம் காட்டுவதைப் போலத்தான்; பெண்ணுரிமைக்காகப் பேசுவதாக நடிப்பவர்கள்; கடைந்தெடுத்த ஆணாதிக்கவாதிகளாக இருப்பதைப் பெரியார் தோலுரித்துக் காட்டியிருக்கிறார். அந்த ஆணாதிக்கத்துக்கு ஒத்துப்போகிற அடிமை மனப்பான்மையில் காலம் காலமாகப் பெண்களும் ஊறித்

திளைத்துவிட்ட காரணத்தால் அந்தச் சிறையிலிருந்து விடுபட அவர்களாலும் அவ்வளவு எளிதில் முடியாது என்பதையும் பெரியார், அவருக்கேயுரிய; உண்மையை உரத்த குரலில் எடுத்துரைக்கும்பாணியில் வெளிப்படுத்தியிருக்கிறார் என்றே நாம் கருத வேண்டும்.

ஆணாதிக்கம் – பெண்ணுரிமை என்ற சொற் பிரயோகங் களும், ஆணாதிக்கத்தை அகற்றிப் பெண்ணுரிமையை நிலைநாட்டுவோம் என்ற சூளுரைகளும் – ஆண்களும் பெண்களும் குடும்பம் குடும்பமாக வாழ்க்கை முறை வகுத்துக் கொண்டு வாழ்கிற நிலையை அடியோடு குலைத்து விட்டு, அவர்களில் ஆண்கள் ஒரு பக்கம், பெண்கள் ஒரு பக்கம் தங்களிஷ்டம்போல் திரிந்து; தேவைக்கேற்ப – அது உணவுத் தேவையானாலும் – அல்லது உடலுறவுத் தேவையானாலும் – உடல் நிலை பேணக்கூடிய தேவையானாலும் – அவற்றுக்காக மட்டுமே சேர்வதும் பிரிவதும் என்ற நிலையை இருபாலாரும் கடைப்பிடிக்கிற வாழ்க்கை முறையில்தான் ஆணாதிக்கம் அகற்றப்படுகிறதென்றோ; பெண்ணுரிமை கொழிக்கிறதென்றோ பொருள் கொண்டுவிடுதல் பழைய பழைய மிகப் பழைய காட்டுமிராண்டிக் காலத்திற்கு நம்மைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடும்.

எனவே ஆணோ பெண்ணோ இஷ்டம்போல் திரிந்து வாழ்வது என்ற நிலையிலிருந்து இணைந்து வாழ்வது என்ற நிலைக்கு மாறிய பிறகு; ஒருவர் புரியும் செயலால் ஒருவர் மனம் புண்படும்போது ஒருவரையொருவர் பிரிவதே பாபம்; சாபம் வந்து சம்பவிக்கும் என்ற எந்த மிரட்டலுக்கும் இடமின்றி – சட்டப்படி அதற்கான சம்மதம் பெற்றுக்கொள்ள ஆணுக்கும், பெண்ணுக்கும் உரிமை வாய்த்துள்ளது இரு பாலார்க்கும் ஏற்றதொரு நன்மையே ஆகும்.

தங்களின் வாழ்க்கைக்காக வழி வகுத்துக் கொள்ளவும் – அதில் வழிதவறி விட்டதை உணர்ந்தால்; வழி மாற்றி வகைப்படுத்திக் கொள்ளவும் சட்ட சம்மதம் பெறுதற்கு ஆடவர்க்கும் மகளிர்க்கும் சம வாய்ப்பு இருக்கும் சமுதாய

அமைப்பில்; அவர்கள் பொதுத் தொண்டு புரிந்திட பொது வாழ்வில் ஈடுபட சம உரிமை இல்லை என்பதுதான் பெருங்குறைபாடு!

அப்படியொரு தடையிருப்பதாக யார் சொன்னது? மக்களுக்கான பொது நலப் பணியாற்றுவதற்குக் கூட ஆட்சி மன்றங்களுக்குச் செல்லவேண்டுமென்றால் ஆணோ பெண்ணோ பொதுவில் யார் வேண்டுமானாலும் வேட்பாளராகப் போட்டியிட்டு வென்று சென்றிடலாமே என்றுதான் கூறத் தோன்றும்! அது உண்மை நிலை என்றாலும்; உபயோகமற்றுப் போன துருப்பிடித்துக் கிடக்கும் உண்மை நிலை என்பதுதான் பொருத்தமானதாகும்.

அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் பொதுத் தொகுதிகளில் எத்தனை இடங்களில் வேண்டுமானாலும் போட்டியிடக்கூடிய சமத்துவ உரிமை ஆணுக்கும், பெண்ணுக்கும் இருப்பினும்கூட; ஆண்களே மிக அதிக இடங்களை ஆக்ரமித்துக் கொள்ளும் நிலைமை; பெண்களின் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை காரணமாகத் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகிறது.

தமிழ்நாட்டில் 1996 முதல் தி.மு.க. ஆட்சியில் மாநகராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி மன்றங்களில் மகளிருக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு சட்டப்படி வழங்கப்பட்டு; அந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டுவிட்டது. தலித் இன மக்களுக்கான தனித் தொகுதி முறையும் நீடிக்கிற வகையில் உள்ளாட்சிகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீடும் நடைமுறையில் இருந்து வருகிறது.

பொதுத்தொகுதிகளில் பெண்களுக்கு வாய்ப்பளித்து; அவர்களும் நாடாளுமன்ற சட்டமன்றங்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையினர் – 33 சதவிகித அளவிலாவது இடம்பெற; மகளிர் ஒதுக்கீடு சட்டப்படி வழங்கப்பட்டாக வேண்டும் என்பதுதான் இன்றைய மகளிர் கோரிக்கை.

இந்தக் கோரிக்கை நிறைவேறிட; சட்டம் இயற்றாமலே; அரசியல் கட்சிகளே மகளிர்க்கு என இடங்களை ஒதுக்கலாம்

என்பது நடைமுறை சாத்தியமல்ல என்பது அனுபவ ரீதியாக உணரக் கூடிய ஒன்று.

நூறு தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்று நாடாளுமன்றத்திலோ, சட்டமன்றத்திலோ அமருகிறவர்களில் 33 பேர் மகளிர்களாக இருப்பதற்கேற்ப சட்டமியற்றி; தேர்தல் விதிமுறைகளையும் அமைப்பதால் என்ன ஆபத்து வந்துவிடும்!

சக்தி வாய்ந்த தெய்வங்கள் மாரி, காளி என்ற பெண் தெய்வங்கள் என்கிறார்கள்.

செல்வத்துக்கு இலக்குமி, கல்விக்கு சரசுவதி, வலிமைக்கு பார்வதி என்கிறார்கள்.

"தந்தையர் நாடு" என்று பாரதி மட்டுமே பாடினார் –

மற்ற எல்லோரும் "தாய்நாடு" என்றே அழைக்கிறோம்.

தாய்நாட்டில் தாய்க்குலத்துக்குரிய நியாயமான உரிமைக்குத் தடைக்கல்லாக விளங்குவது தகுமா? முறையா?

ஆண் பாதி – பெண் பாதியெனும் அர்த்தநாரீசுவர தத்துவத்தை ஆகாயமளாவப் புகழ்கிறவர்கள்; அரிவையர்க்கு 50 சதவிகிதமல்ல; 33 சதவிகிதத்தையாவது ஆதரிக்க முன்வரக்கூடாதா?

அனைத்திந்திய அரசியல் வரலாற்றிலேயே முதல் தடவையாக மூன்று லட்சம் பேர் மகளிர் மட்டுமே கலந்து கொண்டு நடத்திய மகத்தான பேரணியைப் புகழ்ந்து பாராட்டக்கூடத் தேவையில்லை; அந்த உரிமைக் குரலின் உணர்வையாவது புரிந்து கொண்டு பெரியார் தொடங்கிய பெண்ணுரிமைப் போருக்கு – அண்ணா வழியில் பெரு வெற்றி கிடைத்திடப் பேராதரவு வழங்குவது பெண் வயிற்றில் பிறந்தோரின் பெருங்கடமை என உணர்வீராக! உணர்ந்து செயல்படுவீராக!

22 - 9 - 2005

✦✦✦

35

திரிகடுகம்

நான் விடிவதற்குள்ளாக எழுந்துவிடும் பழக்கமுள்ள வனல்லவா, அதனால் அருகிலிருந்த புத்தகங்களின் முகத்தில்தான் முதலில் விழிக்க நேரிட்டது. அவற்றில் மேலாக இருந்தது, நேற்றைய தினம் சின்னக்குத்தூசி அவர்கள் கொடுத்த 'திரிகடுகம்' என்ற நூறு வெண்பாக்களைக் கொண்ட சிறிய நூல். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்று கேள்விப்பட்டோரும் உண்டு. பலமுறை அவற்றைப் படித்தோரும் உண்டு.

பதினெண்கீழ்க்கணக்கு என்பது பதினெட்டு நூல்கள். அந்தப் பதினெட்டு நூல்களுள் ஒன்றுதான் "திரிகடுகம்" என்பதாம்.

சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றும் எப்படி நோய் தீர்ப்பதற்கும் – வருமுன் தடுப்பதற்கும் பயன்படக் கூடியவை என்று கூறப்படுகிறதோ; அதுபோல "திரிகடுகம்" நூலில் உள்ள பாடல்கள் ஒவ்வொன்றிலும் மூன்று கருத்துக்கள் அமையப்பெற்று அவை உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆக்கம் தரக் கூடியவை என்று கூறப்படுகிறது.

இந்நூலில் வரும் நூறு பாடல்களையும் இயற்றியவர் நல்லாதனார் எனும் புலவர்.

நற்குணங்களைப் பரிந்துரைப்பதாகவும் – நன்னெறிகளை போதிப்பவைகளாகவும் – பாடல்களின் நோக்கம் இருப்பினும்; பழைய கால கருத்துக்களின் பின்னணியும் சில பாடல்களில் தலைகாட்டத் தவறவில்லை இந்த நூலில்!

இருப்பினும் மேகங்களுக்கிடையே மின்னிடும் விண்மீன்களென விழுமிய கருத்துக்களும் நம்மை ஈர்த்திடத் தவறவில்லை.

இதோ; இன்றைய தமிழகத்தின் நிலைப்பாட்டைக் குத்திக் காட்டுவது போல ஒரு பாட்டு :–

"கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும் – பாத்துண்ணும்
தன்மையி லாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்த லில."

இதன் பொருள் வருமாறு :–

கல்வி கற்றுத் தரும் ஆசிரியர் இல்லாத ஊரும்,
சிக்கலைத் தீர்க்கக்கூடிய மூத்தவரே
அறிவு முதிர்ச்சியில்லாதவராக உள்ள அவையும்,
பகுத்தளித்து உண்பவர் பக்கத்தில்
அமர்ந்திட அமையாத நிலையும் –
நலன் விளைவிக்காமல்; தீமை
விளைவிக்கக் கூடியவைகளேயாகும்.

ஊரும், உணவருந்தும்போது பக்கத்திலிருப்போரின் குணமும், ஊரார் கூடும் அவையும் எவ்வாறு அமைதல் நன்மை பயக்கும் என்பதையும் – அவ்வாறு அமையாவிடின் தீமையே பயக்கும் என்பதையும் நல்லாதனார் விளக்கும் விதம் கண்டு வியப்பில் ஆழ்ந்துவிட்டால் மாத்திரம் போதுமா?

ஊர் மக்கள் கல்வியாளர்களாக – குறைந்த பட்சம் கற்றவர்களாகவாவது இருந்திடப் பாடுபட்டு முயற்சி மேற்கொள்ள வேண்டும். எந்தவொரு ஊரிலும் எழுத்தறிவில்லாதவரே இல்லை என்ற நிலை ஏற்பட எழுத்தறிவிக்கும் இறைவன்களாம்

கணக்காயர்கள் எனப்படும் ஆசிரியர்கள் போதுமான அளவுக்கு இருக்க வேண்டுமல்லவா?

அதைப் போலவே பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பாடு பற்றி நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலையான கருத்தைத் தந்த அய்யன் வள்ளுவரின் அடியொற்றி; நம் வாயிலாக வழங்கப்படும் உணவு, உடை மற்றும் பொருள்களைப் பகுத்தளித்து விட்டு நாம் நமக்குரியதைப் பெற்றுக் கொள்ள வேண்டுமே தவிர; எல்லாம் தமக்கேயென்று எடுத்தொளித்துக் கொள்ளக் கூடாதன்றோ?

மேலும் ஒரு கருத்தாக; இந்தப் பாடலில் அவைக்களத்தில் "பிணக்கறுக்கும் மூத்தோர் இருக்க வேண்டும்" என்பதை நல்லாதனார் அத்தகைய முதிர்ச்சியுற்றோர் இல்லா அவைக்களம் நன்மை பயக்கக் கூடியதாக அமையாது என்று அழுத்தம் திருத்தமாகச் சுட்டிக் காட்டுகிறார்.

இதற்கான சான்று தேடி நாம் அலைய வேண்டியதில்லை; அயல் நாடுகளில் அவைக் களங்களில் எப்போதோ; என்றோ ஒரு நாள் நடக்கின்ற அமளி துமளி; நமது நாட்டில் உள்ள பாராளுமன்ற மாயினும்; சட்டப் பேரவையாயினும்; மாநகராட்சி, நகராட்சி மற்றும் உள்ளாட்சி மன்றங்களிலாயினும் அன்றாடம் நடப்பதைக் காணும்பொழுது;

அறிவு முதிர்ச்சியுற்றோர் இல்லாத அவைக்களம் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் தீமையே விளைவிக்கும் என்று நல்லாதனார் 'திரிகடுக'த்தின் வாயிலாகத் தெளிவுபடுத்துவது ஏற்றுக் கொள்ளக் கூடிய உண்மையாகத்தானே இருக்கிறது.

26 - 9 - 2005

✦✦✦

தீக்குச்சி தேடாதீர்

தமிழ் மொழி காத்திடவும், தமிழர் உரிமை நிலை நாட்டிடவும், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெற்ற மொழிப் போராட்டத்தில் சிங்கத் தமிழன் சின்னச்சாமி திருச்சி மாநகரில் தீக்குளித்து மாண்டான். அவ்வாறு உயிரை மாய்த்துக் கொள்ளும் முறை; ஏறத்தாழ வன்முறைக்கு ஒப்பானதுதான் என்று எடுத்துரைத்தும்கூட; அந்த மொழிப்போராட்டத்திலும் – அதன் பின்னர் தலைவர்கள் மீது ஏவப்பட்ட அடக்குமுறைகள், சிறை வாசங்கள், ஆகியவற்றைத் தாங்கிக் கொள்ள முடியாத தமிழ் இளைஞர்கள் நூறு பேருக்கும் குறையாத எண்ணிக்கையினர் தீயைத் தழுவியும், நஞ்சருந்தியும், உயிர்த் தியாகம் செய்துகொண்ட கொடுமையைத் தடுத்து நிறுத்திடத் திராவிட இயக்கத் தலைவர்கள் படாதபாடுபட்டனர். அந்தத் தியாகச் சுடர்களின் திருநாமங்களை இந்தத் திருநாடு என்றும் மறந்து விடாது என்று பெருமிதங் கொண்டு; அதே நேரத்தில் அந்த உயிர்கள் உலகில் இன்னும் பல நல்ல காரியங்களை ஆற்றுவதற்குத் தேவை; ஆகவே அவற்றை அழித்துக் கொள்ள முனையாதீர் என்ற அறிவுரையும் – அன்பான வேண்டுகோள் களும் விடப்பட்டன.

அந்தச் சோகம் சூழ்ந்த நாட்களை நினைத்துப் பார்க்கிறேன். தீக்குளித்தோர் – அதனால் மாண்டு மடிந்தோர் கண்டு தீயிற்பட்ட புழுவாய்த் துடித்துமிருக்கிறேன்.

அந்த நெருப்பு மண்டலம் இப்போதும் நம்மைச் சுற்றி நீண்டுயர்ந்த சுவராக எழுந்து நிற்பது போன்ற காட்சியைக் காணச்

சகியாது கண்களை மூடிக் கொள்ளும்போதுகூட; நம்மைத் திடுக்கிட வைக்கும் ஓர் ஒலி கேட்கிறது.

“தீப்புகுதல் நன்று”

ஆம்; இந்த ஒலி ஓர் இலக்கியத்து வரியாக அமைந்து, நமக்குத் திகிலூட்டுகிறது.

உயிரனைய கணவன் இறந்தான்; இனி உயிர் வாழ்தல் இல்லையென; நீதிக்காக உயிர் துறந்த

நெடுஞ்செழியப் பாண்டியனின் நெஞ்சக மீதே வீழ்ந்து உயிர் விட்ட கோப்பெருந்தேவியைச்

சிலப்பதிகாரத்தில் காண முடிகிறது.

கணவனையிழந்து கைம்மைக் கொடுமையை

அனுபவிப்பதோ என அலறித் துடித்து

ஆவிதனை

மாய்த்துக் கொள்வதே நன்முடிவு எனத் துணிந்த

பூதப் பாண்டியன் தேவியென –

புராதன காலத்திலிருந்து இந்தப் புதிய காலம்

வரையில் உடன்கட்டை ஏறி உயிர் விடுதல்

என்பது; பல்வேறு காரணங்களால் பழகிப்

போன ஒன்று எனினும் –

இதோ; “தீப்புகுதல் நன்று” எனும் இந்த வாசகம்; எந்தச் சூழ்நிலையில் வடிவெடுத்திடுகிறது என்பதை “நான்மணிக் கடிகை” நமக்கு உணர்த்துகிறது.

நேற்று அருங்கருத்துகள் மூன்றினை அடுக்கி – சுக்கு, மிளகு, திப்பிலி என வகைப்படுத்தி வழங்கப்பட்ட “திரிகடுகம்” நூலிலிருந்து ஒரு பாடலை விளக்கி எழுதியிருந்தேன்.

இன்றைக்கு அதே “பதினெண்கீழ்க்கணக்கு” நூல்களின் வரிசையில் ஒன்றான “நான்மணிக்கடிகை” நூலிலிருந்து ஒரு பாடல் வரியைக் கூறிட முனைகிறேன்.

கி.பி. இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கூறப்படும் கால கட்டத்தில் விளம்பி என்ற ஊரில் பிறந்ததால் "விளம்பிநாகனார்"எனப்படும் புலவர் பெருமானால் பாடப்பெற்ற நூற்றி ஆறு வெண்பாக்கள் கொண்டதே "நான்மணிக்கடிகை" எனும் நூலாகும்.

வெண்பா ஒவ்வொன்றும் நான்கு மணிகள் கோத்தது போன்ற கருத்துக்களை எடுத்துக் கூறுவனவாகும் என்பதால்; "நான்மணிக் கடிகை" ஆயிற்று!

"எதைவிட எது நன்று?" எனும் வினாவொன்றினை விளம்பிநாகனாரே கேட்டுக் கொண்டு; அதற்கு விடையாகத்தான் "தீப்புகுதல் நன்று" என்கிறார்.

இனிய இசை தரும் யாழ் எனும் கருவி அமையாதபோது பெரும் ஒலி முழக்கும் பறையோசை நன்று – பெருந்தன்மை இல்லாத ஆடவரை விட; நன்னெறியுடைய பெண்டிர் குலம் நன்று – பதங் கெட்டுப் போன பண்டத்தை உண்பதைவிட பசித் துயரைத் தாங்குவதே நன்று – என்பதாக மூன்று கருத்துக்களைக் கூறியதோடு நில்லாமல்; "தீப் புகுதல் நன்று" என எதற்காகச் சொல்லுகிறார் தெரியுமா?

"பசைந்தாரின்

தீர்தலின் தீப்புகுதல் நன்று"

அதாவது; "தம்மிடம் அன்புகாட்டி விரும்பி நேசித்தவரை விட்டு விலகி உயிர் வாழ்வதைவிட; தீயில் உயிரை மாய்த்துக் கொள்ளுதல் நன்று" என்கிறார்.

ஆம்; பேரன்பு கொண்டோரிடையே ஏற்படும் அந்தப் பிரிவுத் துயரம்; தீயில் விழுந்து உயிர்விட்டால்தவிர தீராது என்பதைத்தான்; புலவர் பிரான் அவ்வளவு அழுத்தம் கொடுத்து –

பண்ணமைந்த யாழோசை இல்லாத போது
பறையோசையைக் கூட
நன்று என்று கூறிட முடியும் –

ஆடவரிடம் காண முடியாத பெருமிதத்தை
பெண்டிரின் பெருமையால் ஈடுசெய்ய முடியும் –

பாழ்பட்ட பண்டத்தை உண்ணாமல்;
பசித் துயரைத் தாங்கிக் கொள்ள முடியும்;

ஆனால்;

பேரன்பு பூண்டிருந்தவர்களிடையே விளையும்
பிரிவுத் துயரம்; தீக்குளித்தால்தான் தீரும்
என்று கூறுவதின் வாயிலாக –
பிரியா நட்பின் பெருமையை
உணர்த்துகிறார் என்றே எடுத்துக் கொண்டு
பிரியாமல் இருந்திட உறுதி மேற்கொள்ள
வேண்டுமே தவிர;
உடனே தீக்குச்சி மண் எண்ணையைத்
தேடி அலையக் கூடாது.

* * *

"பறைநன்று பண்ணமையா யாழின் –
நிறைநின்ற

பெண்நன்று பீடிலா மாந்தரின் – பண்
அழிந்து

ஆர்தலின் நன்று பசித்தல் – பசைந்தாரின்
தீர்தலின் தீப்புகுதல் நன்று"

(பாடல் 15 –
"நான்மணிக்கடிகை")

பசைந்தார் = நண்பர்

27 - 9 - 2005

✦✦✦

சீலம்பும் மானமும்!

ஆசைகளைத் துறந்திட வேண்டும்; அவற்றில் மண்ணாசை பொன்னாசையைவிட வெகுவாக பெண்ணாசையை வெறுக்க வேண்டும் என்று வலியுறுத்திடத்தான்; பெண்ணைப் பெருமளவுக்கு அங்கம் அங்கமாக இழிவுபடுத்துகிற பாடல்களை, பற்றற்ற துறவிகள் இயற்றியுள்ளனர். குறிப்பாக நாலடியார் பாடல்களை வழங்கியிருப்பவர்களின் பட்டியலில் சமண சமயப் புலவர்கள் பெரும்பாலும் இடம் பெறுகின்றனர். அழியும் உடலின் அழகில் மயங்கி அறநெறி தவறிவிடக் கூடாது என்பதை வற்புறுத்தவே அவர்கள் அவ்வழி மேற்கொண்டுள்ளனர் என்பதை அப்பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. நானூறு புலவர்கள் பாடியதும் நானூறு வெண்பாக்களைக் கொண்டதுமான நாலடியார் தொகுப்பில்; இந்த என் கூற்றுக்குச் சான்றாக, இதோ இரண்டு பாடல்கள்.

“குடருங் கொழுவும் குருதியும் என்பும்
தொடரும் நரம்பொடு தோலும் – இடையிடையே
வைத்த தடியும் வழும்புமாம் மற்றிவற்றுள்
எத்திறத்தாள் ஈர்ங்கோதை யாள்”

குடல், கொழுப்பு, குருதி, எலும்பு; அவற்றுடன் தோலும் நரம்புகளும் இவற்றுக்கிடையே தசையும் நிணமும் கொண்டவளைப் பார்த்து; “குளிர்ந்த மாலையணிந்த குமரியே” என்று கொஞ்சுவதில் என்ன ரசிப்புத் தன்மை இருந்து

தொலைக்கிறது? எனக் கடுப்பாகக் கேட்கிற கருத்தமைந்த பாடலிது!

மற்றுமொரு பாடல் வருமாறு :–

“ஊறி உவர்த்தக்க ஒன்பது வாய்ப்புலனும்
கோதிக் குழம்பலைக்கும் கும்பத்தை – பேதை
பெருந்தோளி பெய்வளையாய் என்னும் மீப்போர்த்த
கருந்தோலால் கண்விளக்கப் பட்டு”

ஊறி நாறுகின்ற அழுக்குக் குழம்பு வெளிப்படுகிற ஒன்பது துளைகளையுடைய உடலென்கிற ஒரு குடத்தைப் பார்த்து; குறைமதியுடையோர் கவர்ச்சியால் கவரப்பட்டு; அவளை பெருத்த தோளையுடையவளே என்றும், வளையல்கள் அணிந்த வஞ்சிக்கொடியே என்றும் பிதற்றுகிறார்கள்.

நாலடியாரில் நாம் காணுகின்ற இந்த இரண்டு பாடல்களைப் போலவே, சமணப் புலவர் பெருமக்கள் பல பாடல்களை இயற்றியுள்ளனர்.

அவற்றுக்கிடையேதான் அய்ம்பெருங்காப்பிய வரிசையில் இடம் பெற்றுள்ள சிலப்பதிகாரமும், சீவக சிந்தாமணியும் வருகின்றன.

சிலப்பதிகாரம் இயற்றிய புலவர் பெருமான் இளங்கோவடிகளும் சீவக சிந்தாமணி தந்த சீலர் திருத்தக்கத் தேவரும் சமண சமயம் சார்ந்தவர்களேயாவார்கள்.

இந்தச் சமணப் பெரியோர் இயற்றியுள்ள பாக்கள்; நாலடியார் இயற்றிய சமணப் பெரியோர்களைப் போல மாந்தரை – அதிலும் குறிப்பாக மகளிரை வெறுத்தொதுக்கிட வேண்டுமென்கிற அளவுக்கு அமைந்தவையல்ல; என்பது மட்டுமின்றி – கவர்ச்சி நிறைந்த கற்பனைகளுமாகும்.

“மின் தெளித்து எழுதி அன்ன விளங்கு
நுண்நுகப்பின் நல்லார்

பொன்தெளித்து எழுதி அன்ன பூம்புறப் பசலை
மூழ்கிக்

குன்று ஒளித்து ஒழிய நின்ற குங்குமத்
தோளினாற்குக்

கன்று ஒளித்து அகல வைத்த கறவையின்
கனிந்து நின்றார்”

மின்னலைக் கரைத்துத் தெளிவித்து அதனால் உறுப்புக்களை உருவாக்கியதுபோல் விளங்குகின்ற மெல்லிடை யுடைய மகளிர், தமது பொலிவுமிக்க மேனியில் பொன்னைத் தெளிவித்து எழுதியது போல் தோன்றிய பசலையில் ஆழ்ந்து; சீவகனின் தோள்களுக்கு மலைகளும் இணையாக முடியாது என்று மறைந்து ஒளிவது கண்டு கன்றினைப் பிரித் திடும்போது கதறி நிற்கும் பசுக்களைப் போல் உருகி நின்றனர்.

சிலப்பதிகாரம் தந்த சமணப் புலவர் இளங்கோவடிகளோ; கண்ணகியும் கோவலனும்; கட்டிலறைக் காவியம் படித்ததை எவ்வளவு இன்ப உணர்வுடன் விளக்குகிறார் தெரியுமா?

“மண் மீது வாழ்வின் நிலையாமையை எண்ணி, அன்றைக்கே அனைத்தையும் நுகர்ந்திட முனைந்து பெயர்ப் பட்டியலிட முடியாத எல்லா இன்பங்களையும் அனுபவித்தனர் – அதுவும் எப்படி? வெறி கொண்ட பாம்புகள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு தழுவுதல் போல்; கண்ணகியும் கோவலனும் காமர் மனைவியெனக் கை கலந்து”

என்று கற்பனையின் உச்சத்திற்கே செல்கிறது; இந்தச் சிலப்பதிகார வெண்பா!

“தூமப் பணிகளொன்றித் தோய்ந்தா லென
வொருவார்
காமர் மனைவியெனக் கைகலந்து – நாமம்
தொலையாத வின்பமெலாந் துன்னினார் மண்மே
னிலையாமை கண்டவர் போ னின்று”

சமண சமயத்தினர்; துறவறம் பற்றிப் பாடுதற்கு வல்லவர்களே தவிர, இன்பம் பொங்கும் அகப் பொருள் பாடல்களை இயற்றிட அறியமாட்டார் என்று அக்காலத்துப் புலவர் பெருமக்கள் தெரிவித்த கருத்துக்களுக்குச் சிறந்த பதிலடிகளாகத்தான் திருத்தக்கத்தேவரும், இளங்கோவடிகளும் முறையே சீவக சிந்தாமணியையும், சிலப்பதிகாரத்தையும் அகப்பொருள் அருமையும் விளங்கிட இயற்றியுள்ளனர் போலும்!

பொருள்கள் :–

தடியும் வழும்பும் = தசையும் நிணமும்

பணிகள் = பாம்புகள்

29 - 9 - 2005

செய்நன்றி

தமிழில் மூன்றெழுத்துச் சொற்களாக விளங்குகிற அன்பு, அறிவு, காதல், வீரம், வெற்றி எனத் தொடரும் பெரும் பட்டியலில், இன்னும் பல சொற்கள் இடம்பெற்றாலும்கூட; நமது அன்றாட வாழ்வில் அடிக்கடி பயன்படுத்தக் கூடியதாகவும் – அதற்கெனத் தனியொரு சிறப்பு இல்லாததாகவும் – சொல் ஒன்று உண்டென்றால் அது 'நன்றி' என்ற சொல்லாகவே ஆகிவிட்டது எனலாம்.

கடிகாரம் கட்டியிருப்பவரிடம் மணி என்ன என்று கேட்டு; அவர் 'நாலு' என்று சொன்னால்; 'நன்றி' என்கிறோம்.

சிற்றுண்டி விடுதியில் நாம் கேட்ட பண்டத்தையோ, பானத்தையோ கொண்டு வந்து வைக்கிற விடுதி சிப்பந்தியைப் பார்த்து 'நன்றி' என்கிறோம்.

சாப்பிட்டு முடித்து விட்டு விடுதியிலிருந்து வெளியே வரும்போது முன்பகுதியில் அமர்ந்திருக்கிற காசாளரிடம் கரன்சியை நீட்ட, அவர் 'நன்றி' என்று கூறியவாறு அதை வாங்கி, கணக்கு போக மிச்சத் தொகையை தரும்போது 'நன்றி' என்று சொல்லிக் கொண்டே அதை நாம் பெற்றுக் கொள்கிறோம்.

அங்கிருந்து நேராகப் பேருந்து நிற்குமிடம் வருகிறோம் – 'அண்ணா நகர்' என்றதும்; நடத்துனர் பயணச் சீட்டு கிழித்துக் கொடுக்கிறார் – கட்டணத்துக்கான காசினைக் கரன்சியாகத் தராமல் சில்லறையாக எண்ணிக் கொடுக்கிறோம். நடத்துனர்;

"நன்றி" கூறியவாறு வாங்கிக் கொண்டு அடுத்த பயணியிடம் சென்றுவிடுகிறார். நாம் பேருந்தில் உட்கார இடம் தேடுகிறோம். ஒருவர் நகர்ந்து அமர்ந்து கொண்டு நமக்கு இட ஒதுக்கீடு தருகிறார். 'நன்றி' எனச் சொல்லியவாறு அந்த இடத்தில் உட்கார்ந்து கொள்கிறோம்.

பேருந்திலிருந்து இறங்கி நடந்தே வீட்டுக்குச் செல்கிறோம் – "என்ன இப்படி வியர்த்துக் கொட்டுகிறது!" என்று கேட்டவாறு துணைவியார் மின் விசிறியைப் போடுகிறார் – 'நன்றி' என்று கூறியபடி சட்டைப் பொத்தான்களைக் கழற்றி விட்டுக் கொண்டு காற்றாடச் சாய்ந்து கொள்கிறோம் சாய்வு நாற்காலியில்!

அருகில் உள்ள திருக்குறள் உரைநூலை எடுத்துத் தருமாறு அருமை மகளைக் கேட்கிறோம். மகள் எடுத்துத் தர ; அதற்கோர் நன்றிகூறியவாறு புத்தகத்தைப் புரட்டுகிறோம். காலையில் அலுவலகம் செல்வதற்கு முன்பு, படித்துவிட்டு அடையாளம் வைத்து விட்டுப் போன அந்தப் பக்கமே கண்ணில் படுகிறது.

'செய்ந்நன்றி அறிதல்' என்ற அதிகாரத்தில் "உதவி என்பது, செய்யப்படும் அளவைப் பொருத்துச் சிறப்படைவதில்லை; அந்த உதவியைப் பெறுபவரின் பண்பைப் பொருத்தே அதன் அளவு மதிப்பிடப்படும்" என்று பொருள் கூறும்.....

"உதவி வரைத்தன்று உதவி; உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து"

எனும் குறட்பாவை திரும்பத் திரும்பப் படித்தால்; அது "செய்ந்நன்றி அறிதல்" எனும் அதிகாரத்தில் இடம்பெற்ற குறள் என்பது எத்தனை ஆழமான சிந்தனைக்கு நம்மை ஆளாக்கிவிடுகிறது.

அன்றாட வாழ்க்கையில்; அடிக்கடி பயன்படுத்தப்படுகிற 'நன்றி' என்ற சொல்லை; ஆங்கிலத்திலோ அதேபோல் வேறு அன்னிய மொழிகளிலோ; ஏன் நமது அன்னைத் தமிழ் மொழியிலோ உச்சரிக்கும்போதும் – அல்லது எழுதுகிற மடல்களின் இறுதியில் முடிவுரை போலக் குறிப்பிடும்போதும்; அந்தச் சொல் லுக்கான உயிர்ப்போ, தாக்கமோ இருப்பதில்லை.

இருமும் ஒலிக்கு, கனைக்கும் ஒலிக்கு, தும்மல் ஒலிக்கு என்ன முக்கியத்துவம் தருவோமோ அதே அளவுதான் 'நன்றி' எனும் சொல் ஒலிக்கும்போதும் தருகிறோம். இல்லை; இல்லை – உளமாறத்தான், உள்ளன்புடன் அந்தச் சொல்லைப் பயன்படுத்து கிறோம் என்றால் அது நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டு மற்றவர்களையும் ஏமாற்றுகிற செயலேயாகும்.

வேண்டுமானால் "நன்றி" என்று கூறுவது ஒரு பண்பாடு என எடுத்துக்கொள்ளலாம் – ஆனால் ஒன்று; நன்றி கூறுவதற்கும், நன்றி காட்டுவதற்கும் – வேறுபாடு உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது. அதே நேரத்தில் நாம் செய்திடும் இந்த உதவிக்கு; உதவியைப் பெற்றவர்கள் – நாம் செய்த உதவியை அப்படியே மூலதனமாக வைத்துக் கொண்டு பெருந் தொழில் நடத்தி; உரிய வட்டியும் சேர்த்துத் திரும்ப வழங்குவார்கள் என்று எதிர்பார்த்திருக்கவும் கூடாது.

ஆனாலும் அய்யன் வள்ளுவர்; என்ன பயன் கிடைக்கும் என்று எண்ணிடாமல் "அன்பு காரணமாக செய்யும் உதவி கடலை விடப் பெரிது" என்றும்; ஒரு குறளில் கூறிவிட்டு – அடுத்த குறளிலேயே "ஒருவர் செய்யும் தினையளவு நன்மையைக் கூட அதனால் பயன் பெறுவோர் பனையளவாகக் கருத வேண்டும்" என்றும் குறிப்பிடுகிறார்.

"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது"

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்."

இந்த இரண்டு குறட்பாக்களின் கருத்தாழத்தை வியந்து சிந்தித்துக் கொண்டிருக்கும்போது;

மனைவியின் குரல் கேட்கிறது – "சாப்பிட வரவில்லையா? இன்றைக்கு உங்களுக்குப் பிடித்த வத்தல் குழம்பு!"

"அப்படியா? வத்தல் குழம்பா? ரொம்ப 'நன்றி!' என்று குறள் புத்தகத்தை, இருந்த இடத்தில் வைத்து விட்டு – எழுந்து செல்கிறோம் உள்ளே!

"முதலில் கையை கழுவிக் கொள்ளுங்கள்" – மனைவி, தண்ணீர் சொம்பைத் தருகிறார்.

"நன்றி" என்பதை முகக்குறிப்பால் காட்டிக் கொண்டே, அந்தத் தண்ணீர்ச் சொம்பை வாங்கிக் கை கழுவிக் கொண்டு; வத்தல் குழம்பு சாப்பாட்டை ஒரு பிடி பிடிக்கிறோம் –

"எப்படி; வத்தல் குழம்பு?"

"பிரமாதம்! நன்றி!"

இந்த மாதிரி "நன்றி" எனும் சொற்கள் எல்லாம் வெறும் வாய்ச்சொற்களாக வருபவை!

இந்த நன்றிகள் எல்லாம் சொல்லப்படுபவைதான் –
காட்டப்படும் நன்றிதான்;
காலத்துக்கும் நிலைத்து நின்று –
கல்லில் செதுக்கிய எழுத்தாக;
கடற்கோள்களாலும் அழிக்க முடியாததாக அமையும்.

2 - 10 - 2005

✦✦✦

பகுத்தறிவுப் பாதை!



நான் எழுதி, 12 பதிப்புகள் வெளிவந்துள்ள "தொல்காப்பியப் பூங்கா"வில் 93வது மலராக "அன்றே வளர்ந்திருந்த அறிவியல்" எனும் தலைப்பில் வழங்கியுள்ள கருத்துக்களை நினைவூட்டி; பின்னர் இன்றைய "சிந்தனையும் செயலும்" பற்றிய எண்ணங்களை பகிர்ந்து கொள்கிறேன்.

"தொல்காப்பியத்தில் குறிப்பாகவும் சிறப்பாகவும் பல்வேறு இயல்புகள், பழங்கால வாழ்க்கை முறைமைகள், இன்றைக்கும் போற்றிப் பின்பற்ற வேண்டிய அடிப்படைக் கட்டமைப்பு, ஒருசில; நவீனப் புது உலகத்திற்கும் வழக்கங்களுக்கும் ஒத்துவர இயலாத நிலையுடைய தாயினும் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த பழந்தமிழர் வரலாற்றுப் பெட்டகம் என்பதை நினைவூட்டும் கருவூலம் என்றெல்லாம் பெருமிதம் கொள்ளும்போது அவற்றுக் கெல்லாம் சிகரமாக மரபியலில் பின்வரும் நூற்பா அமைந்துள்ளதைக் கண்டு வியப்பு மேலிடுகிறது.

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே

ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே”

(மரபியல் – நூற்பா :– 27)

இதன் பொருள் விளக்கம் :–

ஓரறிவுள்ள உயிர் உடம்பினால் அறியக் கூடியது. ஈரறிவுள்ள உயிர் என்பது உடம்பினாலும் வாயினாலும் அறியக் கூடியது. மூவறிவுயிராவது உடம்பினால் – வாயினால் – மூக்கினால் என மூன்றினாலும் அறியக் கூடியது. நாலறிவுயிராவது உடம்பு, வாய், மூக்கு, கண் ஆகியவற்றால் அறியக் கூடியது. ஐயறிவு உயிர் என்பது உடம்பு, வாய், மூக்கு, கண், செவி ஆகியவற்றால் அறியக் கூடியது. இவைகளேயன்னியில் ஆறாவதாக மனத்தினாலும் அறியக் கூடியதே ஆறறிவு எனப்படும். இவ்வாறு உயிர்கள் ஆறு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அது மட்டுமன்றி, ஓரறிவு முதல் ஆறு அறிவு வரை பெற்றுள்ள உயிரினங்கள் எவை எவை என்பதையும் பட்டியலிட்டுக் காட்டுகிற பாங்கினை மரபியல் உணர்த்தும்போது எந்த அளவுக்கு மிகப் பழங்காலத்திலேயே அறிவியல் அடிப்படையில் வாழ்க்கை இலக்கணம் வகுக்கப் பெற்றுள்ளது என்ற மலைப்பு ஏற்படத்தான் செய்கிறது.

உலகில் வாழும் எல்லாவுயிர்களையும் அவற்றின் உடலில் அமைந்துள்ள ஐம்பொறிகளையும் உய்த்துணரும் உட்கருவி யாகிய மனத்தினையும் கொண்டு அவ்வுயிர்கள் ஓரறிவு முதல் ஆறறிவீறாகப் படிப்படியே அறிவினாற் சிறந்து விளங்குந் திறத்தினை நமக்கு நெடுங்காலத்திற்கு முன்னரே வாழ்ந்த நுண்ணுணர்வாளர்கள் ஆராய்ந்து வெளிப்படுத்தி யுள்ளனர். உயிர்கள் தாம் பெற்றுள்ள மெய், வாய், மூக்கு, கண், செவி என்னும் ஐம்பொறிகளின் வாயிலாகவும் அகக்கருவியாகிய மனத்தின் வாயிலாகவும் முறையே ஊறு, சுவை, நாற்றம், ஒளி, ஒலி என்னும் ஐம்புலவுணர்வுகளையும் உய்த்துணர்வினையும் பெற்று அறிவினால் வளர்ச்சி பெற்றுள்ள திறத்தை நுனித்துணர்ந்து

அவற்றை அறுவகையுயிர்களாகப் பகுத்துரைக்கும் இவ்வுயிர்ப் பாகுபாடு பண்டைத் தமிழர் கண்டுணர்த்திய பொருளிலக்கண மரபாகும்.

"புல்லும், மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"

(மரபியல் – நூற்பா :– 28)

எனும் நூற்பா; புல்லும் மரமும் எனும் இருவகைத் தாவரங்களும் உடம்பினால் அறிந்து கொள்ளக் கூடிய ஓரறிவுடைய உயிர்களாகும் என்பதைக் குறிப்பிடுகிறது. "பிறவும்" என இந்த இரண்டிலும் அல்லாத பிற உயிர்கள் என்றும் உணர்த்தப்படுகிறது. அவற்றுக்கும் உடலால் அறிந்து கொள்ளக் கூடிய ஓரறிவுதான். தாவரங்கள் பற்றியும் இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்பே தமிழன் பெற்றிருந்த அறிவியல் கருவூலம் தொல்காப்பியம் என்பதற்கு இதைவிடச் சான்று வேறு எதுவும் தேவையா?

உடம்பால் உணர்ந்து கொள்ளக் கூடிய புழுக்கள், புற்கள், மரங்கள், கொடிகள், செடிகள் எனப்படும் ஓரறிவுடைய பட்டியலுக்கு அடுத்து;

"நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"

(மரபியல் – நூற்பா :– 29)

சங்கு, நத்தை, கிளிஞ்சல் போன்றவையும் ஈரறிவு உயிர்களாம். தாக்கப்படும்போது அறியும் உணர்வும், இரை கொள்ளுவதால் வாயுணர்வுமென இரு அறிவு கூறப்படும்.

"சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"

(மரபியல் – நூற்பா :– 30)

ஈசல், எறும்பு, கறையான் இவற்றுக்கும் இவற்றையொத்த பிற உயிர்க்கும் மூவறிவு.

உடலால், வாயால், மூக்கினால் அறியக் கூடிய உயிரினங்கள் இவை.

நண்டும் தும்பியும் நான்கறிவுடையவை எனவும், விலங்குகளும், பறவைகளும் ஐந்தறி வுடையவை எனவும் மரபியல் விளக்குகிறது.

மக்கள் ஆறறிவுடையோராவர் – ஆறில் ஒன்றிரண்டு குறைவதற்கும், நிலையாக இருப்பதற்கும்; இந்த இலக்கணம் பொறுப்பல்ல!

– தொல்காப்பியப் பூங்கா (மலர் 93)

ஆறாவது அறிவைத்தான் பகுத்தறியும் அறிவு – பகுத்தறிவு என்கிறோம்.

பகுத்தறிவு என்றாலே பழைமை அனைத்தையும் பழிப்பது எனக் கருதிக் கொண்டு, பகுத்தறிவாளரைப் பழைமையாளர்கள் சிலர் பழிப்பதும் – அஃதே போல் பழைமையைப் பழித்தும் இழித்தும் விமர்சிப்பதுதான் பகுத்தறிவு என்று ஒரு சில பகுத்தறிவாளர்கள் எண்ணிக் கொள்வதும்; இன்றைய உலக நடப்பாக இருக்கிறது.

“பழைமையிலிருந்தே புதுமை தோன்றுவதற்கு எடுத்துக்காட்டுத்தான் வயல் வெளிகளில் குப்பை கூளங்கள் மற்றும் மக்கிய செடி கொடிகள் உரமாக மாறி புதிய பயிரை உருவாக்கப் பயன்படுவதாகும். எனவே புதுமை என்பது எங்கோ திடீரென வான வெளியில் தோன்றி விடுவதல்ல; பழமையெனும் உரத்தைப் பயன்படுத்திக் கொண்டு தோன்றுவதுதான்” என மறைந்தும் மறையாத தவத்திரு குன்றக்குடி அடிகளார் கூறியதை நினைவுபடுத்திக் கொண்டே; புதுமையை வரவேற்று மகிழ வேண்டும். அந்தப் பழைமையும் நல்ல எருவாக – விதையையே வீணாக்கி விடக் கூடிய நச்சுப் பொருள் கலக்காத உரமாக – அமைய வேண்டும்.

பகுத்தறிவைக் கொண்டு செயல்படுத்துவதென்பது மூடநம்பிக்கைகளை மக்கள் சமுதாயத்திலிருந்து அகற்று வதற்காக மட்டுமே என்றோ;

ஜாதி, மத வேறுபாடுகளைக் களைய வேண்டு மென்பதற்காக மட்டுமே என்றோ;

கடவுள் பெயரால் நடத்தப்படும் கண்மூடித்தனமான காரியங்களைக் கட்டோடு மறுப்பதற்காக மட்டுமே என்றோ;

நோய் நொடிகளைப் போக்கி சுகம் பெற கோயில் குளங்களைத் தேடி ஓடுவது தெளிவில்லாதோர் செயல் என விளக்குவதற்கு மட்டுமே என்றோ;

மந்திரம், தந்திரம், யாகம், யோகம், ஆவி, பேய், பூதம், பிசாசு என்று நம்பி நலிவுறும் பாமர மக்களைத் திருத்துவதற்கு மட்டுமே என்றோ;

பன்னீர்க் குளியலும் பழரச பானமும் கன்னியர் சூழ் கட்டிலறையும் இருந்தால்தான் சுவாமிகளுக்குத் தூக்கம் வருமென்றும், அதுவே தூய்மையான துறவறமென மக்களை ஏமாற்றும் மடாலய மாயையைத் தோலுரித்துக் காட்டுவதற்கு மட்டுமே என்றோ;

நாளும் வளர்ந்து வரும் விஞ்ஞானப் புதுமையுகத்தில் வருங்கால சமுதாயத்தின் அறிவை மேலும் மேலும் பெருக்குவதற்காக மட்டுமே என்றோ;

பகுத்தறிவு பயன்படுத்தப்பட்டால் மாத்திரம் போதாது; இவற்றோடெல்லாம் இணைத்து நினைத்துப் பார்த்திட; இன்றியமையாதது ஒன்றும் உண்டு – நம் ஊர் நிர்வாகத்தை நடத்திட யார் வேண்டும் – நகரின் நிர்வாகப் பொறுப்புத் தகுதி யாருக்கு – மாநகருக்கு, மாநிலத்துக்கு நிர்வாகப் பொறுப்பேற்கும் திறமையும் தெளிவும், நாட்டுக்குப் பாதுகாப்பும் அமைதியும் வளமும் வளர்ச்சியும் வழங்கிடக் கூடிய வல்லமையும் – வலிவான கொள்கை உறுதியும் கொண்டோர் – குழப்பமின்றி; கோணல்மாணலின்றி; ஓரவஞ்சனையின்றி; நடுநிலை தவறும் போக்கின்றி – உனக்கொரு நியாயம், எனக்கொரு நியாயம் என்ற ஒருதலைப்பட்சமின்றி – நிர்வாகத்தை நடத்தும் நெறியுடையோர் யார் என்று நிர்ணயிக்கத் துணை நிற்பதற்கும்; தவறு காணுமிடத்துத் தட்டிக் கேட்பதற்கும்; தடுத்து நிறுத்துவதற்கும்

பகுத்தறிவு பயன்படுத்தப்பட வேண்டுமென்பதை சுட்டிக்காட்டுவது; தொல்காப்பியம் எடுத்துக்காட்டும் ஆறாவது அறிவு இருப்பதால்தான் – ஆறாவது அறிவுடையோர்க்கு அதனை அறிவுறுத்தும் கடமையாகிறது. எனவே "திசையனைத்துக்கும் தேவை பகுத்தறிவுப் பாதை" என்பதை தெளிவுபடுத்துவதே; இன்றைய சிந்தனையும் செயலும்.

4 - 10 - 2005

✦✦✦

பெண்ணியப் பூட்சி!

ஈரோடு கலைக் கல்லூரி (தன்னாட்சி) தமிழ்த் துறை சார்பில் டாக்டர் திரு. ந. வேலுசாமி அவர்களை இயக்குநராகக் கொண்டு நடத்தப்பட்ட கருத்தரங்கத்தில் வழங்கப்பட்ட நூறுக்கு மேற்பட்ட ஆய்வுரைகள் தொகுக்கப் பெற்ற "21ஆம் நூற்றாண்டில் பெண்ணியம்" என்ற பெரிய புத்தகத்தை திரு. வேலுசாமி அவர்களே நேரில் வந்து என்னிடம் கொடுத்தார். ஆம்; "பெண்ணியம்" என்பது புத்தகத்தின் பெருந்தலைப்பு.

"புண்ணியம்" என்பது பக்தர்களுக்கு விருப்பமான நல்ல வார்த்தை என்பது போலவே –

"கண்ணியம்" என்பது சான்றோர்க்குப் பொருந்தும் நல்ல வார்த்தை என்பது போலவே –

"பெண்ணியம்" என்பதும் மகளிர்க்கான அனைத்து உரிமைகளையும் வலியுறுத்தி; எழுந்துள்ள வார்த்தையாகும்.

இந்த நூல் எனக்கு நினைவூட்டியது; தந்தை பெரியார் பல ஆண்டுகளுக்கு முன்பு எடுத்துரைத்த கருத்துக்களடங்கியதும் – "பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன"த்தின் வெளியீடாக வந்துள்ளதுமான "பெண் ஏன் அடிமையானாள்?" என்ற நூலைத்தான்! திரும்பவும் இப்போது அதனை எடுத்து ஒருமுறை படித்து முடித்தேன்.

ஈரோடு கலைக் கல்லூரி கருத்தரங்கத்தில் வழங்கப்பட்ட ஆய்வுரைகள், ஓர் அரண்மனையின் கூடகோபுரங்கள் என்றால்; பெரியார் அவர்களின் "பெண் ஏன் அடிமையானாள்?" எனும் அந்த ஆய்வுரை நூல் அந்தக் கோபுரங்கள் அனைத்துக்கும் உச்சிக் கலசமென்றுதான் உரைத்திட வேண்டும்.

அந்த நூலில் முத்தாய்ப்பான கருத்துக்களில் ஒன்றாக;

"நம்மைப் பொறுத்தவரை ஆண்களுக்குச் சொன்ன விஷயங்கள் எல்லாம் பெண்களுக்குப் பொருந்துமென்றும் – அவர்களுக்கும் ஆண்களைப் போலவே ஏற்பட வேண்டுமென்றும் – அம்மாதிரியே அவர்களும் நடந்து கொள்ள வேண்டுமென்றும் – உலக வாழ்விலும், சமுதாயத் திலும், சட்டத்திலும், மதத்திலும் ஆண்களுக்குள்ள சவுகரியங்களும், உரிமைகளும் பெண்களுக்கும் இருக்க வேண்டுமென்றும் – அப்பொழுது தான் பெண்களுக்கு உண்மையான சுதந்திரம் ஏற்பட்டதாகும் என்பதுடன் உண்மையான திருப்திகரமான இன்பத்தையும் ஆசையையும் அடைய முடியும் என்றும் கருதுகின்றோம்"

இவ்வாறு தந்தை பெரியார் எடுத்துரைக்கும் இந்தப் பகுதியின் விரிவாக்கமாகத்தான் அந்த நூலில் அவரது பல கருத்துகள்; ஒரு மலரின் அடுக்கடுக்கான இதழ்களாக நமக்குத் தோன்றுகின்றன.

வெகு விருப்பமுடன் 'பெண்ணியம்' கருத்தரங்கத் தொகுப்பு நூலினை திரு. வேலுசாமி அவர்கள் என்னிடம் வழங்கியுள்ளார் எனினும்; பெண்ணியப் பின்னணியில் என் அன்பு மகள் கனிமொழியின் கவிதைகள் பற்றிய ஆய்வுரைகளும் அந்நூலில் அடக்கம் என்பதைக் காணும்பொழுது – பெரியார் பாசறையில் அண்ணா அவர்களை ஆசிரியராகக் கொண்டு அந்த மாணவப் பருவத்திலேயே 1940களில் பெண்ணியம் என்ற தலைப்பில் இல்லாவிடினும் அந்தக் கருத்தமைந்த "இளமைப்பலி" எனும் கட்டுரையை அண்ணாவின் "திராவிட நாடு" இரண்டாவது அல்லது மூன்றாவது இதழிலேயே எழுதியவன் நான்! ஒரு பெண்ணின் இளமை எப்படி பலியிடப்படுகிறது என்பதை உருக்கமுடன் வரைந்த எழுத்துச் சித்திரம் அது!

ஆருயிர் இளவல் வீரமணி அவர்கள்; பெரியார் அவர்களின் பெண்ணுரிமை பற்றிய சிந்தனைகளை பெர்ட்டினன்ட் ரசல்

அவர்களின் சிந்தனைகளோடு ஒப்பிட்டு "பெண் ஏன் அடிமையானாள்?" என்ற நூலின் பதினாறாம் பதிப்புக்கும் முன்னுரை எழுதியிருக்கிறார்; 1987லேயே!

எனவே வழிவழியாக; பெரியார் தொடங்கிய பெண் விடுதலை இயக்கத்தை அன்று முதல் இன்று வரை ஒல்லும் வகையெல்லாம் வளர்த்திடவும் வலிவு கொள்ளச் செய்திடவும் அவரது வழித் தோன்றல்கள் தங்களை ஒப்படைத்துக் கொண்டு உழைத்திடுகிறார்கள் என்பதற்குச் சான்றாகத்தான் – இந்திய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் – மகளிர்க்கு இட ஒதுக்கீடு சட்டப்படி உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஒப்புதல் தர வேண்டும் என்று உரத்த குரல் எழுப்புகிறோம்.

'பெண்ணியம்' நூலில் கருத்தரங்க ஆய்வுரையில் இடம் பெற்றோர் – அவர்களால் உரைத்துப் பார்த்து உணரப்பட்டு உரைக்கப்பட்டுள்ள கதை, கட்டுரை, கவிதை இவற்றில் எதுவாயினும் அவற்றில் உரிய இடம் பெறுவோரில் அய்யா, அண்ணா வழி வந்த என் போலப் பலரும் உள்ளனர்.

இளமங்கையொருத்தியின் துயரைப் படம் பிடித்து முதல் கட்டுரையாக 'இளமைப்பலி' எழுதிய காலந்தொட்டு – இன்று வரை கதையோ, காவியமோ, திரை ஓவியமோ, நாடகமோ, நவீனமோ – எதிலும் என் பேனா முனை பெண்ணுரிமைப் போர்ப் படையின் வாள் முனையாகத்தான் வாய்த்திருக்கிறது.

அய்யன் வள்ளுவரின் குறளுக்கு உரை எழுதிய நிலையில்கூட பெண்ணுரிமையை – வலுவில் புகுத்தியல்ல; இயல்பாகவே எடுத்துக் காட்டியுள்ளேன்.

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்பதற்கு; கணவனைத் தொழுதெழும் மனைவி; பெய் என்று சொன்னால் மழை பெய்யும் என்று பரிமேலழகர் முதல் பல அறிஞர்களும் உரை கண்டனர்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களோ; "பெய் எனக் கூறும் வேளையில் பெய்கின்ற மழை போன்றவள் அந்த மனைவி" என்று உரை கண்டார்.

ஆனால் அடியேன் கண்ட உரையோ; "கணவனைக் கடவுளாகத் தொழுதிடும் மனைவி, பெய் என்று ஆணையிட்ட வுடன் அஞ்சி நடுங்கிப் பெய்கின்ற மழையைப் போல அடிமையாகத் தன்னை எண்ணிக் கொள்வாள்" என்பதாகும்.

'மந்திரி குமாரி' திரைப்படத்தில் மாபாவியான மணாளனை மலையிலிருந்து உருட்டி விடுகிறாளே அமுதவல்லி; அந்தப் பெண்ணியத்தின் மூலத்தை 'குண்டலகேசி' இலக்கியத் திலிருந்து நான் எடுத்துள்ளதை அப்போதே அறிவித்துள்ளேன்!

'தேவகி' படத்திலும் – 'திரும்பிப்பார்' – 'பராசக்தி' – 'நீதிக்குத் தண்டனை' என்று வரிசையாக வந்த திரைப்படங்களிலும் – பெண்ணியத்தின் பிரதிநிதிகளாகப் பாத்திரங்கள் படைக்கப்பட்டதை ஆய்வுரையின் உதவியின்றியே அறிய முடியுமே!

'மணிமகுடம்' நாடகத்திலும், திரைப்படத்திலும் புரட்சிக் கூட்டத்தின் தலைவராக விளங்குவதே அல்லி எனும் அறிவார்ந்த பெண்மணிதானே!

"கண்ணுக்குள் பாவை போல்
உருண்டிடும் உள்ளம் – கைம்
பெண்ணுக்கு இருப்பதையும்
உணர்ந்திடுவாய்"

1945க்கு முன்பே நான் எழுதிய கவிதை வரிகள் இவை.

இத்தனையும் சுய விளம்பரமல்ல; சுயமரியாதை இயக்கத்தின் சுடரொளி; பெண்ணியத்தின் புத்தொளியாகவும் அன்றுமுதல் இருந்து வருகிறது என்பதற்கான விளக்கமே யாகும்.

என்னிடம் தரப்பட்ட ஆய்வுரைத் தொகுப்பு நூலில் "இருபத்தொன்றாம் நூற்றாண்டில் சமீபத்தில் ஆண் பெண்

இருவருக்கும் சம பங்கு சொத்துரிமை தர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது" என்று திரு. வீ. மாரிமுத்து அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இதிலிருந்து இவர் போன்றோர் சிலர் திராவிட இயக்கச் செய்திகளில் முழுமையான அக்கறை காட்டுவதில்லை என்று தெரிகிறது.

அனைத்திந்திய அளவில் இப்போதுதான் பெண்களுக்குச் சொத்துரிமை சட்டம் வந்துள்ளது.

ஆனால் 1989ஆம் ஆண்டிலேயே என் தலைமையிலிருந்த ஆட்சியிலேயே தமிழகத்தில் "பெண்ணுக்கு சமபங்கு சொத்துரிமை சட்டம்" நிறைவேற்றப்பட்டுவிட்டது என்பதை எப்படி மறந்தனர் என்பது புரியவில்லை.

எள் முனையினும் சிறிய இந்தக் குறைகளை முள் முனையெனக் கருதாமல்; இந்தப் பெண்ணியம் ஆய்வுத் தொகுப்பு நூலினை; எண்ணிட எண்ணிட இறும்பூது எய்துகிறேன்.

7 - 10 - 2005

✦✦✦

வலி அறிவிக்கும் வாய்ச்சொல்லா மொழி!

என்ன அப்படிப் பார்க்கிறாய்? ஏன் திகைக்கிறாய்? எதற்காகக் காதைப் பொத்திக் கொள்கிறாய்?

பார்த்து ரசிக்கிறாய்; என் செயல்கண்டு மகிழவும் செய்கிறாய்; மலைத்தும் போகிறாய் – பதைக்கிறாய், பதறுகிறாய் – பயந்து நடுங்குகிறாய், பல நேரங்களில் பரவசமடைகிறாய்.

என்னை உன் கண்ணுக்குத் தெரியாது – ஆனால் உன் கண்ணுக்குத் தெரிவதெல்லாம் என் கைவண்ணம் என்பதைத் தெரிந்துகொள்.

என் பெயர் தெரியுமா உனக்கு? எனக்குப் பெயரே கிடையாது; பிறகு எப்படி நீ பெயர் சொல்ல முடியும்?

உன்னைப் போன்ற மானிடர்; உலகில் பல்வேறு தொகுப்புக்களாக இருப்போர்; அவரவர் விருப்பத்துக்கேற்ப ஒரு பெயரை எனக்குச் சூட்டி அழைப்பார்கள்.

'ஓ! கண்டுபிடித்து விட்டேன் "கடவுள்" என்பதுதான் உன் பெயர்' என்பாய் – அதனையும் "ஏற்போர்" – "மறுப்போர்" என்று இருபிரிவினர் இருப்பதால்; பொதுப் பெயராக – யாரும் மறுக்க வொண்ணாத பெயராக "இயற்கை" என்றே என் பெயர், அமைந்தது அமைந்ததாகவே இருக்கட்டும்.

அடையாளத்துக்காக அப்படி வைத்துக் கொள்வோமே!

"எங்கெங்குக் காணினும் சக்தியடா;
ஏழுகடல் அவள் வண்ணமடா"

என்று பாவேந்தர் பாரதிதாசன், பாரதியாருக்கு அருகில் அமர்ந்து பாடியதாகச் சொல்வார்களே;

அந்த சக்தி எது என்பதை
பாரதிதாசனே பகருவதைப் பார்!

“விரிந்த வானே, வெளியே – எங்கும்
விளைந்த பொருளின் முதலே,
திரிந்த காற்றும் புனலும் – மண்ணும்,
செந்தீ யாவும் தந்தோய்,
தெரிந்த கதிரும் நிலவும் – பலவாச்
செறிந்த உலகின் வித்தே,
புரிந்த உன்றன் செயல்கள் – எல்லாம்
புதுமை! புதுமை! புதுமை!”

என்று அவர் பாடியதும், “இயற்கை” எனும் என்னைப் பற்றித்தானே – என் சக்தியைப் பற்றித்தானே!

நான் சுவாசிப்பதைத் தென்றல் என்பாய்; பெருமூச்சு விட்டாலோ; அதனைப் புயல், சூறாவளி என்பாய்!

ஆனந்தக் கண்ணீர் விடுவேன்; அருவியென்பாய்! கதறிப் புலம்பி, வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொள்வேன்; பூகம்பமென்பாய்! புதுமொழியில் “சுனாமி” என்பாய்; கடற்கோளினை!

இப்பொழுதாவது இயற்கையாம் என் சக்தியை உணருகிறாயா?

என்னை எதிர்த்து உன் மானிட வர்க்கம் தொடர் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறது. அந்தப் போராட்டம் இரு பக்கமும் இறுதி முடிவு காண முடியாத நிலையை நோக்கியே நிகழ்ந்து கொண்டிருப்பதால்தானே;

“ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்”

என்றும்;

“ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்”

என அய்யன் வள்ளுவரே; இயற்கையைத் தோல்வியுறச் செய்ய சோர்வில்லாமல் முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கூறுகிறவர்; இயற்கையே வலிமை வாய்ந்தது என்றும் அதைவிட முதன்மையானது எதுவுமில்லையென்றும் என்னை பெரு வியப்புடன் புகழ்ந்துரைப்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் உலக மானிடருக்கும் எனக்கும் நடக்கும் போராட்ட முடிவு இழுபறி நிலையிலேயே இருப்பதை உணர முடிகிறதல்லவா?

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்" என்று இகழ்வாரைப் பொறுத்துக் கொள்பவருக்கு என்னை உவமை கூறிவிடுவதால் எவ்வளவுதான் பொறுத்துக் கொள்ள முடியும் என்னால்? நீங்கள் அளவுக்கு மீறி சோதிக்க முனையும்போது, நான்தான் என்ன செய்ய முடியும்.

இந்தியாவிலேயே மிகப் பழைய கணக்கு முப்பது கோடி மக்கள் தொகை, இப்போது நூறு கோடியைத் தாண்டிக் கொண்டிருக்கிறது என்றால் – உலக முழுதும் உள்ள நாடுகளின் மக்கள் தொகையைக் கூட்டினால்; அதற்கேற்ப வசதி வாய்ப்புகள் வாழ்வதற்கான சாதனங்களின் தேவையை நிறைவு செய்திட; என்னிடம்தானே கும்பிட்டுக் கேட்கவோ; அல்லது கொள்ளையடித்து எடுத்துக் கொள்ளவோ; அல்லது போர் நடத்திக் கையகப்படுத்திக் கொள்ளவோ திட்டமிட்டு செயல்பட மானிட சாதி மந்திராலோசனையில் ஈடுபட்டிருப்பதை நீயும் நானும் அறிய மாட்டோமா என்ன!

நான்தான் என் செய்வேன்; இரக்கமுள்ள ஜென்மம் – இருக்கும் வரை கொடுக்கிறேன் – எடுத்துப் போவதையும் கூடிய மட்டும் தடுத்து நிறுத்தாமல் இருக்கிறேன். என்ன இருந்தாலும் எறும்பு ஊர்ந்திடக் கல்லும் தேயும் என்பது போலக்கூட அல்லாமல் – யானைகளின் ஊர்வலமே அடிக்கடி நடந்தால் காடும் தேயுமே – நாடும் தேயுமே – உலகு சுழல்வதே ஒருநாள் ஓயுமே!

இயற்கையாம் என்னை என்ன பாடுபடுத்துகிறீர்கள்! ஆகாரத்துக்கான பசி என்றால்; மார்பைச் சப்பி மழலையர் பாலை அருந்திக் களிப்பர் – உங்களுக்கேற்பட்டிருப்பது அறிவுப் பசியன்றோ; அதனால் மக்களின் தேவைகளையும்

விருப்பங்களையும் நிறைவு செய்திட, மார்பில் ஊறும் பால் எங்கிருந்து உற்பத்தியென்றே தேடுகின்றீர்; அதனால் ஏற்படும் உபாதையில் நான் அழுகின்றேன் – துடிக்கின்றேன் – அலை மோதுகின்றேன் – வெகுண்டெழுந்து வெடிக்கின்றேன் – இயற்கையான எனக்கு இந்தச் செயல்பாடுகள்தான் என் வலியை அறிவிக்கும் வாயில்லா மொழி!

செயற்கை வழிச் செயல்படும் நீவீர்; சிறிது அடக்கம் காட்டி என்னையும் அடக்கி வைத்து; என்னழகைப் பருகிப் பயனடையலாமே!

அப்படி இல்லாமல் அடக்கி வைத்திட அடிமைப் பெண் கிடைத்தாள் என்று; அடி மேல் அடி கொடுத்துக் கொண்டிருந்தால் "சாது மிரண்டால் காடுகொள்ளாது" எனும் பழமொழிதான், மானிட வர்க்கத்தைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும்!

10 - 10 - 2005

✦✦✦

42

யாருமுன் காப்பா யாந்தமின் காப்பா தாரா?

கி.பி. 2004 – கடந்த ஆண்டு கடற்கோள் எனப்படும் சுனாமித் தாக்குதலால் சுமத்ரா தொடங்கி, அந்தமான் நிக்கோபார் எனத் தொடர்ந்து தமிழ் நாட்டுக் கடற்கரையோர நகர மக்களும், சிற்றூர் பேரூர் மக்களும் உயிர் உடைமைகளை முறையே இலட்சக்கணக்கிலும், கோடிக்கணக்கிலும் இழந்தது பற்றியும் –

கி.பி. 2005 – இந்த ஆண்டும் இயற்கையின் சீற்றம் பூகம்பமாக – நில வெடிப்பு, நில நடுக்கம் என்பவைகளாக எழுந்து, இந்தியாவின் வட மாநிலங்களில் சில பகுதிகள், ஜம்மு–காஷ்மீர் – மற்றும் பக்கத்து நாடான பாகிஸ்தான் போன்றவற்றில் – மக்கள் உயிர் இழப்பே ஒரு இலட்சத்தைத் தாண்டும் என்ற கணக்கும் – மண்ணோடு மண்ணாகப் பல நகரங்களும், ஊர்களும் புதையுண்டு போயின என்ற கொடுமைகள் நிறைந்த செய்திகளும் அடங்கிய பேரிழப்பைச் சந்தித்துள்ளதை நானும் – முனைவர் நாகநாதனும் சிந்தித்தவாறே, வழக்கம்போல் நடைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது; எங்கள் உரையாடலில் இந்தப் பேரழிவு விளைவிக்கும் இயற்கைச் சீற்றங்களுக்குக் காரணம் தேடவும் முற்பட்டு; அதுபற்றி அறிவியல் மேதைகள் தமது ஆய்வில் கண்டறிந்து வெளியிட்டுள்ள கருத்துகள் குறித்தும் விவாதிக்கிற வாய்ப்பினைப் பெற்றோம்.

அப்போது முனைவர் நாகநாதன்; உலகம் போற்றும் பொருளியல் அறிஞரும் நோபல் பரிசு பெற்றவரும், இந்தியக் குடிமகன் என்பதில் பெருமைப்படுபவருமான அறிவியல் மேதை

அமெர்தியா சென் எனத் தொடங்கி – அறிவியல் அறிஞர்கள் ஆல்பர்ட் ஐன்ஸ்டின், ஓயிட் போர்டு, ஷிஜேயாஷி மாட்சுமே, மஹபூப் உல்ஹக் ஆகியோரைப் பற்றியும், அவர்கள் இந்தப் பேரழிவுக்கான இயற்கைச் சீற்றங்களுக்குக் கூறிய காரணங்கள் குறித்தும் விவரித்துவிட்டு; அவர்கள் கொண்டிருந்த ஆய்வுக் கருத்துக்களின் அடிப்படையில்தான் அண்மையில் நான் எழுதியுள்ள இயற்கைச் சீற்றம் குறித்த "வலி அறிவிக்கும் வாயில்லா மொழி" எனும் கட்டுரை அமைந்துள்ளது என்றும் விவரித்தார்.

அவர் விவரித்த அந்த விளக்கங்கள் கருமுகில் கூட்டம் வானில் பரவியிருப்பது போல் எனக்குத் தோன்றிய காரணத்தால் – இந்த முகில்கள் எல்லாம் சேர்ந்து எல்லோர்க்கும் பயன்படும் ஒரு கட்டுரை மழையாகப் பொழிந்தால் நலமாக இருக்குமே என்று நான் கூறிடவே அவ்வாறே அவர்; "அணு ஆயுத பூஜையும் – அச்சுறுத்தும் பேரழிவும்" என்ற தலைப்பில் அருமையான அறிவுபூர்வக் கட்டுரையாக வழங்கியுள்ளார். அது 'முரசொலி'யிலும் வெளிவந்துள்ளது. பாராட்டிப் பல கடிதங்கள்! தொலைபேசிகள்!

அந்தக் கட்டுரையில் அமெரிக்க அறிவியல் அறிஞர் ஓயிட் போர்டு என்பார்; உலகில் அணு ஆயுத பரிசோதனைக்கு முன்பும் பின்பும் எனக் கணக்கிட்டு 1950க்கு முன்பு ; ஆண்டுக்கு சராசரி 68 முறை நில அதிர்வுகள் என்றும், 1950க்குப் பிறகு ஆண்டுக்கு சராசரி 127 முறை நில அதிர்வுகள் என்றும் – அதிர்வு அளவும் 5.8 ரிக்டர் என இருந்தது அதிகமாகிக் கொண்டே வருகிறது என்றும் குறிப்பிட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இயற்கையே புலம்பி அழுவது போலன்றோ நான் எழுதியிருந்தேன் –

"இயற்கையாம் என்னை என்ன பாடுபடுத்துகிறீர்கள்! ஆகாரத்துக்கான பசி என்றால்; மார்பைச் சப்பி மழலையர் பாலை அருந்திக் களிப்பர் – உங்களுக்கேற்பட்டிருப்பது அறிவுப் பசியன்றோ; அதனால் மக்களின் தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவு செய்திட, மார்பில் ஊறும் பால்

எங்கிருந்து உற்பத்தியென்றே தேடுகின்றீர்! அதனால் ஏற்படும் உபாதையில் நான் அழுகின்றேன் – துடிக்கின்றேன் – அலை மோதுகின்றேன் – வெகுண்டெழுந்து வெடிக்கின்றேன் – இயற்கையான எனக்கு இந்தச் செயல்பாடுகள் என் வலியை அறிவிக்கும் வாயில்லா மொழி!"

இயற்கை, சினந்து சீற்றங்கொண்டு உயிர்களையும், உடைமைகளையும் பெருமளவுக்குப் பேரழிவுக்கு உட்படுத்திய பிறகுதான்; வந்தபின் காப்போராக அரசுகள், அருள்நெறித் தொண்டு நிறுவனங்கள் – துயர் துடைப்புப் பணியாற்றத் துடித்தெழ முடிகிறது. வருமுன் காப்பதற்கான ஏற்பாடுகளை; நாமேதான் செய்து கொள்ள வேண்டும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசுகள் எதுவாயினும் எடுத்திடத் தயங்காமல் முன்வரவேண்டும்.

நிலநடுக்கமோ; அல்லது பேரலைத் தாக்குதலோ வரும்போது; அதன் காரணமாக ஒரு பத்தாயிரம் பேர் ஒரு பகுதியில் மாண்டு போயினர் என்றால் – நில நடுக்கம் – பேரலை இவற்றின் நேரடித் தாக்குதலுக்கு ஆளாகி மண்ணுள் புதைந்தோ; அல்லது மூழ்கியோ போகிறவர்கள் எண்ணிக்கையாக அந்தப் பத்தாயிரமும் இருப்பதில்லை. ஊன்றியுள்ள காலுக்குக் கீழே நிலம் அதிர்ந்தோ, வெடித்தோ புதைந்து போகிறவர்கள் அந்தப் பத்தாயிரத்தில் சில நூறு பேர்கள்தான் இருப்பார்கள் மற்றும் ஒன்பதாயிரத்துக்கு மேற்பட்டோர்; நில அதிர்ச்சியால் – வெடிப்பால் – பேரலைத் தாக்குதலால் – அவர்கள் வாழ்ந்திடும் வீடுகள் இடிந்து நொறுங்கி அந்த இடிபாடுகளில் சிக்கித் திணறி மூச்சை இழப்பவர்களேயாவார்கள்.

வேண்டுமானால் தொலைக்காட்சிகளிலே பாருங்கள்; இந்த அதிர்வுகளும் நடுக்கங்களும் ஆரம்பத்தில், உயர்ந்த வீடுகளை – மாடிக் கட்டிடங்களை – ஒரு நொடியில் அசைத்து இடித்து; அங்கே வாழ்பவர்களைத்தான் பிணக்குவியலாக்குகிறது என்ற நிலையை உணர முடியும்.

இதற்குத்தான்; வந்தபின் காப்பதற்கு துயர் தணிப்புப் பணிகளை மேற்கொள்வது ஒருபுறமிருந்தாலும் இத்தகைய

அழிவுகளை அனுமதிக்காமல் கதவைத் தாளிடும் முறையில் நாடுகளைப் பரிபாலிக்கும் அரசுகளும் – நாமும்; வருமுன் காப்பவர்களாக வாழ்வதற்குப் பழகிக்கொள்ள வேண்டும்.

ஆடம்பரத்தை வெளிச்சம் போடும் மாடி வீடோ, மாளிகையோ, இயற்கைச் சீற்றத்தினால் தாக்குண்டு நொறுங்கும்போது – நம் மேலே இரும்பு உத்திரங்களும் – கல்தூண்களும் – கருங்கல் சுவர்களும் விழுந்தால் நசுங்கித்தானே ஆக வேண்டும்.

எனவே; இயற்கைச் சீற்றத்தைத் தடுத்துவிட முடியாது; ஆனால் அந்தச் சீற்றத்தினால் விளையும் பேரழிவை ஓரளவாவது கட்டுப்படுத்திட முடியும்.

எரிமலை, பூகம்பம், கடற்கொந்தளிப்பு இவற்றால் உடனடி அழிவு ஏற்பட்டு விடாமல் இருக்க; அதே போல பேரழிவும் விளையாமலிருக்க ஜப்பான் போன்ற நாடுகள் – கடந்த கால அனுபவங்களால்; முதலில் தாங்கள் வாழும் இல்லங்களை அவற்றுக்கேற்ப அமைத்துக் கொள்கின்றன.

எல்லாம் இழந்து, குந்திடக் குடிலின்றி நிற்போரைப் பார்த்து; நிரந்தர வீடுகள் கட்டித் தருகிறோம் என்று உறுதி கூறுவதைக் காட்டிலும்; தற்காலிக வீடுகளையே தற்காப்பு வீடுகளாகத் தொடக்கத்திலேயே அமைத்துவிட்டால்; அவைகள் இடிந்து வீழவோ; அதனால் மக்கள் மடிந்து போகவோ வேண்டிய நிலை தோன்றாமலே போய்விடும். இந்த வருமுன் காக்கும் திட்டத்தை உலகில் எல்லா நாடுகளும் உணர்ந்து பார்த்து உரிய நேரத்தில்; உதவாதினி ஒரு தாமதம் என்ற உத்வேகத்துடன் நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும்.

கல்லால் கட்டப்படும் சுவர்களுக்குப் பதிலாக; மூங்கில் சட்டங்களால் ஆன சுவர்கள் எழுப்பி; வேய்ந்திடும் கூரைகளுக்கு மெல்லிய பலகைகளைப் பயன்படுத்தி – அமைக்கப்படும் வீடுகளில் எந்த இடிபாடு ஏற்படினும்; அதனால் வாழும் வீட்டுக்குத்தான் சேதமே தவிர; இன்னும் வாழ வேண்டிய மனிதர்க்கு மரண ஓலை வாசிக்கப்படமாட்டாது என்பதை அனுபவத்தில் அறிய முடிகிறது!

வளர்ந்த அல்லது வளர்ந்து விட்ட விஞ்ஞான மேதாவிலாசத்தை மேலும் விரிவாக்கிக் கொண்டு விண்ணைச் சாட முனைவதையும் – மண்ணை வென்றிட முயன்றிடுவதையும்; அதற்காகக் கோடானு கோடிப் பணத்தைக் கொட்டிக் குவிப்பதையும் சற்று ஒத்திவைத்து விட்டு;

அந்த விஞ்ஞானப் பார்வையைக் கூர்மையாக்கிக் கொண்டு இயற்கைச் சீற்றம் எந்த வடிவில் – எந்தப் பெயரில் – எங்கிருந்து வந்தாலும்; அதனை முன்கூட்டியே அறிகின்ற ஆற்றலைப் பெற்றிடும் 'அறிவியற்கலை'யைக் கற்றிட வேண்டியதே உடனடி வேலையாகும்.

"இங்கிலாந்து, ஜெர்மனி, ஜப்பான் நாட்டு அறிவியல் அறிஞர்கள் அணு குண்டு சோதனை நடத்துவதால் புவியின் மேல் ஓடு (Crust) பகுதிகள் பலவீனமடைகின்றன. இதன் காரணமாகவே நில அதிர்வுகள் தூண்டப்படுவதாக தொடர்ந்து எச்சரித்து வருகின்றனர். 1950க்குப் பிறகு, சக்தியின் அளவு அதிகரிக்கப்பட்ட, 30,000 அணு ஆயுதங்கள் உலகம் முழுவதும் இருப்பதாக கணக்கிட்டுள்ளனர். இதற்காக பல இலட்சங் கோடி ரூபாய்கள் செலவிடப்படுகின்றன.

5000 அணு ஆயுதங்கள் 15 மணித் துளிகளில் விரைந்து ஏவப்படுவதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. சான்றாக, எதிர்பாராத வகையில் தற்செயலாக ரஷ்யாவின் அணு நீர் மூழ்கிக் கப்பலில் இருந்த அணு ஆயுதம் ஏவப்பட்டால் 8 அமெரிக்க நகரங்களில் உள்ள 70 இலட்சம் மக்களை நெருப்புப் புயல் எரித்து விடும். அதன் பின்பு கதிர்வீச்சின் விளைவுகள் ஏறக்குறைய ஒரு கோடி மக்களை மரணத்திற்கு அனுப்பிவிடும். எனவேதான் அணு ஆயுத சோதனைகளை நிகழ்த்தும் வல்லரசு நாடுகளை 'மரண வணிகர்கள்' (Merchants of Death) என்று அமெர்தியா சென் குறிப்பிட்டுள்ளார்."

என்று தம்பி நாகநாதன்; தனது கட்டுரையில் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே விஞ்ஞானிகளின் முன்னேயுள்ள கேள்வி; "அய்யன்மீர்; உங்கள் கண்டுபிடிப்பு; மனிதர் நடமாடும் பாதையில் போடப்படும் வாழைப்பழத் தோலாக இருக்க விரும்பு கிறீர்களா? அல்லது அவர்களை வீழாது காத்திடும் கைப்பிடிகளாக இருக்க விரும்புகிறீர்களா?" என்பதுதான்!

16 - 10 - 2005

✦✦✦

43

எங்கே சொர்க்கம்?

இந்தப் பிறவி – அடுத்த பிறவி; இந்த ஜென்மம் – மறு ஜென்மம் – நல்ல தமிழில் சொல்வதாயின், இம்மை – மறுமை; இவற்றில் இம்மைதான் உண்மை! மறுமை என்பது வெறும் கற்பனை – மனிதன்; மறு பிறவியெடுப்பான் என்பது கற்பனை யென்றாலும்; அவன் மறைந்த பிறகு சொர்க்கத்தை அடைகிறான் அல்லது நரகத்தை அடைகிறான் என்பதைக் கற்பனையென்று கூறாமல்; நான் நம்பிடவே செய்கிறேன்.

இஃதென்ன; புதுக் குழப்பம்? மறு பிறவியையே நம்பாதவர்; சொர்க்கம் – நரகம் என்பனவற்றை நம்புவது வேடிக்கையாக இருக்கிறதே? இப்படிக் கேட்கத்தான் தோன்றும்!

மனிதன், பிறந்தவுடன் உலகவாசியாகி விடுகிறான் – வாழும்போதே; சொர்க்கலோகம் அடைவதற்கோ – அல்லது நரகலோகம் அடைவதற்கோ அனுமதிச்சீட்டை முன்கூட்டியே பதிவு செய்து விடுகிறான். எப்போதாவதுதான் அந்த இரண்டு உலகங்களில் ஒரு உலகத்திற்கான அனுமதிச் சீட்டை; ஒன்றை மாற்றிக் கொண்டு ஒன்றைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறான். அப்படித் திரும்பப் பெற்றது சொர்க்கலோக அனுமதிச் சீட்டாகவும் இருக்கலாம்; அல்லது மிக அரிதாக நரகலோக அனுமதிச் சீட்டாகவும் இருக்கலாம். சொர்க்கம் என்றால் என்ன? அது எப்படியிருக்கும்? நரகம் எப்படியிருக்கும்?

அந்த இரு உலகங்களின் நகர அமைப்பு, சாலை அமைப்பு – வசிப்போரின் வாழ்க்கைக்கான வசதிகள் – இவற்றை வைத்து இரண்டையும் ஒப்பிட்டுக் காட்ட முன்வரவில்லை – ஏறத்தாழ இந்த அமைப்புகள் எல்லாம் ஒன்றுக்கொன்று வேறுபடாமல் – சொர்க்கத்தைப் போலவே நரகமும்; நரகத்தைப் போலவே சொர்க்கமும் விளங்குவதைக் காண முடியும்.

அப்படியானால்; எந்த அடிப்படையை வைத்து – இது சொர்க்கம்; இது நரகம் என்று அடையாளப்படுத்துவது என்பதற்கு விடையாக அமைவது; அந்த இடங்களில் ஏற்கனவே குடியேறியிருப்பவர்கள்; தொடர்ந்து குடியேறியவர்கள் ஆகியோரின் பண்பை வைத்துத்தான் எது சொர்க்கம்; எது நரகம் என்பதை நிர்ணயிக்க முடியும்.

அந்தக் காலத்துக் கதையொன்றுண்டு; அதனை அடிக்கடி கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் பல்வேறு பொது நிகழ்ச்சிகளில் நினைவுபடுத்திப் பேசியுள்ளார்.

அக்கதைக்கு இப்போது மெருகேற்றி வழங்குகிறேன்.

வீட்டுக் கூடத்தில் முதியவர் ஒருவர் உடம்புக்கு முடியாமல் படுத்திருக்கிறார். அப்போது தெருவில் சவ ஊர்வலம் ஒன்று செல்கிறது என்பதை அறிவிக்கும் சங்குச் சப்தம் கேட்டுக்கொண்டிருக்கிறது. முதியவர், தனது பேரன் முரளியை அழைத்து; "முரளீ! தெருவுக்குப் போய் பார்த்து வா; மயானத்துக்குப் போகிற ஊர்வலத்தின் பின்னால் தொடர்ந்து போய்; இறந்து போனவர் சொர்க்கத்தை அடையப் போகிறாரா; நரகத்தை அடையப்போகிறாரா என்று தெரிந்து கொண்டு வா!" என்று கூறிப் பேரனை அனுப்பி வைக்கிறார்.

வீதிக்குச் சென்று, அந்த சவ ஊர்வலத்தைப் பின்தொடர்ந்து போன பேரன் திரும்பி வந்து "தாத்தா! அவர் சொர்க்கத்துக்குத்தான் அனுமதிக்கப்படுகிறார்!" என்று கூறினான்.

"நீ எப்படித் தெரிந்துகொண்டாய்?" தாத்தா கேட்டார்.

பேரன் பதில் சொன்னான்.

"ஊர்வலத்தின் பின்னால் போகிறவர்கள் என்ன பேசிக்கொண்டு போகிறார்கள் என்பதைக் கவனித்தேன். வீட்டு வாசல்களில் நின்ற பெண்கள் கண்ணீர் பெருக்கியதையும் கண்டேன். எதையும் எதிர்பார்க்காமல் எல்லோருக்கும் நன்மை செய்தவர் – முகம் கோணாமல் அள்ளியள்ளி வழங்கியவர் – அகம் மலர அனைவரையும் அரவணைத்தவர் – முகஸ்துதி என்பது அறவே பிடிக்காதவர்."

இப்படிப் பாராட்டப்படுகிற ஒருவருக்கு; நிச்சயம் சொர்க்கம்தானே கிடைக்கும்; அங்குதானே போவார் தாத்தா; என்றான் பேரன்!

"அடேய்; முரளீ! சொர்க்கத்துக்கு அவர் போக முடியாது. ஏனென்றால் சொர்க்கமென்றே ஒன்று கிடையாது. எங்கேயிருக்கிறது; சொர்க்கம்; தெரியுமா?"

"என்ன தாத்தா முன்னுக்குப் பின் முரணாகச் சொல்கிறீர்கள்? எனக்குப் புரியவே இல்லையே!"

"இப்போது புரிந்து கொள்! – சொர்க்கம் இங்கேதான் இருக்கிறது – சவ ஊர்வலத்தில் சென்றவர்கள்; வீதியில் நின்று பார்த்தவர்கள் எல்லாம் பேசிக்கொண்டார்களே; கண் கலங்கினார்களே; அதுதான் அவர் சென்றடைந்துள்ள சொர்க்கம்.

இதற்கு மாறாக; 'பீடை தொலைந்தது' என்று ஊரார் ஆறுதலடைவார்களேயானால் அதுதான் அந்த நபருக்கு நரகம்"

பேரன், சிரித்துக் கொண்டே சொன்னான்;

"தாத்தா! இப்போது எனக்குத் தெளிவாகப் புரிகிறது. இம்மையுண்டு; மறுமையில்லை. மனிதன் பிறக்கும் போதே; உலகவாசிக்கான உரிமைச்சீட்டும் – அத்துடன் தனியாக சொர்க்கம் – நரகம் இரண்டில் ஒன்றில் குடியேறுவதற்கான இரண்டு அனுமதிச் சீட்டுக்களுடன் தான் வருகிறான். அந்த இரண்டில் எந்த ஒன்றைப் பயன்படுத்துவது என்பதை; அவன் இந்த உலகவாசியாக

இருக்கும்போதே; தனது வாழ்க்கையின் மூலம் தீர்மானிக்கிறான் – அவன் தீர்மானிக்கிறானோ இல்லையோ; அவனது வாழ்க்கையே அதைத் தீர்மானித்து விடுகிறது. நான் நினைப்பது சரிதானா தாத்தா?"

"நூற்றுக்கு நூறு சரிதான் – மறுமை என்பது மாயை; மடைமை! சொர்க்கம் – நரகம் என்பவை தனி உலகங்கள் இல்லை; நமக்குப் பிறகும் வாழும் புகழ்ச்சியே சொர்க்கம் – இகழ்ச்சியே நரகம்; எனத் தெளிவதே அறிவுடைமை!"

இருவர் பேச்சினிடையே
பாட்டொலி கேட்கிறது.
இருவரும் உற்றுக்
கவனித்தனர் –

"எங்கே சொர்க்கம்?
எங்கே சொர்க்கம்? அது
இங்கே உண்டு;
அங்கே இல்லை"

உடுமலை நாராயணக் கவிராயரின்
பாடல் அது!

20 - 10 - 2005

✦✦✦



குருபீடமும்; குருள்பீடமும்!

வாய்மை என்பதும், பொய்ம்மை என்பதும் எதிர் எதிரானவை என்றாலும்; வாய்மையின் இடத்திலே பொய்ம்மை வந்து அமருவதற்கு ஒரு வழியிருப்பதை அய்யன் வள்ளுவர் சுட்டிக்காட்டுகிறார். என்ன வழி அது?

முதலில் வாய்மை என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்வோம். பிறருக்கு எள் முனையளவு தீமையும் ஏற்படுத்தாத ஒரு சொல்லை சொல்வதுதான் வாய்மை எனப்படும் என்கிறார் அய்யன் வள்ளுவர்.

யார் நன்மைக்காக சொல்லப்படுகிறதோ; அந்தச் சொல், அவரையன்னியில் பிறர் எவருக்கும் தீமையை ஏற்படுத்தலாகாது என்பதும் முக்கியமானதாகும். அந்தப் பிறரும், யாருக்கும் தீங்கு எண்ணாதவராக இருக்க வேண்டும் என்பதும் மறைந்து கிடக்கிறது.

> "வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றுந்
> தீமை யிலாத சொலல்"

வியாசர் இயற்றிய மகாபாரதத்தில் ஆண்டவனின் அவதாரம் பரசுராமர் என்ற பாத்திரப்படைப்பு – வர்ணாஸ்ரம தர்ம வெறிகொண்டு திரிந்தவர் என்று, பாரதத்தைப் படித்தால் புரிந்துகொள்ளலாம். அவரைப் போன்று வித்தையில் சிறந்தவரே துரோணர் – முதலில் துரோணரிடம் வில் வித்தை கற்றுக்

கொள்ள கர்ணன் சென்றான். துரோணர் மறுத்துவிடவே கர்ணன், பரசுராமரிடம் சென்று வேண்டினான். பரசுராமர் சத்திரியனுக்கு வித்தை கற்றுத்தர மாட்டார் என்பதற்காகத் தன்னை பிராமணன் என்று பொய்யாகச் சொல்லி; அவரிடம் மாணவனாகச் சேர்ந்து கொண்டு பயிற்சி பெற்று வந்தான். ஒருநாள் பரசுராமர், கர்ணன் தொடையில் தலை வைத்து உறங்கிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு வண்டு, கர்ணன் தொடையைத் துளைத்தது. வலி பொறுக்காமல் அசைந்தால் குருநாதர் தூக்கம் கெட்டுவிடக் கூடுமேயென்று, கர்ணன் அப்படியே அசையாமல் அமர்ந்திருந்தான். வண்டு துளைத்த கர்ணனின் தொடையில் ரத்தம் கொட்டி எங்கும் வழிந்தோடியது. திடுக்கிட்டெழுந்த பரசுராமர் – கர்ணனின் உறுதியையும் – அச்சமின்மையையும் கண்டு; "நீ பிராமணனாக இருக்க முடியாது – நீ சத்திரியன்தான் – பொய் சொல்லி என்னை ஏமாற்றிவிட்டாய் – அதனால் நீ என்னிடம் கற்ற வித்தை, சமயத்தில் உனக்குப் பயன்படாமற் போகக் கடவது!" என்று சாபமிட்டு அவனை விரட்டி விட்டார்.

பொய் சொன்னதால் கர்ணனுக்கு இந்தத் தண்டனை என்பதைவிட; அவன் பிராமணனாக இல்லாததால் இந்தச் சாபம் பெற நேர்ந்தது என்பதுதான் முக்கிய காரணமாகும்.

இத்தனைக்கும் கர்ணன் செய்த குற்றம் என்ன? பொய் சொல்லி; பரசுராமரின் மாணவனாகச் சேர்ந்தான் – குருநாதரின் உறக்கம் கெடக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில்; வண்டு துளைத்த வலியைக்கூடப் பொறுத்துக் கொண்டான்.

அவன் பொய் சொன்னது குற்றமென்று; பரசுராமர் தண்டிக்கிறார் – சாபம் கொடுக்கிறார்.

அந்தப் பொய்யினால் என்ன தீமை விளைந்தது? வில் வித்தை கற்றுக் கொள்வது; அக்கால வழக்கப்படி தீய காரியமா? இல்லையே! பிறகேன் தண்டனை?

கர்ணன் சொன்ன பொய்ம்மையை அய்யன் வள்ளுவராக இருந்தால் எப்படி, எந்தக் கோணத்தில் பார்த்திருப்பார்?

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

தீங்கற்ற நன்மை விளைவிக்குமானால்; பொய்யான சொல்லுங்கூட வாய்மையின் இடத்தைப் பெற்றுவிடும்.

பாரதக் கதையின் குருபீடம்; வஞ்சம் தீர்ப்பதில் குறியாகவும் – வர்ணாஸ்ரமத்தின் வழித்தோன்றலாகவும் இருக்கிறது.

பழந்தமிழ்ப் பனுவல் குறள்பீடமோ; பொய்ம்மையைக்கூட வாய்மையிடத்து அமர்த்த அறவழியிருந்தால் அதனை வரவேற்கிறது!

24 - 10 - 2005

✦✦✦

13 - சி. செ. பூ. வெ. எண். 750

இனியவை நாற்பதும்!

கையிருப்பின் அளவை அறிந்து அதற்குத் தக்கவாறு வாழாதவனின் வாழ்க்கை; இருப்பது போலத் தோன்றி – குறைந்து, மறைந்துவிடும். அய்யன் வள்ளுவர், "ஒருவர் தன்னிடமுள்ள வலிமையின் அளவையும், வளத்தின் அளவையும் அறிந்து அதற்குத் தக்கவாறு வாழ்ந்திடாவிட்டால் குறைந்து, மறைந்து விடும்" என்று சொன்னது வாழ்க்கையை அல்ல என்றாலும்கூட; வலிமையும் பொருளும் அழிந்துவிட்ட பிறகு வாழ்க்கையும் பயனற்றுத்தானே போய்விடும்.

வரவு, குறைவாக இருப்பினும் வரம்பு கடந்த செலவு இல்லாமல் பார்த்துக் கொண்டால் வறுமையெனும் கேடு வராமலே தடுத்துக் கொள்ள முடியும் என்றும்; "வலியுறுத்தல்" அதிகாரத்தில் இன்னொரு குறளில் அவர் விளக்கிடத் தவறவில்லை.

ஒருவரின் வாழ்க்கை இனிதாக அமைவதற்கு மேலும் வலிவூட்டும் அறிவுரைகளை, பூதஞ்சேந்தனார் எனும் புலவர் பெருமகனார், 'இனியவை நாற்பது' என்ற நூலில் சுட்டிக்காட்டுகிறார். இதுவும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றேயாகும்.

"வருவா யறிந்து வழங்க லினிதே
யொருவர் பங்காகாத வூக்க மினிதே
பெருவகைத் தாயினும் பெட்டவை செய்யார்
திரிபின்றி வாழ்த்த லினிது"

"வருவாய்க்குத் தக்கவாறு வழங்கி, இருவர்க்கிடையே பிரச்சினை என்றால்; ஒருவர்க்கு சார்பாக நில்லாமல் மனச் சான்றின்படி நடுநிலையாகச் செயல்பட்டு, தனக்குப் பெரும் பயன் கிட்டுமென்றாலும் அதற்கான செயலை விரும்பி; ஆராயாமல் அவசரப்பட்டு ஈடுபடாமல், தனது இயல்பில் வேறுபடாமல் வாழ்வதே இனிது" என்கிறது இந்தப் பாடல்.

ஒருவர், மிகச் சிறிய அளவாக ஒரு சைக்கிள் கடை வைக்கிறார். சைக்கிள்களை வாங்கி விற்பதற்கோ, அப்படி விற்பதில் கழிவுத் தொகை பெற்று – அதைப் பெருக்கி; பிறகு அவரே சைக்கிள்களை வாடகைக்கு விட்டு; அதன் வாயிலாக ஆதாயம் அடைந்து, நாளடைவில் அந்தச் சைக்கிள் கடை அதிபர்; தனது வணிகத் திறமை வாயிலாக, வளம் சிறிது சிறிதாகப் பெற்று இறுதியாக நூற்றுக்கணக்கான பேருந்துகளின் உடைமை யாளராக வளர்ந்து உயர்ந்து நிற்கிறார் என்றால்; விவேகமும் – விடா முயற்சியும் – வியாபாரத் திறமையும்தானே அதற்கு முழுமுதற் காரணமாகும்!

அவர் வளர்ச்சியுற்றால் "அதிர்ஷ்டம்" என்றும்; தளர்ச்சியுற்றால் "தலைவிதி" என்றும் எளிதாகச் சொல்லி விடுகிறது உலகம்.

எடுத்த எடுப்பில் மலையுச்சிக்கே போய்விட வேண்டும் என்று ஆசைப்படக்கூடாது.

மலையடிவாரத்துக்குச் செல்லாமல் மலையுச்சிக்குப் போய் விட முடியுமா?

மலையடிவாரத்தில் நின்று மலையுச்சியை அண்ணாந்து பார்க்க வேண்டியிருக்கிறது.

சிறிய சிறிய பாறைகள், கால் வைத்து ஏறிடவோ, கை வைத்துப் பிடித்துக் கொள்ளவோ – உச்சி நோக்கி இருப்பவைகளை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டி யிருக்கிறது. குறிப்பிட்ட தொலைவு மலையுச்சியை நோக்கிச் சென்ற பிறகு; கீழே குனிந்து பார்த்தால் குலை நடுங்குகிறது.

அந்த நடுக்கத்தை உதறி விட்டு நம்பிக்கையுடன் தொடர்ந்து மேலே மேலே என்று ஏற வேண்டியிருக்கிறது. அந்த முயற்சியின் முடிவில்தான் மலையின் முடியைத் தொட முடிகிறது.

சைக்கிள் கடை வைத்தவர்; பல நூறு பேருந்துகளின் அதிபராக – ஆயிரக்கணக்கான வாலிபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குபவராக – எப்படி ஆக முடிந்தது?

நீங்கள் பேருந்து அதிபர் – முதலாளி என ஆக வேண்டுமென்றோ; அந்தப் பேருந்துத் தொழிலில் தனியார் ஆதிக்கம் தலைகாட்டி விடாமல் தடுத்து, அவற்றைத் தேசியமயமாக்கிட வேண்டுமென்றோ எழுகிற இருவேறு நிலைகளில் குக்கிராமத்து மக்கள் உள்ளிட்ட அனைத்துப் பொதுமக்களும் பயனடைகிற நிலையைத்தான் நான் பரிந்துரைப் பவன் என்பதற்கு; கடந்த காலத்தில் என் தலைமையில் நடைபெற்ற ஆட்சியே சான்றாக விளங்குவதால்; இப்போது நான் அந்தப் பிரச்சினை பற்றிப் பேசாமல் – எந்தவொரு தொழிலானாலும், வாணிபமானாலும்; அது ஓங்கி வளர்ந்திட தனிப்பட்ட முறையிலாயினும் அல்லது நிறுவன ரீதியிலாயினும் தடையில்லா உழைப்பு – தளராத முயற்சி – தன்னம்பிக்கை ஆகியவை முழுமையாகத் தேவை என்பதை வலியுறுத்திடவே பேசுகிறேன்.

என் இளம் பிராயத்தில் என் நண்பர் ஒருவர் 'சிறுகக் கட்டிப் பெருக வாழப் போகிறேன் பார்' என்று கூறிவிட்டு ஐநூறு ரூபாய் முதல் போட்டு, சிறிய அளவில் அவர் வீட்டுக்குப் பக்கத்திலேயே பலசரக்குக் கடை ஒன்று வைத்தார். ஆரம்பத்தில் அமோகமான வியாபாரம். மகிழத்தக்க அளவுக்கு மாதாந்திர ஆதாயம்.

ஆனால் நாட்கள் நகர, நகர, நண்பரின் வீட்டுக்குத் தேவையான உப்பு, புளி, மிளகாய் போன்ற அனைத்துப் பொருள்களையும் அந்தக் கடையிலிருந்தே உரிமையுடன் எடுத்துக் கொண்டார்கள்; காசு, பணம் எதுவும் தராமல்!

அதனால் முடிவு என்ன ஆயிற்று? நண்பரின் கடைக்கு மூடு விழா நடத்த வேண்டிய அளவுக்கு ஆயிற்று!

எனவே அதிர்ஷ்டம் என்றோ; அன்று அவன் எழுதிய எழுத்தை மாற்ற முடியுமா என்றோ; எதன் மீதாவது யார் மீதாவது பொறுப்பைச் சுமத்தாமல் வெற்றிக்கும் தோல்விக்கும் நாமே பொறுப்பு என்கின்ற மன உறுதியுடன்; ஒரு பணியில் இறங்குகிற எந்த மனிதனையும் அயர்வோ, சோர்வோ அணுகாது; அய்யன் குறளை அடிமனத்திற் பதித்துக் கொண்டு ஆன்றோர்களாம் பூதஞ்சேந்தனார் போன்றோர்; அறிவுரைகளையும் பின்பற்றுகிற வரையில் அந்த மனிதனின் வாழ்வில் பின்னடைவும் ஏற்படாது!

பொருள் :–

பெட்டவை = விரும்பியவை.

25 - 10 - 2005

✦✦✦

படகுக்கு ஒரு கனைக்கு; நாட்டுக்கு ஒரு கனைக்கா?

டாக்டர் அகிலன் இராமநாதன் அவர்களை ஆசிரியராகக் கொண்ட "பொது அறிவு உலகம்" எனும் மாத இதழ் – மூன்று நான்கு மாதங்கள் சேர்ந்தாற்போல எனக்குக் கிடைத்து; அவற்றின் எல்லா பக்கங்களையும் படிக்கின்ற வாய்ப்பைப் பெற்றேன்.

எழுத்துப் பிழைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக சற்று அதிகமாகவே காணப்படுகின்றன. எழுத்தில் பிழையிருந்தால் வார்த்தைகளையோ, அல்லது வாக்கியங்களையோ "ஓ! இப்படித்தான் இருக்கும்" என்று நாம் ஒழுங்குபடுத்திக் கொள்வது எளிதானதாகும். ஆனால் எழுத்துப் பிழைக்குப் பதிலாக எண்களிலே எங்கேனும் அல்லது ஏதேனும் பிழை ஏற்பட்டுவிடின் காலக் குழப்பமே ஏற்பட்டுவிடும் அல்லவா?

இக்குறையும் இனி வரும் இதழ்களில் போக்கப்பட்டு விடுமேயானால் "பொது அறிவு உலகம்" எனும் அந்த ஏடு; புதிய செய்திகளைத் தாங்கி விளங்கும் புதையலாக – கருத்துக் கருவூலமாக – வரலாற்றுப் பெட்டகமாக – தகவல்களின் களஞ்சியமாக – அறிவுச் சுரங்கமாக அமையும் என்பதில் அணுவளவு அய்யப்பாட்டுக்கும் இடமே இல்லை.

இனி அதில் உள்ள தகவல்களுக்குள் நுழைவோம். "இந்திய மானுட வளர்ச்சி ஒரு கண்ணோட்டம்" எனும் குறுந்தலைப்பில் வந்துள்ள ஒரு பெட்டித் தகவல் வருமாறு :–

('பெட்டி' என்றதும் பின்னும் முன்னும் ஆவல் கலந்த வியப்புடன் திரும்பிப் பார்க்கக் கூடாது. "பெட்டித் தகவல்"

என்றால் நாலு புறமும் கோடிட்டு அதற்குள் தரப்படுகிற தகவல் என்று பொருளாகும். 'பொருள்' என்றால் 'அர்த்தம்' என விளங்கிக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.)

இந்திய மானுட வளர்ச்சி எந்த அளவுக்கு நமக்குத் திகிலூட்டுகிறது என்பதை இதோ இந்தப் புள்ளி விபரங்கள் வாயிலாகத் தெரிந்து கொள்ளலாம்.

இந்தியாவின் மக்கள் தொகை 104 கோடியைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது. நின்று கொண்டிருக்கிறது என்று கூறாமல் சென்று கொண்டிருக்கிறது என்கிறேனே; அதைத்தான் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

பாரதியார் காலம்; தொல் பழங்காலம் அல்ல – நடந்து முடிந்த சுதந்திரப் போராட்டக் காலத்தில் நம்மிடையே வாழ்ந்தவர்தான். அவரது கவிதைகளிலே இடம்பெற்ற இந்திய நாட்டு மக்களின் தொகை

"முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும்
பொதுவுடைமை
ஒப்பிலாத சமுதாயம் உலகத்துக்கொரு புதுமை –
வாழ்க
பாரத சமுதாயம் வாழ்கவே"

*

"முப்பது கோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்"

என்ற பாடல்களின்படி பார்த்தால் 30 கோடி மக்கள் என்பது; இன்றைய மக்கள் தொகை 100 கோடியில் மூன்றில் ஒரு பங்காகத் தான் இருந்திருக்கிறது. அதுவும் பாகிஸ்தான் பிரியாததற்கு முன்பு! பர்மாவும் நம்மோடு இணைந்திருந்தபோது! அவற்றையும் கணக்கிட்டுப் பார்த்தால்; முப்பது கோடிக்கும் குறைவாகவே இந்திய மக்கள் தொகை இருந்திருக்க முடியும். ஆனால் அந்த எண்ணிக்கை; எத்தனை மடங்கு அதிகமாகி நூறு கோடியைத் தாண்டிச் செல்கிறது என்பதை எண்ணிப் பார்த்திடவேண்டும்.

இந்த நூறு கோடியில் –

14 வயது வரையில் உள்ளோர் 32.2 சதவிகிதம்;

15 முதல் 64 வயது வரையில் உள்ளோர் 63 சதவிகிதம்;

65 வயதுக்கு மேற்பட்டவர்கள் 4.8 சதவிகிதம் என்றும் அந்தப் பெட்டிச் செய்தித் தகவல் கூறுகிறது.

பிறப்பு விகிதம் 1000 பேருக்கு 23.28

இறப்பு விகிதம் 1000 பேருக்கு 8.49

சராசரி ஆயுள் 63.7 ஆண்டுகள்

மொத்தத்தில் எழுத்தறிவு பெற்றவர்கள் 59.5 சதவிகிதம்

விவசாயத்தில் ஈடுபட்டோர் 60 சதவிகிதம்

தொழில் துறையில் ஈடுபட்டோர் 17 சதவிகிதம்

சேவையில் ஈடுபட்டுள்ளோர் 23 சதவிகிதம்

வேலை வாய்ப்பற்றவர்கள் 8.8 சதவிகிதம்

உணவுக்குக்கூட சம்பாதிக்க இயலாதவர்கள் எண்ணிக்கை 4 கோடி பேர் என உயர்ந்துள்ளது.

இந்தியா முழுதுமுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை பத்தொன்பது கோடியே இருபது லட்சம்.

தனி நபர் ஆரோக்கியத்திற்காக இந்தியா செலவிடுவது 80 டாலர் – ஆனால் அதற்காக சீன நாடு செலவிடுவது; 224 டாலர்!

ஆண்டுதோறும் 'மானுட வளர்ச்சி அறிக்கை' வெளியிடுகிற ஐக்கிய நாடுகள் வளர்ச்சி நிறுவனம்; 2004ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் அந்த வளர்ச்சிக் குறியீடு கணக்கீட்டில் இந்தியா 127ஆம் இடத்தில் இருப்பதாக சுட்டிக் காட்டியுள்ளது. அந்த அறிக்கையின்படி நார்வே முதல் இடத்திலும், சுவீடன் இரண்டாவது இடத்திலும், அமெரிக்கா எட்டாவது இடத்திலும், இங்கிலாந்து பனிரெண்டாவது இடத்திலும் வருகின்றன.

ஒவ்வொரு நாடும் முக்கியமாக; மனித ஆயுள், கல்வியறிவு, வாழ்க்கைத் தரம் போன்றவைகளில் எப்படியுள்ளன என்பதை குறியீடுகள் மூலமே ஒப்பிடப்பட்டு நிர்ணயிக்கப்படுகின்றன.

இந்தியா, உணவுப் பொருள்களின் ஏற்றுமதியை நிறுத்திவிட்டு, உணவுப் பொருள்களின் இறக்குமதியைச் செய்து வருவதற்கும் – மக்கள் தொகை பெருக்கம் ஒரு முக்கிய காரணம் என்பதை மறந்து விடவும் முடியாது, மறுத்து விடவும் முடியாது.

நீர்வளம், நிலவளம், கனி வளம் போன்ற இயற்கை வளங்கள் ஏற்கனவே ஓர் எல்லைக் கோட்டுக்குள் இருந்தவை மக்கள் தொகை வளர்ச்சியுடன் போட்டி போட்டுக் கொண்டு வளராத நிலையில்; மக்கள் எண்ணிக்கை மாத்திரம்; ஓர் எண்பது ஆண்டுகளுக்குள் மூன்று நான்கு மடங்கு அதிகமாகிவிட்டால் நாட்டின் பொருளாதார முன்னேற்றமே முடங்கிப் போகவும்; வளர்ச்சியில்லை; தளர்ச்சிதான் என்று வருந்தி வாடிப் போகவும் தான் வருங்காலத்து வழித்தோன்றல்கள் தயாராக இருந்திட வேண்டும்.

மூன்று பேருக்கு சமைக்கப்பட்ட உணவு; இரண்டு பேர் விருந்தினர் வந்து விட்டால்; ஐந்து பேருக்கு நிரந்து பரிமாறி விடலாம் – அதுவே பத்து பேர் என்று ஆகி விட்டால் சிலர் பட்டினி கிடந்தால்தானே; மற்றவர்க்குப் பரிமாற முடியும். இந்த விளக்கங்கள் எல்லாம் விரிவாகத் தரப்பட்டு, அரசின் சார்பிலேயே நடத்தப்பட்ட குடும்பக் கட்டுப்பாடுப் பிரச்சாரம்; இப்போதெல்லாம் முழு வேகத்தில் இல்லாதது பெருங்குறையேயாகும்.

“காதலுக்கு வழி வைத்துக்
கருப்பாதை சாத்தக் கதவொன்று
கண்டறிவோம்; இதிலென்ன குற்றம் ?”

என்று சுயமரியாதை இயக்கக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் கேட்டது; வீட்டில் குழந்தைக் கட்டுப்பாடு வேண்டுமென்பதற்காக மட்டுமல்ல; நாட்டிலும் மக்கள் தொகை கட்டுப்பாடு கண்டிட; ஒவ்வொரு வீட்டிலுமுள்ள தம்பதியர் அக்கறை காட்ட வேண்டு மென்பது மிக அவசியம் என்பதை வலியுறுத்துவதற்காகத்தான்.

அக்காலத்திலேயே சுயமரியாதை இயக்க மாநாடுகளில் கர்ப்பத் தடைக்கு ஆதரவாகவும் – குடும்பக்கட்டுப்பாட்டினை வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுண்டு.

இக்காலத்திலும் சமூகப் பிரக்ஞையுடன்; கட்சிகளுக்கு அப்பாற்பட்டு குடும்ப நலத் திட்டத்தை நடைமுறைப்படுத்த, நாட்டின் வளர்ச்சியில் – அக்கறையுடைய அனைவரும் முன்வரவேண்டும்.


படகில் எத்தனை பேர் பயணம் செய்ய வேண்டும் என்ற கணக்கை மீறினால்; படகு என்ன ஆகும்? பயணிகள் என்ன ஆவார்கள்?

படகுக்குரிய கணக்குத்தான் நாட்டுக்கும் என்பதைப் பகுத்தறிவு அடிப்படையில் சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

26 - 10 - 2005

✦✦✦

கலைஞர்கள் கலங்கரை விளக்கங்களாகலாம்!



நான், என் இளமைப் பருவத்திலிருந்து எழுதிய கவிதைகள்; பெரியதோர் புத்தகமாக அச்சியற்றப் பெற்று 1107 பக்கங்கள் கொண்ட அப்புத்தகம், "கவிதை மழை" எனும் பெயரால் சென்னை சீதை பதிப்பகத்தினரால் வெளியிடப் பட்டுள்ளது.

அந்த நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள அன்பு நண்பர் 'சின்னக் குத்தூசி' அவர்கள்; அந்த அணிந்துரையின் ஆரம்பமாக –

> **"தட்டிக் கொடுக்கப்படாமலே பூரணத்துவத்தை நோக்கி வளரக் கூடியவன் முதல் தரக் கவிஞன்" என்று ஒரு கவிதைத் தொகுப்பின் முன்னுரையில் குறிப்பிட்டிருக் கிறார் அரூப் தருமோ சிவராமு என்கிற பிரமீள்!"**

என்று எழுதியுள்ளதையும் படித்து விட்டு, "பூரணத்துவத்தை நோக்கி வளரக் கூடியவன்தான் – வளர்ந்து விட்டவனல்லன் என்ற கணக்கை என்னைப் பற்றிப் போட்டுக் கொண்டிருப்பவன்" என்ற முறையில் இன்றைய சிந்தனையும் செயலும் பற்றிச் சில சொல்லுகிறேன்.

நான் அன்றாடம் உடன்பிறப்புகளுக்கு தொடர்ந்து எழுதும் பல நூற்றுக்கணக்கான கடிதங்களில் "மு.க." என்று மட்டும் குறிப்பிட்டு முடிப்பதும் – தமிழில் மற்றவர்களுக்கு எழுதும்

கடிதங்களில் எல்லாம்; மு. கருணாநிதி என்றே கையெழுத்திட்டு அனுப்புவதுமான பழக்கத்தைக் கொண்டிருக்கிறேன்.

1937–38ஆம் ஆண்டில் 13 அல்லது 14ஆம் வயதில் நான் எழுதி இன்று வரை அச்சியற்றி வெளியிடப்படாமல் பாதுகாக்கப்படும் "செல்வ சந்திரா" எனும் நவீனத்துக்குத் தீட்டியுள்ள முன்னுரையில் " T. M. கருணாநிதி" என்றே கையெழுத்திட்டிருக்கிறேன். அந்த நவீனத்தை நானே இப்போது படித்துப் பார்த்தால்; எனக்கே கூச்சமாக இருந்தாலும்கூட; அந்தப் பிஞ்சுப் பருவத்திலேயே அந்த முன்னுரையில் என் கையெழுத்திலேயே;

"தற்கால திராவிட நாடு, ஜாதி என்ற வலையில் சிக்கி, திராவிடரது கலை, நாகரீகம் எல்லாவற்றையும் சிற்சில மூட நம்பிக்கைகளால் இழந்து தத்தளித்துக் கொண்டிருக் கிறது"

என்பதை எத்துணை நெஞ்சுத் துடிப்போடு வெளி யிட்டிருக்கிறேன்; என்ற வேதனை உணர்வும் பொங்கிடத்தான் செய்கிறது.

கடற்கரையோரத்து ஈர மணலில் நண்டுகள் ஓடிப் பதிந்த கோடுகளைப் போல அன்றிருந்த என் தமிழ் எழுத்துத் திறனும் வடிவும்; இன்று ஓரளவு தரமாகத் தென்படுகிறதென்றால் – இடையில் இந்த எண்பதாண்டு கால முயற்சியும் உழைப்பும் வீண்போகவில்லை என்பதைத்தானே அது புரிய வைக்கிறது!

சுய புராணம் என்று கருதி; யாரும் மனத்துக்குள் சிரிக்கக் கூடாது – முழுமையை முழுமையாகப் பெறாவிட்டாலும் முழுமையை நோக்கி ஒரு குறிப்பிட்ட தொலைவாவது என்னைப் போலக் கடந்து அடைந்திட; எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களாம் இளைஞர்களும், மாணவர்களும் தங்களின் சுய வலிமையை உணர்ந்து, அதனைப் பெருக்கிக் கொண்டு வளர்ந்திட, வாகை சூடிட – இன்றைய "சிந்தனையும் செயலும்" சிறப்பாகப் பயன்படுமென்ற மன உறுதி மலைப்பாறை போல்

எனக்கு உண்டு. எடுத்துக் காட்டாக என்னுயிர் நண்பர்களில் ஒருவரை உங்கள் முன்னால் நிறுத்துகிறேன்!

"கண்ணதாசா! என்
எண்ணமெல்லாம் இனிக்கும் நேசா!"

எனத் தொடங்கி,

"இளவேனிற் கவிதைகளால்
இதய சுகம் தந்தவனே! உன்
இதயத் துடிப்பை
ஏன் நிறுத்திக் கொண்டாய்?"

எனக் கதறியழுது,

"கை நீட்டிக் கொஞ்சுவோர் பக்கமெல்லாம்
கரம் நீட்டித் தாவுகின்ற குழந்தை நீ!
கல்லறைப் பெண்ணின் மடியிலேயும்
அப்படித்தான் தாவி விட்டனையோ;
அமைதிப் பால் அருந்தித் தூங்கிவிட?"

என இரங்கல் பாடி ஏங்கித் தவித்தேனே;

அந்த ஆருயிர் நண்பர் கண்ணதாசன், கவிதைப் புகழ்மலையின் உச்சியிலே கொடி நாட்டியவர்;

அவரது சுய வலிமைக்கும், சுய முயற்சிக்கும் இரண்டையும் பயன்படுத்தி அவர் பெற்ற வெற்றிக்கும் சான்றாக; இதோ ஓர் ஆதாரபூர்வமான தகவல்.

இத்தகவல்; 16–10–2005 என்று தேதியிட்ட "குங்குமம்" வார இதழில் 20ஆம் பக்கத்திலும், 74ஆம் பக்கத்திலும் வெளிவந்துள்ளது. கவிஞரின் அண்ணன் ஏ.எல். சீனிவாசனின் மகனும், திரைப்படத் தயாரிப்பாளருமான ஏ.எல்.எஸ். கண்ணப்பனின் மனைவி திருமதி ஜெயந்தி கண்ணப்பன் அவர்

களிடமிருந்து கிடைத்த கண்ணதாசனின் கடிதம் அது. அவர், தன் அண்ணனுக்கு எழுதிய கடிதம். அவர் விடுதியில் தங்கி, முத்தையா என்ற இயற்பெயருடன் ஆறாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் போது, விடுதியில் தன் உபயோகத்திற்குத் தேவைப்படும் பொருள்கள் குறித்து அண்ணனுக்குப் பட்டியலிட்டு அக்கடிதம் எழுதியுள்ளார். அவர் கையெழுத்துடன் கூடிய அக்கடித நகலை இத்துடன் இணைத்துள்ளேன்.

(கண்ணதாசன் அவர்கள் எழுதிய கடிதத்தின் நகல்)

என் நண்பர் ஆறாம் வகுப்புப் படிக்கும்போது

"தலையணை உறை"யை "தலகாணி உரை"

என்று எழுதியிருப்பதுதான்; நாம் கவனிக்கத்தக்கது.

ஆறாம் வகுப்பு படிக்கும்போது கண்ணதாசன், முத்தையாவாக இருந்து – "தலையணை உறை" என்பதைத் "தலகாணி உரை" என்று தவறாக எழுதியதற்காக; தமிழ்த் தாய் அவரைச் சபித்துச் சாபமிட்டு விட்டாளா? இல்லை! இல்லவே இல்லை!

தமிழ்த்தாய் அவரைத் தாவி அணைத்து வாழ்த்தி மகிழ்ந்தாள்! முயற்சிப்படிகளில் ஏறுக என்று கூறி உயர்த்தி விட்டாள்!

அதன்படி கண்ணதாசன்; சுய வலிமையைப் பயன்படுத்தினார் – அந்த வலிமையைப் பெருக்கும் முயற்சியில் இடைவிடாது ஈடுபட்டார் – பாடுபட்டார் – தமிழாசிரியராகப் பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் அவர்களை ஆக்கிக் கொண்டு – முயற்சியால் முன்னேறினார் – முறையாகத் தமிழ் கற்றார் – சேலத்தில் மாடர்ன் தியேட்டர்ஸ் திரைக்கூடத்து ஒத்திகை அரங்கில் அவரை எனக்கு கவி.கா.மு. ஷெரீப், கவிஞர் மருதகாசி ஆகியோர் அறிமுகம் செய்து வைத்தபோது அவருடன் இருந்த அந்தத் திரைக் கூடத்து மேலாளர், மறக்க முடியாத நண்பர் சுலைமான் என்பார்; என்னிடம் கண்ணதாசனைக் காட்டி;

"சார்! இவர் இங்கே "சண்ட மாருதம்" பத்திரிகை ஆசிரியர் "எழுந்தால் காளமேகம்தான்!" என்பது போல "இவர் எழுந்தால் சண்டமாருதம்தான்" என்று புகழ்ந்ததை; இன்று நினைத்தாலும் புல்லரிக்கிறது.

தொடர்ந்து பொள்ளாச்சி பொதுக் கூட்டத்தில் 'கவிஞர்' எனப் புகழ் மகுடம் சூட்டினேன். அதன் தொடர்ச்சியாகப் புவியில் தமிழர் வாழும் இடமெல்லாம் கவியரசராகக் கோலோச்சத் தொடங்கினார்.

காலத்தின் கோலம் மாற்று முகாமில் நின்று அவர் என்னைத் திட்டித் தீர்த்த போதும்; "உன் தித்திக்கும் தமிழுக்காக அதைப் பொறுத்துக் கொள்கிறேனய்யா!" என்றே சொல்லியிருக்கிறேன்.

திரைப்பாடல்களா? வார்த்தைகள் தாங்களாகவே வடிவமைத்துக் கொண்டு அவர் இருந்த திக்குநோக்கித் தெண்டனிட்டன!

கற்கண்டுகளென வந்து விழும் சொற்களோ; அவரைக் கரங்கூப்பித் தொழுது அவர் கட்டளைக்கேற்பக் கவிதைகளாக உருப்பெற்றன!

"தலையணை உறை" என்பதை "தலகாணி உரை" என்று எழுதியவர்; தமிழுலகின் உச்சாணியில் ஒளியுமிழ்பவரானதற்கு சுயவலிமையும், சுய முயற்சியும்தான் தலையாய காரணம் என்பதை உணர்ந்து கொண்டால்;

இன்றைய இளைஞர்கள், அந்தக் காரணத்தைக் கருத்தில் பதிய வைத்துப் பணியாற்றினால் கோபுரத்துக் கலசங்களாகலா மன்றோ!அத்துடன் கொள்கை உறுதியும் இணைந்தால்; கலசங்கள் கலங்கரை விளக்கங்களாகவும் மாறுவது உறுதியன்றோ?

எனவே என் வேண்டுகோள்;

இளைஞர்கள்; மாணவர்கள்

எழுஞாயிறுகளாக ஒளி விட;

வரலாறு படியுங்கள் –

வரலாற்று நாயகர்களை வணங்குங்கள் –

வீரர்களை அறிந்து கொள்ளுங்கள் –

விவேகிகளைப் புரிந்து கொள்ளுங்கள் –

விஞ்ஞானிகளைத் தெரிந்து கொள்ளுங்கள் –

விஞ்ஞானப் புதுமைகளைக் கற்றுக் கொள்ளுங்கள் –

தியாகிகளைப் பாராட்டுங்கள் – நமது

திருநாட்டைப் பாதுகாத்திடுங்கள்!

வாழ்க்கைப் பயணத்தைப் பகுத்தறிவு

வழியில் மேற்கொள்ளுங்கள்!

உழைத்து உயர்ந்தவர்களைப் புத்தகமாகப்

படியுங்கள்!

முயற்சியினால் முன்னேறியவர்களை

வழிகாட்டிகளாக ஏற்றிடுங்கள்.

27 - 10 - 2005

✦✦✦

நல்வழிக்கு நாட்டாரய்யாவின் உரை!

நாட்டார் அய்யா என்று நாமணக்க நல்ல தமிழ் மணக்கத் தமிழ் ஆர்வலர்களால் அழைக்கப்பட்ட பெரியவர் திரு. ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தமிழ்க் காவலராக வாழ்ந்தவர் மட்டுமல்ல; தமிழினம் சாதிக் கூறுபாடுகளால் சீரழிந்து விடாமல் திகழ்ந்திட வேண்டுமென்பதிலும் தீராத அக்கறை கொண்டிருந்தவர். அக்கருத்தை வலியுறுத்திக் கட்டுரைகள் நூல்கள் தீட்டியவர். ஔவைப் பிராட்டியார் இயற்றிய "நல்வழி" அதிவீரராம பாண்டியர் இயற்றிய "நறுந்தொகை" ஆகிய நூல்களுக்கு அவர் எழுதியுள்ள அரிய உரை எளிமையானது மட்டுமல்ல எழிலார்ந்தது எனவும் பாராட்டப் பெற்றதாகும்.

அவர் வழங்கியுள்ள "நல்வழி" நூலுக்கான உரையைப் படித்துக் கொண்டிருக்கும்போது "முப்பதாம் ஆண்டளவில் மூன்றற்று" எனத் தொடங்கும் பாட்டைப் படிக்கும் வாய்ப்பு பெற்றேன். பாட்டினை முழுவதும் படித்து, நாட்டாரய்யா என்ன உரை எழுதியுள்ளார் என்பதையும் ஆவலுடன் அறிந்து கொள்ள விரும்பினேன்.

"முப்பதாம் ஆண்டளவில் மூன்றற்று ஒருபொருளைத்
தப்பாமல் தன்னுள் பெறானாயின் – செப்புங்
கலையளவே ஆகுமாம் காரிகையார் தங்கள்
முலையளவே ஆகுமாம் மூப்பு".

என்ற பாடலுக்கு அவர் கண்டுள்ள உரை வருமாறு:–

“முப்பது வயதினளவிலே; காமம், வெகுளி, மயக்கம் என்ற முக்குற்றமும் ஒழியப் பெற்று, கேவலப் பொருளாகிய கடவுளை (ஒருவன்) தவறாமல் தன்னுள்ளே அடையானாயின், அழகிய மாதர்கள் முதுமையில் (பதியுடன் கூடி இன்பம் நுகர்தலின்றி) முலையினை மாத்திரம் உடையராதல் போல கற்கும் கல்வியை உடையவனாதல் மாத்திரமே ஆவன்.”

“மூப்பு வருவதற்குள்ளே காமம், வெகுளி, மயக்கம் என்ற முக்குற்றங்களை அகற்றி மெய்ப் பொருளை அடைந்து இன்புற முயலல் வேண்டும் என்பதே பொழிப்புரையாகும்” என்கிறார் உரையாசிரியர் ந.மு.வே. நாட்டாரய்யா! மேலும் இதனை எளிமையாகவும் தெளிவாகவும் விளங்கிக் கொள்ள வேண்டுமென்பதற்கு; “கல்வி மட்டும் கற்று; கடவுள் என்ற உணர்வைப் பெறாதவராய் இருப்பது; கணவருடன் இன்பம் அனுபவிக்காமல் ஒரு பெண், முலைகளை மட்டும் பெற்றிருப்பது போலவாம்!” எனப் பொருள் கூறுகிறார்.

மூன்றற்று என்பதற்கு நாட்டாரய்யா அவர்கள் விரித்துரைக்கும் பொருளாவது; காமம் – வெகுளி – மயக்கம் என்ற மூன்றும் அற்ற நிலை என்பதாகும்.

அடுத்து, “ஒரு பொருளைத் தப்பாமல் தன்னுள் பெறானாயின்” என்பதற்கு அவர் உரை எழுதும்போது “கடவுளைத் தவறாமல் தன்னுள்ளே அடையானாயின்” எனக் குறிப்பிடுகிறார். ஆனால் கடவுள் என்று மட்டும் நேரடியாகக் குறிப்பிடாமல் “கேவலப் பொருளாகிய கடவுளை” என்று குறிப்பிடுகிறார்.

எடுத்த எடுப்பில் எல்லோருக்கும் வியப்பே தோன்றும் – அஃதென்ன; கடவுளை கேவலப் பொருள் என்று கூறுவது? நல்வழி பாடிய ஔவையார் அப்படியா பாடியிருப்பார் எனத் திடுக்கிடுவர்!

நானும் தமிழ் அகராதியைப் புரட்டத் தொடங்கினேன். “கேவலம்” என்பதற்கு அற்பம் – அவமானம் – தாழ்நிலை – உறுதி – ஒழுங்கு – இணையற்றது என்று பலவிதமான பொருள்களும்,

"கேவலப்படுத்துதல்" என்றால் "அவமதிப்புச் செய்தல்" என்ற பொருளும் அகராதியில் இருப்பதைக் கண்டு; இந்தச் சொல்லை எப்படிக் கடவுளுக்கு நாட்டாரய்யா அவர்கள் பயன்படுத்தினார்கள் என்ற வினா, நெஞ்சில் பேருரு எடுத்திடவே மேலும் கூர்மையாக அகராதியை நோக்கினேன். அய்யம் நீக்கினேன். அகராதியில் "கேவலப் பொருள்" என்பதற்கு ஒரே பொருளாக "பரப்பிரம்மம்" என்று கூறப்பட்டிருக்கிறது. ஆம்; திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – வெளியிட்டுள்ள கழகத் தமிழ் அகராதி யைத்தான் சான்றாகக் கொண்டு சொல்லுகிறேன்.

இதிலிருந்து தமிழ்ச் சொற்களுக்கு; ஒன்றுக்கொன்று வேறுபாடான – மாறுபாடான – முரண்பாடான பொருள்கள்; அச்சொற்கள் பெறும் இடத்துக்குத் தக்கவாறு அமைவதை அகராதி வாயிலாக அறிய முடிகிறது என்பதற்காகவே அதனை எடுத்துக்காட்டும் பணியை இந்த நல்வழிப் பாடலையும் இதற்கு நாட்டாரய்யா அவர்கள் எழுதியுள்ள உரையையும் பயன்படுத்தி, மேற்கொண்டேனேயன்றி; வேறு நோக்கம் எதுவும் கிஞ்சிற்றுமில்லை.

உதாரணமாக; தமிழ் அகராதியில் "கானவர்" என்றால் "குறிஞ்சி நில மாக்கள்" என்றும், "முல்லை நில மாக்கள்" என்றும், "பாலை நிலத் தலைவர்" என்றும், "வேடர்" என்றும் பொருள்கள் காணலாம்.

"கானவர்" என்பதை "கானவன்" என்று மாற்றிப் பொருள் தேடினால் அதே அகராதி; "குரங்கு" என்றும் குறிப்பிடுகிறது.

"மக்கள்" என்றால் "மனிதர்" என்கிறது அகராதி – அதே மக்களுக்குக் கால் முளைத்து "மாக்கள்" என்றால்; "பகுத்தறிவு இல்லாதவர்" என்றும், ஐயறிவு மக்கள் என்றும் – ஏன்; "மாக்கள்" என்றாலும் "மனிதர்" தானென்றும் அதே அகராதி பொருள் கூறவும் தவறவில்லை.

"ஏல்" என்பதற்கு "ஒப்புக் கொள்ளுதல்" என்றும் பொருள் உண்டு – "மாறுபடுதல்" என்றும் பொருள் உண்டு. "இச்சை" என்பதற்கு "ஆசை" என்றும் "பொய்" என்றும் பொருள் கூறுகிறது

அகராதி! "இல்" என்றால் "வீடு" என்றும் பொருளாகும். அது "இல்லாமை"யும் ஆகும்!

என்ன விந்தை? ஒரு "கேவலப் பொருள்" தமிழில் எத்தனை சொற்களுக்கு எத்தனை விதமான பொருள்கள் இருப்பதை எடுத்துக்காட்டப் பயன்பட்டிருக்கிறது பார்த்தீர்களா?

இதை விளக்கும் வாய்ப்பையும், இந்த விபரங்கள் அறியும் வாய்ப்பையும் எனக்கும் உங்களுக்கும் அளித்தது; "நல்வழி" பாட்டும், நாட்டாரய்யா தீட்டிய உரையுமல்லவா!

29 - 10 - 2005

✦✦✦

அந்தாதி பாடிய அருதகுட்டி நாடார்

நேற்று வரையப்பட்ட "சிந்தனையும் செயலும்" எழுத்தோவியம்; வழக்கம்போல் கருத்தோவியமாகவும் அமைக்கப்பெற்று, நல்வழிப்பாடல் ஒன்றுக்கு நாட்டாரய்யா வழங்கியுள்ள உரை வாயிலாக, தமிழில் உள்ள சொற்கள், இடத்துக்கு ஏற்றவாறு எப்படியெல்லாம் பொருள் கொள்ளத் தக்கவைகளாக உள்ளன என்பதை அகராதியை ஆதாரமாகக் கொண்டு விளக்கியிருந்தேன்.

இன்றையதினம் "சிந்தனையும் செயலும்" **அருதகுட்டி நாடார் என்னும் கவிராயர்** இயற்றியுள்ள "சிதம்பர அந்தாதி கதைப் பாடல்" பற்றியதாகும்.

முதலில் சிற்றிலக்கியங்களின் வரிசையில் ஒன்றாக விளங்கும் "அந்தாதி" இலக்கியத்துடன் அருதகுட்டி நாடார் இயற்றியுள்ள 'சிதம்பர அந்தாதி' எனும் அரிய கதைப்பாடல் தொகுப்பையும் சேர்ப்பதற்குப் பாடுபட்டு வெற்றி கண்டு; சென்னை 'நாம் தமிழர்' பதிப்பகத்தின் சார்பில் வெளியிட்டுள்ள திருமிகு தி. இராஜரத்தினம் அவர்களுக்கு நன்றிகூறவேண்டும்.

நூலுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ள தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தரும் – கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் முன்னாள் தலைவருமான பேராசிரியர் திரு. வ.அய். சுப்பிரமணியம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"சந்தத்தாலும் எளிய சொல் சேர்க்கையாலும் இந்த அந்தாதி மனத்தைக் கவரும் நிலையில் அமைந்துள்ளது. கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் நாடார் சமுதாயத்தினர் பெருவாரியாக வாழ்வதால் அப் பகுதியில் உள்ள வழக்குச் சொற்கள் இடம் பெற்று உள்ளன. 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் நாடார் சமுதாயத்தினரிடையே கல்வியறிவு குறைவாக இருந்ததால் இந்து மதச் செய்திகளும், இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்களும் அவற்றால் அச்சமூகத் தினரிடையே மதப்பிடிப்பு ஏற்படுமாறு புலவர் இந்நூலைச் செய்துள்ளார்"

எனக் குறிப்பிட்டுள்ள திரு. வ.அய். சுப்பிரமணியனார் அவர்கள்,

"புதுமை நோக்கத்துடன் மேலும் பல நூல்களை நூலாசிரியர் (தி. ராஜரத்தினம்) அவர்கள் செய்திட வேண்டும் என்று வாழ்த்துகிறேன்"

எனவும் தனது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்நூலில் காணப்படும் "அருதகுட்டி நாடார் கவிராயர் வரலாறு" எனும் துணைத் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள விவரங்களாவன :–

"தென்னாட்டில் நானூறு ஆண்டுகளுக்கு முன்னால் நெல்லை, குமரி மாவட்டங்களில் ஆலய வழிபாடு நாகரீகமற்று இருந்தது. கிராமங்களில் உள்ள தேவதை களுக்குச் சரியான வரலாறு கிடையாது. கிராம தேவதைகளை வணங்கிய மக்களும் ஒற்றை முரசு கொட்டி ஆடு, கிடா, கோழி இவைகளைப் படையலிட்டு மாடன் போன்ற கிராம தேவதைகளை வழிபட்டார்கள்; கொடைகளை நடத்தினார்கள்.

இந்த நிலைமையை மாற்றி ஆலயங்களில் வில்லிசை மூலம் கிராம தேவதைகளின் வரலாற்றை எடுத்துக் கூறி புதிய எழுச்சியை ஏற்படுத்தியவர்தான் அருத(ன) குட்டி நாடார் ஆவார். இவர் நெல்லை மாவட்டம் (தற்போது தூத்துக்குடி) உடன்குடி சமீபம் உள்ள தாங்கையூரில்

வாழ்ந்து வந்தார். இவர் வில்லிசைக்காகக் கதைகளைத் தேர்வு செய்து பாடல்களை எழுதினார்.

மற்றும் கிராமங்களில் உள்ள தெய்வங்களுக்கு வில்லிசைப் பாடல்கள் பல எழுதியுள்ளார். இவை அனைத்தையும் தன் சீடரான சிந்தாமணிப் புலவர் என்பவருக்குக் கற்றுக் கொடுத்து வில், குடம், உடுக்கு, ஜால்ரா, கட்டை போன்ற இசைக் கருவிகளைப் பயன்படுத்தி இசைக் குழு ஆரம்பித்து முதன் முதலாகக் கொல்லம் ஆண்டு 798இல் மாசி மாதம் 4ம் தேதி வெள்ளிக் கிழமை (கி.பி. 1623) தாங்கையூரில் அவரது குலதெய்வம் செண்பக நாச்சியார் திருக்கோயிலில் வில்லிசை அரங்கேற்றம் செய்தார்".

ஆய்வு முன்னுரையாக எழுதப்பட்டுள்ள பல செய்திகளில் முக்கியமானதாக – "சிதம்பர அந்தாதி"யைப் பதிப்பிக்க எத்துணை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; எத்தனை சுவடிகள், யார் யாரிடமிருந்து பெறப்பட்டன என்பது விளக்கப்பட்டிருக்கிறது.

"சிதம்பர அந்தாதியைப் பதிப்பிக்கத் தேர்வு செய்து சுவடிகளைத் தேடியபோது, நண்பர், ஆய்வாளர், சு. தாமரைப் பாண்டியன் அவரது பெரியப்பாவும், வில்லிசைக் கலைஞருமான சிவசுப்பிரமணியபுரம் திரு. அ. அப்பாவு நாடாரிடம் அழைத்துச் சென்றார். அவரிடம் ஒரு கையெழுத்துப் பிரதி இருந்தது. அங்கேயே இருந்து படி எடுத்தேன். மேலும், சுவடி தேடி உடையார் புலவர் என்பவரிடம் போனேன். அவரிடம் ஒரு காகிதப் பிரதி இருந்தது. மேலும், சாத்தான் குளம், விஜயராமபுரம், வில்லிசைப் புலவர் திரு. துரைராஜ் புலவரிடம் சென்றேன். அவரிடம் ஓலைச்சுவடி ஒன்று இருந்தது. அதனை அவரது வீட்டில் வைத்துப் படியெடுத்தேன். இம்மூன்று சுவடிகளும் ஒரே குடிவழியைச் சேர்ந்தன. நவ்வலடி அ. கருப்பசாமி அவர்களிடம் சென்றேன். அங்கு ஒரு கையெழுத்துப் பிரதி இருந்தது. அது ஒரு குறைச்சுவடி ஆகும். முழு ஓலைச்

சுவடியை அவர் தம் நண்பர் ஒருவரிடம் கொடுத்துவிட்டதாகக் கூறினார். இவர் பல செய்திகளைக் கூறினார். அருதக் குட்டி அடிகள் தம் முன்னோர் என்றும், அருதக் குட்டி அடிகளின் குலதெய்வமான செண்பக நாச்சியார் அம்மனே தங்கள் குல தெய்வம் என்றும் கூறினார். அருதக்குட்டியடிகள் இயற்றியதாகக் கூறப்படும் பல சுவடிகள் அவரிடம் இருக்கின்றன”

இத்தனை உழைப்பினை நல்கிச் சிறிதும் அயர்வின்றி இந்த “சிதம்பர அந்தாதி” கதைப் பாடல் நூலைத் தந்துள்ளவர்களைப் பாராட்டத்தானே வேண்டும். கதையும்; அதை விளக்கிடும் பாடல் களும் அக்காலத்தைப் படம் பிடிப்பவைகளாயினும் அந்தச் சூழலிலும் அருத குட்டி நாடார் போன்ற கவிராயர்களின் ஆற்றலை வெளிப்படுத்துபவைகளாகவே அமைந்துள்ளன.

‘அந்தாதி’ என்றால் என்ன ?

அந்தம் – ஆதி என்ற இரு சொற்களால் அமைவதாகும்.

முதல் பாடலின் ஈற்றடியை, அடுத்த பாடலின் முதல் அடியாகக் கொண்டு இயற்றப்படுவதே அந்தாதி எனப்படுகிறது – அந்தம் = ‘முடிவு’, ‘எல்லை’ என்றும் பொருள்படும். ஆதி = ‘முதல்’ என்றும் ‘தொடக்கம்’ என்றும் பொருள்படும். இதன் வழி வரும் சொற்றொடரே ‘அந்தாதி’ என அழைக்கப்படுகிறது.

இதற்கான எடுத்துக்காட்டு; இதோ இந்த ‘சிதம்பர அந்தாதி’ யிலிருந்தே தரப்படுகிறது..

“பாரெங்கும் போத்துஞ் சிதம்பரனாதர்
பவனி தான் வரவே
ஆரம்பு மாலைத் திருக்கொடி ஏத்தினார்
ஆனி உத்திரத்தில்”

இதனைத் தொடர்ந்து அடுத்த பாடல்; அதாவது முடிவைத் தொடர்ந்து முதலாவதாக – அந்தத்தையொட்டி ஆதியாக;

“ஆனி உத்திரந் தன்னில் சிதம்பர
ஆனந்தத் தாண்டவனார்

மேனி எங்குந் திரு வென்னீறிலங்கிட
வெம்புலித் தோலுடுத்தான்”

என நீளுகிறது, “இறைவன் உலா வருதல்” பகுதி; பல பாடல்களாக! அதில்;

“தில்லைக் கோவிந்தர் தெருவுங் கடந்தார்
சிதம்பரத் தாண்டவனார்
நல்ல முதலியார் தன் மடந்தன்னில்
நாடியெழுந்தருள”

அவ்வமயம்தான் ஒரு தாய்க்கும் மகளுக்குமிடையே ‘ஏசல்’ ஆரம்பமாகிறதாம்! ஏன்? மகள், உலா வரும் சிதம்பரத் தாண்டவனின் உருவுகண்டு மயங்கி, பெருமையுணர்ந்து பித்துப் பிடித்து அந்த ஊர்வலத்தினிடையே ஓட முனைகிறாள். அவளைத் தாய் தடுத்து;

“எல்லாருங் காண மகளே நீ சந்தியில்
செல்லாதே யென்றனளே”

அந்தத் தாய் மேலும் சொல்கிறாள் மகளிடம்!

“ஆண்டி தனக்காசை கொள்வது மாதர்க்
கடவல்லவே மகளே!”

என்று கூறிடும் தாய்க்கு அந்த மகள் பதில் சொல்லும் விதமாக,

“அடவல்ல வென்றாலுந் தில்லைச் சிதம்பரத்
தாண்டி
அழகைக் கண்டால்
உடை தான் நெகிழவே ஆசை கொள்ளாத
பேருண்டோ மாதாவே!”

என்கிறாள். மகளின் பதில் கேட்டுத் தாய்க்குக் கோபம் வருகிறது. கூறுகிறாள் அந்தத் தாய் :–

“சிறுத் தொண்டன் பக்தியறிந்திட வேண்டியே
சீராள தேவனைத் தான்

அறுத்துக் கறியாய்ச் சமைக்கவே சொன்னான்
அநியாயக் காரனல்லோ ?''

எனக் குமுறுகிறாள்.

'' அநியாயமல்ல தாயே நீ கேளா
யந்தச் சீராளனுக்கே
முனிவோரி லொன்றாக செங்காட்டு நங்கைக்கு
முத்தி பதங் கொடுத்தோன்''

என விடையளித்து; மகள், தன் தாயை சமாளிக்கிறாள்.

மகளோ; மகேசனின் ஆனந்தத் தாண்டவத்தைப் புகழ்ந்து மயங்குகிறாள். அதையும் ஏற்றிடாத அந்தத் தாய்;

'' ஆனந்தக் கூத்துமழகுங் கண்டே சிறி
தாசை மடலானாய்
ஈனங்கள் சொல்லியே யேசுவார்க்கெல்லா
மிடமாக்கி விட்டாயே''

என்று கண்கலங்குகிறாள்.

தன் ஆசை வெறி அடங்காது என்பதை அந்த மகள் தாயிடம் திட்டவட்டமாகக் கூறி விடுகிறாள்.

'' ஏசுவார்க் கெல்லா மிடமாக்கி விட்டாலு
மின்று மடலெடுத்து தில்லை
யீசனைச் சேராதிருந்திடில் மார்பி
லெழுந்ததுதான் கொங்கையோ ?''

அதுகேட்டு தாய், சீறும் புலியாகிப் பேசுகிறாள்:–

'' ஒருருவாகி நெடுமாலுந் தானு
முருவமும் ரண்டாகி
தாருகா வனந் தன்னில் மடந்தையர்
தங்களைக் கற்பழிக்க''

என்றவுடன்; தாய்க்கு மகள் விளக்கம் சொல்கிறாள்.

"தங்களில் மங்கையர் மோகித்தே வீழத்
தாருகாவனத்தில்
எங்கள் சிதம்பரர் செய்த பெருமையை
யெண்ணத் தொலையாதே"

இப்படி 'சிதம்பர அந்தாதி' சிற்றின்பச் சுவைகளை சாடை காட்டி; பேரின்பம் பெறுகின்ற மார்க்கத்தையும் வலியுறுத்துகிறது.

"அந்த அவனி முனிவர்களெல்லோரு
மரகரா யென்றே தொழ
இந்திர லோகத்தில் பூமாரி சிந்த
யிமையோர்களேந்திடவே
சிந்தை மகிழச் சிதம்பரத் தாண்டவர் சிறப்பாக
வீற்றிருந்தார்
இந்திரர் தேவரிமையவ ரெல்லோரு
மினிதாக வீற்றிருந்தார்."

என்று கதைப் பாடல், பக்திப் பரவசமாக நிறைவுறுகிறது. கம்பரின் கவி நயம் இன்றுரைத்து – அதற்காக அவரைப் புகழ்வதுபோல புலமை மிக்கோர் போற்றுமளவுக்கு சிதம்பர அந்தாதி பாடியுள்ள அருதகுட்டி நாடார் எனும் கவிராயரையும் புகழத்தானே வேண்டும்.

30 - 10 - 2005

✦✦✦

சிந்தனை செய்வோமே



"பாம்பும் கீரியும் கடுமையாகச் சண்டை போட்டுக் கொண்டு; கடைசியில் பாம்பு செத்து விடும் என்றாலும்; கீரியின் உடலில் பாம்பின் விஷம் பரவியிருக்குமென்றும் – அந்த விஷத் தன்மையைப் போக்கிக் கொள்ள கீரி; தனக்கு மட்டுமே தெரிந்த ஒரு மூலிகையின் மீது விழுந்து புரண்டு உடலைத் தேய்த்துக் கொண்டு விஷத்தின் வலிமையைப் போக்கிக் கொள்ளும்" என்றும் பலரும் சொல்லக் கேட்டிருக்கிறேன். அது எவ்வளவு உண்மையோ எனக்குத் தெரியாது – ஆனால் நான் நமது பகுத்தறிவு இயக்கத்தில் இனமான உணர்வுடன் பணியைத் தொடருபவன் என்பதால் பல முனைகளில் இருந்து பல்வேறு வகையான கணைகள் பாய்ந்து; அதனால் ஏற்படும் காயங்களின் நச்சுத் தன்மையைப் போக்கிக் கொள்ள; கீரிக்குக் கிடைப்பதாகக் கூறப்படும் மூலிகை போல; எனக்குக் கிடைத்திடும் மூலிகையாகத் தந்தை பெரியாரைத்தான் கருதிக் கொள்கிறேன்"

பெரியார் திடலில் 1971ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15ஆம் நாள் நடைபெற்ற விழா ஒன்றில்; அன்றைய முதல்வர் பொறுப்பில் இருந்த நான் கலந்து கொண்டு, எனக்குச் சிலை அமைத்திடப் பெரியார் அவர்கள் அன்னை மணியம்மை யாருக்கும் – ஆருயிர் இளவல் வீரமணி அவர்களுக்கும் அன்பு ஆணை பிறப்பித்து; அதற்கான நிதி வசூலையும் அவர் கையாலேயே ஆரம்பித்து வைத்த நிகழ்ச்சியில்தான்;

நான் இந்தக் "கீரி – பாம்பு சண்டை" விஷம் போக்கும் "மூலிகை" பற்றிப் பேசினேன்.

பேசுவதும் எழுதுவதும்தானே என் போன்றோர் மனப் புழுக்கத்தை விரட்டுவதற்கான மெல்லிய பூங்காற்றை உள்ளே அனுப்புகிற பலகணிகளாகப் பயன்படுகின்றன.

மூலிகை மட்டுமா பெரியார்? மூட்டை மூட்டையாக அடுக்கப்பட்டிருந்த மூட நம்பிக்கைக் கந்தகக் கிடங்கில் மூட்டப்பட்ட தீப்பிழம்புக்கு; முதன் முதலாகக் கிழிக்கப்பட்ட தீக்குச்சி அல்லவா! ஊழிக் காற்றெனப்படுவதால் உரசப்பட்ட எரிமலைகளைக்கூட; உதை பந்தாக உருட்டித் தள்ளும் பலம் வாய்ந்த பகுத்தறிவுத் தலைவரல்லவா!

1879ஆம் ஆண்டு செப்டம்பர் 17 அன்று பிறந்து; 1891–92ஆம் ஆண்டுகளிலேயே தனது 12ஆம் வயது முதற்கொண்டு,

"எனக்குச் சிறு வயது முதல் சாதியோ, மதமோ கிடையாது; அதாவது நான் அனுஷ்டிப்பது கிடையாது. ஆனால், நிர்ப்பந்தமுள்ள இடத்தில் போலியாகக் காட்டிக் கொண்டிருந்திருப்பேன். அது போலவே, கடவுளைப் பற்றியும், மனத்தில் ஒரு நம்பிக்கையோ, பயமோ கொண்டிருந்ததும் இல்லை. நான் செய்ய வேண்டுமென்று கருதிய எதையும் – கடவுள் கோபிப்பாரே என்றோ, தண்டிப்பாரே என்றோ கருதி (எந்தக் காரியத்தையும்) செய்யாமல் விட்டிருக்க மாட்டேன். கடவுள் மகிழ்ச்சியடை வாரென்று கருதியோ, சன்மானம் அளிப்பார் என்று கருதியோ எந்தக் காரியத்தையும் செய்திருக்கவும் மாட்டேன்.

எனது வாழ்நாளில் என்றைக்காவது சாதி – மதத்தையோ, கடவுளையோ உண்மையாக நம்பி யிருந்தேனா என்று இன்னும் யோசிக்கிறேன், இதற்கு முன்பும் பலதடவை யோசித்திருக்கிறேன். எப்பொழுதி லிருந்து எனக்கு இவற்றில் நம்பிக்கையில்லை என்றும் யோசித்து யோசித்துப் பார்த்திருக்கிறேன்; கண்டு பிடிக்கவே முடியவில்லை"

என்று பலமுறை குறிப்பிட்டுள்ள பெரியார் அவர்கள்; 1907 ஆம் ஆண்டு முதல் காங்கிரஸ் இயக்கப் பற்றாளராக இருந்து, 1919 ஆம் ஆண்டு காங்கிரஸ் உறுப்பினராகவே ஆகி; பல போராட்டங்கள் – சிறைவாசங்கள் – எனத் தன் பொது வாழ்க்கையை அமைத்துக் கொண்டு; எதிர்நீச்சல் போடுவதில் இன்பம் கண்டு; காங்கிரசில் இருந்து கொண்டே – வைக்கம் வீரராகி – சேரமாதேவி குரு குலத்தில் சாதி வெறியை எதிர்த்துக் குரலெழுப்பி – வகுப்புரிமைக்காகப் போராடி தனது வகுப்புரிமைத் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படாத காரணத்தால் – 1925 ஆம் ஆண்டு காங்கிரசிலிருந்து வெளியேறி, சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.

பெண்ணுரிமைப் போராட்டம் – இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் – சாதி ஒழிப்புப் போராட்டம் – மூட நம்பிக்கை ஒழிப்புக் கிளர்ச்சி – சமத்துவ சமதர்ம முழக்கம் – இவையனைத்திலும் இவரே பெரியாராகத் திகழ்ந்ததால் 1938 ஆம் ஆண்டு சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில் பெரியார் என பட்டம் சூட்டிப் பாராட்டப் பெற்றார்.

நான் யார்?

என்று பெரியார் தன்னைப் பற்றிக் குறிப்பிடும்போது;

“ஈ.வெ. ராமசாமி என்கின்ற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன்.

அந்தத் தொண்டு செய்ய எனக்கு ‘யோக்கியதை’ இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் வராததினால், நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன்.

இதைத் தவிர வேறு பற்று ஒன்றும் எனக்கு இல்லாததாலும், பகுத்தறிவையே அடிப்படையாய்க் கொண்டு கொள்கைகளையும், திட்டங்களையும்

வகுப்பதாலும், நான் அத்தொண்டுக்குத் தகுதி உடையவன் என்றே கருதுகிறேன்.

சமுதாயத் தொண்டு செய்பவனுக்கு இதுபோதும் என்றே கருதுகிறேன்.”

என்று குறிப்பிட்டிருப்பதை இன்றைக்கும் பெரியார் நினைவிடத்தில் காணலாம். அவரது கையெழுத்துடன் கூடிய அந்த “சாசனம்” நண்பர் ஆனைமுத்துவைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்த “பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்” என்ற அரும் பெரும் நூலிலேயும் காணலாம்.

அறிஞர் அண்ணா அவர்கள் நோயுற்று அமெரிக்காவுக்கு சிகிச்சைக்குச் சென்றபோது; நியூயார்க் மருத்துவமனை யிலிருந்து பெரியாருக்கு எழுதிய கடிதத்தில்

பேரன்புடைய பெரியார் அவர்கட்கு,

வணக்கம். என் உடல் நிலை நல்லவிதமாக முன்னேறி வருகிறது. சென்னை மருத்துவமனையிலும், விமானதளத்திலும் தாங்கள் கவலையுடனும் கலக்கத்துடன் இருந்த தோற்றம் இப்போதும் என் முன் தோன்றியபடி இருக்கிறது. ஆகவே தான் கவலைப்பட வேண்டிய நிலை முற்றிலும் நீங்கிவிட்டது என்பதனை தெரிவித்திருக்கிறேன். தங்கள் அன்புக்கு என் நன்றி. தங்கள் பிறந்தநாள் மலர் கட்டுரை ஒன்றில், மனச் சோர்வுடன் துறவியாகி விடுவேனோ என்னவோ என்று எழுதியிருந்ததைக் கண்டு மிகவும் கவலை கொண்டேன். தங்கள் பணி, மகத்தான விழிப்புணர்ச்சியைச் சமூகத்தில் கொடுத்திருக்கிறது. புதியதோர் பாதை மக்களுக்குக் கிடைத்திருக்கிறது. நான் அறிந்த வரையில், இத்தனை மகத்தான வெற்றி வேறு எந்த சமூக சீர்திருத்தவாதிக்கும் கிடைத்ததில்லை, அதுவும் நமது நாட்டில். ஆகவே சலிப்போ, கவலையோ துளியும் தாங்கள் கொள்ளத் தேவையில்லை.”

1949 என்ற ஆண்டு; தந்தையையும் தனயனையும் பிரித்தது என்றாலும்; தன்மானக் கொள்கைப் பற்றும் – தமிழகம் பகுத்தறிவு பூமியாக – பண்பார்ந்த நிலமாக – வளம் பெற்றிட வேண்டுமென்ற குறிக்கோள் உறுதியும் – 1967ல் இருவரையும் ஒன்று சேர்த்து விட்டது.

இருவரும் இன்றில்லாவிடினும் கொள்கை உருவில் நம் இதயங்களில் குடிகொண்டிருக்கிறார்கள் – அவர்களை நினைத்தாலே நம் நெஞ்சத்தில் எந்தச் சுமையேறினாலும் அதிலும் ஒரு சுவை காணும் இயல்பு நமக்குத் தானாகவே வரும்.

இந்தச் சிந்தனையுடன் செயல்படுவோம்.

31 - 10 - 2005

✦✦✦

“பாலில் விஷத்தைக் கலந்தாலும், விஷத்தில் பாலைக் கலந்தாலும் – பால்தான் கெடும் என்பது போலவே, நல்லறிவுடன் துர்க்குணத்தைக் கலந்தாலும் – துர்க் குணத்துடன் நல்லறிவைக் கலந்தாலும் அறிவுதான் கெடும் என்பதை உணர்ந்து நடப்பதே உத்தமம்.”

★ ★ ★

“நடைப்பயிற்சி மூலம் முக்கியமாக உடலின் எடையைக் குறைப்பது – மூச்சுப் பயிற்சி மூலம் சுவாசப் பைகளை முறையாக இயங்கச் செய்வது – குருதியோட்டத்தைச் சீராக்கிக் கொள்வது – அதன் அடிப்படையில் இருதயத்துக்குப் பாதுகாப்பு உருவாக்குவது – யோகப் பயிற்சி மூலம் எலும்புகள், நரம்புகளுக்கு வலுவூட்டுவது – தியானப் பயிற்சி மூலம் மனஅமைதி காண்பது; இவை போன்றவை வாழ்வுக்கு இன்றியமையாதவை”

விற்பனை உரிமை :

பூம்புகார் பதிப்பகம்

127 (ப. எண் : 63), பிரகாசம் சாலை (பிராட்வே)

சென்னை - 600 108.

தொலைபேசி : 25267543